Tamil Text Book for Inter Arts.

# பாரதச் சுருக்கம்.

இது

யாழ்ப்பாணத்து மானிப்பாய்

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையால்

செய்து,

மதுரைத்தமிழ்ச்சங்க ஸ்தாபகரும்

பாலவநத்தம் ஜமீந்தாருமாயிருந்தவருமாகிய

ஸ்ரீ ராஜ ராஜ

பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள்

திராவிடபாஷாபிமான ஞாபகசின்னமாகச் சமர்ப்பித்தது.

யாழ்ப்பாணம்,

நாவலர் அச்சுக்கூடம்.

மூன்றாம் பதிப்பு.

1931.

*All Rights Reserved.*

Full Calico Glazed Paper Rs. 2-00. Rough Paper Rs. 1-50.

WITH PERMISSION

TO

P. Pandithoray Devar Avl.

Founder of

**The Madura Tamil Sangam.**

This work is,

as a humble tribute to his services

for the Revival of

**Tamil Literature**

Respectfully Dedicated by

THE AUTHOR.

# முகவுரை.

பூவுலகத்திலே அநேக தேசங்களுள. அத் தேசங்களெல்லாம் அவ்வத்தேசத்து மக்களால் விளங்குவனவாம். எத்தேசத்து மக்கள் பழைமையாகிய கல்விச் செல்வத்தினால் விளக்கமுடையரோ அத்தேசமே சிறந்த தேசமென்றும் அம்மக்களே உயர்ந்தோரென்றும் உலகம் மதிக்கின்றது. பழைமையாகிய கல்விச் செல்வத்தினால் தனக்கிணையில்லாத தேசம்,இமயத்தை வடக்கின்கண்ணும் கன்னியாகுமரியைத் தெற்கின்கண்ணு மெல்லையாகவுடைய ஆரியதேசமேயாம். ஆதலால் இப்பூமுகத்திலே அத்தேசத்து மக்களாகிய ஆரியரே மிக்க பழைமையும் உயர்வுமுடையராம். பண்டைக் காலத்திலே அவரைப்போலக் கல்வியாலும், அக்கல்வியாற் செல்வத்தாலும், அச்செல்வத்தால் அறநிலையாலும், அவ்வறநிலையால் ஞானத்தாலும், அந்த ஞானத்தாற் பேரின்பவாழ்வினாலும் சிறந்து விளங்கினோர் பிறரில்லை. உலகத்திலே எவ்வகையானும உயர்ச்சிக்குக் காரணமாயுள்ளது கல்வியேயெனத் துணிந்து, அதனைப் பெரிதும் முயன்று ஈட்டித் தாமும் அநுபவித்து எமக்கும் வைத்துப் போயினோர் நம் ஆதிமுன்னோரே. நாம் சுயார்ச்சிதமாக ஈட்டிக்கொண்ட பெருமை யாதுமில்லை. நமக்குள்ள பெருமையெல்லாம் நம் முன்னோர் ஈட்டி வைத்தனரேயாம்.

நம் முன்னோர் ஈட்டிவைத்துப்போன கலாநிதிகளுள்ளே வேதமே முதன்மையுடையது. மகாபாரதம் அதற்கு அடுத்த படியிலுள்ளது. அதுபற்றியே நான்கு பகுதியினதாகிய வேதத்தோடு மகாபாரதமும் சேர்க்கப்பட்டுப் பிற்றைநாட் புலவர்களாலே அஃது ஐந்தாம் வேதமென வுச்சிமேற்கொண்டு மெச்சப்படுவதாயிற்று. அது வடமொழியிலே வேதங்களை வகுத்தவரும் பதினெண் புராணங்களையு மியற்றினவருமாகிய வியாசமுனிவராலே ஓரிலக்ஷத் திருபத்தையாயிரங் கிரந்தமுடையதாகச் செய்யப்பட்டது. அது வேதவியாசர் சொல்ல விநாயகக்கடவுளால் எழுதப்பட்டதென்றால் அதன் பெருமையை நாமெடுத்துரைக்கவும் வேண்டுமோ. மகாபாரதத்திற் கிணையான வனப்பும் பெருமையுமுடைய நூல் உலகில் மற்றெத் தேசத்தும் எம்மக்களிடத்தும் இல்லையென்பது எதனையும் எளிதில் அங்கீகரியா வியல்புடையராகிய ஐரோப்பிய பண்டிதர்க்கும் ஒத்த துணிபாம்.

வேதம் ஞானமும் ஒழுக்கமும் விதிப்பது. மகாபாரதமோ அவ்விரண்டனையும் சரித்திர மூலமாக எடுத்து வலியுறுத்துவது. பாரதத்திலே சொல்லப்படாத அறநெறிகளும் ராஜதந்திரங்களும், லௌகிகோபாயங்களும தத்துவோப தேசங்களுட் சரித்திரங்களு மில்லை. தந்தை மகனுக்குச் செயற்பாலதும், தந்தை தாயர்க்கு மைந்தர்செயற்பாலதும், நாயகனுக்கு நாயகி செய்தொழுகுங் கடன் களும், சகோதர வொற்றுமையும், குரு மாணுக்கர்கள் ஒருவர்க் கொருவர் ஒழுகு முறையும், வருணாச்சிரம வியல்பும், அரசருங் குடிகளு மொழுகு முறையும், சரியை கிரியை யோகஞான மார்க்கங் களும், பூதபௌதிக வியல்பும்,சிருஷ்டி திதி சங்காரவரலாறும்,சுவர்க்க நரக வியல்புமாகிய வின்னோரன்ன பொருளெல்லா மெஞ்சாம லெடுத்துரைப்பது பாரதமொன்றுமேயாம். பாரதத்திலே சொல் லப்படும் பூர்வயுக சரித்திரமன்று. இக்கலியுகாரம்பத்திற்குச் சிறிது முன்னும பின்னுமாக நிகழ்ந்த சமீபகால சரித்திரமேயாம். ஆதலால் பாரதம் நம்மவர் இருபாலாரும் அத்தியாவசிகம் ஓதத்தக்க நூலே யாம். பாரதம் பலகாற் பயின்ற பண்டித சிரோன்மணிகளையும் தன்கட் கூறப்படும் சரித்திரத்தைக் கிரகித்து முறைப்பட வெடுத் துரைக்க வொட்டாப் பெரும் பரப்பும் சாகோபசாகங்களு முடைய் தாதலின், யாவர்க்கும் எளிதிற் பயன்படுமாறு அதனைச் சுருக்கிச் செந்தமிழ் வசனத்தாற் செய்தாம். பாரதவமிசத்துச் சரித்திரங் கூறு நூல் பாரதமெனப்பட்டது.

பின்னுட் பரிபாலிப்பாரின்றி மெலிந்த நந்தெய்வச் செந்தமிழ் மொழியை மீட்டும் வளர்ப்பான் கருதி, முன்னுள் முச்சங்கங் கொண்டு தமிழ் வளர்த்த பாண்டியரெல்லாம் ஒருவடிவு கொண்டன ரென்னத்,தங் கீர்த்தியால் திகாந்தங்கண்ட பொன்னுச்சாமி நரேந்திர ஞர்க்குப் புத்திரனாக அவதரித்து, மதுரையின்கண்ணே நான்காஞ் சங்கந் தாபித்துச் செந்தமிழ் வளர்த்து வருகின்ற முத்தமிழ்ப் புலமையும் பாலவநத்தத் திறையரசுரிமையு முடையராகிய ஸ்ரீமான். போ. பாண்டித்துரைப் பெருந்தகையாரது தமிழ்க்கலையிறைமைக் குத் திறையாக இந்நூலைச் சமர்ப்பித்தனம்.

காவலர் கோட்டம்,
1-6-03.

இங்ஙனம்,
ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

---

# [illegible]

## பாண்டவர் சரித்திரம்.

### க. பாண்டு வேட்டைக்குச் சென்றது.

மல்லிகை, முல்லை, மாதவி, வேங்கை, சண்பக முதலியன பூத்துத் தேன் சொரிதலும், கிளி, குயில், மான் முதலியன மகிழ்ந்து விளையாடுதலும், நிகழ்வதாகிய வேனிற் காலத்திலேயே பூர்வ ஆரிய மன்னர் வேட்டையாடுதற்கு வனத்திற் செல்வர். அங்ஙனமாக ஒரு காலத்தில் மிக்க பிரபலமுடையனாகிய ஓராரியமன்னன் வேட்டை விருப்புடையனாய் மிக்க சாதுரியமுடையராகிய வீரர் சேனை யொன்று தற்சூழ, ஒரு கடுங்கதிப்புரவிமேலேறி வனத்திற் சென்றான். அங்கே அம்மன்னன் நெடுநேரஞ் சுற்றித்திரிந்தும் வேட்டைக்குரிய தக்க மிருகமொன்றையுங்காணுனாய், உரோஷ மும் மானமு முந்தப்பெற்றுத் தனது குதிரையைத் தூண்டினான். தூண்டுதலும் அக்குதிரை கடிய வேகமாய்ச் சென்றது. அரசனை விடாது தொடர்ந்து சென்ற வேட்டுவவீரர் எல்லோரும் ஒரு கணப்பொழுதில் அவ்வசுவத்தின் வேகத்தால் நெடுந்தூரம் பிரிந்தார்கள். சூரியனும் தனது கிரணங்களையெல்லாம் பரப்பிக் கொதித்து மத்தியானத்தை அடைந்தான். வேட்டைமேல் வைத்த சிந்தையும் மானமும் அரசன் மனத்திலே உண்ணின்று மிகக்கொதித் தலால் அச்சூரியகிரணத்தின் வலிமையை அவன் பொருட்படுத்தாது முன்னோக்கிச் சென்றான். கட்புலன் கதுவும் கடையெல்லையாகிய அதிதூரத்தே ஒருருத் தோன்றிற்று. உடனே அவன் காலிற் கட்டிய தாறுகொண்டு குதிரையைத் தூண்டினான். அதுவும் அவன் கருத் தின்வழி யொழுகுவதுபோலப் புலாயிதகதியில் மின்னென விரைந் தது. அரசன் அஸ்திரதாரமுளதெனுமளவில் கலையும் பெண்ணும் போற்றோன்றிய வுருக்கள்மீது துண்ணெனக் கொடிய பாணத்தைப் பிரயோகித்தான். உடனே இரண்டுமுயிர் துறப்பனவாய் வீழ்ந்தன. அதுகண்டு அரசன் அகமு முகமுமொருங்கு குளிர்ந்தான். குளிர்ந் தும், அந்தோ! அம்மகிழ்ச்சி நீரிற் குமிழியாயிற்று. என்னை! வீழ்ந் திறக்கின்ற உருக்களினிடையினின்றும் மிகவருந்திய மானுடக் குரலால் ஒரு சாபம் செவிப்பட, அரசன் துணுக்குற்று நடுங்கினான். அச்சாபம் மானுருக்கொண்டு தன் மனைவியோடு விளையாடிநின்ற

இருஷி வாயினின்றுமெழுந்தது. மான்வேட்டை அரசர்க்குப் புரம்
பரையறத்தின்வாய்ப்பட்டதாயினும், இருஷியினது சாபத்துக்கு
ஏதுவாயிருந்தது விளையாட்டுநேரத்திற் பாணப்பிரயோகம் செய்த
மையே. அச்சமயம் யாதுந் தீங்கு செய்யலாகாதென்பது அறமுறை
யன்றோ. அதுகாரணமாகவே அவ்விருஷி சினங்கொண்டு அவ்
வரசனைச் சிற்றின்பம் விரும்பில் உன் சிரம் ஆயிரம் பிளவாகவென்று
சபித்தான். அக்கொடுஞ் சாபமும் அதன் அநுசித காரணமும்
அரசன் செவிப்பட்ட மாத்திரத்தில் "இவ்வபவாதத்துக் கென்செய்
வேன்; உலகம் பழிக்குமே" என்று நெஞ்சம் புண்படக் கவன்றான்.
பெண்போகத்தை முற்றத் துறத்தற்கும் மரணத்திற்கும் அவன்
சிறிதும் அஞ்சினானல்லன், ஆண்மைக்குந் தனது வீரத்துக்கும்
பெருமைக்கும் அடாத கொடியதாகிய குற்றத்தைச் செய்தமையால்,
அதனை நினைக்குந்தோறும் தன்னுயுட்காறும் தீராத பேரச்சமாகுமே
என நினைந்தஞ்சினான். இந்நினைவு அவனை மிக வருத்திற்று. இன்
னும் ஓரச்சம் அத்துணைப் பெரியதாய் அவன் மனத்திடையெழுந்
தது. புத்திரனில்லாதிறக்க நேருமென்பதே அவ்வச்சமாம்.

ஆரியனாய்ப் பிறந்தானொவ்வருவனுஞ் செயற்பாலதாகிய கடன்
புத்திரப்பேறு. புத்திரப்பேறில்லாதவிடத்துச் சந்ததிவிளக்கமாத்
திரமன்று பிதிர் கருமமு மில்லாதொழியுமே. பிதிர்கரும மில்லை
யாயின் முத்திசாதனங் கைகூடாதன்றோ. அவ்வாறெண்ணியேங்கி
அவ்வரசன் மனோதைரியங் குன்றித் தான் முன்னர் விட்டுப் பிரிந்த
பரிவாரத்தவர் வருங்காறும் அவ்விடத்திலிருந்தான். பரிவாரத்தவர்
களுஞ் சிறிது நேரத்தில் வந்து கூடினார்கள். அரசன் முககாந்தி
குன்றிப் பெருஞ் சஞ்சல சித்தனா யிருப்பது அப் பரிசனங்களுக்கு
நன்கு புலப்பட்டது. அரசன் தனக்கு நிகழ்ந்தனவற்றையெல்லாஞ்
சொல்லினன். பரிசனங்கள் அவைகளைக் கேட்டு அவனைத் தேற்றும்
வகை யாதெனத் தோன்றாது ஊமர்போலத் திகைத்து நின்றார்கள்.
அப்பொழுது அரசன் அவர்களைப் பார்த்து "நீங்கள் என் நகரத்தை
யடைந்து, யான் நகரஞ்சார்ந்து வாழ்தலை ஒழித்துவிட்டேனென்
பதும் இனி என் வாழ்நாளைக் காட்டிடையிருந்து தவத்திற்கழிக்கத்
துணிந்தேனென்பதும் தெரிவிப்பீர்களாக" வென்றான். அவ்வாறே
அவர்கள் இச்சமாசாரத்தை விரைந்து சென்று நகரத்திற் கூற,
அரசனுடைய தேவிமாரும் சுற்றமும் புறப்பட்டு ஒரு கணப்
பொழுதில்அரசனைச் சார்ந்தார்கள்.



## உ. பாண்டு புத்திரரைப் பெற்றது.

இதனைக்கண்ட நகரமாக்களும் சித்தங் கலங்கிப், பெற்ற தாயி
னும் சிறந்த பேரன்புடையனாகிய பெருந்தகையை எவ்வாறு பிரிந்
தாற்றுவோமெனப் புலம்பிக்கொண்டு திரள்திரளாகச் சென்று
அரசனைச் சூழ்ந்தார்கள். அரசனுடைய பாதங்களில் எல்லோரு
மொருங்கே வீழ்ந்து வணங்கி "எம்மையெல்லாம் காக்கக் கோல்
கைக்கொண்ட நீ இடைநடுவில் விடுத்து வெறுத்துத் துறவு பூண்ப
தற்குக் கொண்ட கருத்துத் தகாது" எனத் தடுத்தலையே பெரு
முயற்சியாகக் கொண்டார்கள். ஓர் அரசன் சந்ததிவிளங்கும்படி
தான் ஒரு புத்திரனையாயினும் வைத்துவிட்டன்றோ காட்டிற்சென்று
தவஞ்செய்தல்வேண்டுமென்றும், அங்ஙனஞ் செய்யாதொழிபவன்
நரகத்துன்பத்துக் காளாவதுமன்றித் தன்முன்னோரையும் அத்துன்
பத்திலுய்ப்பவனாவானென்றும் எடுத்தெடுத்தரசன் மனங்கொள்ளும்
படி ஓதினார்கள். உலகத்தை உள்ளவாறு வெறுத்தலே துறவாம்
என்றும், துன்பமும் துக்கமும் காரணமாக வெறுத்துத் துறவு
பூண்பது மெய்த்துறவாகாதென்றும் எடுத்துக் காட்டினார்கள்.

அவ்வளவில் அரசன் மனம் ஒருவாறு நிலைதளர்ந்ததாயினும்
இருஷியினது சாபம் வலியுளதாயிருக்குங்காறும் தான் புத்திரப்
பேறுடையனாதலும் இல்வாழ்வானுக்குரியகடன்களைச்செய்தொழுகு
தலும் எவ்வாறு கூடுமெனச் சிந்திப்பானாயினான். ஈற்றிலே தான்
ஒரு கதியுமின்றி நடுவிற் சிக்கிநிற்கும் நிலையை மெல்ல மெல்ல வெளி
யிட்டான். வெளியிடுதலும் மூத்த பாரியினது வாயினின்றும்
போந்த வசனங்கள் அவனைத் திடப்படுத்துவனவாயின. அவள்
தான் கன்னிகையாகவிருந்த காலத்திலே தந்தைபால் ஓரிருஷி வந்த
தும், அவ்விருஷிக்குத் தொண்டுசெய்யும் பொருட்டுத் தன்னைத்
தந்தை ஏவியதும் அங்ஙனந் தொண்டுபூண்டொழுகுநாளில் அவ்
விருஷி தனது விவேகத்தையும், பக்தியையும் கண்டு மெச்சித்
தனக்குச் சில மந்திரங்களை உபதேசித்ததும், அம்மந்திரங்களால்
தேவர்களையாயினும் மற்றவரையாயினும் தியானிக்க அவர்கள் வந்து
தந்தமாற்றலும் பெருமையும் பொருந்திய புத்திரப்பேற்றுக்கு
அனுக்கிரகித்துப் போவாரென்றும் அம்மந்திரங்களைப் பின்னிகழப்
போகும் கதியையுணர்ந்தே அவ்விருஷி உபதேசித்தனரென்பதும்

கூறினாள். துக்கசாகரத்தில் மூழ்கிக் கிடந்த அரசனுக்கு அவளுரைகள் ஒரு புணைபோலாக, மனக்கிளர்வுடையனாகித் தனக்குளவாகிய போக்கியங்களையும், அங்கங்களையும் இனித் தான் பரித்தியாகஞ் செய்வதில்லை யென்றுரைத்து, ராச்சிய கருமங்களை ஒருப ராசனை நியோகித்து, அவனால் நடாத்தவும், தன் இரு பாரியார்களோடும் தான் வனஞ் சார்ந்து அங்கே சுகித்திருக்கவும் கருத்துக்கொண்டான். மந்திரி பிரதானிகளும் மற்றோரும் அரசன் கருத்துக்கு முரணிப் பின் உடன்பட்டார்கள். அவ்வாறே அன்றுமுதலாக அரசியல் அந்தகனாகிய அவன் தமையனாலே பராக்கிரமத்திற் சிறந்த சிறியதந்தை துணையும், ஒருவகைத் துறவுபூண்டிருந்த தமையன்முறையி னுள்ளானொருவனது துணையுங்கொண்டு நடாத்தப் படுவதாயிற்று. அரசனும் மலைச்சாரலை யடைந்து அங்கே வசித்தான். காலவடைவிலே அவன் நெஞ்சைப் புண்ணாக்கிய துயரம் நீங்கிற்று. சாபத்தின் ஞாபகமும் அவன் மனத்தைவிட்டு மெல்ல மெல்லக் குடிபோயிற்று. உயிர்வாழ்க்கை அநித்தியமென்பதும், அவன் மனத்திலுதயமாகத் தன்னுடைய மூத்தபாரியை அழைத்துத் தன் பக்கத்திலிருத்தி,

கல்லாமழலைக்கனியூறல் கலந்து கொஞ்சுஞ்
சொல்லாலுருக்கியமுதோடித் தொடர்ந்துபற்றி
மல்லார்புயத்தில் விளையாடுமகிழ்ச்சிமைந்த
ரில்லாதவர்க்கு மணவாழ்வினினிமையென்னாம்.

மெய்தானம்வண்மை விரதந்தழல்வேள்விநாளுஞ்
செய்தாலும் ஞாலத்தவர் நற்கதிசென்றுசேரார்
மைதாழ்தடங்கண் மகவின்முகமன்னுபார்வை
யெய்தாதொழியிற் பெறுமின்பமிவணுமில்லை.

மென்பாலகரைப் பயவாதவர் மெய்ம்மையாகத்
தென்பாலவர்தம் பசித்தீநனிதீர்க்கமாட்டா
ரென்பானிகழ்ந்த வினையாவிடரெய்திநின்றே
னின்பாலருளுண்டெனினுய்யவனெடுங்கணல்லாய்.

நீ முன்னே கூறிய மந்திரபலத்தினாலே அறக்கடவுளையும், வாயுபகவானையும், இந்திரனையும் ஸ்மரித்து வரவழைத்து, அவர் தம்மையொத்த புத்திரரைத் தந்தருளுமாறு அவர்பால் வேண்டக்



கடவையென்று ஆஞ்ஞாபித்தான். அவ்வாஞ்ஞையைச் சிரமேற் கொண்ட பாரி அக்கடவுளரை வழிபட்டு மூவர் புத்திரரைப் பெற்றாள். அவள் அம்மந்திரத்தைத் தன்னுடைய சக்களத்திக்குப தேசிக்க, அவள் அதனால் அசுவினி தேவர்களைத் தியானித்து அவர் பால் இருவர் புத்திரரைப் பெற்றாள்.

இங்கே இவ்வாறு நிகழ, அங்கே அரசியல் நடாத்தும் அந்தகன் காலக்கிரமத்திலே அகங்காரமும் பேரவாவும் தன் மனதிற் குடி கொள்ளப்பெற்றான்.

## ௩. பாண்டு இறத்தல்.

தனக்கும் தன் சந்ததிக்கும் பட்டங் கிடைத்தல் அசாத்திய மென்று எண்ணியிருந்த அவ்வந்தகன் மனத்திலே, பட்டமானது சாத்தியந்தான் என்னும் எண்ணம் உதயமாயிற்று. காட்டிலே தவஞ் செய்கின்ற தனது சகோதரனுடைய பாரி பெற்றிருக்கும் மந்திரம் ஒரு காலத்தினும் பயன்படாதென்றும், தன்னுடைய பாரி கருப்பத்திலேயிருக்கும் சிசுவே பட்டத்திற்கு அருகமுடைய தாகுமென்றும் எண்ணினான். இங்ஙனம் அவன் மனோரதம்பண்ணி யிருக்குநாளிலே அங்கே வனத்தில் வசிக்கின்ற அரசன் உத்தம கிரகங்கள் சுபஸ்தானங்களைப் பெற்றிருக்கும் நல்லிலக்கினங்களிலே ஐந்து புத்திரர்களைப் பெற்றானென்பது கேட்டு, மனம் புண்ணாயி னான். சிலகாலஞ் சென்ற பின்னர் அவ்வந்தகன்தானும் நூற்றுவர் புத்திரருக்குத் தந்தையாயினன். காட்டிலேயுள்ள சகோதரன் புத்திரர் உயிரோடிருக்குங்காறும் தன் புத்திரருக்கு அரசுரிமை யுளதாகாதென்று மனதில் கொதித்துத் தன் மந்திரத்தலைவரை அழைத்து அவரோடு உசாவினான். அவர்களும் அவனுடைய புத்திரருக்கு அரசுரிமையுளதாகாதென்றார்கள். அதுகேட்டுத் தன் னுடைய புத்திரரது நன்மையின்பொருட்டுக் காட்டிலிருக்கும் சகோதரன் புத்திரருக்கு இடையூறுகள் பலவுளவாகுமென்று எதிர் நோக்கி இருந்தான். தானும் தன்னுடைய புத்திரரும் நல்ல அரணை உடைய நகரத்தில் இருந்துகொண்டு சர்வசுவாதீன முடையவர்க ளாய் இருத்தலினாலே தங்களுக்கு யாதோரிடையூறும் நேர்ந்திடா தென்றும், தன்னுடைய தம்பி புத்திரருக்கோ அவர்கள் வனத்திலே சஞ்சரிக்கின்றமையினாலே கொடிய மிருகங்களாலும் சர்ப்பங்களா லும் தீங்கு விளைவது திண்ணமென்றும் நிச்சயித்தான்,

ஒன்றன்பின் ஒன்றாய்ச் சிலவருஷங்கள் சென்றன. இருதிறத்துப் புத்திரர்களும் தத்தம் வாசஸ்தானங்களிலே இருந்து வளர்வாராயினார்கள். காட்டிலே தவவேடம் பூண்டிருந்த அரசன் தன் புத்திரருடைய செய்கைகளாலும், சிறப்பினாலும், அன்பினாலும் தன் மனங் கசிந்துருகப்பெற்றுத் தான் கொண்ட விரதங்களையும் மெல்ல நழுவவிட்டான். தன்வசமின்றியே சிற்றின்பத்தின் மேலுங் கருத்து வைத்தான். அதனால் அவன் பாரியர்மீது அன்புகொண்டான். அந்நாள்வரையும் பருவகால வேற்றுமைகளை உணராதிருந்த அரசனுக்கு வசந்தகாலம் அவன் மனத்திலேயுள்ள ஆசாக்கினிக்கு நெய்யாகிச் சத்துருவாயிற்று. அவ்வசந்தகாலம் அவனுக்கு முன்னையிலும் மிக்க அற்புத அலங்காரமான பசுந்தழைகளையும், நறுமலர்களையுங் காட்டி யெழுந்ததுபோலத் தோன்றிற்று. இளந்தென்றலானது அவனுக்கு முன்னொரு காலத்தும் அறியாத மனோகரமாயிற்று. குயிலிசையும் கிளி மழலையும் அவன் காதுக்குப் புத்தமிர்தமாயின. பிரமரங்களினது இனிய ரீங்காரமும், மயில்களினது இனிய வண்ணங்களும் அவன் மனத்திலே எல்லையில்லா மகிழ்ச்சிக்கேதுவாயின. சுருக்கிக் கூறுமிடத்து அவ்வசந்தகாலமானது முன்னொருபோதும் அணியாத அழகிய ஆடை ஆபரணங்களை ஆராய்ந்தணிந்துகொண்டு, இனிய பண்ணோசைகளையும் விதம் விதமாகச் சிறந்த பலவர்ணக் கோலங்களையுமுடைய பக்ஷிசாலங்களைத் துணைகொண்டு அரசனை மயக்க எழுந்ததுபோலாயிற்று. அக்காலத்தினது வசீகர சக்தியை எடுத்துச் சொல்லப்புகின் அது பல காலம் அநுபவித்து வெறுப்புற்றவரையும் மயக்குமியல்பினதென்றே சொல்லத்தக்கது. நெடுங்காலம் போகபோக்கியங்களை வெறுத்து முற்றத் துறந்து பின்னர் அவைமீது அவாவுங் கருத்துற்ற அவ்வரசன் மனத்தை அவ்வசந்தகாலம் தன்பாற் கவர்ந்துகொண்டொழுகாதென்செய்யும்! அரசன் தமியனாகி இருந்தபோது இளையபாரி எதிர்ப்படக் கண்டு, பெருங் களிப்புடையனாகி, ஆசைப்பித்தேறி, அவளைப் பொள்ளெனப்பற்றி அவள் மறுக்கவும் கேளானாகி வலிதிற்றழுவினான். தழுவவும் அவன் தலை ஆயிரம் பிளவாகப்பெற்றுயிர் துறந்தான்.

பாரியரிருவரும் ஆற்றொணாத் துக்கசாகரத்தில் மூழ்கி வயிறலைத்துப் புலம்பி விதவையராயினர். அவ்வனத்தினது கண்கொள்ளாவலங்காரங்களெல்லாம் அவர்களுடைய கண்களுக்குத்



துன்பகாரணமாயின. அவ்வனச் சூழலிலே வசித்த விருஷிகள் அதனையுணர்ந்து விரைந்து சென்று அவ்வரசனுக்குச் சாக்கடன்களையெல்லாம் முறையுற முற்றுவித்தார்கள். அப்பொழுது தானே அரசனுடைய மரணத்துக்குக் காரணமென்றும் அதனால் தான், அவனோடனுகமனஞ் செய்தலே தக்கதென்றும் எண்ணி இளையபாரி அவனோடக்கினிப்பிரவேசஞ் செய்து சுவர்க்கம் புகுந்தாள். மூத்த பாரி புத்திரரைப் பாதுகாத்து வந்தாள். சிலகாலஞ் சென்றபின்னர் இருஷிகள் அப்புத்திரர்களையும் தாயையும் அழைத்துப்போய் அரசியல் நடாத்தும் பெரிய தந்தையிடம் ஒப்புவித்தார்கள்.

இதுகாறும் கூறியவாறு வேட்டைமேற்சென்று சாபம்பெற்று உயிர்துறந்த அரசன், கலியுகாரம்பத்துக்கு நூறு வருஷங்களுக்கு முன்னே சந்திரவம்சத்திலே பிறந்து செங்கோல் செலுத்திய பாண்டு மகாராசன். உபராஜன் என்று முன்னே கூறப்பட்டவன் திருதராஷ்டிரன். இவன் பாண்டுவுக்கு மூத்தோனாயினும் அந்தகனாதலின் அரசுரிமைக்கருகனல்லனென்று நீக்கப்பட்டவன்.

---

## ௪. பாண்டுபுத்திரர் கலைகளில் வல்லுநராதல்.

காட்டிலிருந்து வந்த பாண்டுபுத்திரரைவரும் திருதராஷ்டிரன் புத்திரரோடு வைத்து வளர்க்கப்பட்டார்கள். அந்நாளிலே இராஜகுமாரர்களை அவர்க் கிஷ்டமான போகங்களை அநுபவிக்குமாறு விடுத்து அவர்க்குச் சோம்பியிருத்தலையே தொழிலாகக் கொடுப்பதில்லை. சரீரவளர்ச்சியோடு அறிவை வளர்த்தலும், படைக்கலப் பயிற்சியோடு நல்லொழுக்கம் பயிலுதலும் என்னுமிவையே இராசகுமாரருக்கு இளமைப்பருவத்திலே உரிய கடன்களாம். ஆகவே இவ்விராசகுமாரர் எல்லோரையும், வேதசாஸ்திரங்களில் வல்ல பண்டிதர்களிடத்திலே ஒப்புவித்து, அவர்க்குப் படைக்கலம் பயிற்றத் துரோணாசாரியரையும், கிருபாசாரியரையும் நியோகித்தார்கள். இக்கிருப துரோணர்கள் தங்காலத்திலே வில்வித்தையில் தமக்கொப்பாரும் மிக்காருமில்லாதவர்கள். இவ்வாறு பாண்டு புத்திரர்களைச் சமமாக நடத்திவந்தும் திருதராஷ்டிரனுடைய புத்திரர்கள் அப்

பாண்டவர்கள்மீது பொறாமையும் வெறுப்பும் உடையவர்களாகவே ஒழுகத் தலைப்பட்டார்கள். விளையாட்டாக அப்பாண்டு புத்திரர்களுக்கு நினைத்தற்கரிய வன்செயல்களையுங் காலந்தோறும் செய்து வருவாராயினார்கள்.

இவ்வாறு வருஷங்கள் பல கழிந்தன. ஒருநாள் விடியற் காலத்திலே பாண்டவர்களுடைய நகரத்திலே, மகேந்திரஜாலகாரனுடைய வித்தைகளைக் காணும்பொருட்டு அவாக்கொண்டு விரைகின்றவர்களைப்போல, ஜனங்கள் எல்லாரும் திரள்திரளாகப் புறப்படத் தொடங்கினார்கள். சூரியனும் தனது பொற்கிரணங்களையெல்லாம் பரப்பி அன்று நிகழப்போகின்ற சம்பவத்தைக் காண ஆசையுற்றான்போன்று உதயஞ்செய்தான். சூரியன் உதித்து ஒருநாழிகை செல்லாமுன்னே நகரமாந்தர்கள் லக்ஷக்கணக்காக வீதிகளிலே செல்லத்தொடங்கினார்கள். வில்வித்தையிலே பெயர்படைத்த ராஜகுமாரர்களது சாமர்த்தியத்தைக் காண்டற்கு வகுத்தமைக்கப்பட்ட விளையாட்டுக் களத்தை ஏவலாளர் விடியுமுன் வியப்புற அலங்கரித்தார்கள். அக்களத்துக்கு நான்மருங்கிலும் தோரணகம்பங்கள் நாட்டி மாலைகளால் வேலியிட்டார்கள். அக்களத்திலிடையிடையே அலர்ந்து குளிர்ந்து செழித்துத் தழைத்த அலங்கார விருக்ஷங்களை நாட்டி வைத்தார்கள். கீழே பலவர்ணப் புஷ்பங்களாற் கம்பளம் விரித்தார்கள்; மேலே கொடிகளை அளவின்றி உயர்த்தினார்கள்; அக்கொடிகளெல்லாம் அன்றுவந்து நெருங்கப்போகும் ஜனத்திரளுக்குப் புழுக்கம் வராமல் மந்தமாருதத்தை வீசும் விசிறிகளாய் அமைத்துக்கிடந்தன. அக்களத்திலே இரத்தின கசிதமான சிங்காசனங்கள் பந்திபந்தியாக இடப்பட்டன.

நகர மாந்தர்கள் திரள் திரளாக அக்களத்தை நோக்கிச் செல்வாரும், அங்கே செல்லும்பொருட்டு விரைந்து தம் காலைக்கடனை முடிப்பாரும், முடிந்தவுடன் நாழிகையாயிற்றென்று போசனம்பண்ணாது புறப்படுவாரும், போசனம் பண்ணப் புகுந்தும் மனஞ் செல்லாது எழுந்தோடுவாருமாய்ப் பலதிறப்பட்டு இடங்கடோறுமிருந்து புறப்பட்டார்கள். அப்பொழுது அரசகுமாரர்கள் புறப்படும் பலவகைப் பேரிகைகளும் இசைக்கருவிகளும் அண்டகடாகங்கள் திரும்படியாகக் கோஷித்தன. குதிரைகள்மேல் ஏறிச் செல்வாரும்,



யானையூர்ந்து செல்வாரும், சிவிகையி லூர்ந்து செல்வாரும், அரண்மனையிலிருந்து இராசகுமாரரை முன்னும் பின்னும் சூழ்ந்து கொடி குடை முதலிய சின்னங்களோடு புறப்பட்டுச் சென்று விளையாட்டுக் களத்தை அடைந்தார்கள். திருதராஷ்டிரனும் அவன் மந்திரத் தலைவரும் போயாசனங்கொண்டார்கள். ராஜஸ்திரிகள் தமக்குரிய விடங்களிலே போயாசனத் தமர்ந்தார்கள். அவரோடு வந்து நெருங்கிக் கூடிய ஜனங்களினது ஆரவாரமுமிரைச்சலும் அடங்கின. கோமக்களும் தங்கள் தனுர்வேதாசிரியன் கற்பித்த சமிஞ்ஞைப்படி வரிசையாக நடந்தார்கள். அந்த யுத்த வித்தியார்த்திகளுடைய பார்வையெல்லாம் குன்றாத வீரமும் தம்மை எதிர்நோக்கி நிற்கும் மகாசனங்களுக்கு வந்தனோபசாரமுங் காட்டின. அவர்களுள்ளே முதன்மையாகும்படி பிரகாசித்தவீரர் துரியோதனனும், வீமனும், அர்ச்சுனனுமே. அவருள்ளே துரியோதனன் மல்யுத்தத்திலே நிபுணனும் பருத்தசரீரம் உடையனுமாதலின் தனக்கு வீமனே இணையாவானெனப் பெருமிதங்கொண்டு நின்றான். அப்பொழுது இம்மல்யுத்தத்திலே ஒருவாறு வல்ல வேறு மைந்தர் சிலர் தமது சாமார்த்தியத்தை அக்களத்திலேவந்து காட்டினார்கள். அதன்பின்னர்த் தனது சாமார்த்தியத்தைக் காட்டநினைத்து பேரவா மீதூரப்பெற்று நின்ற துரியோதனன் அறை கூவிக் களநடுவிலே மதயானைபோலச் சென்று நின்றான். அதுகேட்டமாத்திரத்தில் வீமனும் சிங்கம்போற் பாய்ந்து அரங்கிற் பிரவேசித்தான். இருவரும் சிறிது நேரம் தாம் மல்யுத்தத்திற் படைத்த வீரத்திறங்களையெல்லாம் காட்டினார்கள். அங்குவந்திருந்த சபையாரெல்லோரும் கண்ணிமைக்காததிசயித்துப் பார்த்திருந்தார்கள். அம்மைந்தர்கள் ஒருவரையொருவர்பற்றிஎற்றி மீளும்போது அடி பெயர்க்கின்ற ஒலியானது பூமியையும் அசைப்பது போலாயிற்று. இவ்வகை யுத்தம் நடக்கும்பொழுது, உண்மையான ரோஷமும் அகங்காரமும் அவ்விருவர் மாட்டுமுண்டாயின. அது கண்ட துரோணர் அஞ்சி விரைந்தோடி இனி அமைக வென்று தடுத்துப் பிரித்து விட்டார்.

## ௫. அர்ச்சுனன் வில்லாண்மை.

அதன்பின்னர் வில்வித்தையிலே வல்லவனாகிய அர்ச்சுனன் தனது விற்றிறமையைக் காட்டும்பொருட்டு அங்குவந்து திரண்

டிருந்த ஜனங்களது கண்களெல்லாம் தன்மேல்வீழச் சிங்கேறு போலச்சென்று அரங்கத்தை அடைந்தான். அவனைப் பார்த்தோரெல்லாம் இவ்வில்வித்தையில் இவனே விஜயனாவானென்றுகூறி அதிசயிக்கும்படியாக இறுமாந்து நின்றான். அவன் அரங்கத்திலேறிய மாத்திரத்தில் ஆர்ப்பரிப்பும் கரகோஷமும் விண்முகட்டையும் திருதராஷ்டிரனுடைய மனத்தையும் நடுக்கின. திருதராஷ்டிரன் இக்கரகோஷம் யாதுபற்றி எழுந்ததென்று வினவ, மந்திரிமார் அதன்காரணத்தை எடுத்துரைத்தார்கள். அதுகேட்டுத் திருதராஷ்டிரன் தன் புத்திரரல்லாத வேறுமைந்தரும் வில்லாண்மையில் வல்லவராவரோ எனத் தன்ஊனக்கண்போல மனக்கண்ணும் குருடாயினான்; புறத்தேமாத்திரம் அர்ச்சுனன் பெற்றகீர்த்திக்குத் தானும் மகிழ்வான் போன்று அவனுந் தன்மைந்தனே யாவனென்று புகழ்ந்தான்.

அர்ச்சுனன் தனது வில்லையெடுத்து நாண்பூட்டிக் குணத்தொனிசெய்ய ஜனசமூகம் நிஸ்தரங்க சமுத்திரம்போலாகி அகமும் முகமும் கண்ணும் மலர்ந்திருந்தது. அவன் வில்லினின்றும் நவநவமாகப் பாணங்கள் பறந்தன. ஒன்று விசையைக்காட்டிற்று. ஒன்று அவன் கரவேகத்தைக் காட்டிற்று. இவ்வாறெவ்வொன்றும் ஒவ்வோரதிசய வேதுவாக ஆர்ப்பரிப்பும் கரகோஷமும் ஜனசமூகத்திலிருந் தெழுந்திடையறா தொலித்தன. சில சரங்கள் மழைத்தாரைகளைக் கான்றன. சில மலைகளைப் பிளந்து சென்றன. இவைகளையெல்லாங்கண்டு ஜனசமூகம் பிரமித்து நிற்கும்பொழுது, அக்களத்தின்மீதே ஓர் இருண்மேகம்வந்து மூடிற்று. அது வரவரத் தடித்து இருண்டு ஒருவரையொருவர் காணாமலும் மற்றொன்றுங் கண்ணுக்குப் புலப்படாமலும் திகைக்கும்படி கம்பீரமானவந்தகாரமாயிற்று. அங்ஙனமாதலும் முன்னிகழ்ந்த ஆர்ப்பரிப்பும் கரகோஷங்களும் சிறிதுமின்றி யொழிந்தன. அற்பசுவாசந்தானு மங்கில்லா தகன்றன. சடிதியிலே கதிர்க்கற்றைகளைக் கான்றுகொண்டு ஒரு வேற்படையானது அவர்களுடைய கண்களின் முன்னே பாய்ந்தது. பாய்தலும் அவ்விருட்பிழம்பெல்லா நொடியிற்சிதைந்தொழிந்தது. அச்சனசமூகத்திலே இருந்த வில்வீரரெல்லோரும் இம் மாயங்களெல்லாம் அர்ச்சுனன் அக்கினிதேவனையும், மேகவாகனனையும், கிரீசனையும் தினகரனையும், நிசாகரனையும் வழிபட்டு அவர்பாற் பெற்ற வரப்பிர



சாதங்களினால் உண்டாகிய அரிய சக்தியைக்கொண்டு இயற்றினவே யாகுமென்றுணர்ந்தார்கள். இவ்வகை வில்வித்தையில் தாமும் வல்லுநரே யாயினும் இத்துணையாற்றலெவர்க்கு மரிதேயாமென்று அதிசயிப்பாராயினர். சாதாரண ஜனங்களுக்கோ அர்ச்சுனன் வில்லாண்மை அற்புதமாகவே யிருந்தது. இவ்வகை யாற்றல்களைப் பாரம்பரிய கதைவாயிலாகக் கேள்வியுற்றதன்றி அச்சனங்கள் தங்கள் கண்களாற் காணப்பெற்றதில்லை. அநேக சந்ததி காலமாக அந்நாட்டிலே செழிப்பும் சமாதானமுமே விளங்கிவந்தன. ஆதலின் இவ்வகை வில்லாண்மைக்குச் சமய நேர்ந்திலது. அதுநிற்க.

இருள் கரந்த மாத்திரத்திலே திசைகளெங்குஞ்செவிடுபடும்படியாக வாழ்த்தொலியும் ஆர்ப்பரிப்பும் மேலெழுந்தன. அர்ச்சுனனுடைய அரிய செயல்களைக் கண்டு பெருமகிழ் கொண்டு நின்ற சனசமூகம் அதிசயத்தினாற் றம்வசமழிந்து தங்களிதயத்திலே அர்ச்சுனன் மீதுளதாகிய அன்பும் அவனைக் கட்டித்தழுவ மார்வமும் நிறைந்திருந்தமையால் மற்றெவ்வகை யெண்ணமும் இடங்கொளப் பெறாது நின்றார்கள். இவ்விதமான மதிப்பு அர்ச்சுனனுக்கு மேன்மேலு முண்டாகும்படி செய்தல் தக்கதன்றென்று நினைந்து துரோணாசாரியார் சமிஞ்ஞை செய்து அர்ச்சுனனை விளையாட்டினின்றொழிகவென்று தடுத்தார்.

---

## ௪. கர்ணன் வில்லாண்மை.

அவ்வளவில் ஆரவாரங்களெல்லாம் ஒடுங்கின. ஜனங்களும் தம்மெய்ந்நிலை பெற்றார்கள். அப்பொழுது யாவர் செவிகளுஞ் செவிடுபடும்படியாக விருதுரைகள் முழக்கொலிபோல ஒரு திசையினின்றெழுந்தன. அவ்விருதுரைகள் எல்லார் செவியினும் புலப்பட்டன வாயினும் யார் வாயினின்றும் எழுந்தன வென்பது ஒருவருமுணர்ந்திலர். அரங்கமத்தியிலேயௌவனகுமாரனொருவன் இறுமாந்த நிலையும், அலங்காரக் கச்சையும் உடையனாய், யுத்தசன்னத்தனாய் நின்றான். தான் அடைந்திருக்கும் சாமர்த்தியத்தையும் தன்னுடைய ஆண்மையும் எடுத்துக் கூறிச் சபாஜனங்களை நோக்கி, "அர்ச்சுனனுடைய அற்ப சாமர்த்தியத்தைக் கண்டு இத்துணையாக நீங்கள் மெச்சிக்கொண்டதென்னை" யென்று அவ்வரங்க மெங்கும் உருவத்

தக்க குரலாற் கேட்டான். அப்பொழுது அச்சபையிலிருந்த பலர் இவ்விளங்குமரன் யாவனென் றொருவரையொருவர் உசாவி, இவனே நதிக்கரையிலே பேழையிலே ஓர் சிசுவாய் வந்தடைந்து அதிரதனால் எடுத்து வளர்க்கப்பட்ட கர்ணனென்று சிலராற் கேட்டு அதிசயித் தார்கள். இக்கர்ணன் அதிபாலியத்திற்றானே பராக்கிரமம் விளங்கிய வனாயிருந்தமையினாலே இராசகுமாரர்களுக்கு நட்பினனாகி யவரோ டிருந்து வளர்ந்து, அவருள்ளே தானு மொருவனாகி அஸ்திர வித்தை யும் பயின்றவன். துரியோதனனோடு சேர்ந்த நாண்முதற்கொண்டு மிக்க அகங்காரமும் பிறரையெல்லாம் அவமதித்தலும் தன் மனத் திலேஓங்கப்பெற்றவன். இக்குணத்தின் காரியமாகவே அர்ச்சுனன் பெற்ற பெருமதிப்பின் மேல் அழுக்காறுடையனாகி அரங்கத்திலேறித் தன் பெருமையை எடுத்துக் கூறப் புகுந்தான். கர்ணனிங்ஙனந் தன்னைப் புகழ்ந்துரைத்தபொழுது, அர்ச்சுனன் தன் குரு முகத்தை நோக்கித் தனக்கு விடை தருகவென்று வேண்டுங் குறிப்புக் காட்டி நின்றான். விடைபெறுதலும் தன்னைப் புகழ்ந்து நின்ற கர்ணன் முன்னே சிங்கம்போற் சென்று எதிரூன்றினான். இருவருந் தந் தெய்வம் வாழ்த்தினர். அவர்பால் விரும்பிய வரங்களும் பெற்றார் போற் றோன்றினர். பார்த்துநின்ற சபாஜனங்களெல்லோரும் யாது நிகழுமோ வென்றஞ்சி யாதுங்கூற வியலாது நாத்தழுதழுத்து நின் றனர். இளங்காளைய ரிருவரும் நின்ற நிலை வரவர முறுகியது. இருவரும் ஒருவர்க்கொருவர் அதிகராதல் வேண்டுமென்னு மவா மேலீட்டினால் கொடிய சொற்போரும் விற்போரும் செய்தார்கள். நோக்கி இருந்த சபாஜனங்கள் இருதிறத்தராயினார்கள். துரியோ தனனும் அவன் தம்பியரும் பெருமிதமுடைய போர் மீளியாகிய கர்ணன் பக்ஷத்தாராயினார்கள்.

---

## எ. கர்ணன் அங்கதேசாதிபதி யாதல்.

இச்சமயத்தில் கிருபாசாரியரெழுந்து கர்ணன் வாயடங்கு மாறு சில பேசத் தலைப்பட்டார்; இவ்வளவில் விற்போரை நிறுத்தி இன்ன குலத்தானென்றும் இன்னான் மகனென்றும் தன் பிறப்பறி யாத கர்ணன் ராஜவமிசத்துள்ள ஒருவனுக்கு எதிர் நிற்கப்புகுந்த தெங்ஙனமென்பதை முன்னர் நாட்டுதல் வேண்டுமெனக் கிருபா



சாரியருறுத்தி யுரைத்தனர். கர்ணன் தன் குலப் பெருமைகளை யெடுத்துக் கூறுதற்கு ஒருவழியு மில்லாதவன். தன் தந்தை தாயரை அறியாதவன். யாம் முன்னே கூறியவாறு ஒரு சாரதியினாற் சிசுவா யிருக்கும் பொழுது கண்டெடுக்கப்பட்டவ னென்பது மாத்திர மறிந்தவன். சூரிய குமாரனென்று சொல்லப்பட்டாலும் அவ் வுரைக்கு மாதார மறியாதவன்.

இவற்றை யெல்லாம் கிருபாசாரியரெடுத்துக் கூறியவளவில் கர்ணன் தலை குனிந்தான். இவ்வமயத்திலே துரியோதனனெழுந்து கர்ணனைத் தன் உயிர்த்துணைவனாக்கிக் கொள்ளல்வேண்டுமென்னும் அவாவுற்று அச்சபையை நோக்கி,

> "கற்றவர்க்கு நலனிறைந்த கன்னியர்க்கும் வண்மைகை
> யுற்றவர்க்கும் வீரரென் றுயர்ந்தவர்க்கும் வாழ்வுடைக்
> கொற்றவர்க்கு முண்மையான கோதின்ஞான சரிதரா
> நற்றவர்க்கு மொன்றுசாதி நன்மை தீமை யில்லையால்"

ஒரு சிங்கத்தை நோக்கி, இச்சிங்கம் மான் வயிற்றிலே பிறந்த தென்று ஒருவன் கூறுவானாயின் அவன் அவ்வளவில் அவ்விஷயத்தை நாட்டினனாக மாட்டான். அதுபோலக் கர்ணனுடைய பெருமைகளை நோக்கு மிடத்து ராஜவமிசத்திற் பிறந்தவனே யாவனன்றி இழி குலத்துப் புத்திரனாகமாட்டான். இவ்வளவில் உங்களுக்குத் திருப்தி இல்லையாயின் அவனை அங்கதேசத்திற் கரசனாக்கி உங்களோடு ஒப்ப உயர்த்தி வைப்பே" னென்றான். இங்ஙனந் துரியோதனன் சொல்லி முடித்துவிட்டுத் தந்தையையும் அவன் மந்திரிமாரையும் நோக்கித் தான் அச்சபை முன்னே கூறிய பிரதிக்கினையை முடித் தருள வேண்டுமென்றிரந்தான். அவ்வாறே கர்ணன் அங்கதேசாதி பதியாக்கப்பட்டு ராஜவரிசை பெற்றான். கர்ணன் தான் தலை குனிந்து நின்ற சமயத்திலே தனக்காகப் பரிந்து பேசித் தன்னை அரசனாக்கி எவருஞ் செய்தற்கரிய தோருபகாரத்தைஆற்றின பெருந்தன்மையை நினைந்து நினைந்து ஆநந்தக் கண்ணீர் சொரிந்தான்.

அதனால் அக்கணம் முதல் துரியோதனனுக்கு உற்ற பிராண சிநேகனாயினான். இவ்வளவில் மாலைக்காலம் வந்தடுத்தது. அங்கு வந்துநின்ற சபாஜனங்களும் அகமகிழ்ச்சியோடு திரும்பாது, இன்று நிகழ்ந்த விவாதத்தினால் யாது வந்து சம்பவிக்குமோ வென்று

குளித்துத் தத்தம் வாசஸ்தானங்களை நோக்கி மீண்டார்கள், சுப காலத்துக்கு ஆரம்பகாலமாகு மென்று எண்ணியிருக்க உத்தமகுண சம்பன்னராகிய பாண்டு மக்கள் மீது துரியோதனன் பகை சாதித்தற்கு முகூர்த்தஞ் செய்த நாளாயிற்றென்று அந்நகர மாக்களெல்லோரும் நினைந்து வருந்தினார்கள்.

—

## அ. குருதக்ஷிணை கொடுத்தல்.

இதன் பின்னர் இரண்டு நாட்கழிந்தன. பாஞ்சால ராஜதானியிலுள்ள ஜனங்கள் போர்ப்பறை காதிற் கேட்டுத் துணுக்குற்றார்கள். துருபதராஜன் செவிப்படு முன்னே நகரத்திலே காட்டுத்தீபோல எங்கும்பரந்தது. ஒற்றரும் விரைந்து சென்று அவ்வரசனை அணுகி முன்னரொரு காலத்திலு மறியாத பயங்கரமான சேனை யொன்று நமது ராஜதானியை நாடி வருகின்றது. அச்சேனையின் நோக்கமின்னதெனப் புலப்படவில்லை யெனக் கூறினார்கள். அக்கணத்திலே அரசன் தன் சேனாவீரரை அழைத்து யுத்த சன்னத்தராகுங்களென்று ஆஞ்ஞாபித்தான். நகரத்துச் சனங்களுடைய பயங்கரத்தைத் தீர்க்கும் பொருட்டு அஞ்சாத ஆண்மை படைத்தவனாகிய அரசன் அச்சேனைக்கு முன்னே தானைநாயகமாகி நடந்தான். பராக்கிரமத்திலும் போர்த்திறமையிலும் துருபதன் துரோணனுக்கும் இணையானவன். அங்ஙனஞ் செல்லுமளவில் போர்க்கறை கூவி வருகின்ற தானை குரு வமிசத்துக் கோமக்களது தானையேயாமென ஒற்றராலுணர்ந்தான். அஸ்தினாபுரத்திலே நடந்த யுத்த பரீக்ஷையின் வரலாறும் அவன் காதுக்கெட்டின. எட்டுதலும் இச்சிறுவர்க்காகவா யான் இத்துணைப் பெரும் படையோடும் இத்துணைப்பெரும் பிரயத்தனத்தோடும்புறப்பட்டேன் என்று தன்னிதழைக்கடித்துத்தன்னைத் தானேநிந்தித்துக் கொண்டான். துரியோதனனும்அவன்சகோதரரும் வில் ஆண்மையிற் போர்படைத்தல்வேண்டுமென்னும்பேராவினால் உந்தப்பட்டுநின்றார்கள். அவ்வெண்ணம்அவர்க்குப்பிரதிகூலமாயிற்று. தங்களுடைய திறமையைத் தாங்களே பாராட்டிக் கொண்டு பாண்டு புத்திரர்கள் தம்மினும் மேம்படலாகாதென எண்ணி முற்பட்டுச் சென்று போர்க்களத்திற் புகுந்தார்கள். தங்களுடைய துர்ப்பலம் இத்துணையதென்று அப்போர்க்களம் புகுந்துசிறிதுநேரம் செல்லா



முன்னே உணர்ந்தவராகி அங்கே நின்று நிர்வகிக்கலாற்றாது புறங் கொடுத்தோடினார்கள். அப்பொழுது தங்களுடைய சமயத்தை எதிர் நோக்கி நின்ற பாண்டு புத்திரர் அர்ச்சுனனைத் தலைமையாகக் கொண்டு போர்க்களத்திலேபுகுந்தார்கள். புகுதலும்சிறிதுநேரத்தில் கடும்போர் மூளத் துருபதன் அர்ச்சுனனுடைய வில்லை இருதுண்டமாக்கினான். அச்செயல் அர்ச்சுனனுக்குக் கோபத்தையும் அகங்காரத்தையும் புஜபலத்தையும் எல்லைகடந்தோங்கும்படி எழுப்பிவிட்டது. எழுப்புதலும் அர்ச்சுனன் துருபதனுடைய தேரின்மேலே மின்னெனப் பாய்ந்து அவனைச்சிறைப்படுத்திக் கொண்டு சகோதரர் பின் தொடர்ந்து செல்ல யுத்தகளத்தை விட்டுக் கடிதிலகன்றான்.

இப்படையெழுச்சி தங்கள் சாமர்த்தியத்தைக் காட்டும் பொருட்டு வரம்பிகந்த ஒழுக்கத்தினையுடைய இளங்குமரரால் செய்யப்பட்டதெனக்கொள்ளத்தக்கதன்று. அதன்காரணம் பின்னர் வெளிப்படுவதாயிற்று. யுத்த பரீக்ஷை முடிந்த அத்தினத்திலே துரோணருடைய மாணாக்கர்கள் அவர்பாற்சென்று தாங்கள் அவர்க்குச் செய்யத்தக்க குற்றேவலைக் கற்பிக்குமாறு அவரை வேண்டினார்கள். அப்பொழுது துரோணர் தமது மனத்தில் நெடுநாள் குடிகொண்டிருந்த பகையைச் சாதித்தற்குச் சமயம் வாய்த்ததென்றெண்ணினர். துருபதராசனும் துரோணாசாரியரும் ஒருசாலை மாணாக்கர்களாக விருந்த காலத்தில்துருபதன்தான் பட்டாபிஷேகம் பெற்ற பின்னர்த் துரோணருக்குக் கனகாபிஷேகம் பண்ணுவதாக வாக்களித்திருந்தான். துருபதன் பட்டாபிஷேகம் பெற்ற பின்னர்த் துரோணர் அவ்வாக்கை நினைந்து அவன்பாற்சென்றனர். துருபதன் அவருக்கேற்ற வுபசாரஞ் செய்யாமலும் தன் வாக்கை நிறைவேற்றாமலும் அவரை அனுப்பி விட்டான். அந்நாள் முதற்கொண்டு துரோணர் பழி சாதிக்கும் பொருட்டுச் சமயம் பார்த்திருந்தார். அர்ச்சுனனே அதனை முடிக்கும் ஆற்றலுடையானென்பது அவர் மனத்தில் நன்கு பதிந்தது. ஆயினும் அர்ச்சுனனை மாத்திரம் பிரித்தெடுத்து அவனுக்கொரு ஏவலைக் கற்பிக்குமிடத்து மற்றை மாணாக்கரெல்லோரும் பொறாமை தூண்டுவரெனச் சிந்தித்து அவரெல்லோரையும் நோக்கித் துருபதராசனைச் சிறைப்படுத்தி என்பாற் கொணர்ந்து தருவீரேல் அதுவே எனக்குச் சர்வ திருப்தியாகுமென்று கூறினர். அக்குருபணியை முடிக்குங் கருத்தினனாகவே

அர்ச்சுனன் துருபதனைச் சிறை செய்தானெனக் கொள்ளத்தக்கது. இங்ஙனங் கொண்டுபோய்த் துருபதனைத் துரோணர் முன்னே விடுத்தலும் துரோணர் அத்துருபதனைப் பார்த்து,

முறுவல் கொண்டுகண்ட சாபமுனியுநாண வெம்மைநீ
யுறுவதொன்று முணர்கலா துரைத்தபுன் சொலறிதியே
மறுவிலந்தணாளன் யானு மன்ன நீயும் வாசவன்
சிறுவன் வென்றுனைப் பிணித்தசிறுமையென்னபெருமையோ.

எனக்கு நீ வாக்குத் தத்தஞ் செய்தபொருளைத் தராதுகவர்ந்து கொண்டமையினால் உனக்கு இத்தண்டம் யான் செய்யும்படி நேர்ந்தது. உன்போலும் செருக்குடையவனையும், நன்றி மறந்தவனையும் யான் யாண்டுங் கண்டதில்லையென் றிவ்வாறு கூறி அவன் நாட்டிற் பாதியைக் கவர்ந்து கொண்டு மற்றைப் பாதியைஅவனுக்கு விடுத்து அவனைச் சிறை நீக்கினார். இங்ஙனம் மானபங்கமடைந்த துருபதன் அவரிடம் விடைபெற்று அர்ச்சுனனுடைய சாமர்த்தியத்தைப் பாராட்டி வியந்துகொண்டு தன்னாட்டை அடைந்தான். அர்ச்சுனனும் குருவுக்குக் கொடுக்க வேண்டியதக்ஷிணையை இவ்வாற்றாற் கொடுத்துத் தன் கடப்பாட்டினின்றும் நீங்கினான்.

---

## ௯. உதிஷ்டிரன் உபராஜனாதல்.

நற்குணமே தமக் காபரணமாகப் பூண்ட பாண்டவர்கள் பரோபகார குணங்களும் செயலும் உடையராய், யாவராலும் விரும்பப் படுகின்றவராய் ஒழுகத் தலைப்பட்டார்கள். அந்நாள் முதலாக மகாஜனங்கள் பாண்டவர்களுடைய குணாதிசயங்களை யெடுத்துப் பேசுவதையும், அவர்பால் அன்புடையரா யொழுகுவதையும், அவருடைய வீரத்திறல்களை எடுத்துப் பாராட்டுவதையுமே பெரும் பொழுது போக்காகக்கொண்டார்கள். பாண்டவர்களுடைய பேரைக்கேட்பவர்க ளெல்லோரும்அவர்கள்மீதுஅன்பு பாராட்டுபவர்களாய் விளங்கினார்கள். இவ்வாறாகப் பாண்டவர்கள் பெருங்கீர்த்திப் பிரஸ்தாபர்களாயும் சனங்களுக்கு இனியராயும் பிரகாசித்தார்கள். உலகத்தோர் வீமனையும் அர்ச்சுனனையும்புசபல பராக்கிரமங்களுக்கு இலக்கியமாக எடுத்துக் கொண்டார்கள். உதிஷ்டிரனைத் தர்மப்



பிரபு வென்றும் ராச்சியதந்திர நிபுணனென்றும் எடுத்துக்கொண்டார்கள். இவ்வுலகப் பிரசித்தியான நன்கு மதிப்புப்பாண்டவர்களுக் குண்டாய தென்பது திருதராஷ்டிரன் காதிலும் எட்டியது. பாண்டவர்களுக்கே ராச்சிய முரியதென்பதைக் காட்டும் பிரதமப் பிரயத்தனமாகத் திருதராஷ்டிரன் உதிஷ்டிரனை உபராஜனாக்கினான். உதிஷ்டிரன் தன் தம்பியரைத் துணைகொண்டு ராச்சியாதிகாரத்தைச் சிறிதும் முறை தவறாச் செங்கோன்மையோடும் பராக்கிரமத்தோடும், தன் லக்ஷணத்திற் சிறிதும் குறைவில்லாத படைத்துணையோடும் நடாத்தி வந்தான். இவ்வாறுதிஷ்டிரனை உபராஜனாக்கியதால் உலகமெல்லாம் திருதராஷ்டிரனைக் குறை கூறாது மகிழ்ந்திருந்தது.

இங்ஙனம் சிலநாள் கழிந்தன. ஒருநாளிரவு நகரமாந்தரெல்லோரும் ஆழ்ந்த நித்திரை போயினர். அந்நகரத்திலே நித்திரையின்மைக் கேதுவாக யாதொருவகைத் துன்பமு மில்லை. செங்கோல் முறையுறச் செல்லுகின்றது. யாகாதிசற்கருமங்கள் எல்லாம் முறையுறநடக்கின்றன. மாதந்தோறும் மும்மாரி பொழிகின்றது. தரித்திரமென்பதும் நோயென்பதும் அந்நாட்டிலில்லை. கள்வராலும் வேற்றரசராலும், பகைவராலும், பூதபைசாசங்களினாலும் வரற்பாலனவாகிய இடையூறுகள் அங்கொன்றாயினுமில்லை. இவ்வகையாக வாழுகின்ற மாந்தர்களுக்கு ஆழ்ந்தசுகநித்திரைவாராமைக்குக் காரணமாக யாதொன்று மில்லை. ஆதலின், மிகவருந்திக் கல்விகற்கின்ற வித்தியார்த்திகளே யாயினுமாகுக, சூழ்ச்சியே கண்ணாயிருக்கின்ற மந்திரிகளே யாயினுமாகுக, பொருளீட்டு முபாயமே கருத்தாயிருக்கின்ற வைசியரே யாயினுமாகுக, தத்துவ நூலாராய்ச்சி செய்கின்ற பண்டிதரே யாயினுமாகுக, பயிர்ச் செய்கையே கண்ணாயிருக்கின்ற வேளாளரே யாயினுமாகுக உதிஷ்டிரனுடைய தர்ம ராச்சியத்திலே வாழ்கின்ற எத்திற மாந்தரும் சுகித்து நித்திரை போயினர்.

---

## ௧௦. துரியோதனன் வஞ்சயோசனை.

இருவர் மாத்திரமே கண்ணுறக்கமின்றிச் சிந்தாகுலமுடையராயினர். அவ்விருவரும் யாவரென்னில், அன்பிற் சிறந்த ஒரு தந்தையும் அன்பிற் சிறந்த ஒரு புத்திரனுமேயாவர். அவர் தாம்

யாவர்! திருதராஷ்டிரனும் அவன் மகன் துரியோதனனுமே. உதிஷ்டிரன் உபராஜனாதலும், துரியோதனன் இனி நமக்கெக்காலத்திலும் அரசுரிமை கிடைப்பதில்லையென்று மனத்தில்நிச்சயித்தான். இன்னும் சில நாளிலே உதிஷ்டிரனே இத்தேசத்துச் சனங்களுக்கு விருப்புடைய அரசனாய் விடுவான். அங்ஙனம் அவன் அரசனாகுங் காலத்தில் அரசுரிமை முழுதும் அவன் குடும்பத்திற்கே ஆய்விடும் என நிச்சயித்து அச்சமும் பொறாமையும் தன் மனத்திற் குடிகொள்ளப் பெற்றான். அவ்விஷயம் அவனுக்கு வேம்பாயிற்று. அதனால் அவன் எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணாயினான். இரவும் பகலும் அதுவே அவனுக்குக் கவலையாயிற்று. தான் மகாசனங்கள் கண்ணுக்குத் துரும்பாயினேனே என்றெண்ணினான். அம்மனக் கவலை அவனை மாத்திரம் வருத்திற்றன்று. அவன் மீது வீழ்ந்த அவ்விடி அவன் தம்பி துற்சாதனன் மீதும் வீழ்வதாயிற்று. துரியோதனன் தன் பதமிழந்தது போலவே இவனும் தன்பதமிழந்தவனாயினான். இருவரும் ஓரிடமாக விருந்து தமது நிலையைக்குறித்துச் சிந்தித்துத் துக்கித்துத் தங்கள் சிற்றப்பன் புத்திரராகிய கோமக்கள் மீது பகை தூண்டுவாராயினர். ஆயினும் தமக்கதன் பொருட்டுத் துணைச் செய்வாரிலராய்த் துணை நாடினார்கள். முன்னர்க் கூறியவாறு துரியோதனனுக்குப் பிராண சிநேகம் பூண்டிருந்த கர்ணன் ஒருவனே இருவர் சூழ்ச்சிக்கு மூன்று கோலாயினான். கர்ணன் அவர்களுக்கு யுத்தகளத்துக்குத் தக்க துணைவனாவானன்றித் துராலோசனைக்குத்தக்கவனல்லனெனக்கண்டு, அத்துராலோசனைக்காகத் தக்கதுணைவனொருவனைத் தேடுதல் அவர்க்கத்தியாவசியகமாயிற்று. தந்தை வழியிலுள்ளோர் தமதுகருத்துக்குடன்படாரென எண்ணித் தாய் வழியிலுள்ளோரை நாடினார்கள். தாய்வழியிலுள்ளோருள்ளே இழிதொழில் செய்வோர்க்கு உபமான இலக்கியமாக உள்ளவனும், மானமில்லாதவனும், ஆண்மையும் நீதியுமில்லாதவனும், தாய்மாமனுமாகிய சகுனியே தன் மருகருக்குச் சூழ்ச்சித் துணைவனானான். துரியோதனன், துற்சாதனன், கர்ணன், சகுனி என்னுமிந் நால்வருமே திருதராஷ்டிரன் குடும்பத்தை வேரோடுங் கிளையோடும் அழித்தற்குக் காரணராய் அமைந்தவர்கள். இந்நால்வரும் ஒருங்குகூடிச் சூழ்ச்சி செய்து ஒருபாயம் வகுத்தார்கள். திருதராஷ்டிரன் துரியோதனன்மேல் வைத்த அன்பு வழுவாப்பேரன்



பென்பதும் அவ்வன்பே பற்றுக்கோடாகக் கொண்டு தாங்களெடுத்த கருமத்தைச் சாதித்தலெளிதென்பதும் கருத்தூட் கொண்டார்கள்; பாண்டவர்களை அந்நகரத்தை விட்டு அகற்றித் தூரத்திற் போய் வசிக்கும்படி செய்வதே தக்க உபாயமென நிச்சயித்தார்கள். இவ் வஞ்சனையைச் சாதிக்கும் பொருட்டுத் துரியோதனன் தந்தைபாற் சென்று தன் துயரத்தைக் கண்ணீரோடும் கலங்கிய குரலோடும் கல்லுங்கனியும்படி கூறத் தொடங்கினான். என்னைப்பெற்றன்போடு பாதுகாக்குந் தந்தையே! நடத்தகாதவழியைநாடிக்கொண்டனையே; நான் பாண்டவர்களுக்கு எப்பொழுதும் அஞ்சி நடப்பவன் என்பதும் அறிவாயன்றோ. அவ்வச்சத்தைப் பெரிதாக்கும் பொருட்டு உதிஷ்டிரனை உபராஜனாக்கி விட்டாய். ஜனங்களெல்லோரும் உதிஷ்டிரன்மேல் அபிமானமுடையவர்களாய் விட்டார்கள். உன் புத்திரனாகிய என் மீதும் என் தம்பியர் மீதும் சனங்கள் அபிமானம் இல்லாதவர்களானார்கள். எங்களை அவர்கள் ஒருபொருளாகமதிப்பதுமில்லை. சந்திகள்தோறும் ஜனங்கள் அந்தகனாதலின் உனக்கு அரசுரிமை இல்லையென்றும் பட்டத்துக்கருகமுடையா யல்லையென்றும் கூடி வாதிக்கின்றார்கள். உதிஷ்டிரனே பாண்டவர்க்குள் மூத்தோனென்றும், அவன் துணைவரெல்லோரும் பராக்கிரமசாலிகளாயிருத்தலினால் அவனே அரசுக்குத் தக்கவனென்றும் அவ்வாறே அவன் அரசனாவானென்றும் நிச்சயம் பண்ணுகின்றார்கள். அவன் அரசனாகுங் காலத்தில் உன்னையும் உன் மக்களையும் செல்வநிலை தவறாமல் வைத்துக் காப்பானென்றுங் கூறுகின்றார்கள். இஃதுலகவாக்கு. உன் மந்திரிகளுள் ஒருவரும் இதற்கு மாறாகாரென்றும் கூறுகின்றார்கள். இவ்வுரைகளெல்லாம் என் செவிக்குப் பழுக்கக்காய்ச்சிய நாராசமாயின. இவ்வாற்றால் எனது நெஞ்சம் நாள்தோறும் புண்பட்டு வேகின்றது. அவை என்னாற் சகிக்கப்படுந் துணையவல்ல. ஆகையால் பாண்டவர்களைஇந்நகரத்துக்கு வெளியே போக்கி விடுவதற்கு ஒருபாயந் தேடுமாறு உன்னை வேண்டுகிறேன்.

---

## கக. திருதராஷ்டிரன் உடன்படல்.

என்றிவ்வாறு மைந்தனுரைத்தவைகளைக் கேட்டிருந்த திருதராஷ்டிரன் அவனை நோக்கிக் கூறுவானாயினான். எனது அருமை மைந்தனே! ஓரரசன் செயற்பாலனவாகிய கருமங்களுள்ளே

முதலிலே செயற்பாலது ராச்சியகருமங்களைத் தான் நேரிலேசென்று நின்று நடாத்துவதேயாகும். யான் வேத சாஸ்திரங்களிலே வல்லேன். புஜபலபராக்கிரமத்திலுங்குறைந்தேனல்லேன். ஆயினும் நேத்திரதரித்திர முடையேனாயினேன். அது காரணமாக எனக்கு அரசுரிமை இல்லாமற் போயிற்று. போகவே அதற்குரியவன் என் தம்பி பாண்டுவேயாயினான். அவன் அரசனானவுடனே அநேக தேசங்களை யெல்லாம் வென்று தன்னடிப்படுத்தி ராச்சியத்தை விஸ்தாரமாக்கினான்; அதனால் சந்திரவமிசத் தரசர்களுக்கு உன்னத ஸ்தானத்தையுந் தந்தான். அளவில்லாத திரவியங்களைக் கொண்டு வந்து சேர்த்தான். சக்கரவர்த்தி யென்னும் பட்டத்தை நிலைநாட்டினான். இவை யெல்லாம் உலகறிந்த விஷயங்களேயாம். உதிஷ்டிரனும் அவன் சகோதரரும் தங்கள் தந்தையினும் சிறந்த உத்தமகுணவீரராக விளங்குகின்றார்கள். உலகமதிப்பும் அவர்கள் மேலதாகவே இருக்கின்றது. இங்ஙனமாகஉண்மையால்நோக்குமிடத்து அரசுரிமை முழுதும் அவர்களுடையதேயாகவும் அவர்களைப் பட்டத்தினின்றும் நீக்குவதெங்ஙனம். அவர்களை இந்நகரத்தினின்றும் வெளிப்படுத்துவதற்கு எங்ஙனந் துணிவேன்! என்றிவ்வாறந்தகன் எடுத்துக் கூறி முடித்தான். அதுகேட்ட துரியோதனன் தந்தையை நோக்கிப், பாரம்பரியமாக வருகின்ற இவ்விராச்சியத்தைப் பாண்டு வாண்டானென்ற நியாயம்பற்றி உதிஷ்டிரனை அவனுக்குப் பின் அரசுரிமை பெறுதல் வேண்டுமென்ப துண்மையானால், அவனுக்குப் பின்னர் அவன் சந்ததியே அவ்வரசுக்குரியதாகும். ஆகுமேல்அரசுரிமையெனக்கும்என்வழிக்கும் ஒருகாலத்திலும்உரியதாவதில்லை.யான்பிறருடைய அதிகாரத்திலாயினும் அவர்க்கமைந்தாயினும் உயிர்வாழமாட்டேன். ஆதலால் அப்படிப்பட்ட துன்பத்துக்கு என்னை ஆட்படுத்தாவண்ணம் உன்பாலிரந்து வேண்டுகின்றேன். உன் புத்திரர் இனிது வாழவேண்டு மென்பது உன் மனத்திலுளதாயின், இறந்துபோன பாண்டு உனக்கினியனென்றும் அவன் புத்திரர் உன் அன்பிற்குரியரென்றும் உன் மனத்திற் கொள்ளாதிருத்தல் வேண்டும். உதிஷ்டிரன்மீது ஜனங்கள் வைத்த அபிமானத்தைக் குறைக்கும்பொருட்டு நான்கு வருணத்தார்க்கும் அளவில்லாத கருமங்களும் சன்மானங்களுங் கொடுத்து அவர்களை என்வசப்படுத்திவருகின்றேன். அங்ஙனமாகவும் பாண்டு புத்திரர் பக்கத்திலும் நியமமுடையோர் அநேகர் சார்பாக விருக்கின்றார்கள். ஆகையால் பாண்டவர்களையும் அவர்



களுடைய தாயாகிய குந்தியையும், அவர்களுடைய நட்பினர், மந்திரிகள், ஏவலாளர் முதலியவர்களோடும் வாரணாவதத்திற்போய் வசிக்குமாறு செய்தற்கு உபாயந்தேடுமாறு உன்பால் வேண்டுகின்றேன். நமது தேசம் முழுதும் நம்மீதபிமான முடையதாகவும் எங்கள் சந்ததிக்கு ராச்சியம் சுவாதீனமாகவும் வரும் வரைக்கும் அவர்கள் அங்கேதானே இருக்கும்படி அமைத்தல் வேண்டும். இது கைகூடும் காலத்திலேயே அவர்கள் இங்கே மீண்டுவருதல் எனக்குச் சம்மதமாகுமென்றான். அதுகேட்ட திருதராஷ்டிரன் மைந்தனை நோக்கி உன் மனக்குறிப்பு இதுவென்று யான் முன்னரே உணர்ந்து கொண்டேன். நீ இப்போது கேட்கின்ற கருமம் மிகக் கொடியது. எண்ணுதற்கும் நெஞ்சம் புண்ணாகின்றது. உனதபீஷ்டத்தை முடிப்பதற்கு ஒருப்படமாட்டேன். பாண்டவர்களை இந்நகரத்தைவிட்டோட்டிவிடுவதற்கு என்மனந் துணியமாட்டாது.

நீதியிலாநெறி யெண்ணினை நீயிங்
கோதியவாய்மையினாறுபொருளின்றா
லாதிபராயவரைவருநீயு
மேதினியாளுதல்வேத்தியல்பென்றான்.

இதனைக் குறித்து ராச்சியத்துக்கு ஊன்றுகோல்களாயிருக்கின்ற மந்திரத்தலைவரை யுசாவினும் அவர் உடன்படாரென்று கூறினான். துரியோதனன் பின்னரும் தந்தையை நோக்கித் தற்காலம் ராச்சியாதிகாரம் உன்கையிலுள்ளதன்றோ. அதுகாரணமாக மந்திரிகள் உன் குறிப்பின்வழியே ஒழுக வேண்டியவராவர். நமது குடும்பத்திலுள்ள உறவினரோ பாண்டவர்க்காகவேனும் நமக்காகவேனும் பேசாது மவுனமேசாதிப்பர். துரோணன் புத்திரனாகிய அசுவத்தாமன்எனக்குற்ற நண்பினன். அவன் என்பக்ஷமே நிற்பான். அவனங்ஙனம் நிற்க அவன் தந்தையாகிய துரோணனும் கிருபனும் அவன்மீது வைத்த நேயத்தினால் நம் பக்கமே நிற்பர். பாண்டவர்க்குச் சகாயனாகிய விதுரனொருவனே நமக்கு மாறாக நிற்பவன். ஆயினும் அவன் ஒருவனால்நமது பக்கந்தோல்வியடையமாட்டாது. ஆதலால் தந்தையே இரவெல்லாமுறங்காத என்கண்களுக்கும் பகலெல்லாமாறாத மனத்துக்கும் சுகந் தரும்படி உன்னைப் பன்முறை வேண்டுகின்றேன் என்றான். இதுபோன்ற பலபரிவுரை

களால் திருதராஷ்டிரனும் மனம்நெகிழ்ந்தான். அதுகண்ட துரியோதனன் வாரணவத நகரத்தினது அலங்காரங்களையும் அந்நகரத்திலே பெறத்தக்க சுகங்களையும் உதிஷ்டிரன் காதிலும் வீழுமாறு எடுத்துப் புகழ்ந்துரைக்கும்படி தனது பரிவாரத்தவர் சிலரை ஏவினான். இவ்விதமாக அவர்களுடைய மனத்தையும் தன்னுடையவுபாயங்களுக்கு சிறிதும் ஐயப்பாடின்றிஇணங்குமாறுதிருப்புவித்தான. மகனுடைய கருத்துக்கு ஒத்தவனாகித் திருதராஷ்டிரனும் பாண்டவர்களை வாரணவதத்திற் சென்று சிலகாலம் வசித்து அங்கே வேண்டிய போகங்களை யெல்லா மனுபவிக்குமாறும், ராச்சிய கருமங்களை யெல்லாம் உதிஷ்டிரனுக்காகத் தானும் தன் மைந்தனுங் மந்திரத் தலைவருடைய துணைக்கொண்டு நடாத்திக் கொள்வதாகவுங் கூறி, அவர்க்கு அங்கே வேண்டுவன வெல்லாம் குறைவின்றி அமைப்பித்துச் சிலரைத் துணையாகவும் கொடுத்து அனுப்புதற்கு எத்தனஞ் செய்தான்.

---

## ௧௨. பாண்டவரை வாரணவதத்துக்கு அனுப்பியது.

அடுத்தநாள் சூரியனும் தன் பொற்கிரணங்களை யெல்லாம் பரப்பி எழுந்தான். நந்தவனங்களெல்லாம் மதர்த்துச் செழித்து முகங்காட்டின. அகழியின் கண்ணும் தடாகங்கள் தோறும் தாமரைகள் முகையவிழ்த்து இனியவாசங் கமழ்ந்தன. தாமரைகள் முதனாளிலே தாம்பெற்று மகிழ்ந்த சூரியோஷ்ணத்துக் கீடாகத் தம்மீது வீழ்ந்த இளந்தென்றலைக் குளிர்வித்து நாற்றிசையும் போக்கின. ஆயினும் அந்நகர மாந்தர்கள் துயிலொழித்தெழுந்த பொழுது மனத்தெளிவின்றிப் பின்வருந் தீமையைமுன்னரேயுணர்ந்தவரைப் போல விளங்கினார்கள். பாண்டவர்கள் சிலநாளைக்கென்று கூறி உண்மையளவில் என்றும் வாராது அந்நகரத்தை விட்டு நீங்கிப் போகின்றார்களென்பது அந்நகர மாந்தர்களுடைய மனத்தை யெல்லாம் புண்படுத்துவதாயிற்று. அப்பொழுது பாண்டவர்கள் பரிவாரத்தோடு அஸ்தினாபுரத்தை விட்டு நீங்கினார் என்பது கேட்ட மாத்திரத்தில் நகரம் முழுதும் வயிறலைத்துப் புலம்பியது. அடுப்புகள் தோறும் பூனைகள் உறங்கின. அந்நகர மாந்தர்கள் ஆயிரவராயிரவராகப் பாண்டவர்களைத் தொடர்ந்து சென்றார்கள். உம்மைப்போல்



இனி எங்களை 'யாவர்' காப்பவரென்று கூறிப் பல்லாயிரவர்கள் பாண்டவர்கள் பாதத்தில் வீழ்ந்து வீழ்ந்து புலம்புவாராயினார்கள். உதிஷ்டிரன் அவர்களை இனிய வசனங்களாலும், விரைவில் மீண்டு வருவோம் என்னும் வாக்குறுதியாலும் ஆற்றி நகரத்தை நோக்கி மீண்டு போகும்படி செய்து வாரணவதத்தைநோக்கிச்சென்றார்கள்.

அந்நகரத்து மாந்தர்களெல்லோரும் பாண்டவர்கள் வருகின்ற செய்தியைக் கேள்வியுற்று அகமும் முகமும் மலர்ந்து பாண்டவர்களை எதிர்கொண்டு வணங்கி யுபசரித்தார்கள். அஸ்தினாபுரத்துச் சனங்கள் எத்துணைக் கவலை யுடையர்களாயினார்களோ வாரணவதத்து மாந்தர்களும் அத்துணைக் களிகூர்ந்தார்கள். பாண்டவர்கள் அந்நகரத்துச் சனங்கள் செய்த வந்தனை வழிபாடுகளால் பெருமகிழ்ச்சி யுடையர்களாகி அந்நகரத்திலே யாவரும் அன்போடு மெச்சிக் கொண்டாடும்படி வாழ்ந்திருந்தார்கள். பாண்டவர்கள் அஸ்தினாபுரத்தினின்றும் நீங்கினபொழுது அந்நகரத்து மாந்தர்கள் பிரிவாற்றாது கலங்கினமையும் அக்கோமக்களுக்கு அவர்கள் செய்த பேருபசாரங்களும், அங்கே வாரணவதத்திலே அவர்களுக்குண்டாகிய மதிப்பும் துரியோதனன் செவிப்பட்ட பொழுது அவன் நெஞ்சம் மிகப் புண்பட்டது. பாண்டவர்கள் அஸ்தினாபுரத்தை விட்டு நீங்கி அதிதூரத்திலே போய் வசிக்கினும் அவர்கள்மீதுண்டாகிய அபிமானம் அவ்வஸ்தினாபுரத்துச் சனங்கள் ஒரு காலத்தும் மாறுமியல்புடையரன்றென்பதும் அவர்கள் அங்கே இருக்கினும் இல்லாதொழியினும் அவர்களுடைய கீர்த்திப்பிரஸ்தாபம் மறைந்து போகாதென்பதும் துரியோதனன் மனத்திற் செவ்வே பதிந்தன.

---

## ௧௩. அரக்குமாளிகை.

அது காரணமாக அவர்கள் இருக்குமிடத்தை ஒருவருமறியா வண்ணம் மறைத்தல் வேண்டுமென்று எண்ணங் கொண்டான். அக்கருத்தை முடிப்பதற்குப் போருமுதவாதென்ப துணர்ந்தான். பின்னர் யாது செய்யலாமெனச் சிந்தித்துக் கபடமார்க்கமே தக்கதெனத் துணிந்தான். அவர்களைக் கொன்றொழிப்பதற்குப் பலவுபாயங்களையும் நாடினான். துஷ்டரை ஏவி நடுராத்திரியிற் கொல்லுவிப்பேனென்று துணிந்தும் அவ்வழியும் ஏலாத கருமமெனக்கண்டு

அக்கருத்தையும் விடுத்தான். எத்துணை வீரமும்எத்துணைவன்னெஞ்சமும் உடையரேயாயினும் அவர் தாமும் பாண்டவர்கள் நித்திரை செய்யும் வேளையினும் கிட்டுவதற்கும் துணியாரென்பதும் துரியோதனன் குறிக்கொண்டான். அங்ஙனமொருவன் துணியினும் பாண்டவர்கள் நித்திரை செய்கின்ற சயனமண்டபத்திற் பிரவேசிப்பதற்கு அங்குள்ள வாயிற்காவலாளர்களும் மெய்காப்பாளரும் ராஜபக்தியுடையவர்களாதலாலே இடம்பெற மாட்டான். இவ்வாறு பலவாகச் சூழ்ச்சி செய்த வுபாயங்களெல்லாம் உதவாதொழிய, அக்கினியே தன் சொல்லுக்கு அமையத்தக்க துஷ்டவீரனாவானென்று நிச்சயித்தான். அவ்வாறே ஒரு தூதனால் புரோசனனென்னும் கம்மியனைத் தருவித்து வாரணாவதத்திலே ஓரழகிய மண்டப மொன்றை அமைக்குமாறு ஆஞ்ஞாபித்தான். வெளித்தோற்றத்தினாலே கண்ணைக்கவரத்தக்கதும், அழகினாலே யாவரையும் மயக்கத்தக்கதும் சுவர்களும் அடிவாரங்களும் அவியாது சுவாலித்தெரியத்தக்க பதார்த்தங்களை அகத்தே பொதியப்பெற்றுப் பயங்கரரூபமுடையதுமாயிருத்தல் வேண்டுமென அவனுக்குக் கற்பித்தான். அவன் கற்பித்தவாறேகண்டோர் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்து அவரை அகப்படுத்தி நாசஞ் செய்யத்தக்கதாகிய ஒரு மாளிகையைப் புரோசனன் அதிவிரைவிலே அமைத்து முடித்தான். அதனை ஆக்குவித்தோன் விருப்பத்தினாலும் அதனுடைய சித்திராலங்காரத்தினாலும் ஏவப்பட்ட உதிஷ்டிரனும் அவன் சகோதரரும் தாயும் அங்கே சென்று வசித்தார்கள். ஆயினும் உதிஷ்டிரன் எதனையும் நுணிந்து நோக்கும் கூர்ந்த விவேகமும் எளிதிலே நம்பாத சிந்தையும் உடையவனாதலினாலே தான் அஸ்தினாபுரத்தை விட்டு நீங்கினபொழுது விதுரன் தன் காதிலோதிய சிலபழமொழிகளைச் சிந்தித்து, வாரணாவதத்துக்குத் தன்னையும் சார்ந்தோரையும் துரியோதனன் போக்கியது நன்மனங்கொண்டன்றெனத் தெளிந்தான். விதுரன் சொன்ன குறியும் தனக்கென்றமைந்த மாளிகையும் ஒத்திருத்தலின் இம்மாளிகை தீமை குறித்தனவே யாமென்று நிச்சயித்தான்.

---



## கச. அரக்குமாளிகைக்குத் தீயிட்டது.

பின்னும் உதிஷ்டிரன் அம்மாளிகையை நோக்குமிடத்து அஃது அக்கினியிடும் நோக்கத்தோடுமே ஆக்கப்பட்டதென்று நிச்சயித்தான்.

மெழுகினானமக்காலயம் வகுத்ததும் விரகே
யொழுகுகின்றதன் னொழுக்கமும் வஞ்சனை யொழுக்கே
யெழுகடற்படை யாவையு மிவன்வழியனவே
தொழுதகையுளும் படையுள சூழ்ச்சியும் பெரிதால்.

இவ்விரகசியத்தைத் தாய்க்கும் சகோதரர்க்கும் உணர்த்தினான்.

இவ்வாறிருக்கையில் விதுரன் ரகசியமாக ஒருதூதனை அனுப்பித் துரியோதனன் கொண்டிருக்கும் கொலைக்கருத்தை உணர்த்தி ஒரு சிற்பனைக் கொண்டு அம்மாளிகையினின்றும் ஒருவருமறியாது தப்பிப்போகுமாறு ஒரு பிலத்துவாரத்தையும் அமைப்பித்தான். ஆபத்து வருங்காலத்தில் கோமக்களவ்வழியே தப்பி ஓடுதற்கு எப்பொழுதும் எத்தனமுடையர்களாகவே யிருந்தார்கள். சங்கேதப்படி குறித்த நாழிகை வருதலும் புரோசனன் அம்மாளிகைக்கு நெருப்பிட்டான். உடனே பாண்டவர்கள் அம்மாளிகையைவிடுத்து உள்ளே வகுத்திருந்த பிலவழியிலிறங்கி க்ஷேமமாகக் காடு சேர்ந்தார்கள். பொழுது விடியுமுன் மாளிகை முழுதுஞ் சாம்பராயிற்று. அச்சமாசாரம் உலகெங்கும் பரந்தது. பாண்டவர்கள் இறந்தொழிந்தார்களென அஸ்தினாபுரமெங்கும் பெருவதந்தியாயிற்று. துரியோதனனும் அவன் குழாமும் தவிர மற்றையமகாஜனங்களெல்லோரும் கலங்கிப் புலம்பித் தபிப்பாராயினர். திருதராஷ்டிரனுடைய மந்திரிகளும் துக்கசாகரத்தில் மூழ்கி உணர்விழந்தார்கள். இப்பழி செய்தவர்களின்னாரெனவும் அவர்களுடைய மனநிலை இன்னதென்பதும் குறிப்பால் வெளிப்படுத்தினார்கள். பாண்டவர்கள் அவ்வாபத்தினின்றும் நீங்கினார்களென்பதும் விதுரனறிந்திருந்தும் அறியாதான்போன்று மற்றோர் எல்லாரோடும் தானுந் துக்கங் கொண்டாடினான். இப்பழியை இவ்விதம் செய்வானென்று சிறிதுமெண்ணாதவனாதலினாலே திருதராஷ்டிரனும் ஆற்றொணாத்துக்கங் கொண்டான். அவன் பாண்டவர்கள் மீது கொண்ட அன்பை இன்னும் முற்றாகத்

திறந்திலன். ஆதலால் உள்ளவாறு சகிக்கலாற்றாத பெருந் துக்க சாகரத்தில் மூழ்கிக் கலங்கி ஒருவாறு தேறி அப்பாண்டவர்களுக்குச் செயற்பாலனவாகிய அபரக்கிரியைகளையும்ராஜயோக்கியதைக்குரிய முறையாக நடத்துவித்தான்.

---

## ௧௫. இடிம்பன்வதம்.

இங்கே அஸ்தினபுரத்திலிவையெல்லாம் விதிமுறை வழுவாது நிகழஅங்கேபிலத்துவாரவழியாகச்சென்றுகாட்டிற்புகுந்தபாண்டவர்கள் வழிதெரியாமலும்மிருகபயங்கரத்தினாலும்திசைதெரியாக்காட்டகத்தில் நுழைந்தார்கள். அவ்வழியே செல்லும்பொழுதுஎதிர்ப்பட்ட ராக்ஷசர்களையும் மிருகங்களையும் கொன்று கொன்று இடையூறு காத்துச் சென்றார்கள். அங்ஙனஞ் செல்லும்பொழுது ஒருநாள் நெடுந்தூரம் நடந்து களைத்துச் சோர்ந்து தாகம் மீதூரப் பெற்றுத் தண்ணீர்தேடிச்செல்வாராயினார்கள். அவருள் வீமன் முன்னர் நடந்தான்.மற்றவர்கள்சோர்ந்துதங்கள்வஸ்திரங்களைத் தரையில் விரித்துக் குறங்கையை அணையாகக் கொண்டு நித்திரை போயினார்கள். வீமன் மீண்டுவந்து பார்த்தபொழுது நித்திரையாயிருப்பக்கண்டு அவர்கள் தாமாக நித்திரை தெளிந்து எழும்புவர்களாயின் சோகந்தீரப் பெறுவர்களென நினைந்து அவர்களை எழுப்பாமல்விடுத்துப் புறத்தே அவர்களைக் காத்து நின்றான். அப்பொழுது அவன் மனதிலே புதிய நினைவுகள் பலவுதிப்பனவாயின. உலகத்தையாளும் உரிமையும் தகுதியும் உடையனாகியஉதிஷ்டிரன் ஒரு ஏழைப் பிக்ஷுகனைப்போல வெறுந்தரையிலே நித்திரை போவதைப் பார்த்து வீமன் மனம் நொந்து வருந்தினான். போஜராஜன் அன்போடு பெற்று வளர்த்த ஏகபுத்திரியும் திசையெங்கும் இசைபடைத்த பாண்டுவுக்குப் பத்தினியும் ஆகிய குந்திதேவி, ஆண்மையும் அழகும் அறிவும் பொருந்திய நன்மக்களைப் பெற்றும், ஒரு ஏழைக் கைம்பெண்ணைப் போலக் காட்டகத்திலே பருக்கைக் கற்களின்மீதே நித்திரை போதல் தகுமாவென்று நைந்து கண்ணீர் விட்டான். தங்கள் துன்பங்களை யெல்லாம் மறந்துஆழ்ந்துநித்திரை போகின்ற மற்றைச் சகோதரர்களையும் பார்த்து விதியை நினைந்து புலம்பினான். தங்கள் மீது யாதொரு குற்றமுமில்லாமலிருக்கவும் தங்களிடத்துள்ள ஆண்



மையையும் ஏனைய நற்குணங்களையும் கண்டுபொறாமையுற்றதுரியோதனனாலும் அவன் தந்தை திருதராஷ்டிரனாலும் தாங்கள் வனவாசிகளாக்கப்பட்டமையையும், தங்களைக் கொல்வதற்கு அவர்கள் செய்த பிரயத்தனங்களையும் எண்ணிச் சினம்பொங்க மனங்கொதித்தெழுந்தான். இத்துணைக்கொடிய பாவிகளாகிய உறவினர் இருக்கின்ற சிறந்த நகரத்தினும் காடே உத்தம வாசஸ்தானமாகுமென நிச்சயித்தான். தனக்கும் தன் சகோதரருக்கும் செய்யப்பட்ட கொடிய வஞ்சனைகளையெல்லாம் நினைந்து மனங் கைத்தவனாகித், தாயும் சகோதரரும் ஆழ்ந்து செய்கின்ற நித்திராகாலமெல்லாம் தன் மனத்திலே அக்கினி மூள மூள அவர்களைக் காவல் செய்திருந்தான். அப்பொழுது அவ்விடத்திற்கயலிலேயுள்ள ஒருமலைமுழையிலே நித்திரை செய்திருந்த இடிம்பனென்னுமோரிராக்ஷசன் மணத்திலே அக்காட்டிலே நரர்புகுந்தாரென வுணர்ந்து, அவர்களைப்பிடித்துத் தனக்குக் கறிசெய்து வருமாறு தனது சகோதரியை ஏவினான். இடிம்பி அவன் ஏவலின்வழி நரரிருக்கின்ற விடத்தை நாடி அடைந்த பொழுது வீமனுடைய கட்டழகையும் அவனுடைய உத்தண்ட நிலையையுங் கண்டு அவற்றால் மயங்கி அவன்மேற் காதலுடையளாயினாள். அவள் மீளத் தாமதித்தமையைக் கண்டு இடிம்பன் அவ்விடத்தைஅடைந்து வீமனைச்சாடஎத்தனிக்க,வீமன்அவனைஒரேதாக்கிற்கொன்றுதரையில் வீழ்த்தினான். அதன்பின்னர் இடிம்பியினது நற்குண விசுவாசங்களை வினவியுணர்ந்து தன் தாயிடத்திலும் சகோதரரிடத்திலும் அநுமதி பெற்று அவளைத் தனக்கு மனைவியாக்க, அன்றுமுதல் அவர்கள் யாவரும் அவ்வனததிலே தானே சிலகாலம் வசித்தார்கள். இடிம்பி வயிற்றிலே வீமன் ஒரு புத்திரனை அவ்வனத்திற் பெற்றான். அப்புத்திரன் பிறத்தலும் அச்சிசுவையுந் தாயையும் அவ்வனத்திலிருக்குமாறு செய்து விட்டுப்பாண்டவர்கள்எல்லோரும்அவ்வனத்தினின்று நீங்கிப் பலவிடங்களைத் தரிசித்துக் கொண்டு ஒரு சிற்றூரை அடைந்தார்கள்.

---

## ௧௬. பகாசுரன் வதம்.

அச்சிற்றூரைக் காலந்தோறும் கலங்கும்படி செய்து வந்தவனாகிய பகாசுரனைக் கொன்ற பேராண்மையினாலும் பரோபகாரத்தினாலும் அவ்வூர் முழுதும் பாண்டவர்களுக்கு அன்பு பூண்டொழு

கியது. அதுகண்டு பாண்டவர்கள் தாம் வனத்தை விட்டு நீங்கும் பொழுது பூண்ட பிராமண வடிவத்தோடு தானே அச்சிற்றூரிலுள்ள ஒரு பிராமணப் பிரபு வீட்டிலே சிலகாலந் தங்குவாராயினர்கள். அவ்வூர்ப் பிராமண ரெல்லோரும் பாண்டவர்களை அதிதிகளாகக் கொண்டு முறை முறையாகத்தினந்தோறும்விருந்தருந்தி யுபசரித்து வந்தார்கள்.

விளக்கமில்லாததும் மலைச்சாரலிலே யுள்ளதுமாகிய அக்குக் கிராமம் சிலகாலம் அரவம் யாதுமின்றி இருந்தது. ஒருநாள் அக் கிராமவழியாக அநேக சனங்கள் பிரயாணிகளாய்ச்செல்கின்றவர்கள் அங்கே தங்கி விரைந்து போசனமமைத்தார்கள். அதுகண்ட அக் கிராமவாசிகளும் தாமும் விரைந்து போசனமுடித்துக் கொண்டு பிரயாணத்துக்கு முயற்சி செய்தார்கள். அவர்களுடைய பிரயாண நோக்கத்தை உணர்ந்த பாண்டவர்களும், தாமுமவர்களோடு சேர்ந்து போதற்கு ஆயத்தரானார்கள். இங்கே குக்கிராமமெனக் குறிக்கப்பட்டது வேத்திரகீயம். துருபதனுக்குத் திரௌபதி யென்னும் பெயரையுடைய ஒரு புத்திரி உள்ளாளென்றும், அவளுக்குச் சுயம்வரம் நிச்சயிக்கப்பட்டதென்றும், துருபதனை அருச்சுனன் சிறைசெய்து கொண்டுபோய் விடுத்த காலத்தில் துரோணன் செய்த நிந்தையினாலே தன்னைச் சிறைசெய்த அருச்சுனனுக்கு மனைவியாகும்படி ஒரு புத்திரியையும், துரோணனைக் கொல்ல ஒரு புத்திரனையும் பெறுவேன் என விரதம் பூண்டா னென்றும், அவ்விரதத்தினாற் பெரு வேள்விகள் செய்து அவ னபீஷ்டப்படி ஒரு புத்திரனையும் ஒரு புத்திரியையும் பெற்றா னென்றும், அப்புத்திரி வளர்ந்து மணப்பருவ மெய்தினாளென்றும், அக்காலையிலே அருச்சுனனும் சகோதரரும் தாயும் எரிக்கிரையாகி மாண்டார்களெனத் துருபதன் கேட்டுச் சொல்லுதற்கரிய துக்க முற்றானென்றும், உத்தமகுண சீலர்களாகிய பாண்டவர்களுக்கு அத்துணைக் கொடிய வாபத்து நேர்ந்திடத் தகாதெனத் தேறித் தன்மகளுக்குச் சுயம்வரம் நிச்சயித்து உலகெங்கும் அச்செய்தியைப் பரவச் செய்தால் பாண்டவர்கள் வெளிப்படுவார்களென்று முறுதி கொண்டே துருபதன் அங்ஙனஞ் செய்தானென்றும் கேள்வியுற் றார்கள். அச்சுயம்வரத்தை நாடிச் செல்லுகின்ற பிரயாணிகளோடு அருச்சுனனும் சகோதரரும் சேர்ந்து சென்றார்கள்.



## கஎ. திரௌபதி விவாகம்.

துருபதனுடைய நகரத்தைப் பாண்டவர்கள் அடைந்தவுடனே விளக்கமில்லாத ஓரிடத்தை அடைந்து சுயம்வர நாள் வரும்வரையும் தம்மை எவரும் உணர்ந்து கொள்ளாவண்ணம் மாறுவேடதாரிக ளாக மறைந்திருந்தார்கள். நாற்றிசைகளிலிருந்தும் வரத்தக்க அரசிளங் குமரரெல்லோருக்கும் வாசஸ்தானங்களும் அவர்களுக்கு வேண்டிய ஏனைய போக்கியங்களும் அங்கேஅமைக்கப்பட்டிருந்தன. சுயம்வரநாள் நெருங்குந்தோறும் நாற்றிசைகளினின்றும் சுயம்வர தரிசனத்தின் பொருட்டு ஜனங்கள் திரள்திரளாக வந்துகூடினார்கள். எங்கும் விருந்தயர்வாரும், விருந்தயர்ந்தபின் மகிழ் கொண்டாடு வாருமாய் ஜனங்கள் சுயம்வர முகூர்த்தத்தை எதிர்நோக்கிக் காலத் தைக் கழித்தார்கள். இரதங்கள் பந்தி பந்தியாக வீதிகளிலே செல் கின்ற அதிர்ப்பும், ஜனங்களுடைய ஆரவாரங்களும், ஆவணவொலி யும், வாத்திய கோஷங்களும், வீதிகளை அலங்கரிக்கும் பேரொலியும், நவ நவமான ஆடையாபரண அலங்காரமும் எவ்விடத்திலும் தலைப் பட்டன. கண்களுக்கும் காதுகளுக்கும் தெவிட்டாவுணவுகளாகப் பட்டன. சுயம்வரப் பகலுக்கு முந்திய இரவு யாவருக்கும் விரை விலே விடியாதாகி நீள்வதாகத், துவாதசாதித்தியரும் ஒருங்கே திரண்டு தமது நண்பினனாகிய சந்திரனது வமிசத்திலே வந்த கோமகனுடைய வில்லாண்மையும் சுயம்வரச் சிறப்பும் காண்பா மெனக்கூறி விரைந்தெழுந்தாற் போல உதயஞ்செய்து புலராதிருந்த அவ்விரவைச் சூரியன் தனது கிரணப் பிரபையினாற் சிதைத்தான். துருபதன் புத்திரியுடைய பாணிக்கிரகணம் செய்ய விரும்பிய கோமக்களுடைய திறமையை ஆராயும் பொருட்டு ஒரு களகத்தையு மலங்கரித்தார்கள். அக்களகத்துக்கு நான்மருங்கிலும் அழகிய நிழல் செய்விருக்ஷங்களும் அவற்றின்மேல் படர்கொடிகளும் மணங் கமழ்ந்து நின்றன. அம்மைதானத்திலே இடை இடையே நான் மருங்கும் பளிங்குப் படிகளையுடைய சிறிய நீர்த்தடங்கள் கிடந்து விளங்கின. அங்கு வந்து கூடிய ராசாக்களுக்கும் கோமக்களுக்கும் அவரவர் வரிசைக்கேற்ப ஆசனங்கள் பந்தி பந்தியாக அமைக்கப் பட்டிருந்தன. அங்கே இடப்பட்டிருந்த சித்திரப்பந்தரின் கீழே ஓமாக்கினி வளர்க்கப்பட்டது. குலகுரு அதன் பக்கத்திலே வீற்றி ருந்தார். அவரையும் அக்கினியையும் நடுவேவைத்து அரசிளங்

குமாரர்கள் சூழ்ந்திருந்தார்கள். குருவுக்குச் சமீபத்திலே திரௌபதியும் மற்றொரு பக்கத்திலே பிராமணோத்தமர்களும்இருந்தார்கள். இவ்வாறிருக்கையில் குறித்த முகூர்த்தகாலமும் வந்தடுத்தது. அங்கு வந்திருந்த ஜனத்திரளினது கம்பலையும் அரவமும்அடக்கப்பட்டன.

---

## கஅ. மச்சயந்திரமெய்தல்.

அடங்குதலும் திரௌபதியினது சகோதரனாகிய திருஷ்டத்துய்மனெழுந்து சபாஜனங்களை நோக்கி, ராசகுமாரர்களே, எனது சகோதரியினது பாணிக்கிரகணத்தின் பொருட்டு நீங்களெல்லீரும் இங்கே வரவழைக்கப்பட்டமை அறிவீர்களன்றோ. இங்கே ஓமாக்கினிக்குச் சமீபத்திலே வைக்கப்பட்டிருக்கும் இவ்வில்லையெடுத்து நாண்பூட்டி அதோ மேலே இடையறாது சுழன்றுகொண்டிருக்கின்ற அம்மச்சயந்திரத்தை ஐந்து பாணங்களினாற் கீழே வீழ்த்துபவன் யாவனோ அவனே என் தங்கையைப் பாணிக்கிரகணஞ் செய்யும் யோக்கியனாவான். அம்மச்சயந்திரத்தை லக்ஷியம் செய்யும்பொழுது கண்களை மேலே வைத்து நோக்காது கீழேயுள்ள தண்ணீரிலே வீழ்கின்ற அந்நிழலையே நோக்கிப் பாணப்பிரயோகம் செய்தல் வேண்டும். இவ்வாண்மையைச் சாதிப்பவன் யாவனோ அவன் கழுத்திலே திரௌபதியால் மாலை சூட்டப்படும்.

சிலையிதுசிலீமுகங்களிவை கடுந்திரிகைவேகத்
திலை முகத்துழலுகின்ற வெந்திரத்திகிரிநாப்ப
ணிலையிலா விலக்குமஃதே நெஞ்சுறயாவனெய்தான்
கலைவலீரவர்க்கே யந்தக் கன்னியுமுரியளென்றான்.

இங்ஙனங் கூறப்பட்ட பிரவசனத்தைக் கேட்டசபை முழுதும் மனநிலை குன்றித் திகைத்திருந்தது. வில்லாண்மையிலேபேர்படைத்தவரும் பலர் இஃதசாத்தியமென்றடங்கினார். தமதாண்மையைப் பேராண்மையென மதித்திருந்தவரும் அக்கன்னிகைமேற் கொண்ட கழிபெருங்காதற்பித்தேறினோருமாகிய சிலர் அந்நிபந்தத்திற் குடன்பட்டு வில்லைவளைக்க முயன்று பிரதிகூலப்பட்டுத் தலைகுனிந்தனர். இன்னும் இருவர் மூவர் கர்ணனும் ஒருவனாகும், வில்லையெடுத்துயர்த்தினராயினும் அதனை வளைக்கும் சக்தியற்றவராயினர். இவ்



வாறு அரசிளங்குமரருள்ளே பெயர்படைத்தோரெல்லாம் ஆற்றாமற் பின்வாங்க, அந்தணர் கூட்டத்துளிருந்த ஓரிளங்குமாரன் பொள்ளெனப் புறப்பட்டுக் கம்பீரநடையோடு, சென்று வில்லிருக்குமிடத்தை யடைந்தான்.

மன்மரபிற்பிறந் திருதோள் வலியாலிந்த மண்ணாளுமவர்க்கன்றி மறை [நூல்வாணர்
தொன்மரபிற் பிறந்தவரு மிலக்குவீழ்த்தாற் சூட்டுமோதொடையிளந் தோகையெனத்
தன்மரபுக் கணிதிலகமானவீரன் றகவன்றோமன்றலுக்குத் தாழ்வோ வென்றான்
வின்மரபிற் சிறந்தநெடு வில்லையீசன்மேருகிரியெடுத்ததென விரைவிக் கொண்டான்.

அவன் அந்தணன்போற் றோன்றியமையின் அச்சபையிலுள்ளோர் அவனைப் பலவாறாக மதித்தார்கள். வில்வித்தையிலே கிரமமாகப் பயின்று தேறிய அரசிளங்குமரரெல்லாம் ஆற்றாதுவிடுத்த இவ்விற்றொழிலை இவ்வேதியச் சிறுவனோ சாதிக்க வல்லவனென்று சிலர் புன்னகை கொண்டார்கள். அவரெல்லாம் அவனுடைய ஆற்றலைக்கிரமமாக ஆராயாமல் இவ்வாறு தமக்கு அறியாமையையேற்றிக்கொண்டார்கள். வேறு சிலர் இவன் தனது வில்லாண்மையைச் சீர்தூக்காமல் இவ்வாறு முற்படமாட்டானென்று சிந்தித்தார்கள். அவனுடைய சீரவண்மையையும் பெருந்தன்மையையும் அவனுடைய பக்தித்தோற்றத்தையுங் கண்டு இவனேசாதிக்கவல்லவனென்றுமனத்துள்ளேநிச்சயித்தார்கள். தன்னுள்ளம்இவ்விளங்குமாரனாற்கவரப்பட்டவளாகி அவனுக்கனுகூலமுண்டாகும்படி பிரார்த்தித்துநிற்பவளாகிய திரௌபதியைப்போலவே அவர்களும் இவ்விளங்குமாரனே சித்திபெறுகவென்று மனத்துள்ளே வாழ்த்தினார்கள். இவ்வாறு பலரும் பலவாறாக எண்ணி நிற்க, அவ்விளங்குமரன் வில்லை அடுத்து நின்று, தன்குருவுக்கும் அங்கே கூடியிருந்த பெரியோர்க்கும் வழிபாடு புரிந்து, பக்தியோடு வில்லை வலம் வந்து, பார்த்தோரெல்லாம் அதிசயிக்கும்படி எளிதாக எடுத்து நிறுத்தி வளைத்து ஐந்து பாணங்களைப் பிரயோகித்தான். பிரயோகித்த மாத்திரத்திலே ஆகாயத்திலே கரகரவென்று சுழன்று கொண்டு நின்ற மச்சயந்திரத்தை அப்பாணங்கள் கீழேவீழ்த்தின. அதுகண்ட சபையோர் யாவரும் பிரமித்தனர். கரகோஷம் பெருமுழக்கமாக எழுந்தது.

## கக. திரௌபதி மாலையிட்டது.

அந்தணர் கூட்டத்தெழுந்த சுஜாதிப் பெருமிதக் களிப்புரைகள் திசைகளைச் செவிடுபடுத்தின. அந்தணரிடத்துள்ள ஆற்றல்கள் பிரத்தியக்ஷமாயின வென்று யாவரும் பாராட்டினார்கள். இவ்வில்லை வளைத்தான் அந்தணன்றானோவென்று ஒவ்வொருவரும் அதிசயித்தார்கள். அழகிற்றனக்கிணையில்லாத இக்கன்னிகையை மணம் புரியுமாறு தேவர்களுளொருவன் அந்தண வடிவங்கொண்டு வந்தானென்று சிலர் ஐயுற்றார்கள். இவ்வில்லை வளைத்த இளங்குமரன் பிராமண வடிவங் கொண்டுவந்த அர்ச்சுனனேயாம். இவ்வாறு சனங்கள் குதூகலப்பட்டுக் களித்தெழுந்து கொண்டாடும் சமயம் பார்த்து உதிஷ்டிரனும் அவன் சகோதரர் மற்றைய இருவரும் பிறர்க்குப் புலனாகாவண்ணம் அவ்விடத்தினின்றும் அகன்றார்கள். அற்றைநாள் வெற்றிமாலை சூடிய அர்ச்சுனனே அங்கு திரண்டிருந்த மஹாஜனங்களினது கண்களுக்கெல்லாம் மணியாயினான். தனது சகோதரனது கண்குறிப்பை நோக்கிக்கொண்டு பேராவலோடு நின்ற திரௌபதி அவன் குறிப்பின்வழி சபைநடுவேஅழகுறநடந்து களிப்பு மிகுதியினாலே கம்பிதமுடையளாய் அர்ச்சுனன் கழுத்திலே மல்லிகை மாலையைச் சூட்டினாள். அதுகண்ட ஏனைய அரசிளங்குமாரர்களெல்லாம் நாணமும் கோபமும் உடையராயினார்கள். இங்ஙனம் மானபங்கமுற்ற அரசிளங்குமாரர்களெல்லாம் சிறிது நேரம் திகைத்து நின்று பின்னர்த் தேறி ஒருங்கு கூடி வாது கூறத் தலைப்பட்டார்கள். அவர்கள் துருபதனைப் பார்த்து, நம்மையெல்லாம் நீ வரவழைத்த கருமம் யாது? நீ சாதுரியமாக எம்மையெல்லாம் வரவழைத்தது தாழ்வு செய்தற் பொருட்டேயாமென்றார்கள்.

சொல்லப்பட்ட நிபந்தத்தை நிறைவேற்றிப் பரிசு கொண்ட வீரன் மீது தாம் எள்ளளவேனும் குறைசுமத்த வில்லையென்றார்கள். அவர்கள் தம்மை வரிக்கும்போது தானேஅவ்வசாத்திய நிபந்தத்தை தமக்கறிவியாமல், தாம் வந்து கூடிய பின்னர் அதனை வெளியிட்டமையால் பாஞ்சாலன் செயல் குற்றமுடையதாமெனக் கொண்டார்கள்; இப்போலி நியாயத்தை யாவருக்குமுணர்த்தி அவரை யெல்லாமுடன்படுத்திப் பாஞ்சாலனைப்போருக்கழைத்தார்கள். அதுகண்ட பாஞ்சாலன் (துருபதன்) தான் அவ்வரசரை யெல்லாம்



வரவழைத்தவனாதலின் அதற்கு யாதும் பேசாது நின்றான். கலகமுங் கலக்கமுமோ பெரியவாயின. அவ்வமையத்திலே அர்ச்சுனன் முற்பட்டுவந்து நின்று, பாஞ்சாலனுக்கீடாகத் தானே அப்போரை எதிரேற்றுச்செய்து பயங்கரத்தைத் தீர்ப்பன் என்றுகூறி அபயஸ்தங்கொடுத்தான். அவன் பக்கத்திலே தன் புஜபலபராக்கிரமத்தை மறவாதவனாய் வீரசேனனும் நின்றான். அர்ச்சுனன் சொன்ன வாசகத்தைக் கேட்டமாத்திரத்தே போர்க்காரியத்தராய் நின்ற அரசிளங்குமாரரெல்லோரும் ஒருபக்கமாகவும், அர்ச்சுனனும் வீமசேனனும் மற்றப்பக்கமாகவும் நின்று போர்தொடுத்தார்கள். அப்போரில் அர்ச்சுனனும் கர்ணனுஞ் செய்த போர் கணிக்கத்தக்கதாம். இருவரும் சிறிதுநேரம் கடும்போர் பொருதபின்னர்க் கர்ணன் தான் தோற்றனன் என்றும் தன்னை வென்ற வீரன் யாவனோவென்றுங் கூறிப் பின்வாங்கினான். பார்த்திருந்த ஜனங்கள் மெச்சிக் கூறிய “சபாஜ்” “சபாஜ்” என்ற சொன்முழக்கமும் நின்றுபோயது. அவ்வளவில் போரும் ஒருவாறு முடிந்தது. துர்ப்போர் தொடுத்த அரசிளங்குமாரர் தாம் மானத்தோடு போரொழிதற்கு ஒரு நடுவான்வாக்கை ஆவலோடெதிர்நோக்கி நின்றனர். அக்குறிப்பினையுணர்ந்து முற்பட்டு, “இனி அமைக அமைக” வென்றுரைத்து வந்தான் ஒரு பெரியோன். அவன் யாவன்? அவன் அன்றுமுதலாகப் பாண்டவர்க்கு உற்ற நண்புபூண்டோனும் அவர்க்கு முக்கிய மந்திரியும் அவர்க்கு வெற்றிதருபவனுமாகிய பெருந்தகையே. அவன்றான்யாவன்? அவன் சந்திரவம்சத்துக்குஅநன்னியனும்திவ்விய மதியூகியுமாகிய கிருஷ்ணனேயாம். அவன் சந்திரவமிசத்துப் பூர்வாதிபனுக்கு மூத்த புதல்வனாகிய யதுவினது குலத்திலே தோன்றியவன். அவன் தந்தை ஒருகோபகாரணமாக அரசுரிமையைத் துறந்து புறஞ்சென்றான். அத்துறவினால் யதுகுலத்தோர் தமது வமிசத்து ராஜகுடும்பங்களோடு கலப்பின்றி யிருந்தாரல்லர். விவாகக் கலப்பு நடந்துகொண்டே வருவதாயிற்று. இச்சரித்திரம் நிகழ்ந்த காலத்திலே குந்தி ஒருபக்கம் பாண்டவர்க்குத் தாயும், மற்றொரு பக்கம் கிருஷ்ணனுக்கு அத்தையுமாயிரு குலத்தையும் சம்பந்தித்தாள். கிருஷ்ணனது பேராண்மையையும் பராக்கிரமுமோவெனில் சிறியவுமன்று சிலவுமன்று. அவன் தனது பேராண்மை

யாற் பெயர்படைத்த பின்னர் மந்திரத்தொழிலே தனக்குச் சிறந்த
தாகக் கொண்டவன். அர்ச்சுனன் தனது இணையற்ற வெற்றியி
னலே மாற்றுரைத் திகைத்துப் புறங்கொடுக்குமாறு செய்த சமயம்
பார்த்து அவனோடு நட்பாகுங் கருத்தை முன்னரே மனத்துட்
பொதிந்தவனைக் கிருஷ்ணன் வெளிப்பட்டான். பாண்டவர்கள்
மீது இயல்பாகவே செல்லுகின்ற பேரன்பினால் உந்தப்பட்டவனாகிய
கிருஷ்ணன் இருபக்ஷத்தாரது வழக்கையுமெடுத்து வாதித்துக்
குற்றம் இருபக்ஷத்தாரிடமுமுளதென்றும், என்னை கொலாமெனில்,
இச்சுயம்வரத்தை விரும்பிப் புறப்பட்டு வந்துகூடினோர் அதன் நிபந்
தத்தை ஆராய்ந்துணர்ந்து கொள்ளாது வந்தது குற்றமேயாமென்று
மெடுத்துக் காட்டினன். அதுகேட்டவளவில் அவ்விளங்குமாரரெல்
லோரும் தமது பொறுமைக்கு ஏற்ற சிக்ஷை பெற்றதோடு பகையுந்
தணிந்தனர். பின்னர் எல்லாம் ஊழின் வண்ணம் நடப்பனவென்
றும், இன்று நாம் இவ்வளவிற் பிழைத்தது நல்லகாலத்தின் பயனே
யென்றும், பலசாலி ஜெயசாலி யென்பதின்று கண்டோமென்றுங்
கூறி எல்லோரும் அவ்விடத்தை விட்டு நீங்கினர்.

---

## ௨0. திருமணம்.

அதன்பின்னர் அர்ச்சுனன் திரௌபதியை யழைத்துக்
கொண்டு வீமனோடும் அவ்விடத்தினின்றும் நீங்கி நகர்ப்புறத்தை
யடைந்தங்கோரில்லத்திலே தங்கினான். அவ்விடத்திற் சென்று
கிருஷ்ணன் பாண்டவர்களைக் கண்டான். அத்தினமே பாண்டவர்க்
கும், அவருள்ளும் விசேஷமாக, அர்ச்சுனனுக்கும் கிருஷ்ணனுக்கு
மிடையே மிக்க திண்மையான கேண்மை வேரூன்றி நிலைகொள்வ
தாயிற்று. இவர்கள் நிலை இங்ஙனமாக, அங்கே பாஞ்சாலராசன்
தன் புத்திரியைக் கைக்கொண்ட நாயகன் யாவனென்றிதுவரையும்
ஆராயாமலிருந்தும் அவள் தன் சமூகத்தை விட்டகன்ற பின்னரே
சிந்தாகுலங்கொள்ளத் தலைப்பட்டான். தன் வாக்கிற்குப் பங்கம்
வருமென்றஞ்சியே திரௌபதியைக் கொண்டேக விடை கேட்க
அர்ச்சுனனை அது செய்யாமற்றடுத்திலன். ஆயினும், தன் புத்திரி
சென்று வாழுங் குடும்பம் யாதென்றும், அவர் பெயரூர் யாவை
யென்றும் அறிதல்வேண்டித் தன் மகனை யழைத்து, தாம் சம்பந்
தஞ்செய்த புந்துக்களின் இயல்புகளையெல்லாம் அவர்ஐயுறுவண்ணம்



நீ, சென்று தேர்ந்து வந்துரைக்கவென்றான். அவ்வாறே திருஷ்டத்
துய்மன் பாண்டவர்களிருக்குமிடத்தை யடைந்து, அவர்க்குப்
புலனாகாவண்ணம் தூரத்தேயிருந்து, அவர் பேசுவது நடப்பது
விரும்புவது முதலியவெல்லாம் நுண்மையாக நோக்கிக்கிரகித்தான்.
அவர்கள் செய்யும் சம்பாஷணைகளால் அவர்களை ராஜகுடும்பத்
தார்களென நிச்சயித்து மீண்டுபோய்த் தந்தைபாற்சென்று, "நமது
கண்மணியாகிய திரௌபதிபோய்ப்புகுந்திருக்கும் குடும்பம் பெரும்
பாலும் ஆயுதங்களையும் வில்வித்தையையுமே யெடுத்துப்பேசுவதால்
அஃதுயர்ந்த ராஜகுடும்பமேயாமென்பதற் கையமில்லை" என்று
வணங்கிக்கூறினான்.

அதுகேட்டகமிகமகிழ்ந்த பாஞ்சாலன் அவர்களை அழைத்து
வருமாறு, கஜரதுரகபதாதிகளோடு மந்திரிகளை யனுப்பினான்.
அமைச்சர் வருதலும் அவர்கள் இனிநாம் மறைந்தொழுகுதல் நன்றன்
றெனக்கருதி அரசர்க்குரிய ஆடையாபரண முதலியவெல்லாமபூண்டு,
ரதாரூடராய்த் தமது தாயோடு திரௌபதியுமோரிரதத்தில் வீற்
றிருந்து செல்லச்சென்று, துருபதன் அரமனையை யடைந்தார்கள்.
அவர்கள் துருபதனால் உபசரிக்கப்பட்டவுடனே தம்மை இன்ன
ரென வெளிப்படுத்தினார்கள். அதுகேட்ட மாத்திரத்திலே அரமனை
யிலும் அந்நகரத்திலும் உண்டாயகழி பேருவகையும் கொண்டாட்
டமும் சொல்லுக்கடங்குவனவல்ல. அதன்பின்னர் விவாகத்துக்கு
நாள் நிச்சயிக்கப்பட்டது. நகரெங்கணும் சோடிக்கப்பட்டது. வீடு
கள்தோறும் கொண்டாட்டந் தலைப்பட்டது. உரியநாளிலே வியாசர்
ஆஞ்ஞைப்படியும் குந்தியினது அநுமதிப்படியும் திரௌபதி ஐவர்க்
கும் மனைவியாக்கப்பட்டாள்.

இவ்வாறே வீடின்றி நாடின்றி இனமின்றி கனமின்றி வன
மொன்றிநின்ற பாண்டவர்க்குப், பாஞ்சாலனாற் படைவலியும் துணை
வலியும், கிருஷ்ணனால் மந்திரவலியும் ஞானவலியும் பெருகுங்காலம்
வந்துபொருந்தியது.

---

## ௨௧. இணக்கச் சூழ்ச்சி

பாண்டவர்கள் எரியூட்டுக்குத்தப்பியதும், வில்வளைத்து வெற்றி
பெற்றதும், விவாகத்தோடு பெருஞ்சிறப்படைந்ததும் துரியோதனன்
செவிக்கு மின்னென எட்டின. அவன் கோபத்தாலும் துக்கத்தா

லும்விழுங்கப்பட்டவனாய்ப் பொறாமையென்னும் பெருங்காட்டிடைப்புக்கொளித்தானாயினும், பாண்டவர்க்கு மிகப்பயந்துள்ளம் புண்ணாயினான். பாண்டவர்கள் மாண்டார்களெனக் கொண்டு அச்சந்தீர்ந்திருந்த அவன்மனதிலே இப்போதுண்டாய வச்சம் ஆயிரம்மடங்காயிற்று. துக்கமென்னும் பெருங்கடலிலே அச்சமென்னுஞ் சுறவின் வாய்ப்பட்டுக் கலங்குந் துரியோதனனை யடிக்கடிதேற்றுந் தேர்ச்சித்துணைவரானோர் அவன் தம்பியாகிய துச்சாசனனும் தோழனாகிய கர்ணனும், மாதுலனாகிய சகுனியுமேயாவர். துச்சாசனனோ முன் பின் யோசிக்கு மியல்பிலா முழுமகன். கர்ணனோ சாவினும் வாழ்வினும் பிரியேனென்றுணைபுகுந்தவன். சகுனியோவஞ்சமேவடிவாயினோன். இம்மூவரும் துரியோதனனுக்குச் சூழ்ச்சித்துணைவராய், மகன் எண்ணத்துக்கெல்லாமிசைகின்ற திருதராஷ்டிரனை வசப்படுத்திக்கொள்ளுமாறும், அவனால் பாண்டவர்களையும் துருபதனையும் பிரிக்குமாறும் அவனை ஏவினர். பாண்டவர்க்குத் துருபதனாலுண்டாகிய பலத்தையும், கிருஷ்ணன் சொற்படி நடக்கின்றவர்களாதலின் யாதவ வீரரெல்லோரும் உத்தமராகிய பாண்டவர்க்கே சகாயராயிருப்பார்களென்றதையுந் துரியோதனன் நன்றாகவுணர்ந்தான். அதனால் பாண்டவர்க்கும் துருபதனுக்குமிடையே பகையை யுண்டாக்கி விடுதலே தனக்கநுகூலமென நிச்சயித்தான்.

இப்படியிருக்கையில் பாண்டவர்கள் அக்கினியில் மாளாமல் க்ஷேமாரோக்கியரா யிருத்தலைப் பிறர்க்கு வெளியிடாதிருந்தவனாகிய விதுரன் அவர் துருபதன் சபையில் அடைந்த வெற்றியைக் கேட்டு பேரானந்தமுற்றான். அஃதுணர்ந்த மாத்திரத்தே அவன் திருதராஷ்டிரன்பாற் சென்று அதனைச் சொன்னான். திருதராஷ்டிரன் இப்போது முந்திய திருதராஷ்டிரனல்லன். அவன் தன் மைந்தனுங் குழாமும் கூறிய நச்சுரையால் நச்சுமன முடையனாயினான். அதனால் நன்னெறியெல்லாம் அவன் செவியிலேறாவாயின. அவன் தன் மைந்தரது அபிவிருத்தியையும் அவர்க்குபகாரியா யிருத்தலையுமே நாடினான். மைந்தன் மேற்கொண்ட அன்பு மற்றை நீதிகளையெல்லாம் மறைத்தன. விதுரன் சொல்லும் நன் மந்திரமெல்லாம் அவனுக்கு வேம்பாயின. வஞ்சமனத்தினையுடையோர் புறத்தே இனியராய்த் தோற்றுதல் இயல்பாதலின் அவன் விதுரன்சொற்களை



அங்கீகரித்தான் போன்று நடிப்பவனாயினான். அவன் பாண்டவர்கள் க்ஷேமாரோக்கியரா யிருக்கின்றன ரென்றும், அவர் திரௌபதியைச் சுயம்வரத்திற் பெற்றனரென்றும் விதுரன்வாய்க் கேட்டபோது பெருமகிழ் கொண்டான்போல் நடித்தான். அவன் தனியிருக்கும்போது தனது கிளைக்கு அரசுரிமை கிடைக்கத்தக்க பக்குவங்களெல்லாம் சிதைந்தனவே யென்று பெருமூச் செறிவானாயினான்.

திருதராஷ்டிரன் இம்மனநிலையோடு மிருக்கையிலே, மிக்க புண்பட்டமனத்தினனாய்த் துரியோதனன் அவன்பாற்சென்று தன்குறையையெடுத்துரைத் தழுதான். அவன் நெடுநேரமாகச் செய்த விண்ணப்பமும் அவ்விண்ணப்பத்தினது பரிதாப வாக்கு வன்மையும் திருதராஷ்டிரன் மனத்தை முன்னையிலும் மிகவுருக்கியது. அதனால் இருவரும் ஒரு மனப்பட்டவராய்ப் பாண்டவரையும் துருபதனையும் எவ்வகையிலும் பிரித்துவிடுவதே ஏற்றவுபாயமாமெனத் துணிந்தார்கள். ஆயினும் அதனைச் சாதித்தலெங்ஙன மென்பது திருதராஷ்டிரனுக்குப் புலப்படவில்லை. விதுரன் முதலியோரது எண்ணத்துக்கு மாறாகத் தனது அரசு செல்லாதென்பதும் அவர்க்கிசைய நடத்தலாலேயே தனதரசு செல்லுகின்றதென்பதும், அவர் சாதுரிய விவேகமும் பலமுமே தன்னரசுக் காதாரமென்பதும் திருதராஷ்டிரன் மனத்தினின்றும் நீங்கினவல்ல. அவன் அவருடைய கருத்துக்கெல்லா மிணங்கி நடக்கப் புகினும் உதிஷ்டிரனது உரிமையினையே அவர் எடுத்து நாட்டுவரென்பது முட்கொண்டான்.

இவ்வண்ணம் திருதராஷ்டிரன் ஒருதலைத்துணிபுமின்றி யிருந்தானேனும், தன் மைந்தன் கருத்தை முடித்தற்கு விதுரன் முதலியோரை யுசாவாது துணியலாகாதென நிச்சயித்தான். அதனைத் தன் மைந்தனுக்குஞ் சொல்லி அவனை ஆற்றினான். இரண்டொரு நாட்சென்ற பின்னர்த் திருதராஷ்டிரன் தனது மந்திரத் தலைவரைத் தன் சமுகத்துக்கு வரவழைத்தான். இதற்கு முன்னர் ஒருபோதும் எப்பெருங் கருமத்தின் பொருட்டும்இப்பெருஞ்சபை கூட்டப்பட்டதில்லை. அச்சபையிலே சூழ்ச்சிக் கெடுத்துக்கொள்ளப்பட்டவிஷயம் அசையாவரசுரிமையையும் இசையாப் பேராசையையு மிணக்கஞ் செய்தலாம். அஃதாவது துஷ்டநிக்கிரக கோபத்தை யொழிவித்துத் தருமநெறியுடையோரைப் பொறுமையும் பழிபாவங்களு முரு

வெடுத்து வந்தாலொத்த தீயவரோடிணங்குதலாம். இக்கருமமோ ஒரு சிறிதும் பயன்படாததாம். அது இருளையும் ஒளியையும் ஒருங்கே கூட்டுமாறு முயல்வது போன்றதாம். இவ்வாறசாத்தியமாகிய இப்பெருங் கருமத்தினை மேற்கொண்ட மந்திரசபையினது பெருமையும் சாதுரியமுமோ எடுத்துரைக்கவடங்கா வியல்பினவாம்.

---

## உஉ. மந்திரசபை.

அச்சபையிலொருவராகிய வீஷ்மாசாரியரோ, கலங்காவுறுதியும் பயங்கரமான சத்தியவிரதமு முடையவர். அவர் வயசாலும் முதியவர். அவர் தமதாயுட் காலத்திலே மூன்று சந்ததி அரசுபுரியக் கண்டவர். அம்மூன்று சந்ததி காலத்திலும் தம் வில்லாண்மையையும் போராண்மையையுநாட்டிப்பெயர்படைத்தவர். அவர் தமது கௌமார பருவத்திற்றானே தமது தந்தையினதபீஷ்டத்தை நிறைவேற்றுமாறு விவாகஞ் செய்வதில்லையென்றும், தமது தந்தையார் மணமுடித்த கன்னிகை வயிற்றிற் பிறக்கும் புத்திரர்க்கே அரசுங் கிடைப்பதாகவென்றும் வாக்குத் தத்தஞ் செய்து அவ்விரதத்தினைத் தவறுமற் காப்பவர். அன்று முதலாக அவர் பராக்கிரமத்திற்கோர் குறைவிடமாயினவர்; அவர் யௌவனப் பருவத்திற் செய்த கடிய போராண்மையினையும் வெற்றிவலிமையினையும் கண்டு கேட்டுணர்ந்த பகையரசர் நெஞ்சிலே அவ்வாண்மைகள் இன்றிவ் விருத்தாப்பிய தசையிலும் நின்று பேரச்சத்தை விளைப்பனவாயின. அதனால் அவர் கீர்த்தி என்றும் வாடாப் பசுமையினையுடையதாயிற்று. அவர் பராக்கிரமம் தளர்வில்லதாயிற்று. அவர் பெயர் பகையரசைப் படையெடாவகை அடக்குவதாயிற்று. இங்ஙனமெல்லாமிருந்தும் அவர் துரியோதனனும் அவன் சுழாத்தினரும் செய்து வருகின்ற துர்க்கிருத்தியங்களைக், கொடிய யுத்தமொன்று மூளப் போகின்றதே யென்றும், சந்திர வமிசத்துக் கபகீர்த்தி வந்ததே யென்றும் சிந்தாகுலங்கொண்டு மனமயங்கினார். ஆயினும் அவர் வாக்கும் பாகிலிகன் வாக்கும் மந்திரசபையிலே வலிமையுடையனவாயிருந்தன. பாகிலிகன் வீஷ்மாசாரியருக்குச் சிற்றப்பன். அவன் அவர் சொல்வனவற்றையெல்லாம் ஆதரித்து நீதியை நிலைநாட்டுபவன். இவர் இருவர்க்கும் அடுத்த படியிலுள்ளவன் விதுரன். அவனும் தருமத்



தையே ஆதரித்து நிற்பவனென்பது முன்னும் பலமுறை கூறப்பட்டது. அவன் யுத்தத்திலே சிறிதும் விருப்பமில்லாதவன். அது பற்றி அவன் ஒரு காலத்தும் போர்க்களம் புகுந்திலன். அவனுக்கு விருப்பமாகியவிடம் மந்திரசபையே. அச்சபையிலும் அமைச்சுத் தொழிலும் தனக்கிணையில்லாத வலிமையுடையவன். அமைச்சியல் என்னும் சமுத்திரத்திலே செல்பவனாகிய விதுரனுக்கு நீதியே துருவநக்ஷத்திரம்; சத்தியமே உடுக்கருவியாம். அவன் சொல்லும் உபாயமெல்லாம் பக்ஷபாதமில்லாதனவேயாம். அவன் சபையிலெழுந்து பேசும்போதெல்லாம் சபைமகிழினும் இகழினும் பொருட்படுத்தாமல், தனது இருதய கமலத்திலே வீற்றிருக்கும் பரம்பொருளினது மெய்சொலியையே பொருட்படுத்தி அரசுக்கும் சந்திர வமிசத்துக்குமுரிய கருமமுறைக்குப் பங்கம் வாராமற் கருமங்களையெடுத்து வாதிப்பவன். அவனும் வீஷ்மரைப் போலவே சந்திர வமிசத்திலுண்டாகப் போகும் பெருங்கேட்டைக் குறித்துச் சிந்தாகுலங் கொள்பவனாகின்றான். அவனுடைய கொள்கைகளெல்லாம் திருதராஷ்டிரன் கருத்துக்கு மாறுபட்டனவே யாயினும், அவன் மதியுரை மந்திரசபையிலே அங்கீகரிக்கப்பட்டே வருவதாயிற்று. இம்மூவருமே உண்மையளவில் இவ்விராச்சிய பாரத்தைப் பரிக்குந் தூண்களாவர். இம்மூவருமே இராச குடும்பத்துக்கு வாத்தக்க கால பலன்களையெல்லாம் ஆராய்ந்து கணிப்பவரும், பழுதுறுகை அதனைக் காப்பவருமாயினவர். இம்மூவரோடும் துரோண கிருப அசுவத்தாமர்களும் சிறிதுகாலம் மந்திரசபையிலே பெரும்பாலு மொத்து நடப்பாராயினர். பின்னைய மூவர் வாக்குப் பலமும் கூடியே வீஷ்ம விதுரர்களுடைய கருத்தெல்லாம் மிக்க வலிமை பெறுவனவாயின வெனல் வேண்டும்.

இவ்வியல்பினதாகிய சபையிலே துரியோதனனும் அவன் துணைவரும் புகுந்தனர். அவர்கள் புகுந்திருக்கும் சமயத்தையும் கருத்தையுங் கண்டு மந்திரத்தலைவரெல்லாம் தாமினித் தாக்ஷிண்ணியம் பற்றிக் கூசாமலுள்ளதையுள்ளபடி யெடுத்துரைக்கத் துணிந்தனர். வீஷ்மாசாரியரே வாதத்தைத் தொடங்கினர். அவர் திருதராஷ்டிரனை நோக்கி, "நீ அந்தகனாயினமை பற்றியன்றோ உனக்குரிய அரசுரிமை உன் தம்பி பாண்டுவுக்காயிற்று; அது பற்றியே பாண்டு

அரசனாயினன். அவன் இறந்த பின்னர் அவன் மைந்தன் உதிஷ்டிரனுக்கு அவ்வரசுரியதாயிற்றன்றோ. உதிஷ்டிரன் சிறுவனாயிருந்தமையினாலன்றோ நீ அவ்வரசை அவனுக்கு வயசு வருங்காறும் நடாத்தப் புகுந்தனை; இவ் வுண்மைகளாலும் நீயும்உன் மைந்தரும் அரசுக்குரிமை யொருசிறிது முடையீரல்லீர். ஆயினும் உனக்கோரற்ப வாய்ப்புளது. அஃதாவது அஸ்தினாபுரத்துப் பெரியோர்கள் ஒருபோது வேண்டுவரேல் உதிஷ்டிரன் உயிர்ப்பழிக்கஞ்சி இராச்சியத்திற் பாதியைக் கொடுக்க உடன்படுவான். அஃதன்றி உனக்கு யாதோருரிமையுமில்லை. ஆதலாற் காலந்தாழ்க்காது அவ்வழியை நாடக்கடவை" என்றார். அதுகேட்ட துரோண கிருப அசுவத்தாமர்களும் அக்கருத்தையே வலியுறுத்திப் பேசினார். அதன் பின்னர் விதுரனெழுந்து வீஷ்மர் பேசியதை ஆதரித்துரைத்தது மன்றி "இதுகாறும் பாண்டவர்க்கு நீயும் நின் மைந்தரும் செய்ததெல்லாம் வஞ்சகமும் பழியுமேயாமென்றும், பாண்டவரது அரசுரிமை முழுதையுமே அபகரிக்கத் துணைநாடுகின்றனை யென்றும், பாண்டவரது பொருளையேயுண்டுகொண்டு அவர்க்கே தீங்கு விளைக்கின்றனை யென்றும், உன் க்ஷேமத்தை நீ நாடுகின்றனையாயின் அவரையும் உன் புத்திரரையுஞ் சமமாக வெண்ணுதல் வேண்டு" மென்றும் கூறினன்.

---

## உ௯. துரியோதனன் செருக்கு.

இம் மந்திர வுரைகளினாலே துரியோதனன் பேராசை தணிந்திலது. அவன் தனது புசபலத்தையே மிகப் பெரிதாக மதித்து மிகவகங்கரித்தான். வீமனிலும் தான் வலிமையிற் சிறந்தானல்லனேனும் அவனுக்குத் தான் சமானனே யெனத்துணிந்தான். தனது தோழனாகிய கர்ணன் அர்ச்சுனனுக்குச் சிறந்த இணையாவானெனத் துணிந்தான். மற்றைய பாண்டவர் மூவரும் முப்பத்துமூன்று மடங்கினராகிய தனது தம்பியருக்கீடாகாரென நிச்சயித்தான். இவ்வாறே பாண்டவர்கள் தன்னையுந் தனது தம்பியரையும் வெல்லும் பக்குவஞ் சிறிதுமில்லாதவரே யாவரெனத் தன் மனத்திற் கொண்டான். இன்னும் தன் பக்கத்திலே துரோண கிருப அசுவத்தாமாக்களையுஞ் சேர்க்கின் அவர்க்கீடாவார் பாண்டவர் பக்கத்திலே எவரு



மிலரென மதித்தான். எந்நிலையிலே நின்று இத் துரோணாதியர் நியாய வாதம் புரிகினும் போர்வருங் காலத்திலே தன் பக்கத்தையன்றி வேறு நோக்காரென்பதும் துணிந்தான். ஆயினும்பாண்டவர் பக்கத்திற்குத் துணையாகத் துருபதன் வருவானென்பதும் அவன் மனத்தை விட்டகன்றதில்லை. அங்ஙனம் துருபதன்றான் வரினும் தன்பக்கத்துப்பலம் அளப்பரிதாய் விஞ்சி நிற்குமெனக் கண்டான். இவ்வகைத் துணிவினாலே துரியோதனன் அன்று அம்மகா மந்திர சபையிலே நிகழ்த்தப்பட்ட சமாதான போதங்களை யொருசிறிதும் பொருட்படுத்தாமல் உடன்பாடின்றியே நின்றான்.

இந்நியாயங்கள் ஒருபக்க மிருக்க, பாண்டவர்கள் தம்முள்ளே தமது ஏகமனையாள் காரணமாகப் பெரும்பகை மூண் டொருவரை யொருவர் வெறுத்துப் போராடிப் பிரிந்துவிடுவார்க ளென்பதோரெண்ணமும் நம்பிக்கையும் துரியோதனன் மனத்திலே முளை கொண்டு வளர்வவாயின. அக்கருத்து நிறைவேறற்குச் சிறிதுகாலம் போதல் வேண்டுமென்றும், அப்பிரிவு வருங்காலத்திலே துருபதனும் தன்மகள் பொருட்டுப் பாண்டவர்களை வெறுப்பனென்றும் துரியோதனன் மனோரதமேறினன். அப்பகை விளையுமாறு சிறிதுகாலத்தை உபாயமாகக் கழித்தல் வேண்டுமென்றும் அதற்கிடையில் அப்பகையைத் தூண்டுவித்தல் வேண்டுமென்றுஞ் சிந்தித்தான். கிருஷ்ணன் பாண்டவர்க்குறுதித் துணையாயுள்ளன் என்பதைத் துரியோதனன் எட்பிரமாணமும்பொருட்படுத்தினனல்லன். கிருஷ்ணன் தமையன் பலராமன் தன் பக்கத்தில் அத்துணை யன்பு பாராட்டுவனாதலின் அவனால் கிருஷ்ணனும் யாதவர்களும் ஒருபக்கமுஞ் சாராமல் நிற்பரென்பதும் அவன் நன்றாக நிச்சயித்தான்.

அதன் பின்னர்க் கர்ணன் எழுந்து பாண்டவர்க்குத் துணையாகவுள்ளவன் துருபதனொருவனே யாதலின், நாம் இப்போதுதானே பாஞ்சாலநாட்டிற் படையேற்றுவேமாயின் அவர்களை எளிதிலே வென்று அவர்கள் வலிமையைச் சிதைத்துவிடலாமென்று தீர்க்காலோசனையின்றிக் கூறினான். கர்ணனோ புதிதாக வேத்தவை புகுந்த அனுபவமில்லா விளங்காளையாதலாலும், தனது விவேகத்தையும் ஆண்மையையும் பெரிது பாராட்டுவனாதலாலும், துரியோதனன் போக்குக்கெல்லாம் முன்செல்பவனாதலாலும், அவன் உரைத்தவை

கள் துரியோதனன் மனத்துக்கு உவப்பாயின. இப்படியாக மந்திர சபையிலெழுந்த வாதங்கள் கொடியவும் நெடியவுமாகச் சாமபேத தானதண்டமாகிய நால்வகையுபாயங்களும் நாடி யாராயப்பட்டன.

---

## ௨௪. பாண்டவர் பாதியரசுகொள்ளல்.

இவற்றையெல்லாம் கேட்டிருந்த திருதராஷ்டிரன், தன்மகனும் கர்ணனும் கூறிய எண்ணங்களை தகுதியுடையனவாகுமென்று மனத்தில் நிச்சயித்தான். நிச்சயித்தவழி துணிதற்கு கிருஷ்ணன் பாண்டவர் பக்ஷத்திலிருத்தலினாலே அச்சமுடையனாகி மந்திரத்தலைவரைச்சார்ந்து பேசுவானாயினான். திருதராஷ்டிரன் அம்மந்திரத்தலைவரை நோக்கி உமது எண்ணப்படி இராச்சியத்தைப் பங்கிட்டுக் பாண்டவர்கள் பங்கை அவர்களுக்குக் கொடுக்கக் கடவீர்களென்றான். அவ்வுரை மனம் வாக்கு இரண்டும் பொருந்திக் கூறப்பட்டதன்று. அவன் தனக்கும் தன் மைந்தனுக்கும் சமயம் வாய்ப்புழிப் பாண்டவரை வென்று அவர்பாகத்தைக் கவர்ந்து கொள்ளுங் கருத்துடையனாகவே அதனைக் கூறினான்.

இச்சமாதானக் கருத்தைப் பாண்டவர்க்குணர்த்துமாறு வேண்டிக்கொள்ளப்பட்டவன் விதுரன். அவன் உடனே பாஞ்சாலத்துக் கேகித் தான் சென்ற கருமத்தைப் பாண்டவர்க்குணர்த்தினான். அங்கே பாண்டவரோடிருந்த கிருஷ்ணன் துருபதன் முதலியோரெல்லாம் பாதிப்பங்கு கொள்வது நீதியின் பாலதன்றாயினும், கொடிய யுத்தத்தையும் உலகத்துக்கு வரத்தக்க தீங்கையுஞ் சீர்தூக்கி அஞ்சியே அதுகருணையின் பாலதாமெனக்கொண்டு சமாதானத்துக் குடன்பட்டார்கள். அதுகேட்ட பாண்டவர்கள் தாம் துரியோதனனால் அடைந்த துன்பங்களையும் வஞ்சகங்களையும் மறந்தவர்களாயும் க்ஷமித்தவர்களாயும் விளங்கித் துருபதன்பால் விடைகொண்டு விதுரனோடு புறப்பட்டு அஸ்தினபுரத்தை யடைந்தார்கள்.

பாண்டவர்கள் அஸ்தினபுரத்தை யடைந்தார்களென்பது கேட்டு அந்நகரமாக்கள் எல்லையில்லாத ஆநந்தக்கடலில் மூழ்கினார்கள். எல்லோருந் திரள்திரளாக எதிர்சென்று பாண்டவர்களை உபசரித்தார்கள். அதனால் பாண்டவர்கள் அந்நகரத்தை நீங்கியிருந்தமை



பற்றி அந்நகரத்துமாந்தர்களால் மறக்கப்பட்டிலரென்பதும் வெளிப்படையாயிற்று. நகரமெல்லாம் ஆனந்தகோஷஞ் செய்யப் பாண்டவர்கள் அரமனையை யடைந்து திருதராஷ்டிரனையும் பெரியோர்களையும் வீழ்ந்து நமஸ்கரித்தார்கள். திருதராஷ்டிரனும் ஏனைய முதியோரும் பாண்டவர்களை வாழ்த்தித்தழுவிக் கொண்டாடியபின்னர் இராச்சியத்தைப் பாகம்பண்ணி ஒருபாகத்தைக் கொடுத்தார்கள். அஸ்தினபுரமென்னும் புராதன நகரத்தை திருதராஷ்டிரன் தனக்காக்கிக் கொண்டான்.

---

## ௨௫. இந்திரப்பிரஸ்தநகரம்.

அதனால் பாண்டவர்கள் தமது பாகத்துக்கு ராஜதானியாக இந்திரப்பிரஸ்தமென்னுமொரு நகரத்தை நிருமிக்க வேண்டியவரானார்கள். அந்நகரம் கிருஷ்ணன் ஏவலின்வழி விசுவகர்மாவென்னுந் தெய்வகம்மியனால் அமைக்கப்பட்டது. அது பாண்டவர்களுக்கு எவ்வகையினுந் தகுதியான மனோகரநகரம். அது யமுனைக்கரையின்கண்ணதாதலின் மிக்கவிசேஷமுடையதாயிற்று.

இமையவர்பதியிலுள்ளனயாவுமிங்குளவிங்குமற்றுள்ள
வமைவுறுபொருள்களங்கிலவெனுமாறமைத்தவான்றொல்பதியழகைச்
சமைவுறவிரித்துப்புகழ்வதற்குன்னிச்சதுர்முகத்தவனுமெய்தளரு
நமர்களானவிலமுடியுமோமுடியாதாயினும்வல்லவாநவில்வாம்

அதுபகையரசர் கனவினுஞ் சிந்தைசெய்தற் கரிதாய்ப் பல்வகைப் பொறிகளும் யந்திரங்களும் யுத்தோபகரணங்களும் அமையப்பெற்றது. அது மிகவாழ்ந்து யார்க்குந் தாண்டுதற்கரியதாகிய அகழியையுடையது. அது பகலும் இரவும் முறையே கண்விழித்து காக்குங் காவற்படையினைப்போன்ற தாமரையும் குமுதமுமுடையது. அந்நகரத்தைச் சூழ்ந்து கிடக்குஞ் சோலைகள், மல்லிகை முல்லை சண்பக முதலிய மலர்களால் நிறைந்து பரிமளங் கால்வன. அந்நகரத்திலே யமுனைக்கரையிலுள்ள மாளிகைகளெல்லாம் இந்திரனிருக்கையாகிய அமராவதிவரையு முயர்ந்து கீழே யமுனைநீரிலே தோன்றுஞ் சாயையால் பாதலம் வரையும் வேரூன்றினபோல் விளங்குவன. இடையிடையே யோங்கிப் பணைத்துப் பரந்து குளிர் நிழலைத் தருவனவாகிய விருக்ஷங்களால் வெயிலும் அந்நகருக்குச் சந்திரிகை

யாயிற்று. நால்வகை வருணத்து உத்தமர்களுக்கெல்லாம் அது பல வகையாலும் கண்கவரும் பதியாயிற்று. சுருக்கிக் கூறுமிடத்து, அந்நகரம், பலவாற்றானும் பெருங் கீர்த்தியும் பேரழகும் வாய்ந்ததாய் மற்றைய நகரங்களையெல்லாம் மங்குவித்துயர்ந்து, ஒப்புயர்வில்லா அரசாலும் பிரஜைகளாலுஞ் சிறந்து விளங்குவதாயிற்று. X

## உசு. பாண்டவர் அரசியல்.

இப்படியிணையற்று விளங்குவதாகிய நகரத்திலே பாண்டவர்களும் நீதிக்கோருறைவிடமாக வீற்றிருந்து ராஜாதிராஜரெல்லாம் போற்றி அடிபணியத்தக்கவாறு செங்கோலோச்சுவாராயினார்கள். அங்கே தௌமியரென்னும் புரோகிதரும் பாண்டவரோடிருந்து அவர்க்கு நீதி மார்க்கங்களை யெடுத்துபதேசம் பண்ணிவருவர். வியாசரும் இடையிடையே சென்று அவர்க்கு வேண்டுவதைக் கற்பித்துப் போவர்.

நீவிரும்விதியால்வேட்ட நேயமுண்டேனுமன்ற
லோவியமனையாடன்னை யோரோராண்டொருவராக
மேவினர்புரியுமங்கண் மேவுநாளேனையோரிக்
காவியங்கண்ணினாளைக் கண்ணுறல்கடனதன்றே.
எண்ணுறக்காணிலோரா திருதுவும்வேடமாறிப்
புண்ணியப்புலன்களாடப் போவதேயுறுதியென்று
வண்ணவிற்றிறவினார்க்கு வாய்மலர்ந்தருளிமீண்டு
பண்ணுடைக்கீதநாத பண்டிதன்விசும்பிற்போனான்.

நாரதரும் அவர்க்கு வெளிப்பட்டு இவ்வாறு கூறினார். வியாசரும் நாரதரும் கூறிய அநுமதிப்படியே திரௌபதியும் வருஷத்திக்கொருவர்க்காகப் பாண்டவரைவர்க்கும் இல்லற மனைவியானாள். அதுகாரணமாகப் பாண்டவர்கள் அவளிருக்கும் அந்தப்புரத்தைத் தம்முள் அவ்வருஷத்துக்குரியவரன்றி மற்றவர் எட்டியும் பார்ப்பதில்லையென்று விரதமேற்கொண்டு அதனைக் கிரமமாகக் காத்து வந்தார்கள். அதுதவறி ஒருவர் அபுத்தி பூர்வமாகக் காண நேர்ந்தால் ராஜதானியை விடுத்துச் சிலநாள் தீர்த்தயாத்திரை செய்தல்வேண்டுமென்னு முறுதிபூண்டார்கள். இவ்வாறு தம்மையும் தம்பிரஜைகளையுங் காத்தொழுகுபவர்களாகிய பாண்டவர்களது கீர்த்தியும் அறமுறையும் திசாமுகமெங்கும் பரந்தன.



ஒருநாள், சூரியன் மேற்றிசைக்கடல்வாய் மூழ்கியபின்னர் அந்நகரத் தகழியினின்றும் அதனைச் சூழ்கிடந்த சோலையினின்றும் எழாநின்ற நறுமணங்களை வாரிக்கொண்டுலவுந் தண்ணிய தென்றலைச் சுகிப்பான் வீதியிற் புகுந்தவோர் அரசிளங்காளை சிறிதுதூரஞ் செல்லாமுன்னே, "ஐயையோ! கள்வன்! கள்வன் கவர்ந்தோடுகின்றான்!" என்னுமோரவலவொலிகேட்டுத் தன்வசமின்றி மின்னெனவோடி எதிர்ப்பட்டவோரறையினுட் புகுந்து வில்லொன்றையெடுத்துக்கொண்டு மீண்டு கள்வனைத் தொடர்ந்து பற்றி, அவன் கவர்ந்து சென்ற பொருளை மீட்டு உரியவனாகிய அந்தணன்கைக் கொடுத்தேகினான். அந்தணன் அவ்வுதவி புரிந்தவனை யாரென்றறியானாயினும் பன்முறை வாழ்த்தி மனங்குளிர்ந்தான்.

## உஎ. அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை.

இச்செயலெல்லாம் ஓரிமைப்பொழுதினுள் நிகழ்ந்தன. இவ்வுதவி புரிந்தவன் அர்ச்சுனன். அவன் உலாப்போய் மீண்டபோது முன்பு தான் வில்லுக்காக விரைந்தோடிப் புகுந்த மாளிகை உதிஷ்டிரனும் திரௌபதியுமிருந்த கிருகமென்றறிந்தான். அவன் அந்தோ! யாது செய்தேன்! விரதம் பங்கப்பட்டதேயென்று மனம் பதைபதைத்தான். உடனே உதிஷ்டிரனை யடைந்து தான் அபுத்தி பூர்வகமாக வியற்றிய பாவத்துக்குப் பிராயச்சித்தமாகத் தீர்த்தயாத்திரை போக விடைதருதல்வேண்டுமெனப் பணிந்தான். உதிஷ்டிரன் அர்ச்சுனனை நோக்கி, உண்மையை நோக்குமிடத்து அவ்விரதம் பங்கப்படவில்லை; நீ போதல் ஆவசியகமன்று எனப் பல சொல்லி அவனைத் தடுத்தான். அவன் செவிக்கு அவையேறாவாயின. அவன் அப்பிராயச்சித்தம் தப்பாமற் செய்தலே வேண்டுமென்று வாதித்தான். அதுகண்டு உதிஷ்டிரன் விடைகொடுத்து, அவனைக் கல்வியாற் சிறந்த அந்தணர் பலரோடனுப்பினான். அவ்வாறே அர்ச்சுனன் தீர்த்தயாத்திரைமேற் சென்றான். சென்றபோது தான் முன்னர்ப் பன்முறையும் பலரும் பாராட்டி வியந்து கூறக்கேட்ட கட்டழகெல்லாந் திரண்டுருவெடுத்த சுபத்திரையைத் துவாரகையிற் கண்டு மணம்புரிதல் வேண்டுமெனக் கொண்ட பேரவா அவன் மனத்திலே அடிப்படையிற் கிடந்தது.

அர்ச்சுனன் பலதலங்களையும், புண்ணியநதி பலவற்றையும் தரிசித்தாடிப் பல ராச்சியங்களையுங் கடந்து ஈற்றில் சுபத்திரைமேல் வைத்த கழி பெருங் காதலாற் பிடர்பிடித்துந்தப்பட்டவனாய்த் துவாரகையை யடைந்தான். சுபத்திரை கிருஷ்ணன் தங்கை. தன் கருத்துக்குக் கிருஷ்ணன் சகாயம் புரிவனென்பது அர்ச்சுனன் நன்றாகத் தேர்ந்துகொண்டவனாயினும், கிருஷ்ணன் தமையனாகிய பலராமன் துரியோதனன்மேற் பற்றுடையவனாதலின், அவன் தன் கருத்துக்குடன்படானென்பதும் அவன் அறியாததன்று. அர்ச்சுனன் நகர்ப்புறத்தே வந்திருந்தமை யுணர்ந்த கிருஷ்ணன் அவனைப் போய்ப் பிறர்க்குப் புலனாகாவண்ணம் கண்டு கொண்டாடினான். அர்ச்சுனன் வந்த கருத்தை அவன்பால் வினவியுணர்ந்து கிருஷ்ணன் அவனுக்கோருபாயங் கற்பித்தான். அஃதாவது பலராமன் துறவிகளிடத்தே மிக்க பக்தியும் பேரபிமானமு முடையனென்றும், துறவிகளைத் தனதரமனைக்குள்ளே யழைத்து விருந்தருந்தும் சிரத்தையிற் றனக்கிணையில்லாதவனென்றும், அதனால் அர்ச்சுனன் துறவிவேடம் பூண்டால் அரமனைக்குள்ளே இடம்பெறுதல் எளிதென்றும் கிருஷ்ணன் கூறி அகன்றான். அர்ச்சுனன் அவ்வுபாயத்தை மனப்பூரிப்போடங்கீகரித்து அவ்வாறு துறவ்வேடந்தரித்து அடுத்தநாளுதயகாலத்திலே நகர்ப்புறத்திலே பரமசந்நியாசிபோல விளங்கினான். அவனுக்கு வெயிலும் மழையும் வேற்றுமையில்லாதனவாயின. அவன் பசி தாகம் மலஜலோபாதைதயை அறியாதான் போன்றான். அவனையும் அவன் தவப்பொலிவையும் கண்டோர்கள் நகரெங்குஞ் சென்றறிவித்தார்கள். அச்செய்தி பலராமன் செவியிலுமேறிற்று.

## உஅ. அர்ச்சுனன் பலராமன் அரமனைக்குச்சென்றது.

அதுகேட்டமாத்திரத்தே பலராமன் அவரைத் தனது அரமனைக்கழைத்துபசரிக்குமாறு அவர்பாற் சென்றான். அர்ச்சுனன் மெய்த்துறவுடையான்போன்று அரசனை மதியாமல் மூடிய கண்ணைத் திறவாது யோகத்திலிருப்பதாக நடித்தான். அரசன் பன்முறை அவன் பாதங்களில் வீழ்ந்து சிலகாலந் தனதரமனையிலிருந்தெழுந்தருளி யிருந்து விருந்தருந்தித் தன்னையும் ஏனைய யாதவரையும் ஆசீர்வதித்துப் போகவேண்டுமென்று அவனையிரந்தான். அர்ச்சுனன் பன்முறை மறுப்பான்போனடித் தீற்றிலுடன்பட்டுப் பலராம



னுடன்போய் அரமனைக்குள்ளே ஓரகன்ற மரநிழலைத் தனக்குறைவிடமாக்கிக் கொண்டங்கு பரமயோகிபோல் வீற்றிருந்தான். துறவிகளுக்குக் குற்றேவல்பூண்டொழுகுமாறும் அவ்வழியே அருள் பெறுமாறும் கன்னியரை விடுவது தருமநெறி குன்றாத பண்டைநாள் வழக்கு. அவ்வாறே சுபத்திரை அக்கபட சந்நியாசிக்குக் குற்றேவற் பெண்ணாக்கப்பட்டாள். அர்ச்சுனன் கண்களுக்கு அவள் விருந்தாயினவுடனே, அவன் தான் முன்னர்க் கேள்வியுற்றுக் காதல்கூர்ந்த அழகெல்லாம் அவள் அழகிலொரு கூறேயன்றி முற்றுமன்றென வெண்ணிப் பிரமித்துச் சிறிதுநேரம் பிரதிமைபோலிருந்தான். பின்னர்த் தெளிந்து பேரானந்தத்திலழுந்தினான். அவன் தன்னுள்ளத்திடை யெழுந்த காதல் பெருகிப் பெருங் கடலாக அதனைத் தன் வேடமென்னுங் கரையால் மடக்கினான். நாளுஞ் சில அவன் மனத்திற்கு யுகம்போற் கழிந்தன. அவன் தன் கபடமார்க்கம் சுபத்திரைக்குச் சிறிதும் புலனாகாமல் ஏற்றகாலம் வருங்காறும் காத்தடக்கியொழுகுவானாயினான். சுபத்திரையும் அவன்பாற் சிறிதும் ஐயப்பாடு காணாளாய்ச் சித்தசமாதானத்தோடும் அளவளாவத் தலைப்பட்டாள். ஒருநாள், சுபத்திரை, அர்ச்சுனன் வாயிற் பாண்டவர் இந்திரப்பிரஸ்தஞ் சார்ந்த செய்தியைக் கேட்டு, அர்ச்சுனன் க்ஷேமத்தை வினவினாள். அஃது அவன் அகத்தே தழலாய்க்கிடந்த காமாக்கினிக்கு நறிய நெய்யேயாக, அவன் தன் வேடத்தை மறந்து சுபத்திரை ஐயுறுமாறு தன்னை வெளியிட்டான். அதுகண்ட சுபத்திரை ஆரியப்பெண்களுக் கியல்பாயுள்ள அச்சம் மடம் நாணம் பயிர்ப்பென்னும் நாற்குணத்துள் முற்பட்டதாகிய நாணத்தால் மேற்கொள்ளப்பட்டவளாய் அவன்பக்கத்தை விட்டோடி மறைந்தாள். மீண்டு அவன்பக்கஞ் செல்ல அவள் மனங் குவிவதாயினும் நாணமும் அச்சமும் தடுப்பனவாயின. அதனால் அவள் அர்ச்சுனன் கண்ணுக்கரியளாயினாள். அதனையுணர்ந்த கிருஷ்ணன் அர்ச்சுனனைப் போசன விஷயத்தில் முட்டுறாவகை காக்குமாறு தனது தேவியராகிய ருக்மணி சத்தியபாமா இருவரையும் ஏவினான். அத்தேவியரேவலால் சுபத்திரை நாணமீதூரப் பட்டவளாகியும் மறுக்கமாட்டாதவளாய் அர்ச்சுனனுக்கு அன்னமாத்திரம் படைக்கப் போவள். இப்படியாகப் பின்னரும் சிலநாள் யுகம்பலவென்னக் கழிய, விழவு நாளொன்று வந்தடுத்தது.

## ௨௯. சுபத்திரை கல்யாணம்.

அவ்விழாவணி காணுமாறு அந்நகரமுழுதும் சமீபத்துள்ள ஒரு கிராமத்தையடைந்து, அதனால் நகரமுழுதும் நிர்மானுஷியம் போலாயிற்று. அச்சமயத்தை வாய்ப்பாகக்கொண்டு அர்ச்சுனன் மணம்புணர்ந்து அவளைக்கொண்டு சோரமார்க்கமாக இந்திரப்பிரஸ்தத்தை நோக்கி விரைந்தேகினான். இச்செயலுக்குக் கிருஷ்ணன் மாத்திரம் இரகசியத்தில் அநுகூலியாயிருந்து தானுமறியாதான் போன்று விழாவயரப்போனான். வாயில்காப்போர் கண்டனர். அர்ச்சுனனென்றுணர்ந்தனர். தடுத்துப் போர்செய்யத் துணிந்திலர். பின்னர்ப் பலராமனுக்கு யாது கூறுவோமென்றேங்கினர். விரைந்தோடி அஞ்சலிசெய்து மெய்நடுங்கியுரைத்தனர். அவ்வுரை பலராமன் செவித்துவாரங்களுக்கு அக்கினியாயின. கண்களிலே தீப்பொறியெழுந்தன. மந்திரத்தலைவரும் படைத்தலைவரும் சென்று கூடினர். சூழ்ச்சி யாதென்றனர். பலராமன் தொடர்ந்து பற்றுமினென்று கூறித் தானும் புறப்பட்டான். உடனே கிருஷ்ணனும் வெளிப்பட்டு அக்கபடியைப் பற்றிவருதுமென்று முன்னே நடந்தான். சிறிது சென்றபின் கிருஷ்ணன் பலராமனை நோக்கி, அண்ணா பிரமனால் விதிக்கப்பட்ட விவாகபந்தத்தைச் சிதைக்க யாவரால் ஆகும்? நடந்தேறிய கருமத்துக்குத் துக்கித்தலாற் பயனென்னை? ஆயினும் சுபத்திரைக்கேற்ற நாயகன் அர்ச்சுனனைத் தவிர வேறு யார்தானுளன்? ஆதலால் படை தணிவதே ஏற்றதென்றான். அது கேட்ட பலராமன் பகைதணிந்து மனமகிழ்ந்து பாண்டவர்க்கு நட்போலைபோக்கிச் சிலதினத்தில் விவாகமகோற்சவமுங் கண்டு கொண்டாடினான்.

இவ்விவாகத்தினாலே பாண்டவர்களுக்குண்டாகிய வலிமையோ மிகப் பெரியது. திரௌபதியினது விவாகத்தினாலே பாஞ்சாலன் என்னும் பேரேறும், இவ்விவாகத்தினாலே யாதவர்களும் படைத்துணைவர்களாயினார்கள். இம் முத்திறத்துப் போராண்மைக்கும் உலக மொன்றுகூடினும் ஈடாகாதன்றோ, இதுமுதலாகக் கிருஷ்ணனும் அர்ச்சுனனும் பிரியா நட்பினராய் விநோத காலக்கழிவுசெய்து வருவாராயினார்கள்.



## ௩௰. காண்டவ தகனம்.

ஒருநாள் நரபக்ஷணம் பண்ணுமியல்பினையுடைய அரக்கர் வசிக்கும் வனமொன்று சமீபத்தேயுள தென்றும், அது காண்டவமெனப்படுவதென்றும், அதனை அழித்து அரக்கரை விண்ணேற்றுதல்வேண்டுமென்று மோரந்தணன் வெளிப்பட்டர்ச்சுனனுக்குத் திவ்விய மகத்துவம்பொருந்திய காண்டீவமென்னும் வில்லையும், எடுக்குந்தோறுங் குறையாத சரம்புக்கூட்டையும் பகைவர் பாணங்களாற் சேதிக்கப்படாத தோரிரதத்தையு மீய்ந்தான். அவ்வந்தணன் பாற் கிருஷ்ணனும் ஒரு சக்கரமுங் கவசமும் பெற்றான். இங்ஙனங் கிடைத்த ஆயுதங்கள் அவர் தமக்கியல்பாகவுள்ள புஜபலபராக்கிரமங்களுக்கு மேலும் வலிபெருக்க, இருவரும் புறப்பட்டுச்சென்று, நிருவகித்தற்கரிய கொடுஞ்சமராடி வெற்றிமாலை புனைந்து மீண்டார்கள். அக்கொடிய யுத்தத்திலே தேவகம்மியனையும் நாணச்செய்த சிற்ப சாதுரியத்தில் வல்லானொருவனே அர்ச்சுனன் அருணோக்கத்தால் உயிர்பிழைத்தான். அவன் தனக்குயிர்ப்பிச்சையீந்த வள்ளல்முன்னே தோன்றி வணங்கிநின்று, தான்பெற்ற அப்பேருதவிக்குக் கைமாறு யாதாயினுமொன்றுசெய்ய அநுமதி தருதல்வேண்டுமெனப் பன்முறையிரந்தனன். அர்ச்சுனன் அவனைக் கிருஷ்ணன்பால் விடுப்ப, கிருஷ்ணன் அவனைநோக்கி இந்திரப்பிரஸ்தத்திலே ஒரு மாளிகை அமைப்பாயாக வென்று பணித்தருள, அவன் மகிழ்ந்து ஓரலங்கார மாளிகையை அமைத்தான். அவ்வகைத் திவ்யாலங்காரமாளிகை உலகத்திலே அதற்குமுன் ஒருகாலத்தும் தோன்றியதில்லை. எதிர்காலத்தும் தோன்றுவதில்லை. அம்மாளிகை முழுதும் மதிப்பிலடங்கா நவரத்தினகசிதமானது. அதிசய சிற்ப நுண்மைகளெல்லாம் அமையப்பெற்றது. மேல்விதானங்களெல்லாம் நக்ஷத்திரங்களையும் நாணச் செய்யும் வைரரத்தினங்கள் பதித்து உயர்ந்த பசும்பொன்னினால் இழைக்கப்பட்டன. தூண்களெல்லாம் பருத்துயர்ந்த வச்சிரக்கம்பங்கள்போல் விளங்கின. கண்டோர் அதிசயித்து மயங்கத்தக்க பளிங்கறைகளும் பளிங்கு மேடைகளும் இம் மண்டபத்திலே அமைந்து கிடந்தன. அம்மண்டபத்தின் உட்டளங்களெல்லாம் தெளிந்த பளிங்கினால் இயற்றப்பட்டமையின் முன்பயிலாத கண்களுக்கெல்லாம் தண்ணியதடாகம்போற்றோன்றும் இயல்பினது. மாளிகையைச்

சூழ்ந்துகிடந்த நந்தவனங்களெல்லாம் இடை இடையே தாமரைத் தடாகங்களும் அழகிய விருக்ஷங்களும் விரவப்பெற்றன. இவைமாத்திரமன்று வினோதமாயா யந்திரங்களும் பொறிகளும் அமைக்கப்பட்டுக்கிடந்தன. அவற்றுட் சில நாடகநடிப்பனவும், சில விளையாடுவனவும், சில பூத்தொடுப்பனவும், சில நீரிறைப்பனவும், சில பந்தெறிவனவுமாக இன்னோரன்ன விசித்திரங்கள் எண்ணில.

மனத்தாலுந்திருத்தகுநூல்வரம்பாலுமுரம்பயினோள்வலியினாலு
மினத்தாலுந்தெரிந்துதன தெண்ணியவெண்ணினுக்கேற்பவெண்ணில்கோடி
தினத்தாலுஞ்செயற்கரியசெழுமணிமண்டபமீரேழ்திங்கட்செய்தான்
றனத்தான்மிஞ்சியதருமன்றம்பியர்க்குத்தண்டுடன்வெண்சங்குமீய்ந்தான்.*

இங்ஙனஞ் சிறந்த இம்மாளிகையை அச்சிற்பன் அமைத்து அந்நகருக்கு அணியாக்கினான். முன்னே அந்தணனெனப்பட்டவன் அக்கினிதேவன்.

---

## ௧௧. ராஜசூயயாகம்.

இவ்வாறே பாண்டவர்கள் பல்வகைப்போகங்களையும் அநுபவித்துக்கொண்டு காலக்கழிவு செய்துவருநாளில் ஒருநாள் நாரதர் அங்கே வருவாராயினர்.

எற்றினானசனத்திற்றனித்தனியேயுபசாரம்யாவுந்தந்து
மாற்றினான்வழியிளைப்புமலரயன்போலிருந்தோனைமகிழ்ச்சிகூர்ந்து [ற்
போற்றினானீவரயான்யுரிதவம்யாதெனப்புகழ்ந்தான்பொதியிற்றென்ற
காற்றினாலரும்புநறுஞ்சூதம்போற்புளகரும்புங்காயத்தானே.

யான்புரிந்ததவமுலகில்யார்புரிந்தாரவனிபரிவிசையின்வீணைத்
தேன்புரிந்ததெள்ளமுதாலமுதுண்டோர்செவியிரதந்தெவிட்டுவிப்பாய்
மான்புரிந்ததிருக்கரத்துமதியிருந்தநதிவேணிமங்கைபாகன்
முன்புரிந்ததிருக்கூத்துக்கிசையமகிழ்ந்திசைபாடுந்தத்துவஞானி.

அவரைக்கண்ட தருமன் இவ்வாறுபசரிக்க ஏனைய பாண்டவர்களுமுபசரித்து வழிபட்டார்கள். அவர் அவர்களை ஆசீர்வதித்து அவர்கள் தந்தையாகிய பாண்டு ஏனைய இராசாக்களையெல்லாம் வென்று கீர்த்திபெற்றதும், சிரேஷ்டனாக விளங்கியதும் எடுத்துக்கூறித் தந்தையைப்போலப் புத்திரராகிய நீங்களும் சிரேஷ்டர்களாக



வும் உலகத்தவர்களுக்கும் துறவிகளுக்கும் புகலிடமாகவும் விளங்குதல்வேண்டுமென்றும் உபதேசித்தார். அவ்வுபதேசத்தைச் சிரமேற்கொண்ட உதிஷ்டிரன் தம்பியரோடு சூழச்சிசெய்து ராஜசூயயாகமொன்று செய்யத்துணிந்தான். ராஜசூயயாகமாவது அரசருக்கு லௌகிகப்பயனையும் வைதிகப்பயனையும் பயப்பது. அது செய்ய விரும்புவோர் தமக்குச் சமீபத்தும் தூரத்துமுள்ள தேசராஜாக்களையெல்லாம் திக்குவிஷயத்தில் வெல்லுதல்வேண்டும். ராஜசூயயாகத்துக்கு நானாதேசத்து ராஜாக்களையெல்லாம் அழைத்தல் வேண்டும். அங்ஙனம் வரும் ராஜாக்களெல்லாம் பாதகாணிக்கையாகப் பெரும்பொருள் கொண்டுவந்து வைத்துப் பணிதல் வேண்டும். அங்ஙனம் செய்யாதோரைப் போரிலேவென்றடிப்படுத்துதல் வேண்டும். இவ்வியல்பினதாகிய ராஜசூயத்தைச் செய்யத்தொடங்குமுன்னே உதிஷ்டிரன் கிருஷ்ணன்பால் ஒரு தூதனைப்போக்கினான். கிருஷ்ணன் வருதலும் உதிஷ்டிரன் தனது கருத்தை அவனுக்குரைக்க அவனும் நன்றென்று உபாயங்கூறினான். அவ்வாறே உதிஷ்டிரன் தம்பியர் நால்வரும் நாற்றிசைக்கண்ணும் பெருஞ்சேனைகளோடு சென்றனர். நாற்றிசையிலுமுள்ள வேந்தர்கள் பலரும் பாண்டவர்களுடைய கருத்தையுணர்ந்து இணங்கிப் பாதகாணிக்கையாக அளவிறந்த திரவியங்களும் கொடுத்தார்கள். அவ்வேந்தர்கள் அப்பாண்டவர்களை வழிவிடும்பொழுது தாம்பின்னர்யாகத்துக்குவரும்பொழுதும்மேலும் திரவியோபகாரம் புரிவதாகவும் கூறினார்கள். தம்மைப்பெரிதாக மதித்த சில அரசர்கள்மாத்திரம் பாண்டவர்களுடைய பராக்கிரமத்தை யறியாது முரணிப்போர்தொடுத்து நிர்வகிக்க இயலாது வணங்கி அடிபணிந்து பாதகாணிக்கையும் அளவின்றிக் கொடுத்தார்கள்.

இவ்வாறே யுதிஷ்டிரன் சகோதரர் நால்வரும் முன்னரெக்காலத்தும் பாரதவருஷத்து வேந்தர் ஒருவரும் சென்றறியாத தேசாந்தரங்களெங்குஞ்சென்று ஆங்காங்கும் வெற்றிபடைத்தும், சமாதானமென்று வணங்கப்பட்டும் தமது கருத்தின்படி திக்கு விஜயத்தை முடித்து அளவிறந்த அரும்பெருந் திரவியக்குவைகளைக் கையுறையாகப்பெற்று யானைகளிலேற்றிக்கொண்டு மீண்டார்கள். மீண்டமாத்திரத்தே ராஜசூயத்துக்கு வேண்டும் பிரயத்தனங்களெல்லாஞ் செய்யப்பட்டன. நாளும் வந்தடுத்தது. ரிஷிகளுள்ளே தலையாயி

ஞரும், அந்தணருள்ளே சிரேஷ்டரும், அரசருள்ளே சிறந்தோரும் வந்து கூடினர். அஸ்தினபுரத்து யுத்தவீரராகிய வீஷ்ம துரோணாதியரும் துரியோதனாதியரும் சமுகந்தந்தனர். கிருஷ்ணனுக்குத் தீராப்பகைவனும் பாண்டவர்க்குறவினனுமாகிய சிசுபாலனும் வந்திருந்தான். வேந்தரும் பெரியோருமாகிய இச்சபைநடுவே புருஷோத்தமனாகிய கிருஷ்ணனும் தாரகை நடுவே தண்மதியென்ன விளங்கினான். இவ்வியல்பினதாகிய சபையிலே அக்கிர தாம்பூலோபசாரம் யாருக்குச்செயற்பாலதென்னும் ஆசங்கையெழுந்திட்டது. வீஷ்மாசாரியர் அக்கிர தாம்பூலம் கிருஷ்ணனுக்கே யுரியதாகுகவென்றனர். அதுகேட்ட சகாதேவன் உதிஷ்டிரன் முகத்தைநோக்க உதிஷ்டிரன் கிருஷ்ணனை நோக்கச் சகாதேவன் கிருஷ்ணனுக்குச் சமர்ப்பித்தான். அச்செயல் சிசுபாலனுக்குக் கொடுஞ்சீற்றத்தையுண்டாக்க அவன் கொடிய நாகம்போற் சினந்தெழுந்தான். வீஷ்மன் சொன்னதும் கிருஷ்ணன் அங்கீகரித்ததும் தகாவென அவன்கூறி இருவரையும் நகைத்திகழ்ந்து கிருஷ்ணனைப் போர்க்கறை கூவினான். அதனால் யாகம் நடைபெறாதெனும்படி சபை நிலைகலங்கியது. அது கண்டு கிருஷ்ணன் பலவாறாக அவனுக்கு நன்மதி கூறியும் அவனமையானாக அவனைத் தனது சக்கராயுதத்தால் விண்குடி புகுவித்தான். அதன்பின்னர் யாகந்தொடங்கப்பட்டது. அது யாவர்கண்ணும் மனமுங்குளிர முறையுற நடாத்தி முடிக்கப்பட்டது. இங்ஙனம் ராஜசூயம் செய்யத்துணிவாருஞ் சிலரினுஞ் சிலரே. தங்கருத்தின்படி முடியப்பெருவாருஞ் சிலரினும் மிகச்சிலரே. ஆயினும் இத்துணைக் கிரமமாக முடித்தார் பாண்டவரையன்றி வேறு யாவர் என்றுலகம் பாராட்டவும் ரிஷிகள் ஆனந்தக்கூத்தாடவும் அந்தணர் களிகூர்ந்து ஆசிபாடவும் அரசரெல்லாம் அகமகிழ்ந்து கொண்டாடவும் திரவியங்களும் பட்டாடைகளும் தேவாமிர்தம்போலும் அன்னமலைகளும் அந்தணர்க்கும் ஆதுலர்க்கும் வாரிவாரி வழங்கப்பட்டன. இவ்வாறு அரும்பெருங்கருமமாகிய ராஜசூயயாகம் முற்றுப்பெற்றது. முற்றுப்பெற்ற அத்தினமே பாண்டவர்களும் உலகத்தரசர்க்கெல்லாம் அரசரென்பதும் காட்டப்பட்டது. அத்தினமே துரியோதனன் வஞ்சப்பகையும் பொறாமையும் அதியுச்சஸ்தானம் பெற்ற நாளாம். பாண்டவர்மேல் அவன் வைத்த பொறாமையும் பகையும் ஒருகாலத்தும் தணிந்தானென்பது பொருந்தாது. அவை அவன்



மனத்திடைப் பதிகொண்டு கிடந்தன. நாடோறும் வளர்ந்தன. அத்தினமோ அவை அவன் மனத்திடை யடங்காவாயின. பாண்டவர்க்குப்பெருங் குதூகலநாளாகிய அத்தினம் துரியோதனனுக்கு அக்கினி மூண்டெரியு நாளாயிற்று.

---

## ௧௨. திருதராஷ்டிரன் உபதேசம்.

பாண்டவர்கள் பதியிழந்து, அரக்குமாளிகை அக்கினிக்குப் பிழைத்துக் கொடியவனம் புகுந்தலைந்த தீக்காலமெல்லாம் கழித்துச் சுகவாழ்வெய்தி மகோந்நதபோகமும் பெற்று அரசர்களையெல்லாம் கீழ்ப்படுத்தி மேற்பட்டு அதிராஜராக விளங்குங்காலம் வந்தடுத்தது. அவர்கள் நுகர்ந்த துன்பங்களெல்லாம் இப்போது அவர்க்குப் பரமானந்த சுகங்களாகப் பரிணமித்தன. இங்ஙனம் புரண்ட சுபயோக சக்கரமானது நிலைகொள்ளாது பின்னருமொருமுறை பாண்டவர்களைத் துரியோதனன் வன்செயல்களுக் காட்படுத்தித் துன்ப நுகர்விக்கும் பொருட்டு மீண்டும் புரளுமாறு நோக்குவதாயிற்று. துன்ப நுகர்ந்த வழியன்றி இன்பநுகர்ச்சி இனிதாகாதன்றோ.

இராஜசூயவேள்வி முடிந்தபின்னர் அது காணுமாறு வந்திருந்த அரசரும் ரிஷிகளும் மற்றோரும் தத்தம் வாசஸ்தானங்களை நோக்கி மீண்டனர். கீர்த்தியும் பெருமையும் ராஜராஜன் என்னும் பெயரும் எங்கும் திசைகடோறும் வியாபித்து முழங்கின. உலக முழுதும் களிகூர்வதாயிற்று. இருவர்மாத்திரம் அதுகண்டு பொறாராய்த் துன்புறுவாராயினர். அவர்தாம் யாவர்? துரியோதனனும் அவன் தம்பி துச்சாசனனுமே. இருவரும் தம்மையொத்தவராகிய உதிஷ்டிரன் முதலிய பாண்டவர், தம்மினுமிக்கவராய், வலியவராய், ராஜாதிராஜராய் விளங்கத் தாம் தாழ்வெய்தியதை நினைந்து பொறாமையென்னும் கொடிய நெருப்பின்வாய்வீழ்ந்து துடிப்பாராயினர். அவர்கள் உதிஷ்டிரன்பால் விடைகொண்டு மீளும் அமையத்திலே பெருங் களிப்பெய்தினார்போல் நடித்தாராயினும், அவன் செல்வத்தையெல்லாங் கவர்ந்துகொண்டு அவனைத் தம்மடிப்படுத்தாது விடுவதில்லையென்னும் விரதமும் அப்பொழுதே பூண்டார்கள். இக்கொடிய அழுக்காறும் துராசையும் துரியோதனன் மனத்தை அல்லும் பகலும் அரம்போற் றேய்த்தன. திவ்விய வுணவெல்லாம் அவனுக்கு வேம்

பாயின. போகமெல்லாம் கொடிய நாகமாயின. நெட்டுயிர்ப்பும் தனியிடமுமே துணையாயின. உறவினர் நட்பினர் முகமெல்லாம் அவனுக்குவர்ப்பாயின. அதிகண்ட அவன் நட்பினர் பேரச்சமும் பிரமையுமுடையராய், அவனைக்கொண்டேகிப் பல்வகை விநோதங்களையும் காட்டி அவனை மகிழ்விக்க முயன்றனர். அவையெல்லாம் அவன் மனப்புண்ணுக்கு மருந்தாகாவாயின. அச்செய்தி அவன் தந்தை செவிப்பட்டது. படுதலுந் தந்தை அவனைத் தன் சபைக்கழைக்க, அவனோடு அவன் உண்மை நண்பனாகிய கர்ணனும் அன்பிற்சிறந்த மாதுலனாகிய சகுனியும் அச்சபை புகுந்தனர். துரியோதனன் தந்தையை வணங்கி, என தன்பிற்சிறந்த தந்தாய், இவ்வளப்பரிய பூமியின்கண்ணே, உனக்கும் எனக்கும் அரசுக்கிடமில்லாதொழிந்தது. நான் உனக்கு புத்திரனாய்ப்பிறந்து உன்னைப் பிறநாட்டில் உயிர்வாழவைத்தவுதவியே செய்தேனாயினேன். என்னை நீ புத்திரனாய்ப்பெற்றதினும் பெறாதிருத்தலே நன்றாம். நான் பிறந்திங்ஙனம் பயனின்றிக்கிடத்தலினும் இறத்தலே நன்றாம். ஆதலின் இறக்கத்துணிந்தேன். அதற்கு நீ உடன்படுதல் வேண்டும். அது செய்யாயாயின் நான் கேட்பதைச் செய்தல் வேண்டும் என்றான். அஃது யாது என்று தந்தை அழுதகண்ணோடும் அவனைவினவ, அவன் பாண்டவர்களுக்கு நான் செய்யுங்கேட்டினுக்கு நீயுந் துணைவனாதல் வேண்டும் என்றான். அதுகேட்ட திருதராஷ்டிரன் மனம் "எவ்வழிக்கிணங்குவேன்" என்று ஒருவழிப்படாது சுழன்றது, இந்நிலைப்பட்ட மனத்தினனாகிய திருதராஷ்டிரன் தன்மைந்தனை நோக்கி "மைந்த கேள்! நினக்கு ஓராற்றானு முரிமையில்லாத சந்திரவமிசத்தரசை உனக்காக்கிவைத்தேன், அதனைக்குறித்து நீ அஞ்சத்தக்கதும் யாதுமில்லை. பாண்டவர்களும் தமக்கு யாம் செய்த துரோகத்தைப் பொருட்படுத்தாது தமது ராச்சியகருமத்தையே புரிந்து வருகின்றார்கள். அவர்கள் நம்மீது பொறாமையாயினும், நம்மரசின்மீது துராசையாயினுமுடையவர்களல்லரென்பதும் நீ நன்றறிவையன்றோ. இங்ஙனமாகவும் நினக்குளதாகிய குறை யாதுமில்லை. அரசு உயர்தலும் தாழ்தலும் அவ்வரசுக்குரியான் பெருமை சிறுமைகளின் பயனாம் என்பது பாண்டவர்கள் தம் சிற்றரசோடோங்கினமையாலும், யாம் எம் பேரரசோடு தாழ்ந்தமையாலும் பிரத்தியக்ஷமாய்க் கண்டனையன்றோ. பாண்டவர்கள் யாம்செய்த வஞ்சனைக்காக வெங்களைப்

2586



பகைத்துப் பழிகொள்ளாது கேண்மைபூண்டொழுகுவது மறிவையன்றோ. அவர்கள் கேண்மையே எம்மரசுக்குப் பேருறுதியாமென்பதையும் நீ சிந்தித்தல் வேண்டும்" என்று நன்மதி புகட்டினான்.

---

## ௧௧. சகுனி சூழ்ச்சி.

எவ்வகைக் கொடுஞ்சித்தமுடையவரையும் நன்னெறிக்கட்புகுத்த வல்லனவாகிய இவ்வுரைகளெல்லாந் துரியோதனன் உள்ளத்திற்குப் பொள்ளற்குடத்து நீராயின. தந்தையுரைத்தனவெல்லாம் அவன் மனத்தை முன்னையிலும் மிக வலிதாக்கினவன்றி, ஒரு சிறிதாயினும் நெகிழ்வித்தனவல்ல. அவ்வுரையால் அவன் தனது அரசு பாண்டவர்கள் அரசுக்கு இரண்டாவதாயிற்றென்றும், தான் சந்திரவமிசத்துக்குரியதாகிய முடியைத்தரித்தும், அது தரியாத பாண்டவர்க்குக் கீழாகத் தான் மதிக்கப்பட வந்ததேயென்றும், தனது பெருமைக்குக் காரணம் பாண்டவர்கள் பெருமையேயன்றித் தனதரசின்வலிமையன்றென்றுமுணர்ந்து பாண்டவர்கண் மேன்மனத்திடையடங்கா வழுக்காறுடையனாயினான். சந்திரவமிசத்தரசர்க்கெல்லாம் உரியதாய்ப் பரம்பரையாகவுள்ள தனது சபாமண்டபமானது மயனமைத்த பாண்டவர்களது சித்திரமாளிகைக் கிணையாகாதென்பதுமுணர்ந்தான். அதுவும் அவன் பொறாமையென்னும் பெரு நெருப்புக்கு நெய்யாயிற்று.

இவ்வாறு புண்பட்ட மனத்தோடிருந்த துரியோதனனை ஒருவாற்றானும் ஆற்றுதல் கூடாதெனக்கண்ட திருதராஷ்டிரன் அவன் எண்ணத்துக்குடன்படவேண்டியவனாயினான். உடன்பட்ட பின்னர் அவனும் அவன் சபையிலிருந்தோரும் யாது செய்யத்தக்கதென்று சூழ்ச்சிசெய்யத்தலைப்பட்டார்கள். சாமபேத தான தண்டமென்னும் நான்கனுள் முதன் மூன்றையும் ஆராய்ந்து அவற்றால் பாண்டவர்களை மேற்கொள்வது கூடாதெனத் துணிந்து, அவற்றையொழித்து ஒழிந்த நான்காமுபாயமாகிய யுத்தத்தையெடுத்துச் சிந்தித்தார்கள். அதற்கு நானே முற்படுவேன் என்றுகூறிக் கர்ணன் எழுந்து, தனதாற்றலையெடுத்து மொழிந்து தன்னைப் புகழ்ந்தான்.

வெஞ்சிலைகுனித்தோரம்பியான்விடின்வெகுண்டவேந்த
ரேஞ்சிவின்புகுவரல்லால்யாவரேயெதிர்க்கவல்லார்
வஞ்சனைகொண்டுவெல்லமதிப்பதுவாளால்வெல்ல
வஞ்சினமாயினன்றேவென்றனனங்கர்கோமான்.

அவனுரைத்தவை மற்றோர்க்கெல்லாம் உடன் பாடாகாவாயின அதனால் அவ்வுபாயமுந் தள்ளப்பட்டது. வேறு தக்கவுபாயங் காணாராய் அங்குள்ளார் யாவரும் சிறிதுநேரம் சித்திரப்பாவை யாயினர். அப்பொழுது சகுனி, பொள்ளென வெழுந்து,

துப்புறழமுதச்செவ்வாய்த்திரௌபதிதுணை தோள்வெட்டிக்
கைப்படுசிலையினோடுங்காவலர்கலங்கிவீழ
மெய்ப்படுமுனையாய்வந்துவிசயன்வில்லிறுத்தபோது
மிப்பொழுதிருந்தவீரர்யாவருமிருந்திலேமோ.

"யான் பாண்டவர்களை மிகவெளிதில் வெல்லுவேன். யான் சூதாட்டத்திலே படைத்திருக்கும் வன்மையுங் கீர்த்தியும் யாவீரு மறிவீர்களன்றோ. அது மாத்திரமன்று சூதாட்டத்திற் கழைக்கு மிடத்து, அஃது உதிஷ்டிரனுக்கு விருப்பமில்லாதகருமமேயாயினும், அரசர்க்கு மறுத்தல் இயல்பன்றெனக்கொண்டு அவன் உடன்படுவான் என்பதும் அறிவீர்கள். ஆதலால் சூதிலே பாண்டவர்களை வெல்லுவேன்" என்று சபதமிட்டான். அவ்வுரை துரியோதனன் செவிப்பட்ட மாத்திரத்தே எழுந்தோடி மாதுலனைத் தழுவி, "எனது அபீஷ்ட முடிந்தது முடிந்தது" என்றுகூறி ஆநந்தக்கூத்தாடினான். திருதராஷ்டிரனொழிந்த ஏனையோரும் மெச்சித் தலைதுளக்கினர். திருதராஷ்டிரன் இக்கருமம் கொடிது கொடிதென்று கூறி உள்ளத்தில் நடுக்கமுற்றான். ஆயினும் மைந்தன்மேல் வைத்த பேரன்பினால் அவன் சூழும் வழிகட்கெல்லாம் தானும் இயையவேண்டியவனாயினான்.

இவைதலும், பாண்டவர்களது புதிய மாளிகையைப்போலத் துரியோதனன் தானுமொன்று அமைப்பித்தல்வேண்டுமென்றும், அவர்கள் தன்னை வரித்ததுபோலத்தானுமவர்களை வரித்துப் புதுமனை புகும் விழாக்கொண்டாட வேண்டுமென்றும், அவ்வமையத்திலே தன்கருத்தை முடித்துக்கொள்ளல்வேண்டுமென்றுந் துணிந்தான். அவ்வாறே சிற்பத்திற்கைபோய தபதிகளைக்கொண்டு ஓரலங்கார மாளிகையைச் சிலதினங்களில் அமைப்பித்தான். அம்மாளிகையிற் பிரவேச மகோற்சவத்திற்கு நாளும் முகூர்த்தமும் வைக்கப்பட்டன.

---



## ௧௪. விதுரன் தூது.

பாண்டவர்களைப் போயழைத்துவரும் தௌத்தியம் விதுரன் பங்காயிற்று. விதுரன் இவ்வன்செயலுக்குத் தூதனாக மனம்பொருந்தாது திருதராஷ்டிரனை நோக்கி, "வேந்தே கேள், இவ்வஞ்சச் சூழ்ச்சிக்குடன்படுதல் நினக்கழகன்று. எனக்குஞ் சம்மதமன்று, இதுவே சந்திரவமிசம் பரிநாசமுறுவதற்கு நாட்கொண்டதாகுமென்பதை நன்கு துணியக்கடவை. வேந்தன் சொல்லையும் மூத்தோன் ஏவலையும் மறுத்தலாகாதென்பது தரும நூலாதலின் இத்தூதைமேற்கொள்ளுகின்றேன்" என்றுகூறி அங்குநின்று நீங்கி வீஷ்மரையடைந்து அவர்பால் விடைகொண்டு இந்திரப்பிரஸ்தஞ் சென்றான். அங்கே விதுரன் உதிஷ்டிரனைக்கண்டு, தான்மேற்கொண்டுசென்ற தூதையெடுத்துள்ளவாறுரைத்துப் பின்னர் அதனால் விளையத்தக்க கேட்டையுந் தன்மனச்சான்று சூன்றுவண்ணந் தூக்கியோதினான். இருபக்ஷவசனங்களையுங்கேட்ட உதிஷ்டிரன் எப்பக்ஷந் துணிவதென்று புலப்படாது சிந்தைதடுமாறி, ஈற்றில் ஊழ்கூட்டும் வண்ணமன்றி மற்று நிகழாதென்றும், தீங்கு புரியும் நோக்கமுள்ளதாயின், வீஷ்மர் முதலிய பெரியோரால் அது தடுக்கப்படாமற் போகாதென்றுந் தேறினான்.

தேறிய வழித்துணிந்து உதிஷ்டிரனும் சகோதரரும் திரௌபதியும் தம்மை அழைக்க வந்த விதுரனோடு புறப்பட்டு அஸ்தினபுரத்தை யடைந்தார்கள். அச்செய்தியை யுணர்ந்த துரியோதனாதியர் எதிர் சென்றுபசரித்துப் பேரன்பு பூண்டார்போல் நடித்துத் தழுவி யழைத்துப் போயினர். பாண்டவர்களும் அவர்களை மானிடச் சட்டை சாத்திய புலிக்கூட்டமாகக் கொள்ளாது எதிர் தழுவி அவரோடு சென்று அவர் மந்திரம் புகுந்தார்கள். பாண்டவர்களைத் தழுவிய துரியோதனாதியர் கரங்கள் கரங்களல்ல. அவை கொடிய நாகங்கள் அவர்களை உபசரித்த உபசார மொழிகள் உபசார மொழிகளல்ல. அவை தேனிற் பொதிந்த கொடிய விஷபேதங்கள்.

இவ்வாறு வந்து கூடிய பாண்டவர்கள் துரியோதனாதியரோடு உரிய காலத்திலே புதுமாளிகையிற் பிரவேசித்து விருந்தருந்தி ஆடல் பாடல்களாற் களித்துச் சிலபகல் கழிப்பாராயினார்கள். அங்கு அவர்

கள்பெற்ற திவ்விய மகோபசாரங்களாலும் அன்பின் பெருக்கத்தாலும் மற்றைய விநோத போகங்களாலும் துரியோதனனிடத்துச் சிறிதும் ஐயப்பாடுகொள்ளாராய் அவன் வசப்பட்டார்கள். அதுகாறும் துரியோதனன் நெஞ்சிடைக் கரந்துகிடந்த வஞ்சமென்னும் கொடிய வாயுவானது பிரசண்டமாருதமாக வீசுநாள் வந்தடுத்தது. அன்றும் விருந்தருந்தி யாவரும் விநோத காலக்ஷேபநாடி யெழுந்தனர். அப்பொழுது சகுனி உதிஷ்டிரனை நோக்கி இன்றுகாறும் பல்வகை விநோதங்களாலும் பொழுதுபோக்கினோம். இனிச்சூதாடி இற்றைப் பகல் கழிப்பாம் வருக வென்றான். உதிஷ்டிரன் சூதாடல் எனக்கு விருப்பமாகிய விளையாட்டன்று.

அடியுமாண்மையும்வலிமையுஞ்சேனையுமழகும்வென்றியுந்தத்தங்
குடியுமானமுஞ்செல்வமும்பெருமையுங்குலமுமின்பமுந்தேசும்
படியுமாமறையொழுக்கமும்புகலுமுன்பயின்றகல்வியுஞ்சேர
மடியுமான்மதியுணர்ந்தவர்சூதின்மேல்வைப்பரோமனம்வையார்

மேதகத்தெரிஞானநூற்புலவரும்வேத்துநூலறிந்தோரும்
பாதகத்திலொன்றென்னவேமுன்னமேபலபடப்பழித்திட்டார்
தீதகப்படுபுன்றொழிலினைஞரிற்சிந்தனைசிறிதின்றிக்
தோதகத்துடனென்னையோசகுனிதன்சூதினுக்கெதிரென்றான்.

ஆதலால் அதனை விடுத்து வேறுவகையிற் பொழுதுகழிப்பாமென்றான். அதற்குச் சகுனி சூதாட்டம் உனக்கு விருப்பமில்லையென்பதை நான் நம்பமாட்டேன். என்னை நீ வெல்வது கூடாதென வஞ்சுகின்றனை போலுமென்றான். உதிஷ்டிரன் அஃதுன் கருத்தாயின் சூதாடற் கியைந்தேன். ஒட்டம்வைப்பது யாரென்றான். துரியோதனன் வெளிப்பட்டு, யான் வைப்பேன், எனக்கீடாக என் மாதுலன் சூதாடுவன் என்றான். அரசர்க்குச்சமானரோடு சூதாடுவதன்றோ மரபு. ஒருவர்க்கீடாக மற்றொருவர் ஆடுதும் மரபன்று. அம்மரபுகளை நோக்குகின்றிலையாயின் ஆடுவதும் வருக வென்றான்.

## 35. சூதாடல்.

அவ்வளவில் இருவரும் ஆடத்தொடங்கினர். உதிஷ்டிரன் ஒரு முத்தாரத்தை ஒட்டமாக வைத்தான். அதற்கிணையாகத் துரியோதனனும் வைத்தான். உதிஷ்டிரனும் சகுனியும் மாறி மாறி ஆடினர்.



ஆடியபோது சகுனி வென்று ஆரத்தைக் கவர்ந்தான். அதுகண்டு உதிஷ்டிரன் மானத்தான் மேலுமாடுதற்கு விருப்பங்கொண்டு தனது அரியரதத்தையுங் குதிரையையு மொட்டமாக வைத்தான். அதனையுஞ் சகுனி வென்றான். உதிஷ்டிரன் பின்னரும் மானத்தா லுந்தப் பட்டவனாய்த் தனது யானைகளைக் குறித்தாடினான். அவற்றையுங் காயமுற்றும் வஞ்சமே கலந்தவனாகிய சகுனி கள்ளச் சூதாடி வென்றான். அதுகண்டு உதிஷ்டிரன் தனது நாடு, நகர், முதலிய செல்வங்களை யெல்லா மொவ்வொன்றாய் வைத்து முறையே தோற்றான். அவன் பின்னர்த் தம்பியரையும் அடிமையாக வைத்துத் தோற்று, ஈற்றிலே தன்னையும் வைத்துத் தோற்றான். அப்பால் ஆடுதற்கு ஒட்டப்பொருள் யாதுமில்லாமல் உதிஷ்டிரன் மயங்கியிருந்தான். அந்நிலையை நோக்கிச் சகுனி உன் மனைவியை ஒட்டப்பொருளாக வைத்தாடுகவென்றான். அங்கிருந்த அரசரெல்லாம் அது கேட்டு இருகையாலும் தம் செவியைப் புதைத்தார்கள். அந்தோ! இஃதென்ன குறித்ததோ! வாழ்வு கருதியோ தாழ்வு விரும்பியோ துரியோதனன் இச்சூதாட்டத்தை விரும்பினானென்று பலரும் மனம் புண்பட்டனர். துரியோதனனும் அவன் வமிசமும் நாசமெய்துதற்குக் காலம் வந்தடுத்ததென்று வருந்தினர். தருமதேவதை பாண்டவர்களைக் கைவிட்டு விட்டதோ வென்று பரிதபித்தனர். துரியோதனன் வஞ்சச் சூதினாலே பாண்டவர்கள் அரசையுஞ் செல்வத்தையுங் கொள்ளைகொண்டதும் போதாது, அவர் தம்மையும் அடிமைகொண்டான். அவ்வளவிலும் அமையாது பின்னருங் கற்பினுக்கருங்கலமாகிய திரௌபதியையும் அடிமைகொள்ள வெண்ணுகின்றான். தேவர்களெல்லாருஞ் இத் தீயவனுக்கஞ்சி மறைந்தனரோ; தருமதேவதையுங் கைவிட்டதோ என்று, அருமைவேந்தனாகிய உதிஷ்டிரனும் மூவுலகங்களையும் வெல்ல வல்லவராகிய தம்பியருமிருக்கின்ற நிலையை நோக்கிப் பலவாறு கூறி யிரங்கினர். அப்பொழுது விதுரன் எழுந்து திருதராஷ்டிரனை நோக்கி, வேந்த, உனக்குக் கண் மாத்திரமன்று உன் அகமுங் குருடாயிற்றே செவியும் வன்செவியாயிற்றே. உன் மைந்தன்செய்யும் கொடிய வன்செயல்களைச் செய்யாமற் றடுக்க உன்னாலாகாதா? தடுத்தாற் கேளாரா? இத்தனையுஞ் செய்த கொடுமை போதாதா? இப்போது உன் மைந்தர் கேட்பது தருமமா? முறையா? உலகத்தில் முன்னர் எக்காலத்தாயினு நிகழ்ந்ததுண்டா? நீயுமுடன்பட்டனையோ?

"இருகுநெஞ்சின் வஞ்சராகி யிளைஞர் தீமை செய்தகா
லுருகுகின்ற தந்தைநீ யுடன்படுந் திருப்பதோ
மிருகமன்று பறவையன் றிரக்கமின்றி மேவுநின்
னருகுவர் தணர்ந்ததெங்க ளறிவிலாமை யாகுமே"

என்று இவ்வாறிடித் துரைத்தான். இவ்வுரையெல்லாம் செவிடன் காதிற்பட்ட முழக்கொலியாயின. சகுனி பின்னரும் உதிஷ்டிரனை நோக்கி யாது கூறுகின்றனை? கதியற்றனையோ வென்றான். அது கேட்டு உதிஷ்டிரன் பேய்வாய்ப்பட்டான் போன்று அதற்கு மிணங்கி ஆடினான். அப்போதும் சகுனியே வென்றான். துரியோதனன் முகமும் அகமும் மலர்ந்தான். எழுந்து ஆனந்தக் கூத்தாடினான். சகுனியைக் கட்டி முத்தமிட்டான். பாண்டவர்களை நோக்கினான். அவமதித்து இழிமொழி பலபுகன்றான். தன் வீரத்தையெடுத்துப் புகழ்ந்தான். அவர்களை நோக்கி ராஜவுடைகளைக்களைந்துவிட்டுக் குற்றேவல்செய்யப் புகாதிருப்ப தென்னையென்றான். அதன் பின்னர் ஒரேவலாளனை நோக்கித் திரௌபதியு மடிமையாயினளென வவளுக்குணர்த்தி அவளை இச்சபைக்குக் கொணர்கவென்றான். அது கேட்ட சபை நெஞ்சம் நடு நடுங்கியது. ஏவலன் அந்தப்புரஞ் சென்று கோப்பெருந்தேவியை வணங்கி உணர்த்தினான். அது கேட்ட தேவி அறமுறையெல்லாம் நன்குணர்ந்தவளாதலின், எனது நாயகர் தம்மைத் தோற்றபின் என்னைத் தோற்றனரா; அன்றி என்னைத் தோற்றுத் தம்மைத் தோற்றனரா வெனப் போயறிந்து வருதியென் றவனை அனுப்பிவிட்டாள்.

---

## ௩௬. திரௌபதியைத் துகிலுரிதல்.

(உதிஷ்டிரன் தன்னைத் தோற்றபின் தன் மனையாளைத் தோற்றற் கதிகாரியல்லன்.) ஏவலன் மீண்டு திரௌபதி வினவியதைக் கூற, துரியோதனன் பெருஞ்சினங்கொண்டு துச்சாசனனைக் கூவி நீ போய் அவளைப் பற்றிவருக வென்றான். அதுகேட்ட சபை, யாதும் பேசாதிருப்ப, துரியோதனன் தம்பியருளொருவனும் நீதிமுறையறிந்தவனுமாகிய விகர்ணன் என்பவன் எழுந்து,

முறையோவென்றென் றவனிதலமுழுதுமுடையான்முடித்தேவி
நிறையோடழிந்துவினவுநீர்மினைவற்றிருந் தீர்மினைவற்றோ
விறையோன்முனியுமென நினைந்தோவிருந்தாலுறுதியெடுத்தியம்பல்
குறையோகண்கண்டதுநாளுங்குலத்துப்பிறந்தோர்கூறாரோ.



இப்பூமி முழுதும் ஆள்பவனாகிய யுதிஷ்டிரன் தேவி கலங்கி யனுப்பிய வினாவுக்கு இச்சபையிலிருக்கின்ற பெரியோரெல்லீரும் பேசாதிருப்பதென்னை. அரசன் கோபிப்பானென நினைந்தோ பேசாதிருக்கின்றீர்கள். குலத்துப் பிறந்த பெரியோர் தாம்கண்ட முறைகேட்டை எடுத்துக் கண்டியாது விடாரன்றோ. தான் பராதீனப்பட்ட பின்னர்த் தன்மனைவியை ஒட்டம் வைத்துத் தோற்பதற்கு உரிமையின்மையின் திரௌபதி வினவியதொக்கும். ஆதலின் திரௌபதி வெல்லப்பட்டவளாகாள் என்றான். சபையெல்லாம் அவனுரையை மெச்சி யுண்மையென்று கொண்டாடிற்று.

நியாயமும் நடுநிலையும் அச்சபைக்குச் செல்லாச் சரக்காயினவாதலின் விகர்ணன் வாக்குப் பயன்படாதாயிற்று. துரியோதனன் ஏவலின்வழித் துச்சாசனன் திரௌபதியைச் சிறிதுங் கூசாது, பழி நாணாது பெண்ணென்று மிரங்காது கூந்தலிற் பற்றியிழுத்து, அவள் புலம்பி முறையோ முறையோ வென்றழுவதும் நோக்காது, கொண்டு சென்று சபைநடுவே விடுத்தான். துச்சாசனன் தன்னைப் பற்றிப் போக வந்தானென்பதுணர்ந்து திரௌபதி காந்தாரிபாலோடி அடைக்கலம் புகுந்தபோது காந்தாரி அவளைக் காத்தபயங் கொடுத்திடாது கன்மனப் பாதகிபோல், உன்மைத்துனர் அழைத்தாற் போதற் கஞ்சுவதென்னை யென்றனளென்றால், மற்றியாவரோ துச்சாசனனைத் தடுப்பவர்! சபையிலிடப்பட்ட திரௌபதி துரியோதனாதியர் கருத்தைக் கடைக்கண்ணாற் கணித்துணர்ந்தனள். உடனே சபையிலிருந்த பெரியோரை நோக்கி, இச்சபையிலே தருமதேவதையில்லா தகன்றதோ! நடுநிலை யெங்கொளித்ததோ! இத்துணைக் கொடுஞ் செயலுக்கு யான் செய்த குற்றந்தான் யாதோ! என்றலறியழுது முறையிட்டாள். அச்சபையில் வீசுகின்ற வாயுவும் அசையாதொழிந்ததென்றால் நாவசைத்தவர்தாம் அங்கியாவர்! யாவரும் ஒருவரையொருவர் நோக்கியிருந்தனரன்றி இரங்கியொருமாற்றமுரைத்தாரொருவருமில்லை. பாண்டவருள்ளே உதிஷ்டிரனொழிந்த நால்வர் மனமும் மானமும் வீரமும் வீசையும் ஆயுதங்களுமே பதைபதைத்தன. அந்நிலையை யுதிஷ்டிரன் கண்டான். சத்தியவிரோதமாகு மென்றும், தாம் பராதீனப்பட்டதைச் சிந்திக்காது தருமமுறையைக் கடந்தால் தமது பெருமை குன்றிவிடுமென்றும் கூறி அவரை அடக்கினான். திரௌபதி தன் முறையீட்டைக் கேட்பாரொரு

வரையுங் காணுளாய்த் துரியோதனனைப் பார்த்து பாவி! யாது செய்யப் புகுந்தாய், நீயு நின்குலமும் வாழ விரும்பினால் இக் கொடுஞ்செயலுக்குடன்படா யென்றாள். அதுகேட்ட துரியோதனன் பெருங் கொடுஞ் சினத்தனாய்த் துச்சாசனனை நோக்கி அடிமைப் பெண்ணுக்கு இராசவுடை தகாது. அவள் வஸ்திரத்தைக் களைந் திடுகவென்றான். சொல் வாயினின்றும் வீழாமுன்னே துச்சாசனன் புலியெனப் பாய்ந்து அவள் துகிலை யுரியத் தொடங்கினான். திரௌ பதி அச்சொற்கேட்டாள்.

ஆறுகியிருதடங்கணஞ்சனவெம்புனல்சோரவளகஞ்சோர
வேறானதுகிறகைத்தகைசோர மெய்சோரவேறோர்சொல்லுங்
கூறாமற்கோவிந்தாகோவிந்தாவென்றரற்றிக்குளிர்ந்துநாவி
லூறாதவமிழ்தூறவுடல் புளகித்துள்ளமெலாமுருகினாளே.

உள்ள நடுங்கினாள். ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா! கோவிந்தா! துணை வேறிவ்வுலகில் இல்லாத ஏழையைக் காத்தருள்! என்றாள். உள்ளத் தையும் உயிரையும் அத்திருவடிமேல் வைத்தாள். தன் கையிரண்டும் தனக்குத் துணையாகாவெனத் தலைமேற் குவித்தாள். தன்னை மறந் தாள். உயிர் நீங்கினாள் போலாயினாள்.

அச்சபையில் விதுரன் மாத்திரம், அந்தோ! நாசப்பட்டொழி தற்கே துணிந்தீர் துணிந்தீர் என்று கூறினான். மற்றோரெல்லாம் ஊமராயினர். பதிவிரதாசிரோமணியாகிய திரௌபதியினது முறை யீடு அநாதரக்ஷகன் திருச்செவிப்பட்டது.

அருமறைசொல்லியநாமமாயிரமுமுரைத்தழைக்கவமரர்போற்றுந்
திருமலர்செஞ்சீரடியோன்றிருச்செவியிலிவண் மொழிசென்றிசைந்தகாலை
மருமலர்மென்குழன்மானின்மனநடுங்காவகை மனத்தேவந்துதோன்றிக்
கரியமுகிலனையானும்பிறரெவர்க்குந் தெரியாமற் கருணைசெய்தான்.

அக்கருணாநிதி அவளைக் காத்தற்கோருபாயம் வகுத்தனர். துச்சாசனன் உரிந்தான். ஒரு வஸ்திரம் கவர்ந்தெறிந்தான். அது புறவாடையாக உள்ளாடையொன்று கண்டான். அதனையுங் கவர்ந் தான். அப்பாலுமோராடை கண்டான். இப்படியே வாங்குந்தோறும் அவளுக்காடை பெருகின துச்சாசனன் கையுஞ் சலித்தான். வாங்கி ஆடைகளை யிடுதற்கும் சபையோர் இருத்தற்கு மிடமில்லாது மண் டபம் ஆடையாக நிறைந்தது. துச்சாசனனும் சோர்ந்து அடியற்ற மரம்போல வீழ்ந்தான். இதற்கிடையில் துச்சாசனன் திரௌபதி



துகிலைத் தீண்டப்புகுதலும் வீமன் சிங்கேறுபோற் கறுவிச் சினந்து தனது கட்டுப்பாட்டை மறந்து கதையைத் தீண்டினான். உதிஷ்டிரன் கண்டு விழிக்குறிப்பால் அடக்கிவிட்டான். துச்சாசனன் வீழ்ந்ததும் திரௌபதி துகில் பெருகியதும் யாவருங் கண்டனர்; அதிசயித்தனர். பதிவிரதை இவளன்றோவென்று கொண்டாடினர்; யாது மேல் நிக ழுமோ வென்று நடுங்கினர்; கலங்கினர். அப்போது வீமன் எழுந்து இடிமுழக்கம்போற் சபையைக் கூவி.

வண்டாருங்குழல்பிடித்துத்துகிலுரிந்தோனுடற்குருதிவாரியள்ளி
யுண்டாகங்குளிர்வதன்முன்னிக்கரத்தாற்புனலுண்ணேனொருகாலென்கைத்
தண்டால்வெம்புனலெற்றிமீதெழுந்து வீழுந்ததிவலைதண்ணீராகக்
கொண்டாவிபுரந்திடுவனிதுவிரதமெனக்கெனவுங்கூறினனே.

“அரசர்களே, பெரியோர்களே, கேண்மின்! இப்போது யான் சொல்லும் வஞ்சினம் முன்னர்க்காலத்தி லெவராலும் சொல்லப் பட்டதன்று. பின்னர்க்காலத்துமெவராலும் உரைக்கப்படுவதுமன்று இப்போது கூறுவதை முடியேனாயின் என் முன்னோர் சென்றடைந்த வுலகஞ் செல்வேனாக. யுத்தத்தில் இத்தீயரிற்றீயனாகிய துச்சாசனனை வன்கொலை புரிந்து அவன் உரம் பிளந்து உதிரங் குடிப்பது சத்தியம்’ என்று வாயிலுங் கண்ணிலும் தீப்பொறி சித்தக் கூறி, அப்பால் துரியோதனனை நோக்கி, “உன்னை நான் என் கதையாற் கொன்று உன் தலையை என் இடக்காலாற் பொடிபட அரைத்தொழிப்பதுஞ் சத்தியம்” என்றான்.

இப்பயங்கரமான வஞ்சின வாசகங்களைக் கேட்ட சபையோர் அவ் வாசகப்பயனை உள்ளவாறே போர்க்களத்திற் கண்டவர்போல் மனத்திடைக்கொண்டு இடியேறு கேட்ட நாகத்தினை யொத்தனர். மரம்போல் வீழ்ந்து கிடந்த துச்சாசனன் மூர்ச்சை தெளிந்தெழுந்து நான் கிருஷ்ணனை விசுவரூபத்தோடும் மின்னற்கற்றை போலும் சோதிமயமான கண்களோடும் கண்டதுங் கூறினான். இச்சமாசார மெல்லாம் திருதராஷ்டிரனுக்கும் அவன் மனைவி காந்தாரிக்கும் செவிப்பட்டன. இருவரும் எழுந்து விரைந்தோடித் திரௌபதியை யணைந்து அவளைத் தழுவித் தன் மைந்தர் செய்த வன்செயல்களைத் தம்பொருட்டுப் பொறுத்தருள் என்றிரந்தார்கள். அதுகேட்ட திரௌபதி தன் கோபந்தணிந்து தனக்கியல்பாகிய அன்பு வடி வானாள். அஃதுணர்ந்த திருதராஷ்டிடன் அவளைச் சாந்தி செய்து

உனக்கு வேண்டுவனதைக் கேள் தருவன் என்றான். அவள் திருதராஷ்டிரனை நோக்கி, உதிஷ்டிரன் அடிமைத்திறம் நீங்குமாறு வரந்தருகவென்றாள். திருதராஷ்டிரன் அஃதீந்து இன்னுமொன்று கேளென்றாள். அவள் மற்றை நால்வரும் அடிமை நீங்குமாறு வரந்தருகவென்றான். திருதராஷ்டிரன் அதுவுங் கொடுத்து இன்னுமொன்று கேளென, அவள் இனி எனக்கு வேண்டுவது யாதுமில்லை, எனது நாயகர்கள் இனித் தமக்குறுதி தேடிக்கொள்வார்கள் என்றாள்.

அதுகண்ட கர்ணன் சபையை நோக்கி, “துன்பக்கடலில் வீழ்ந்து கரையேற வகையின்றித் தடுமாறி வருந்திய பாண்டவர்க்குத் திரௌபதி நாவாகி அவரைக் கரைசேர்த்தாள்” என்று கூறினான். அவன் உரைத்தது சரதமேயாம்.

அப்பால் உதிஷ்டிரன் வீமசேனனை அழைத்துக் கொண்டு திருதராஷ்டின்பாற் சென்று அஞ்சலியஸ்தனாய் நின்று விடை தந்தருளுக வென்றான். திருதராஷ்டிரன் அவனை வாழ்த்தி; உங்கள் ராஜதானிக்கேகி நல்லிசையோடு வாழக்கடவீர்களாக. துரியோதனன் செய்த குறும்புகளை மறந்து என்னையும் காந்தாரியையும் மறவாதவர்களாயொழுகக்கடவீர்கள் என்று பலவாறு முகமன் கூறி விடையீந்தான். அதுகண்ட சகுனி துரியோதனனை நோக்கி, புலியை அகப்படுத்திப் பின்னர்த் தொண்டு நீங்கி வாலுருவி அதனை விடுவார் போலாயினீர் என்ன, துரியோதனன் ஓடிப்போய்த் திருதராஷ்டிரனை நோக்கித், “கோபமீதூரப்பெற்றவராய்ச் சமயம் பார்த்திருக்கும் பாண்டவர்களை இவ்வாறு விட்டால் பெருங்கேடு வந்து விளைந்திடுமாதலின், தோற்றவர் பன்னிரண்டு வருஷ வனவாசமும், ஒருவருமறியாவண்ண மொருவருஷ வாசமும் செய்தல் வேண்டுமெனப் பொருந்திச் சூதாடுமாறு பணித்தருளவேண்டு” மென்றழுதிரந்தான். துரோண விதுர வீஷ்மாசாரியர்கள் அது தகாது தகாது எனப் பல கூறிப் மன்முறை தடுத்தும் திருதராஷ்டிரன் கேளாது மைந்தன் கேள்விக் கிசைந்தான். காந்தாரியும் திருதராஷ்டிரனை நோக்கி நம் மருமை மைந்தனாகிய துரியோதனன் நம்மை விட்டு நீங்கினும் நீங்குக, நாமிதற்குடன்படுதல் தகாதெனக் கூறித் தடுக்கவும் திருதராஷ்டிரன் கேட்டிலன் என்றான். திருதராஷ்டிரன் தன் மைந்தன் மேல் வைத்த காதலுக்கு எல்லையுமுளதாமோ.



அவ்வாறே திருதராஷ்டிரன் பாண்டவர்களை மீளவு மழைத்து நம்மைந்தன் வென்ற நாடு நகரங்களை உங்களுக்குத் தருதற்கு மனம் பொருந்துகின்றிலன். ஆதலின் இன்னுமொருதரஞ் சூதாடி வென்றீராயின் நாடு நகரங்கள் உமக்கேயாகுக. தோற்றீராயின் பன்னிரண்டு வருஷம் வனவாசமும் ஒருவருஷ அஞ்ஞாதவாசமும் செய்து அவ்வெல்லையில் வந்து அரசு கைக்கொள்ளுக வென்றான். அதற்குடன்பட்டு உதிஷ்டிரன் சூதாடித் தோற்றான். திரௌபதி யேவலால், உதிஷ்டிரன் தானும் தன் சகோதரரும் மனைவியும் மைந்தரும் அடிமைத் திறத்தினீங்கிக் காட்டகஞ் செல்லக் கருதி இன்னுமொருமுறை சூதாடுமென்று தான் செய்த புண்ணியத்தை ஒட்டமாக்கினான். சகுனி அதற்கிசைந்து ஆட, உதிஷ்டிரன் வென்றான். சகுனி வெள்கித் தலை குனிந்தான்.

அப்பால் பாண்டவர்கள் தமது இராசவுடைகளையெல்லாங் களைந்தெறிந்துவிட்டு மரவுரி தரித்துத் தம்பத்தினியோடும் புதல்வரோடும் காட்டகம் புறப்பட்டார்கள். துச்சாசனன் அப்போது திரௌபதியை நோக்கி இப்பாண்டவர்களை விடுத்து வேறு நாயகனை வரித்துக்கொள்கவென்று பழித்துரைத்தான். வீமன் அதுகேட்டுச் சீறியெழுந்தான். அப்போது அர்ச்சுனன், வார்த்தையாலொன்று காட்டுவது யாவர்க்குமெளிது செயலாற் காட்டுவதோ அரிது. ஆதலின் இவர்க்கெல்லாம் செயலாற் காட்டுவாம் வருக வென்றவனை அடக்கித் தானும் கர்ணனைக் கொன்றொழிப்பது சரதமென்று விரதங் கூறினான். மற்றைய பாண்டவர்களுஞ் சகுனி முதலியோரைக் கொல்வதுண்மையென்று நோன்பு பூண்டனர். அப்பால் திருதராஷ்டிரன் முதலிய பெரியோர்பால் விடைகொள்ளப் போய் வணங்க, அவர்கள் நாணி யாதும் பேசாதடங்கினர். விதுரன் மாத்திரம் பாண்டவர்களை நோக்கி, வனவாசம் உங்களுக்கு மிக்க நன்மையும் வலிமையுங் கீர்த்தியும் பயக்குமேயன்றி, தீமை பயக்குமெனக் கருதி மனந்தளராதொழிமின். க்ஷத்திரிய தருமத்தி விழுக்கடைந்தீரெனுங் குற்றம்பெற்று நாடு கொண்டாள்வதினுங் காடுகொண்டாள்வதே நமக்குச் சிறப்பாம். அதுவே தெய்வ சம்மதமுமாயிற்று. தருமமே ஜயம். மற்றையவெல்லாம் நன்றுபோற்றோன்றி மாண்டிடும். ஆதலால் உமது தாயரை என்பால் விடுத்துக் காடுசென்றுரியு

காலத்தில் சுகத்தோடும் பலத்தோடும் மீளக்கடவீர்களென்று வாழ்த்தினான்.

அவ்வாறே பாண்டவர்கள் அரிதிற் தாயை பிரிந்து வீதியிற் புகுந்தனர். உதிஷ்டிரன் தன்முகத்தை வஸ்திரத்தால் மூடிக்கொண்டு நடந்தான். சகாதேவன் முகப்பூச்சோடும், நகுலன் உடம்பெங்கும் மண்ணைப் பூசிக்கொண்டும், திரௌபதி புலம்பி அவிழ்ந்த கூந்தலால் முகத்தை மறைத்துக் கொண்டும், பாண்டவர் குருவாகிய தௌமிய முனிவர் தருப்பையைக் கையிற்றாங்கி யமஸ்தோத்திரமாகிய சாமவேத மந்திரத்தை யுச்சரித்துக் கொண்டும் நடந்தார்கள். அதுகண்ட நகரமாக்கள் புலம்பியழுது தம் வீடுகடோறும் அட்டிற் சாலைகளிலே தீமூட்டாது துன்பருந்தியிருந்தார்கள்.

இங்ஙனம் அஸ்தினாபுரத்தினின்று நீங்கிய பாண்டவர்கள் செய்தியைத் திருதராஷ்டிரன் கேள்வியுற்று அவர்கள் இங்ஙனம் போனதன் கருத்து யாதென்று விதுரன்பால் வினவினான். விதுரன் வேந்தகேள், உதிஷ்டிரன் இயல்பிலே கிருபையுடையனாதலின், தன் சினம்பொருந்திய கண் பிறர்மேற் படுமாயிற் றீது விளைத்திடுமென் றஞ்சி அது காக்குமாறே தன் முகத்தை வஸ்திரத்தால் மறைத்துச் சென்றான் என்றும், வீமன் தன் பகையைத் தீர்த்தற்குக் காலம் சமீபத்தில் வாராதோ வென்றெண்ணியே தன் புயத்தை நோக்கிச் சென்றான் என்றும், அர்ச்சுனன் மண்மாரிபோலப் பாணந் தொடுப்பேன் என்னுங் குறிப்பை விளக்குமாறே மணலைத் தூவிச் சென்றான். என்றும், சகாதேவன் சங்கடகாலத்தில் தன்னையின்னானென்றுணராவகை சென்றான் என்றும், நகுலன் தான் எவர்க்கும் வசப்படாவகை சேற்றைப்பூசி நடந்தான் என்றும், திரௌபதி பதினான்காம் வருஷத்திலே கௌரவர் மனைவியர் அவ்வீதிவாய் நிற்கும் நிலையைத் தன் செயற்குறிப்பாற் காட்டி நடந்தாள் என்றும், தௌமியர் பின்னர் நிகழும் மரணாபத்தைக் குறிப்பிற் காட்டி நடந்தனர் என்றும் எடுத்து விளக்கினான்.

## ௩௭. வனவாசம்.

அங்கே வீதிவழியே காடுநோக்கி நடந்த பாண்டவர்களை ஜனங்கள் கண்டு நாங்களும் நீங்கள் சென்றடையுங் காட்டினை



யடைந்து வாழ்வோம், "கொடுங்கோன் மன்னன் வாழுநாட்டிற் கடும்புலி வாழுங் காடுநன்றே" என்று தொடர்ந்தனர். அவரையெல்லாம் நற்புத்தி கூறித் தடுத்து விட்டுப் பாண்டவர்கள் கங்கைக் கரையை யடைந்தனர். சூரியனும் இவர் நிலையைக் காணச் சகியாதான் போன்று மேற்றிசை வீழ்ந்தான். அவ்விரவு பாண்டவர்கள் யாது மெண்ணாது வெண் மணலையே பஞ்சணையாகக் கொண்டுறங்கி யெழுந்து உதயகாலத்திற் செய்யவேண்டிய நித்திய கடன்களை முடித்துக்கொண்டிருக்கையில் உதிஷ்டிரன் தம்மைப் பின்னே தொடர்ந்து வந்த முனிவர் குழாத்தினைக் கண்டு அவர்க்கெல்லாம் அன்னங் கொடுத்தற்கு யாது செய்வனெனக் கவன்றான். தாகித்து வந்தடைந்தோருக்குத் தண்ணீரும், பசித்து வந்தோர்க் கன்னமும், நடையான் மெலிந்தோர்க் காசனமும் கொடுத்தின்சொற் கூறல் இல்வாழ்வார் யாவர்க்குங் கடனன்றோ. இது செய்யாது யான் இல்லற நடாத்துதல் அழகாமன்றோ எனக் கூறி வருந்தித் தன் குருவுக்கு முறையிட்டான். தௌமியர் உதிஷ்டிரனை நோக்கி, உயிர்களுக்கெல்லாம் தனதொளியாலும் உஷ்ணத்தாலும் உணவை விருத்தி செய்து பக்குவமாக்கிக் கொடுப்பவனாகிய சூரிய பகவானை நோக்கி, வரங்கிடப்பையேல் அவன் அருள் புரிவன் என்றார். எனவே கங்கையிலிறங்கி உதிஷ்டிரன் சூரியனைப் பிராணாயாமத்தாற் றியானித்திரந்தனன். சூரியன் அதற்கிரங்கி வெளிப்பட்டு ஒரு தாமிரபாத்திரத்தைக் கொடுத்து இஃது அக்ஷயபாத்திரம், தினந்தோறும் ஒருபிடி அன்னம் சமைத்து இதிலிட்டால் இது எத்தனையாயிரவர் வரினும் அன்னம் வற்றாமற் கொடுப்பது. திரௌபதி கையிலிருக்கக் கடவது. அவள் முதலிலுண்ணலாகாது, ஈற்றிலுண்ணக் கடவள். அவளுண்டபின் அவ்வன்னம் வற்றும். அப்பாலும் நீயிடின் முன்போல வற்றாதென்று கூறி மறைந்தனன். அதுபெற்ற உதிஷ்டிரன் வந்த அந்தணர்க்கெல்லாம் திவ்வியான்னம் வழங்கி மகிழ்ந்தான். இவ்வக்ஷய பாத்திரத்தால் பாண்டவர்கள் தமக்கும் தன்பால்வரும் விருந்தினர்க்கும் அன்னக்கவலை யொழிந்தார்கள். அது வனவாசகாலம் பன்னிரண்டு வருஷத்தையு மிக்க சம்பிரமமாகக் கழித்தற்குப் பேருபகாரமாயிற்று.

அப்பால், பாண்டவர்கள் வனத்திலே ஓராச்சிரமம் அமைத்துக்கொண்டங்கே வசிப்பாராயினார்கள். அனேக முனிவர்களும் அவர்

பொருட்டு அதன் சூழலிலே சென்றுறைந்தார்கள். அதனால் அக்கொடிய வனமும் பாண்டவர்களுக்கு இனியநகரமாயிற்று. அவ்வனமெங்கும் ஓமப்புகையே யோங்குவதாயிற்று. மிருகவொலிக்குமாறாக வேதவொலியே கேட்கப்படுவதாயிற்று. தீயவர்கள் உறவுக்குமாறாகச் சாதுசங்கமே இடையறாது விளங்குவதாயிற்று. இவ்வாறிருக்கையில் கிருஷ்ணன் அவ்வனஞ்சென்று பாண்டவர்களைக் கண்டு தான் சூதாடுங்காலத்தில் வந்து அதனைத் தடுத்தற்கு அமையம் வாய்க்காமற்போயிற்றென்று கூறிச் சின்னாள் அவருடன் தங்கி, மீளும்போது, வேண்டுங்காலத்தில் வெளிப்பட்டுத் துணைபுரிவேன் என்று வாக்களித்து மீண்டான்.

இது நிகழ்ந்தபின்னர்த் துரியோதனன், பாண்டவர்கள் வனவாசத்தினால் துன்புற்று மாண்டொழிவர் என்னும் நம்பிக்கை பெரிதுமுடையனாய் அவர்கள் நிலையை அறிந்துவருமாறு, அவர்கள் இருக்கும் அயலையடைந்தான்.

அவனோடு கர்ணனும் வேறு பல போர்வீரருஞ் சென்றனர். அவன் அவர்களையேவி அக்காட்டைப் பசுக்காவலின்பொருட்டு அழிப்பான்போன்று அழித்துப் பாண்டவர்க்குத் துன்பஞ்செய்ய வெண்ணினான். எண்ணியவெல்லா மெண்ணியாங்கு முடிப்பது மக்கள் ஆற்றலுக்கு எட்டாததன்றோ. அதுவன்றிப் பிறர்க்குக் கேடு சூழ்பவர் தமக்குக் கேடு வந்து சூழப்பெறுவது மியல்பன்றோ. துரியோதனன் அழிக்கவெண்ணிய வனமானது சித்திரரதன் என்னுங் கந்தர்வனுக்குரிய லீலாவனம். அவன் துரியோதனனிலும் பன்மடங்கு வலியுடையவன். அஃதுணராதவனைத் துரியோதனன் அவமதித்து அவன் வனத்தையழிக்கப்புகுந்தான். சித்திரரதன் அதுகண்டு துரியோதனனுக்கு நன் மதிபுகட்டியும் அவன்கேளாமையால் இருவர்க்குமிடையே போர்மூண்டது. அப்போரிலே கர்ணன் முதலிய துணைவரெல்லாம் முதுகிட்டோடத் துரியோதனன் சித்திரரதனாற் சிறைசெய்யப்பட்டான். அச்செய்தியைத் துரியோதனன்பக்கத்துக் காலாட்கள் சிலர்சென்று அயலிலேயிருக்கும் பாண்டவர்க்குணர்த்தித் துணைபுரியுமாறிரந்தனர். அஃதுணர்ந்த உதிஷ்டிரன் துரியோதனன்செய்த வஞ்சகங்களை எண்ணாது துணைச்செய்தல்வேண்டுமெனக் கருதினான். அஃதறிந்த வீமசேனன் அது



செய்தல் ஒருசிறிதுந் தகாதென்றான். உதிஷ்டிரன், அற்றன்று, நாமுந் துரியோதனாதியரும் பகைத்திருப்பது உட்பகையாம். நாம் அவருக்கு வேறல்லேம். அவர் நமக்கு வேறல்லர். ஆதலின் அவருக்குவரும் மானபங்கம் நமக்குமாம். சந்திரவமிசத்துக்கு வரும் மானபங்கம் நமக்கும் பங்காகாமற்போகாது. சந்திரவமிசத்துப் பெருமையின் பொருட்டாயினும் இவ்வமயத்தில் நாம் உதவிபுரிதல் வேண்டுமெனக்கூறி அர்ச்சுனனை ஏவினான். அர்ச்சுனன் யுத்தசன்னத்தனாய்ப் புறப்பட்டுச்சென்று தேடியபோது, துரியோதனனைச் சிறைசெய்து போகின்றவன் தனது நட்பினனாகிய சித்திரரதன் என்பதுணர்ந்து, அவனைநோக்கித் துரியோதனனை விடுத்தேகக்கடவை யென்றான்.

சித்திரரதன் இத்துஷ்டனாகிய துரியோதனன் பாண்டவர்க்குச் செய்த கொடும்பழிக்காக இதுசெய்யப்புகுந்தேன் என்றான். அவ்வுரை அர்ச்சுனன்மனதிற் கின்பந்தருவதாயினும், தமையன் ஆணைக்கு அதுமாறெனக்கூறி, அங்ஙனம் நீ செய்தல் தகாதெனத் தடுத்துத் துரியோதனனைமீட்டு அன்பொடுகொண்டுபோய்த் தமையன் முன்னர்விடுத்து நடந்ததெல்லாமுரைத்தான். உதிஷ்டிரன் அவனைச் சகோதரவுரிமையோடுபசரித்து, நீ இவ்வகையாக ஆராய்வின்றிப் போர்தொடுக்கத் தகாதாரோடுதொடுக்கத் துணிதலாகாதென்று நன்மதிகூறி விடுத்தான்.

---

## ௰அ. திரௌபதி தருமரைப் பழிவாங்க ஏவுதல்.

இங்ஙன நிகழ்ந்தது துரியோதனன் பாண்டவர்களது வனவாசகாலமுழுதும் அவர்க்கு இனி வஞ்சனையிழைக்கா தடங்கிக்கிடக்குமாறு செய்ததோர் அருமருந்தாயிற்று. அதனால் துரியோதனன் அடங்கினனாயினும் அவன்படைத்துணைவர் தஞ்செருக்கொழிந்தாரல்லர். அவருள்ளே மிக்க செருக்குடையவனாயிருந்தவன் துரியோதனன் ஏகசகோதரியாகிய துச்சளையை மணம்புரிந்தவழி அவனுக்கு மைத்துனனும் சிந்துதேசராசாவுமாகியஜயத்திரதன் என்பவன். அவன்பாண்டவர்களைத் துன்புறுத்தி அவர்பெருமைக்குப் பங்கஞ் செய்யவேண்டுமென நெடுநாட்கொண்டிருந்த தன்கருத்தை முடிக்குமாறுபாண்டவர்களில்லாத அமையம்பார்த்து அவர்கள்

பர்ணசாலையையடைந்தான். திரௌபதி அவன் வரவைக்கண்டு உறவினர்க்குரிய உபசாரமெல்லாஞ் செய்தாள். அம்மூர்க்கனோ அவளை மானபங்கஞ்செய்யக்கருதித் தன தீயவெண்ணத்தை மெல்ல வெளியிட்டான். திரௌபதி தன்சாமர்த்தியத்தாற் சிறிதுநேரம் அவனைத் தன்பால் நெருங்காமற்றடுத்தாள். ஈற்றில் அக்கயவன் அவளைத் தூக்கிக்கொண்டேகத் துணிந்தான். துணிதலும் பாண்டவர்களும் தெய்வாதீனமாக வந்துசேர்ந்தனர். அதுகண்டு அத்துஷ்டன் ஓடமுயன்றான். முயலுமுன் வீமன் அவனைச் சிறைசெய்து அவன் சிரசைக் கொய்ய முயன்றனன். உதிஷ்டிரன் ஒழிந்த நால்வரும் அவனைக் கொல்லுமாறு துணிய, உதிஷ்டிரன் அது தனக்குடன்பாடன்றென மறுத்தான். துரியோதனுதியர் பொருட்டு இவனை நீர் விடாதொழியினும் திருதராஷ்டிரனுக்கு ஏகபுத்திரியாகிய துச்சளைபொருட்டாயினும் அவன் உயிர்பிழைக்கவென்றான். திரௌபதி அதுகேட்டுத் தீயவரையொறுக்காது விடுதல் தீமையை வளர்ப்பதாகுமன்றோ. இவ்வாறே உமது சாந்த குணத்தினால் முன்னரும் துரியோதனன் செய்த பெருங் கொடும் பழிகளையெல்லாம் பொறுத்துவிட்டமையாலன்றோ இப்போது இத்தீய மூர்க்கன் என்னை மானபங்கஞ்செய்யத் துணிந்தான். இந்நிலைக்கு நாமெல்லாம் வந்தமைக்குக் காரணர் வேறொருவரை நாந்தேடுதல் மதியீனமாம். நீரே இந்நிலைக்குக் காரணர் என்றாள். அதுகேட்டு வீமனும் ஆம் என்று தலை துளக்கினன். அப்போது உதிஷ்டிரன் திரௌபதியை நோக்கி, எனதருங்கலமே கேட்பாயாக! வசைமொழிக்கு வசைமொழியும், தீமைக்குத் தீமையும், கொலைக்குக் கொலையுஞ் செய்தலே முறையாமாயின் உலகம் நடைபெறுவதெங்ஙனம்? கோபமே சாதிக்கத்தக்கதும் அநுஷ்டிக்கத்தக்கதுமானால் உலகத்திலே பிறப்புமுளதாகுமா? என்ன தீமைதான் அடைகினும் பொறுத்தருளுவதே சிறந்த தருமமாம். தன்கோபத்தை அடக்கியாளுபவனே விவேகியும் உத்தமனுமாவான். நிந்திக்கப்பட்டவழியும் துன்புறுத்தப்பட்ட வழியும், குற்றம்புரியாதிருக்கவும் கோபிக்கப்பட்டவழியும் பொறுமையே சிறந்த குணமாம். பொறையே ஞானம். பொறையே சத்தியம். பொறையே துறவுக்கங்கமாம். பொறையே துறவறத்துக்கு அரணும். பொறையே துறவாம். பொறையே தெய்வசாந்நித்தியமாம். பொறையே பிரபஞ்சத்திற்கு



ஆதாரமாம். விவேகிகள் எதனையும் பொறுத்தருளுதல்வேண்டும். அங்ஙனஞ் செய்தலால் ஞானத்தையடைகின்றார்கள் என்றான்.

திரௌபதி உதிஷ்டிரனை நோக்கி, கடவுள் ஜீவகோடிகளையெல்லாம் தமதிஷ்டப்படியே நீதிநெறியின்றித் தோற்றுவித்துத் திருவிளையாட்டயர்க்கின்றனர். தருமசீலர்களெல்லாம் துன்பக்கடலிலாழ்ந்துகிடப்பத் தீயவரெல்லாம் இன்பநுகர்ந் தினிதுவாழ்தலென்னையோவென்றாள். உதிஷ்டிரன் புன்முறுவல்செய்து அவளை நோக்கி, நாஸ்திகம் பேசத்தலைப்பட்டனைபோலும், ராஜபுத்திரியே நான் கூறுவதைக் கேள். நான் பலாபேக்ஷையோடு யாதொரு கருமமுஞ் செய்வதில்லை. இரப்பவர்க்கு நான் ஈவது புண்ணியம் புகழ் கருதியன்று. ஈதல் எனது கடன். யாகங்கள் செய்கின்றேன். பயன்குறித்தன்று. அது எனக்குரிய தொழில். சத்தியநெறியில் நிற்கின்றேன். அதுவும் பயன்குறித்தன்று. அஃது எனக்குரிய தருமம். வேதத்தில் விதித்ததைச் செய்வது யாவர்க்குங் கடனாம். அதற்கு மாறுசெய்தலோ கூடாது. பலனை நோக்கி எவன் தருமநெறி நிற்கின்றானோ அவன் தருமவணிகனாவான். பயன்கருதிச்செய்யப்படுவதெல்லாம் வாணிகமன்றோ. புண்ணிய பாவங்களெல்லாம் தப்பாமற் பயன்தருவனவேயாம். ஆயினும் பயனைநோக்கிச் செய்தலாகாது. சற்கருமமே எல்லாவற்றையும் முடிவிலே வென்று நிலைகொள்வது ஆதலாற் கடவுளைத் தூஷித்தலாகாது. அவர் செய்வனவற்றையெல்லாம் பொறுமையோடு பார்த்தநுபவித்தலே நமது கடனாம். கடவுளினது திருவருளினாலேயே பிறவியென்னும் துன்பத்தினீங்கி நித்தியானந்தப் பெருவாழ்வினையடைகின்றோம். சின்னாள் வாழ்வினையுடைய அற்ப சீவர்களாகிய நாம் அநாதிநித்திய முழுமுதல்வரைப் பக்தியினால் அடைவதே கடன் என்றான். அவ்வளவில் திரௌபதியும் மற்றைய பாண்டவர்களும் அடங்கினர். அப்பாவியாகிய ஜயத்திரதனும் கொல்லப்படாது விடுக்கப்பட்டான். நன்றியில் தீயனாகிய அவன், அவர்கள் செய்த உபகாரத்தை மறந்து பாண்டவர்களுக்குத் தீங்குசெய்யநினைந்து சிவனைநோக்கிக் கொடிய தவஞ்செய்து வரங்கள் சில பெற்றான்.

---

## ௩௧. அர்ச்சுனன் தவம்புரிதல்.

அப்பால் ஒருதினம், வேதவியாசர் பாண்டவர்களது ஆச்சிரமத்தை அடைந்து உதிஷ்டிரனைத் தனியிடத்திருத்தித் திவ்வியாஸ்திரசாஸ்திரத்தை யுபதேசித்து, அரசனே, நீ இதனை அர்ச்சுனனுக்குக் கற்பித்து அவனை இந்திரன்பாலும் சிவன்பாலும் அஸ்திரங்கள் பெறுமாறு அனுப்பக்கடவையென்று ஆஞ்ஞாபித்தருளி மீண்டனர். அவ்வாறே உதிஷ்டிரன் அர்ச்சுனனுக்கு அதனைக் கற்பித்து, அவனைத் தேவர்பால் அஸ்திரம்பெற்று மீளக்கடவையென்றனுப்பினன்.

அர்ச்சுனன் விடைகொண்டு அங்குநின்றும் புறப்பட்டு இமயத்தை அடைந்தான். அங்கே இந்திரகீலபர்வதமார்க்கத்தைத்தேடி அவ்வழியே நடந்து அதனையும் அடுத்தான். அப்பொழுது "நில்லு நில்லு" என்றொரு உரத்த சத்தங் கேட்டது. உடனே சோதிமயமாகிய ஒரு சந்நியாசி அவன்முன்னே தோன்றி உன் வில்லை வீசிவிட்டு நடக்கக்கடவை. இவ்விடத்தில் அஞ்சக்கிடப்பது யாதுமில்லையென, அதுகேளாது அர்ச்சுனன் தன்வில்லோடும் முன்னோக்கி நடந்தான். அப்பொழுது இந்திரன் தன்னை வெளியிட, அர்ச்சுனன் பிழைபொறுத்தருளென்று பன்முறை வணங்கி நின்றனன். இந்திரன் வேண்டுவதைக் கேள் தருதும் என, அர்ச்சுனன் எனக்கு அஸ்திரம் அநுக்கிரகிக்கவென்றான். இந்திரன் அவனை நோக்கி சர்வலோகநாயகனாகிய சிவன்பாற் பெறவேண்டியதைப் பெற்று மீளுங்காலத்தில் நானுந் தரவேண்டியதைத் தருவேன் என்றுகூறி மறைந்தான்.

அர்ச்சுனன் அவ்விடத்தைத்தானே தவஸ்தலமாக்கி அங்கிருந்து சிவனைநோக்கிச் சின்னாட் கந்தமூலமருந்திப் பின்னர்ச் சிறிதுசிறிதாக விடுத்து ஈற்றில் முற்றும்விடுத் துணவுநித்திரையின்றித் தேகத்தைத் தன்வசப்படுத்திக்கொண்டு மூன்றுமாசகாலந் தவஞ்செய்தான்.

இங்ஙனம் பெருந்தவம்புரிகையில் அவன் தவத்தை அழித்து அவனையுங் கொல்லுமாறு ஓரசுரனைத் துரியோதனன் விடுப்ப, அவ்வசுரன் கொடிய பன்றியுருக்கொண்டு நடந்தான். அப்போது, பக்தருடைய வேண்டுகோளுக்கிரங்கி அவரைக்காக்குமாறு விரைந்து வெளிப்படுமியல்பினராகிய சிவபிரான், அர்ச்சுனனுக்கு அருள்புரிதற்கு அதனையே அமையமாகவெண்ணி வேட்டுவவடிவங்கொண்டு நடந்தனர். பன்றியுருக்கொண்டு சென்ற மூகதானவன் அர்ச்சுனனைச்



சமீபித்தான். வேடவடிவங்கொண்டு கடவுளும் சமீபித்து அப்பன்றிமேற் பாணந்தொடுக்க, அர்ச்சுனனும் அப்பன்றியினது சீற்றத்தையும் கொடிய தோற்றத்தையுங் கண்டு தானும் பாணப்பிரயோகஞ்செய்தான். இருவர் பாணத்தாலும் பன்றியிறந்தது. வேடவடிவங்கொண்ட கடவுள் விளையாட்டாகத் தாங்கொன்ற பன்றிமேற் பாணந்தொடுத்தது தகாதென்று அர்ச்சுனனைக் கோபித்தார். அவனும் அக்கருணாநிதியினது வடிவத்தை யறியாதவனாய்த் தான் கொன்றதென்று எதிர்வழக்கிட்டான். அதனால் இருவர்க்கும் போர்மூண்டது. அப்போரிலே அர்ச்சுனன் தோற்றுக் கோபாவேசத்தால் வில்லைக்கொண்டடித்தான். அவ்வடி சராசரமெங்கும் பட்டமையால் அர்ச்சுனன் தன்மேலும் விழப்பெற்று மிக்க கோபமுடையனாகி அவரை மற்போருக்கறைகூவ இருவரும் மற்போர் செய்தனர். அப்போரில் கடவுள் அவனைத் தூக்கி அந்தரத்தில் எறிந்துவிட்டுத் தமது மெய்வடிவத்தைக் காட்டியருளினர். அந்தரத்திற்றானே அச்சோதிவடிவத்தைக் கண்ட அர்ச்சுனன் சேவித்துக்கொண்டு கீழே விழ, அவனை விழாமற் சிவபெருமான் தமது திருக்கரங்களாற்றாங்கி அணைத்து ஆசிகூறி அவன் வேண்டிய பாசுபதாஸ்திரத்தையுமீந்தனர். அவ்வஸ்திரமானது உலகமனைத்தையும் ஓரிமைப்பொழுதினுள்ளே அழிக்க வல்லது. அதனைப் பெறுதலும் பிரயோகித்தலும் யாவர்க்கு மெளிதல்ல.

இத்துணைச் சிறந்த திவ்வியாஸ்திரத்தைப் பெற்று மீண்ட அர்ச்சுனனை இந்திரன் கண்டு தேவலோகங் கொண்டு சென்று இரத்தினகிரீடஞ்சூட்டினான். அங்கே இந்திரன் தன்னால் வெல்லப்படாத நிவாதகவசகாலகேயர்களை அர்ச்சுனனைக் கொண்டு தொலைவித்து அவ்வுபகாரத்திற்காக அவனுக்குத் தன் வச்சிராயுதத்தையுங் கொடுத்தான். அதன்பின்னர் அர்ச்சுனன் இந்திரனோடு சிலகாலமிருக்கையில் ஒருநாள் ஊர்வசி அவனைக்கண்டு காதல்கொண்டழைக்க அவன் அவள் கருத்துத் தகாதென மறுத்தான். அதனால் அவள் அவனைப் பேடியாகவென்று சபித்தான், அச்சாபத்தையும் அதன் காரணத்தையும் இந்திரனுணர்ந்து அவ்வடிவத்தை அர்ச்சுனன் விரும்பியபோது பெறுமாறு செய்கவென்று ஊர்வசியை வேண்ட அவளுமவ்வாறு அச்சாபத்தை மாற்றினாள். அச்சாபம் அர்ச்சுன

னுக்கு மேல்வரும் அஞ்ஞாதவாசத்துக் குபகாரமாதலின் அதுவும் வரப்பிரசாதமாயிற்று. ஐந்துவருஷங் கழிந்தபின்னர் இந்திரன் அர்ச்சுனனைத் தேரிலேற்றிக்கொண்டுவந்து பூலோகத்திலே மேரு பர்வதசமீபத்திலே விடுப்ப, தீர்த்தயாத்திரையின்பொருட்டு அங்கே சென்று அர்ச்சுனன் வரவை நோக்கியிருந்து ஏனைய பாண்டவர்கள் அவனைக்கண்டு பேரானந்தத்தோடு தழுவினர்.

---

## ௪௦. இடும்பன் சசிரேகையை மாயமாய்க் கொண்டேகல்.

அப்பால் பாண்டவர்கள் அவ்விடத்திலே நான்குவருஷங் கழித்தனர். இதுவரையில் பதினொருவருஷங் கழிந்தன. பாண்டவர்கள் இவ்வாறு வனவாசஞ்செய்துவர, அங்கே துவாரகையிலே நிகழ்ந்ததை எடுத்துக் கூறுவாம்.

பலராமன் புத்திரி சசிரேகையென்பவள் அழகு நிரம்பிப் பருவமடைந்தாள். சுபத்திரை வயிற்றிலே அர்ச்சுனன் பெற்ற அபிமன்னியுவும் பதினாறு நிரம்பினான். இருவரும் அழகாலும் குணத்தாலும் அன்பாலும் தம்முளொத்தவர்கள். வேதநூலுணர்ச்சியாலும் படைக்கலப் பயிற்சியாலும் அபிமன்னியு தனக்கிணை பிறரில்லாதவன். இருவரும் சிறுபருவந்தொட்டு உடனுண்டு உடனாடிப் பயின்றவராதலின் ஒருவர்மேலொருவர் மாறாப் பேரன்பும் பிரியாப்பற்றுள்ளமுமுடையவர்கள். பாண்டவர்கள் மகோந்நத தசையிலிருக்குங் காலத்திலே சசிரேகைக்கு அபிமன்னியுவே நாயகனாவானெனப் பலராமன் வாய்க்கேட்டார்கள். சசிரேகையும் அதுவே துணிவுடையளாயினாள். பாண்டவர்கள் அரசிழந்து நிலையிழந்து வனம்புகுந்தபின்னர்ப் பலராமன் அபிமன்னியுமேல்வைத்த அன்பைத் துறந்து துரியோதனன் புத்திரன்மேன் மனம்வைத்தான். அதுகண்ட சுபத்திரையும் கிருஷ்ணனும் தம் விருப்பத்தையெடுத்துப் பலவாறு நியாயங்காட்டியுரைத்தனர். அதனைப் பலராமன் ஒருசிறிதும் பொருட்படுத்தாது மறுத்தான். மாதுலன் புத்திரியாதலின் அபிமன்னியுவே சசிரேகைக்கு நாயகனாகற்பாலன் என்று சிலமுதியோர்களும் எடுத்துரைத்தார்கள். அதற்கும் பலராமன் உடன்படானாயினான். பாலியந்தொட்டு இருவரும் மிக்க அன்புடையராயொழுகிவருதலின் அவர்களைப் பிரித்துவிடுதல் முறையாகாதென்றும் அம்முதியோர் பேசினர்.



அதுவும் பலியாதாயிற்று. அதனால் சுபத்திரை மனத்திடைத் தாங்கொணாத் துயருடையளாயினாள்.

இப்படியிருக்கையில் விவாகநாளும் நிச்சயிக்கப்பட்டது. அபிமன்னியு அச்செய்தியை யுணர்ந்து மிக்க கவன்று சசிரேகையைச் சோரமார்க்கத்திற் கொண்டுசெல்வதே தன்கவற்சிக்கு மருந்தாமெனத் துணிந்தான். அதனைச் சுபத்திரையுணர்ந்து தன்மைந்தனை நோக்கி, என் கண்மணியே கேள், பாண்டவர்களோ வனத்திலிருக்கின்றார்கள். வனவாசகாலம் கழித்து மீண்டுவருங்காலத்தில் அவர்க்குப் படைத்துணை புரிதற்குப் பலரும் நட்பினராயிருத்தல்வேண்டும். நீ சசிரேகையைச் சோரஞ்செய்யுமிடத்துப் பலர் பகைவராவர். பகையைப் பெருக்குவதோ நமது நிலைக்குத் தகாத கருமமென்றாள். அதுகேட்டு அபிமன்னியு ஒருவாறு சமாதானப்பட்டான். ஆயினும் சசிரேகைமேல் தான் வைத்த காதலும் அவள் தன்மீது காட்டிய பேரன்பும் அவனைப் புறம்பெயரவொட்டாமற் பிணிப்பதோர் அரிய வலையாயினமையின், அவளைக்கண்டு, அவள்மனக்கருத்தை அளக்குமாறு தூண்டிற்று. தூண்டலும் அவன் சுபத்திரைபுறஞ் சென்றிருந்த அற்றநோக்கி அங்குநின்றும்போய்ச் சசிரேகையைக் காணுமாறு பூங்காவிலிருந்தான். சசிரேகையும் இவ்விவாககாரணமாகச் சுபத்திரை தன்மைந்தனோடு பலராமன் மாளிகையை விட்டுநீங்கிய நாண்முதலாக அபிமன்னியுவைக் காணுமாறு கழிபெருங் காதலுடையளாயிருந்தாள். உணவின்மேற் கருத்தொழிந்தாள். விளையாட்டு அவளுக்கு வெறுப்பாயிற்று. ஆடையாபரணங்கள் பெரும் பாரமாயின. அபிமன்னியுவே அவளுக்குயிரானமையின் அவன் பிரிவு அவளுக்கு இவ்விகாரப்பாட்டினையுண்டாக்கியது. அவனைப்பிரிந்து தனது மாளிகையிலே தரியாது பதைபதைத்தனள். தனது மனத்துயருக்கெல்லை காணுமாறு தன்நட்பின்மிக்க பாங்கியரோடுசென்று பூங்காவையடைந்தாள். அங்கே அபிமன்னியுவைக்கண்டு உள்ளமும் உடலும் பூரித்தாள். அவனும் தாரகைநடுவே தண்ணியமதியெனத் தழைத்த முகத்தோடு சசிரேகையைப் பாங்கியர்நடுவேகண்டான். அவனைக் காண்டலும் பாங்கியரும் ஒவ்வொருபணிமேல் நீங்குவார்போல மெல்ல நீங்கினர். சசிரேகையும் அபிமன்னியுவும் தமியராய் நின்று தமது மனக்கருத்தைக்கூறி யொருமனப்பட்டனர். அவள் அபிமன்னியுவோடு செல்லத்துணிந்து சிறிதுதூரம் நடந்தாள். அப்

பொழுது அவள் கற்பெனும் அங்குசம் தன் காதலெனும் மதயானையைத் தடுப்ப அவனை நோக்கி, என்னைப் பகலிடைக் கொண்டுசெல்லக் கடவை; இவ்விரவிடைக்கொண்டேகுதல் நினக்குமெனக்கும் நீங்கா வசைக்கேதுவாகுமென்றனள். அது தக்கதெனத் துணிந்து அபிமன்னியுவும் அவளைப்பிரிய அவளும் அவனை அரிதிற்பிரிந்து தன் ஆயத்தோடும் தன் கோயில் சென்றாள்.

அபிமன்னியுவுந் தாயிருக்குமிடத்தையடைந்தான். சுபத்திரை விவாககாலத்திலே துவாரகையி லிருத்தலாகாதெனப் புறப்பட்டு மைந்தனோடு ஒரு காட்டுவழியே நடந்தாள்; அக்காட்டில் வாழும் இடிம்பி வீமனுக்குப் பெற்றமைந்தனாகிய கடோற்கசன் அபிமன்னியுவைக் கண்டு அவனை இன்னானென்றுணராது போருக்கழைக்க இருவரும் பொரத்தொடங்கி யொருவரையொருவர் வெல்லவியலாது நெடுநேரம் போர்செய்தனர். அப்போது நாரதர் வெளிப்பட்டு விலக்கி இருவரையும் இன்னாரென வெளிப்படுத்தினர். இருவரும் தழுவிக் கொண்டாடிக் கேண்மைபாராட்டினர். அதன்பின்னர்க் கடோற்கசன் சுபத்திரையையும் அபிமன்னியுவையும் இடிம்பியிருக்குமிடத்திற் கழைத்துப்போய் அவர் வரலாறெடுத்துரைத்து விருந்தூட்டினான். விருந்துண்டபின் சுபத்திரை தனக்குந் தன் மைந்தனுக்குமுள்ள குறையை யெடுத்துக்கூறி நாளைக்குச் சசிரேகைக்கு மணநாளென் பதுஞ் சொன்னாள். கடோற்கசன் மகாமாயாவல்லவன். அந்தரத்திலுஞ் சஞ்சரிப்பவன். நினைத்தவுருவெல்லாமெடுப்பவன். எவ்வகை அரணினுள்ளும் தடையின்றிச்செல்லும் சூக்குமவடிவமெல்லாம் எடுக்க வல்லவன். இவன் சுபத்திரையினது முறையீட்டைக் கேட்டவுடன் அந்தரத்திலெழுந்து துவாரகையையடைந்து அங்கு நடக்கும் அலங்காரங்களையும் ஏனைய முயற்சிகளையுங் கண்டான். நகைத்தான். அரண்கடந்து சசிரேகை நித்திரைபோகுஞ் சயனமண்டபத்திற் புகுந்தான். யாருக்கும் புலனாகாவகை அவளை அவள் படுத்திருக்கும் மஞ்சத்தோடு தூக்கி முதுகின்மேற்றாங்கி அந்தரத்தெழுந்து தன் காட்டகங்கொண்டு சென்றான்.

இடிம்பியும் சுபத்திரையும் அபிமன்னியுவும் சசிரேகை மஞ்சத்தோடு வந்தமைகண்டு பேரானந்தமடைந்து அவளைத் தழுவிக் கொண்டாடி வாழ்த்தினார்கள். கடோற்கசன் அவர்பால் விடை



கொண்டு உடனே துவாரகைக்கு மீண்டு சசிரேகையினது வடிவங் கொண்டு அவளுடைய மாளிகையிலே மாயமஞ்சமொன்றாக்கி அதிற் சயனித்தான். விடியற்காலத்திலே பாங்கியர் அம்மாயச்சசிரேகையை யெழுப்பி நீராட்டி அணிவன அணிந்து சூடுவன சூட்டி மணமகளாக்கினார்கள். அப்பொழுது துரியோதனனும் மைந்தனும் ஏனைய துணைவரும் அரசரும் மண்டலீகரும் சேனாசமுத்திரஞ்சூழக் கடலொலிபோல் முழங்கிப் பேராடம்பரத்தோடும் மிக்க பெருமிதத்தோடும், பாண்டவர்களையடக்கி அவர்கள் நட்பினனாகிய கிருஷ்ணனையும் தலைகுனிவித்துவிட்டோமென்னும் அளப்பருங் கருவத்தினோடும் அடக்கரும் களிப்புப்பொழியத் துவாரகை நகரினுள்ளே புகுந்தார்கள். அந்தணர்க்கும் அரசர்களுக்கும் மண்டலீகர்களுக்கும் ஏனைய நாற்பாற்குலத்து நகரமாந்தருட் சிறந்தோர்க்கும் வேறு வேறாக அமைக்கப்பட்ட இடங்களிலே அவ்வவரெல்லாஞ் சென்று வைகினர். விவாகமுகூர்த்தம் வந்தடுப்ப மணமகளைக் கொண்டு சென்று தாதியர் மண்டபத்திலிருத்தினர். விவாகக் கிரியைகளெல்லாம் வேதவிதிப்படி முனிவரால் நடாத்தப்படுவனவாயின. மணமகன் புரோகிதரை வலம்வரும்போது திரைமறைவிலிருந்த மணமகளைப் பிறர் குறிகொள்ளாவகை நோக்கினான். அவன் கண்களுக்குக் கடோற்கசன் சினந்தெழுந்த கொடிய சிங்கேறுபோல வடிவங் கொண்டு பல்லும் நகமும் ரோமங்களும் தோன்ற நின்றான். மற்றோர் கண்களுக்கெல்லாம் சசிரேகைபோல் அழகு கொழிக்கத் தோன்றினான். மணமகன் அச்சிங்கவுருவைக் கண்டு நெஞ்சங் கலங்கித் தெளிந்து தான் கண்டதை அச்சபையோர்க்குக் கூற, சபையோரும் பலராமனுமதிசயத்து எழுந்து பார்க்க அவர்க்கெல்லாம் சசிரேகையேயாக, அவர்கள் நகைத்து மீளவும் மணமகனை ஏவி நோக்குகவென்றனர். அவன் தன் கண்ணுக்கு முன்போலவே சிங்கந் தோன்றத் துரியோதனனை அழைத்து நோக்குகவென்றான். துரியோதனனுக் கவ்வுருச் சசிரேகையாக, மைந்தன் கூறுவதைப் பரிகசித்தான். மைந்தன் சசிரேகையன்று சிங்கமேயென்றான். இதனால் விவாகமண்டபம் நிலைகலங்கித் தலை தடுமாறியது.

அவ்வளவில் கடோற்கசன் ஆகாயத்திலெழுந்து கன்மாரி பொழிந்து துரியோதனாதியரைப் போருக்கழைத்து வெளிப்பட்டான். துரியோதனாதியர் கடோற்கசன் படையைக் கண்டஞ்சி

யோட்டெடுத்தனர். இச்சமாசாரம் அவ்விவாகத்திற்கு வாரது மறுத்துத் தனது மாளிகையிலிருந்த கிருஷ்ணனுக் கெட்டியது. அது கேட்டுக் கிருஷ்ணன் பலராமனிடம்போய்ச் சேரக் கடோற்கசனும் தன் சேனைகளைப் போக்கிவிட்டுச் சென்று, பலராமனையும் கிருஷ்ணனையும் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்துச் சசிரேகையிருக்குமிடத்தையும் தான் செய்ததையு மெடுத்துரைத்தான். அவ்வளவில் பலராமன் மனம்மகிழ்ந்து அவனை மெச்சி ஆசீர்வதித்து, அவனோடு தானும் கிருஷ்ணனுமாகக் காட்டிற்குச் சென்று சுபத்திரையையும் சசிரேகையையும் அபிமன்னியுவையும் அச்சந்தீர்த்துக் கொண்டாடி இடிம்பியோடு அவர்களையும் தனது நகரத்திற்கழைத்துக்கொண்டு மீண்டான். சிலதினஞ் சென்றபின்னர் விவாகத்தையும் முன்னையிலும் பன்மடங்கு ஆடம்பரத்தோடு முற்றுவித்துக் கண்களித்தான். சசிரேகையும் அபிமன்னியுவும் தமது அன்பிற்கிடையூறின்றி இன்பந்துய்த்திருந்தனர்.

இச்சம்பவமானது, துரியோதனனுக்கும் அவன் பக்ஷத்தாருக்கும் மிக்க துக்கத்தையும் மானபங்கத்தையும் உண்டாக்கியதுமன்றிப், பாண்டவர்களைத் துரியோதனதியர் வெல்லுதல் இயலாதென்பதையும், பாண்டவர்களுடைய வலிமை எவ்வாற்றானும் அளப்பரிதென்பதையும் நன்கு நாட்டுவதாயிற்று. பாண்டவர்கள் வனவாசமும் அஞ்ஞாதவாசமும் கழித்து மீண்டு வரும்நாளிலே துரியோதனன் அவர்க்குரிய பாகத்தைக் கொடுக்க உடன்படாது யுத்தத்தை விரும்புவானாயின் விளையும் பயன் இதுவென்பதும் உலகம் ஒருதலை துணிதற்கு இவ்விவாகம் ஏதுவாயிற்று. துரியோதனன் இங்ஙனம் மானபங்கமுற்றானாயினும் பாண்டவர்க்குளதாகிய அனுகூலம் அவன் பொறாமை என்னும் பேரக்கினிக்கு நறிய நெய்யாய் மனத்திடைக் கிடந்து ஓங்கி எரிந்தது.

---

## ௪௧. நச்சுப் பொய்கை.

பன்னிரண்டுவருஷ வனவாசம் முடிவதற்குச் சில தினமுள வென்னுமளவிலே, ஒருநாள், தமது தீக்கடைகோலை ஒருமான் தன் கொம்பிற் சிக்கிக்கொண்டோடக் கண்ட ஒரு முனிவர் பாண்டவர்க்கு முறையிட்டனர். அதை மீட்டுக்கொடுக்குமாறு பாண்டவர்கள் அம்



மானைத் தொடர்ந்துபோய் ஒரு கொடிய காட்டிற் புகுந்தார்கள். வெயிற் கொடுமையாற் சோர்ந்து நீர் வேட்கையுற்று வீழ்ந்தார்கள். அப்பொழுது நகுலன் ஒரு வானளாவி உயர்ந்த மரத்திலேறிச் சமீபத்திலே நீருளதோவென்று நான்மருங்கும் பார்த்தான். ஒரு திசையிலே நீர்ப்புட்களினது ஒலியும், ஓங்கி வளர்ந்த விருட்சக் கூட்டங்களும் அவனுக்குப் புலப்பட்டன. உடனே நகுலன் புறப்பட்டுச் சென்று பளிங்குபோற்றெளிந்த நீரினையுடைய ஒரு தண்ணிய தடாகத்தைக் கண்டான். கண்டு அதனைப் பருகுமாறு அந்நீர்க் கரையை யடைந்தான். அடைதலும், "இந்நீர் நச்சுநீர், அதுவுமன்றி என் காவலிலுள்ளது. அதனை உண்பையேல் உயிர் துறப்பை" என்றோர் அசரீரி ஒலித்தது. நகுலன் அதனைப் பொருட்படுத்தாது தடுத்தற்கரிய நீர்வேட்கையால் அந்நீரையுண்டு உடனே உயிர்துறந்தான். நகுலன் மீண்டுவரத் தாழ்ந்தமைகண்டு உதிஷ்டிரன் சகாதேவனை அனுப்பினான். அவனும்போய் அவ்வாறு மாண்டான். அவனும் மீளாமையால் உதிஷ்டிரன் அர்ச்சுனனை அனுப்பினான். அவனும் போய் அவ்வண்ணமே உயிர் துறந்தான். அப்பால் உதிஷ்டிரன் வீமனை அனுப்ப அவனும்போய் மாண்டான். அதன்பின்னர் உதிஷ்டிரன் ஆச்சரியவசத்தனாய்த் தானுமப் பொய்கையை யடைந்தான். அங்கே அவன் நால்வரும் இறந்துகிடத்தலைக் கண்டு நெஞ்சம் புண்படக் கவன்று நின்றான். இறந்து கிடப்பவர் முகத்தை நோக்கினான். இறந்தவர் முகம்போல் இராது காந்தியோடு கூடியிருப்பக் கண்டு ஒருவாறு தெளிந்து இம்மாயத்தின் காரணத்தைப் பின்னர்ச் சிந்திப்பாமென்றெண்ணித் தாகந்தணிக்கும்பொருட்டு நீர்க்கரையை யடைந்தான். உடனே முன்போல அசரீரி ஒலித்தது. உதிஷ்டிரன் அவ்வசரீரியை நோக்கி நீ யாரென்றனன்? அவ்வசரீரி, யான் யக்ஷன் என்று கூறி வெளிப்பட்டு, நான் வினவும் வினாக்களுக்கு விடை கூறுவையேல், இந்நீரை அருந்தவிடுவேன் என்றது. உதிஷ்டிரன் வினவக்கடவையென அதுவும் வினவத் தொடங்கிற்று.

௧. ஆதித்தனை உதிக்கச்செய்வது யார்? அவனுக்குச் சமீபத்திலே இருப்பவர் யார்? அஸ்தமிக்கச் செய்வது யார்? அவனுக்கு ஆதாரம் யாது?

உதிக்கச்செய்வது பிரமம். சமீபத்திலே இருப்பவர் தேவர்கள். அஸ்தமிக்கச்செய்வது தர்மம். ஆதாரம் சத்தியம் என்று உதிஷ்டிரன் விடுக்க, யக்ஷன் மீண்டும் வினவுவான்.

௨. ஒருவனைப் பண்டிதனுக்குவது யாது? ஒருவனுக்கு மெய்மையான உயர்வைத் தருவது யாது? ஒருவனுக்குத் துணை யாவது யாது? ஒருவனை விவேகியாக்குவது யாது?

வேத ஞானமே பண்டிதனுக்குவது. தவத்தினுலுயர்வு அடையப்படுகின்றது. விவேகமே உண்மையான துணை. பெரியோர் சேவையே விவேகியாக்குவது.

௩. உழவர்க் கின்றியமையாதது யாது? ஆக்கத்தை விரும்புவோர்க்கு இன்றியமையாதது யாது? பேறுகளுட் சிறந்தது யாது?

உழவர்க் கின்றியமையாதது மழை. ஆக்கத்துக் கின்றியமையாதது பசு. பேற்றினுட் சிறந்தது நன்மக்கட்பேறு.

௪. அறிவும், சுவாசமும் உலகத்தாரால் மதிப்பும் புலன்களால் நுகரப்படும் போகங்களும் உடையனுகியும் உயிரோடில்லாதிருப்பவன் யாவன்?

தெய்வத்தையும், விருந்தினரையும். சுற்றத்தாரையும், பிதிர்களையும் தன்னையும் திருப்தி செய்யாதவன் யாவனே அவன் சுவாசமுடையவனேயாயினும் உயிரில்லாதவனேயாவான்.

௫. உலகத்தினும் பெரியது யாது? வானத்திலு முயர்ந்தது யாது? காற்றினுங் கடிய வேகமுடையது யாது? புல்லினும் அதிகம் யாது?

அன்னையே உலகத்தினும் பெரியள். தந்தையே வானத்திலும் உயர்ந்தோன். மனமே வாயுவினுங் கடிய வேகமுடையது. எண்ணங்களே புல்லினுந் தொகையான் மிக்கன.

௬. கண்மூடாதுறங்குவன யாவை? இருதயமில்லாதது யாது? தன் பலத்தோடு விரிவது யாது? ஈன்றவற்றுளியங்காதது யாது?

கண் மூடாதுறங்குவன மீன்கள். இருதயமில்லாதது கல். தன் பலத்தோடு விரிவது நதி. ஈன்றவற்றுளியங்காதது முட்டை.

௭. அந்நியதேசஞ் சென்றவனுக்கு நட்பாளன் யாவன்? இல்லறத்தானுக்குத் துணை யார்? நோயாளனுக்குத் துணை யார்? மரண காலத்தே துணை யார்?

அந்நியதேசஞ் சென்றவனுக்கு அந்நியனே துணை. இல்லறத்தானுக்கு மனைவியே துணை. நோயாளனுக்கு வைத்தியனே துணை. மரிப்பவனுக்குத் தருமமே துணை.



௮. தனியே சஞ்சரிப்பது யாது? மீண்டு மீண்டு பிறப்பது யாது? குளிருக்கு மருந்து யாது? வயல்களுட் பெரியது யாது?

சூரியனே துணையின்றி அலைவது. சந்திரனே மீண்டு மீண்டு பிறப்பது. அக்கினியே குளிருக்கு மருந்து. பூமியே செய்களுட் பெரியது.

௯. சமயத்துக் குறுதியாவது யாது? கீர்த்திக்குறுதி யாது? மோக்ஷத்துக்குறுதி யாது? இன்பத்துக்குறுதி யாது?

சமயத்துக்குறுதி இரக்கம். கீர்த்திக்குறுதி கொடை. மோக்ஷத்துக்குறுதி சத்தியம். இன்பத்துக்குறுதி நல்லொழுக்கம்.

௰. எல்லாப் புகழினுஞ் சிறந்தது யாது? செல்வத்துட் சிறந்தது யாது? ஊதியங்களுட் சிறந்தது யாது? இன்பத்துட் சிறந்தது யாது?

சாமர்த்தியமே சிறந்த புகழ். அறிவே சிறந்த செல்வம். ஆரோக்கியமே சிறந்த ஊதியம். திருப்தியே சிறந்த இன்பம்.

௧௧. தருமங்களுட் சிறந்தது யாது? சமயங்களுட் சிறந்தது யாது? துன்பநிவிர்த்திக்கு உபாயம் யாது? யாரோடு கொண்ட நட்பு நீங்காது?

அகிம்சையே பரம தருமம். வைதிகசமயமே சிறந்தது. துக்கநிவிர்த்திக்குபாயம் மனத்தை யடக்குதல். பெரியோர் கேண்மையே நீங்காதது.

௧௨. ஒருவன் உயர்ச்சியின் பொருட்டுவிடவேண்டியது யாது? எதனைத் துறந்தால் துக்கம் நாடாது? செல்வத்தின் பொருட்டுத் துறக்கத்தக்கது யாது? இன்பத்தின் பொருட்டு துறக்கத்தக்கதுயாது?

உயர்ச்சிவேண்டுவோன் அகங்காரத்தைத் துறத்தல்வேண்டும். கோபத்தைத் துறந்தால் துக்கம் நாடாது. இச்சையைத் துறத்தல் செல்வத்துக்கேது. பேராசையைத் துறத்தல் இன்பத்துக்கேது.

௧௩. அறிவாவது யாது? சமாதானமாவது யாது? அடக்கமாவது யாது.

பதிஞானமே அறிவினுட் சிறந்தது. மனச் சமாதானமே சமாதானங்களுட் சிறந்தது. மனத்தை யடக்கலே அடக்கமாம்.

இவ்வாறாக வெண்ணிறந்த வினாக்கள் வினவப்பட்டன. அவற்றுக்கெல்லாம் உதிஷ்டிரன் தக்க விடையளித்தான். அதுகண்ட யக்ஷன் மகிழ்ந்து நான் வினவியவற்றுக்கெல்லாம் தடையின்றி விடையீந்தனை. அதனால் மிக மகிழ்ந்தேன். உன் சகோதரருள் ஒருவன் உயிர்பெறக் கடவனென்றான். அதற்கு உதிஷ்டிரன் நகுலன் உயிர்பெறக்கடவன் என்ன, யக்ஷன், வீமனன்றோ உனக்குத் துணைவன், அர்ச்சுனனன்றோ உன் உயிர்போன்றவன்; அங்ஙனமாகவும் நகுலனை நீ விரும்புவது யாதுபற்றி யென்றான். உதிஷ்டிரன் தருமத்தை நோக்காது தனது கருமத்தை நோக்கலாகாது. ஆதலால் என் தாய்க்கு நான் புத்திரனாயிருக்கிறேன். நகுலன் இறப்பினோ அவன் தாய் புத்திரனில்லாதவளாவாள். ஆதலால் அவனே எழும்புக வென்றான்.

அதுகேட்ட யக்ஷன், உதிஷ்டிரனைப் பார்த்து, இத்துணைத் தருமசொரூபியாகிய உனக்குத் துன்பம் வருதல் தகாது. ஆதலால் உன் தம்பியர் நால்வரும் உயிர்பெறக்கடவர் என்ன, யாவருந் துயிலொழிந் தெழுந்தார்போன்றெழுந்தனர். அப்பால் இதுகாறும், தம்மை வெளியிடாது யக்ஷனெனக்கூறி நின்ற காலக்கடவுள், உதிஷ்டிரனுக்கு வெளிப்பட்டு அஞ்ஞாதவாசம் இடையூறின்றி முடிக்கவென்றாசீர்வதித்து மறைந்தனர்.

பாண்டவர்கள், வனத்திலும் மலையிலும் தீர்த்தக்கரைகளிலும் திவ்வியக்ஷேத்திரங்களிலும் சிற்சில தினங்களாகத் தவத்தினாலும், தருமசாஸ்திர சிரவணங்களாலும் சாதுசங்கத்தினாலும் பன்னீராண்டு மொருவாறு கழித்தனர். இப்பன்னீராண்டினுள்ளே அவர்கள் தரிசனஞ் செய்யாதஸ்தலமும், வணங்காத முனிவரும், பெறாத நல்ல வரங்களும், கேளாத ஞானநூல்களும், கால்படாத மலைகளும் இல்லை. பாண்டவர்க்குப் பன்னீராண்டு வனவாசமும், துன்பமும், பொன்னைப் பசுந்தங்கமாக்குமாறு செய்யப்படும் அக்கினிவேதை போலாயினமையின், அவை அவர்களை அவ்வனவாசத்துக்கு முன்னர்த் தம்மிடத்துள்ள குறைகளெல்லாந் தீர்ந்து, நிரம்பிய அறிவும், நிரம்பிய வலிமையும், நிரம்பிய வரப்பிரசாதங்களும், நிரம்பிய தெய்வாநுக்கிரகமும், நிரம்பிய மனத்தூய்மையு முடையராய் விளங்கவைத்தன. வேதவியாசர் முதலிய மகாரிஷிகள் காலந்தோறுஞ் சென்று பாண்டவர்க்கு வைதிக லௌகிக உபதேசங்கள் செய்து வந்தமையின், அவர்கள் தளராது, கலங்காது, மயங்காது



வனவாசத்தைக் கிரமமாகக் கழித்து இத்துணைப் பெறும் பேறுகளையெல்லா மடைந்தார்கள். வனவாசத்துக்கண் பாண்டவர்க்கு அசுரராலும் மிருகங்களாலும் சில துன்பங்கள் நேர்ந்தனவாயினும், அசுரரும் மிருகங்களும் வெளிப்படத் தீங்குபுரியப் புகுந்தமையின், துரியோதனன்போல் கபட சத்துருக்களல்லவெனத் துணிந்து, துரியோதனன் வாழுகின்ற நாட்டினும் அசுரரும் மிருகங்களும் வாழுங் காடே சிறந்ததென அந்நாட்டைவிட்டு நீங்க மனமில்லாதவர்களாய்த் தம் பிரதிக்கினையை முடிக்குமாறே அங்குநின்றும் மீள்வாராயினார்கள். இவ்வாறே வனவாசமுடிந்து அஞ்ஞாதவாசம் தொடங்கியது.

---

## ௪௨. அஞ்ஞாதவாசம்.

பாண்டவர்கள் இதுகாறும் கழித்த பன்னிரண்டுவருஷ வனவாசத்தையும் இனிக் கழிக்கக்கிடக்கும் பன்னிரண்டுமாத அஞ்ஞாதவாசத்தையுஞ் சிந்தித்தார்கள். பன்னிரண்டு வருஷத்தினும் பன்னிரண்டுமாசமே கடத்தற்கரிய காலமெனச் சிந்தையிற் கொண்டார்கள். அவர்கள் எல்லாருமொருங்குகூடி, யாது செயற்பாலது, யாங்குச் செல்வதுஎனக் கருத்தூன்றிச் சிந்தித்தார்கள். ஒருவரோடொருவர் உசாவினார்கள். துரியோதனாதியர் கண்ணுக்குங் கருத்துக்குமெட்டாமல் எவ்விடத்தில் எவ்வாறிருப்ப தென்றும், அவர்கள் கண்ணுக்ககப்படவரின் பின்னரும் பதின்மூன்று வருஷகாலம் அலையவருமே யென்றும் எண்ணியெண்ணி ஒருதலைத்துணிவுமின்றிச் சிறிதுநேரங் கவன்றார்கள்.

ஈற்றில் அவர்கள் எத்தேசம் துரியோதனனும் அவன் ஒற்றரும் செல்லத்தகாத பகைநாடென ஆராய்ந்தபோது, விராடதேசம் ஞாபகப்பட, அதுவே தாமிருத்தற்கேற்புடைய தேசமென்றும், அவ்வேந்தனே தங்கருத்திற் கிசைந்தவனென்றும் நிச்சயித்தார்கள். அப்பால் தம்மைஇன்னாரென்றெவரும் ஐயுறுவகை மறைந்தொழுகுதற்கேற்றவுபாயம் யாவையென்று சூழ்ச்சிசெய்தார்கள். அப்பொழுது உதிஷ்டிரன், தான் அந்தணவடிவங்கொண்டு விராடராஜன்பாற் சென்று அவனுக்குக் கதாப்பிரசங்கியாகி அவனை மகிழ்வித்தலையே தொழிலாகப்பூண்டு காலங்கழிக்கலாமெனத் துணிந்தான். அதுதக்கு

தென்று மற்றோருமொப்பினர். அப்பால் வீமன் தான் கற்ற பாக சாஸ்திரவித்தையைக் காட்டி விராடன்பால் மடைப்பள்ளி அதிபனாகவிருந்து காலங்கழிக்குமிடத்து, அரசராயினோர் மடைப்பள்ளி வேலைக் குடன்படாரெனக்கொண்டு ஒருவருந் தன்னை ஐயுறாரெனத் துணிந்தான். அதுவும் யாவர்க்கும் சம்மதமாயிற்று. அதன் பின்னர் அர்ச்சுனன், தான் தேவலோகஞ் சென்றிருந்தபோது கற்ற காந்தருவவேதமாகிய சங்கீதசாஸ்திரத்தையும், ஊர்வசியால் வந்த பேடிரூபத்தையுங்கொண்டு தன்னை எவரு முணராவகை விராடன் அந்தப்புரத்துக் கன்னியர்க்குந் தேவியர்க்கும் சங்கீதம் பயிற்றும் பெண்ணாகவிருந்து காலங்கழிக்கத் துணிந்தான். அப்பால் நகுல சகாதேவர்கள் குதிரைப்பந்திக்கும் ஆனிரைக்கும் வைத்தியர்களாக விருந்து காலங்கழிவுசெய்யில், அரசராயுள்ளோர் அத்தொழிற் கமையாரெனக்கொண்டு பிறர் தம்மை நாடாவகை காலங்கழிக்க நிச்சயித்தனர். திரௌபதி வண்ணமகள் வடிவம் பூண்டு காலங் கழிப்பதாக நிச்சயித்தாள்.

இவ்வாறு யாவரும் தத்தம் கருத்தைக்கூறிப் பன்னிரண்டாம் வருஷமுடிந்த அவ்விரவிலே தம்மயலிலேயிருந்த இருஷிகள்பாற் சென்று, இனி உம்மை யெப்போது காண்போமென்று பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து, அவர்பால் ஆசிகொண்டு நீங்கி, விராடநகரைத் தனித்தனி அடைந்தனர். உதிஷ்டிரன் விராடன் சபையை யடைந்து ஆசிகூற, அவனெழுந்துபசரித்து உமது வரலாறு யாதென்ன, உதிஷ்டிரன், யான் உதிஷ்டிரனோடிருந்த அந்தணன்; என் பெயர் கங்கன். உதிஷ்டிரன் காடு சென்றபின் பலநாடுகளிலுஞ் சென்று சஞ்சாரம் பண்ணிக்கொண்டு இந்நாட்டிலும் நின்னோடிருந்து சில தினங் கழிக்கவெண்ணியடைந்தேன் என்றான். அதுகேட்ட விராடராசன் மகிழ்ந்து, நீர் எம்மோடிருக்க யான் செய்த தவமே தவமென் றுபசாரமொழி பலகூறிப் புகழ்ந்து அவனுக்கு வேண்டுவவெல்லாம் வழங்கித் தன்னோடிருத்தினான். அடுத்தநாள் வீமன் விராடராஜனை யடைந்து அவனை வணங்குவான்போல் அவன் பக்கத்திலே வீற்றிருந்த கங்கமுனியை வணங்க, விராடன் அவனை நோக்கி உன் வரலாறென்னையென, அவன் யான் வீமசேனன்பாலிருந்த பலாயனன் என்போன். மடைத்தொழிலிலும் மல்யுத்தத்திலும் வல்லேன். வீமசேனனைப் பிரிந்தநாண் முதலாக மிகவருந்திக் காலங்கழித்தேன்,



இப்பொழுது செல்வமிக்க உன்பால் வந்தடைந்தேன் என்றான். விராடன் மிக்க மகிழ்வுடையவனாகி அவனைத் தன் மடைப்பள்ளிக் கதிபதியாக்கி அவனுக்கு வரிசைகளும் பல வழங்கினான். இரண்டு தினஞ் சென்றபின்னர் அர்ச்சுனன் பேடிரூபத்தோடு விராடன் சபையை யடைந்து, தன்னை அர்ச்சுனன் மாளிகையிலிருந்த பிருகந்நளை யென்னும் பாண்மகளென வெளியிட்டு அவன் மாளிகைக்குப் பாடகியாயினான். இவ்வாறே நகுலசகாதேவர்களும் போய் விராடனுக்குக் குதிரை வைத்தியனாகவும் இடையனாகவும் அமர்ந்தனர். அப்பால் திரௌபதியும் விரதசாரணி யென்னும் பெயரோடு விராடன் தேவியருக்கு மாளிகையில் வண்ணமகளாக அமர்ந்தாள்.

---

## ௪௫. கீசகன் வதை.

இங்ஙனமாகப் பாண்டவர்கள் விராடதேசத்திலிருந்து காலங் கழிக்குநாளில் ஒருநாள் விராடராஜாவினது தேவிக்குச் சகோதரனாகிய கீசகன், வண்ணமகளாகவிருந்த திரௌபதியைக் கண்டு அவள்மேற் காதல்கொண்டான். கீசகன் புஜபலத்தினால் சிங்கேறு போன்றவன். துரியோதனன் விராடதேசத்தின் மேற் படையெடாவண்ணம் அவனை அடக்கி வைத்ததும் கீசகன் தோள்வலியேயாம். கீசகனது பராக்கிரமமே விராடதேசத்தைச் சுயாதிபத்தியமாக்கியதுமாம். இத்துணைச் சிறந்த பராக்கிரமசாலியாகிய கீசகன் எண்ணத்துக்கு விராடன் பத்தினி மாறுகூறுபவளல்லளாதலின், அவன் அவளைத் தன் கருத்துக்கு அநுகூலியாயிருக்குமாறு உடன்படுத்திக் கொண்டு காலம் பார்த்திருந்தான். ஒருநாள் திரௌபதியைத் தனிமையிற் கண்டு வழிமறித்துத் தன் கருத்தை வெளியிட, அவள் அவன் கருத்துத் தகாதென மறுத்தாள். கீசகன் காமத்தீயினாற் கண்ணிழந்து அவளை வலிதிற்றழுவ முயன்றான். அக்குறிப்புணர்ந்து திரௌபதி அவ்விடத்தை விட்டோடக் கீசகனும் அவளைத் தொடர்ந்தோடினான். அவள் இது முறையோ முறையோவென்றழுது கொண்டு அரசன் சபை சேர்ந்தாள். அரசன் கீசகன் முறைகேட்டை யுணர்ந்தும் அவனுக்கஞ்சி, அவனைக் கேட்டுக் கண்டிப்பதாகக்கூறி, அவளை அந்தப்புரத்துக்கனுப்பிவிட்டு, மேல் யாதுஞ் செய்யாது

விடுத்தான். அஃதுணர்ந்த திரௌபதி தன்குற்றமதையும் மேல்
விளைவதையுமெடுத்து வீமனுக்குரைத்தாள். வீமன் அத்துஷ்டனை
அடக்காமல் விடலாகாதென வுட்கொண்டு திரௌபதியை நோக்கி
கீசகனை இனிச் சந்திக்கும்வேளையில் அவன் கருத்துக் கிசைந்தாற்
போல் நடித்து அமாவாசைநாளில் வருமாறு கூறித் தப்பிக்கொள்ளக்
கடவையென்றான். அதற்கு அவளுஞ் சம்மதித்தவ்வாறுசெய்து விட்டு
வீமனுக்குணர்த்தினாள். வீமன் அவளைப்போல் வேஷம்பூண்டு இர
வாகிய இருட்போர்வை போர்த்துக் குறித்தவிடஞ் செல்ல, காமத்
தீயால் வெந்து வாடி நொந்து வரவு பார்த்திருந்த கீசகன் வீமனைக்
கண்டமாத்திரத்தே திரௌபதியென நம்பி என் உயிர்க்குறுதியாகிய
அமிர்தமேயெனக் கட்டித்தழுவ, வீமன் புலியெனப் பாய்ந்து தன்
அஞ்ஞாதவாசத்தின்பொருட்டு வாய்பேசாது போர் தொடுத்தான்.
கீசகனும் தன் காமவெறியும் மதுமயக்கமும் தெளிந்து, இது
சூதெனத் துணிந்து ஆண்மைகொண்டு, தான் இவ்வாறுகப்பட்ட
மைக்கு நாணி வாய்பேசாது மற்போராடினான். வீமன் கீசகனை
வாரி நிலத்திலறைந்து கொன்றொழித்துவிட்டுப் பிறரறியாவண்ணம்
தன் படுக்கையறை போய்ச்சேர்ந்தான்.

காரிருளிலே நடந்தமையாலும் இருவரும் வாய்பேசாது
பொருதமையாலும் கீசகனிறந்த செய்தி விடியுங்காறும் வெளிப்
பட்டிலது. விடியற்காலத்திலே கீசகன் பனைபோல் வீழ்ந்து மாண்டு
கிடத்தலைக் கண்ட பரிசனங்கள் வயிறலைத்தோடி அரசனுக்குந்
தேவிக்கு முணர்த்தினார்கள். நகரமாந்தரெல்லாஞ் சென்றங்கே
கூடியதிசயித்துக் கீசகனைக் கொன்றவர்கள் மானுடரல்லர்; கந்தரு
வரே கொன்றொழித்தனர். இது விரதசாரணியினது கற்பைச்
சிதைக்கவெண்ணிய பாவத்தின் பயனெனத் துணிந்தார்கள். அப்
பொழுது கீசகன் தம்பியர் நூற்றுமூவருஞ் சினந்தெழுந்து கீசக
னுடலோடு விரதசாரணியையும் சேர்த்துத் தகனஞ்செய்வோமென்று
கூறி அவளையும் சுடுகாட்டிற்குக் கொண்டேகினார்கள். அதனை
யுணர்ந்த வீமன் சுடுகாட்டையடைந்து அவரையெல்லாங் கொன்
றொழித்துவிட்டுத் திரௌபதியை மீட்டுக்கொண்டு திரும்பித் தன்
மடைப்பள்ளி சேர்ந்தான். இது செய்தவன் யாவனென்றுணரா
வகை வீமன் வேற்றுருக்கொண்டு போய்ச் செய்தானாதலின் அரச
னுந் தேவியும் கீசகர்க்குச் செயற்பால தீக்கடன் முதலியன முறைப்



படி நடத்தியபின்னர்த் திரௌபதியைத் தெய்வக் கற்புடையா
ளெனக் கொண்டஞ்சி யொழுகினார்கள்.

கீசகன் இவ்வாறு மாண்டொழிந்தபின்னர் விராடராஜன் தேவி
தன் மாளிகையிலே விரதசாரணியை வைத்திருக்க மனமில்லாத
வளாய் அவளை வேறிடஞ் செல்லுமாறு கூற, அவள் பதின்மூன்று
நாளில் அங்குநின்றுஞ் செல்வதாகக் கூறி அங்கிருந்தாள். பாண்ட
வர்க்கு அஞ்ஞாதவாசகால முற்றுதற்கு இன்னும் பதின்மூன்று
நாளே கிடந்தன. இப்படியிருக்கையில் துரியோதனன் பாண்டவர்
கள் மாண்டொழிந்தனரா அன்றி உயிரோடிருக்கின்றார்களாவென்
றறிந்துவருமாறு நாற்றிசையு மொற்றர்களைப் போக்கினான். ஒற்றரும்
நாற்றிசைக்கண்ணும் மின்னென விரைந்து நாடுகள் காடுகள் மலைகள்
நகரங்கள் எங்குந்துருவி ஆராய்ந்து மீண்டுபோய்த் துரியோதனன்
சபையையடைந்து யாவரும் வணங்கிப் பாண்டவர்களை யாண்டுந்
தலைப்பட்டிலேமெனக் கூறினார்கள். அவருள் ஒருவன் விராடதேசத்
திலே கீசகன் கந்தருவரால் மாண்டானென்பதுணர்ந்தேன் என்
றான்.

---

## ௪௪. துரியோதனன் விராடதேசத்திற் படையேற்றல்.

அதுகேட்ட துரியோதனன் பாண்டவர்கள் அந்நகரிலேயே
யிருத்தல்வேண்டுமென அறிந்து விராடநாட்டிற் படையேற்றுமிடத்
துப் பாண்டவர்கள் அங்கிருப்பின் வெளிப்படுவாரெனத் துணிந்
தான். துச்சாசனன் பாண்டவர்களின்னு முயிரோடு வாழுகின்
றார்களென நினைத்தலும் அவரைத் தேடுதலும் வியர்த்தமாம். அவர்
கள் மாண்டொழிந்து மண்ணாயினாரென்பதற்கு ஐயமில்லையென்றான்.
துரோணகிருபவிதுரர்கள், பாண்டவர்கள் அக்கதியடைய வேது
வில்லையென்றார்கள். கர்ணன் போருக்காயத்தராயிருந்தால் அவர்க்கு
நாம் அஞ்சவேண்டுவதில்லையென்றான். அதுகேட்ட துரியோதனன்
விராடதேசத்திற் படையேற்றி நிரை கவர்வதே தக்கதெனத்
துணிந்து தனது சேனைகளைப் புறப்படுமாறு பறைபோக்கினான்.

அவ்வாறே துரியோதனன் தன் படைகளை இருகூறாக்கி ஒரு
கூற்றைச் சுசர்மன் என்பவனோடனுப்பி விராடநகரைத் தென்பாலிற்

சென்று தாக்குமாறு செய்தான். சுசர்மன் என்பவன் முன்னொரு நாள் விராடனுக்குப் போரிலே தோற்று முதுகிட்டவனாதலின், அப்பகையைத் தீர்க்க இது நல்ல அமையமெனக் கருதி அப்படையோடு மிகத் தருக்கிப் போர்ப்பறை முழக்கிநடந்து நகரத்துக்குத் தென்புறஞ் சார்ந்தான். அதுகண்டு விராடன் தன்படைகளையெல்லாந் திரட்டி அணிவகுத்தெதிரூன்றிக் கொடிய யுத்தஞ் செய்தான். சுசர்மன் சேனையும் மிக்க வீரத்தோடும் வன்கண்மையோடும் அஸ்தமயனத்தின் பின்னரும் முனைந்து யுத்தஞ்செய்தது. விராடன்சேனை நிருவகிக்கவியலாது பின்வாங்கத் தலைப்பட்டது. அதுகண்டு சுசர்மன் வீரமிக்கவனாய்ப் பாய்ந்து விராடனைச் சிறைசெய்து ஜயபேரி முழக்கி மீண்டான்.

---

## ௪௫. வீமன் விராடனை மீட்டு, சுசர்மனைச் சிறைப்படுத்தல்.

அதனைக் கேள்வியுற்ற உதிஷ்டிரன், வீமனை நோக்கி விராடன் அன்னத்தையுண்டு அவனுக்கு ஆபத்துவந்த காலத்தில் அவனுக்குத் துணைபுரியாதிருப்பது நமக்கழகாகாது எனக்கூற, வீமன் அவ்விரவாகிய கவசம்புனைந்து சிங்கேறுபோற் பாய்ந்து சுசர்மனைச் சிறைசெய்து விராடனை மீட்டான். விராடன் மிக்க களிப்புடையனாகி நகருக்கு மீளாது யுத்தகளத்திற்குச் சமீபத்திலே தங்கி அவ்விரவெல்லாம் ஆடல்பாடல்களாற் கழித்துக் களித்திருந்தான். இங்கே இதுநிகழ இந்நிகழ்ச்சியொன்று மறியாத துரியோதனன் வைகறைப்போதிற் கடல்கரைகடந்து முழங்கி ஆர்த்தெழுந்துபோய் வடபால் நகரை மூடினாற்போலத் தன் படையை நடத்தி வடவாயிலின்வழியே ஆனிரையைக் கவர்ந்தான். அதுகண்ட ஆன்காவலர் அஞ்சியோடி விராடன் மைந்தனாகிய உத்தரன்பாற்கூற, அவன் தன் இளமையையும் போர்க்களப் பயிற்சியின்மையையும் நோக்காது பசுநிரைகவர்ந்து செல்லும் பகைவரை யோட்டி வருவேனெனக் கூறிப் புறப்பட்டான். புறப்பட்டுத் தனக்குத் தேர்ச்சாரதியாகத் தக்கவர் யாவரென்று நாடியபோது திரௌபதி, பிருகந்நளையினது தேர்ச்சாரத்திய சாமார்த்தியத்தை யெடுத்துப் பாராட்ட, உத்தரகுமரன் பிருகந்நளையைச் சாரதியாக்கித் தேர்மிசைக்கொண்டு நடந்தான். பிருகந்நளை தேர்



செலுத்துஞ் சாமார்த்தியத்தை உத்தரன் கண்டதிசயித்துச் சென்று துரியோதனன் சேனையைக் கண்டான். அது துரியோதனன் சேனையென்பதுணர்ந்து, உத்தரன் தனக்கெதிரே நிற்குஞ் சேனையினது பெருக்கத்தையு மிரணபேரிகையினது இடிமுழக்கையும் புலங்கொண்டான். இப்பெருஞ் சேனைக்கு யான் தப்பி உயிர்பிழைப்பதெங்ஙனமெனச் சிந்தித்தான். உடம்பெல்லாம் வியர்வை பொங்கியெழப்பெற்றான். அச்சமே மனத்திற் குடிகொள்ளப் பெற்றான் சாரதியை நோக்கித் தேரைத் திருப்புகவென்றான். சாரதி, யுத்தத்திற்கு வந்து சேனையைக் கண்டஞ்சிப் புறங்கொடுப்ப தாண்மையன்று அஞ்சாதிருக்கக் கடவையென்று உத்தரகுமாரனைத் தேற்ற, அவன் தேறாது தேரினின்றும் பாய்ந்து புறங்கொடுத்தோடத் தலைப்பட்டான்.

அதுகண்ட அர்ச்சுனன் அவனை மடக்கித் தூக்கித் தேர்மிசையிருத்தி யான் போர்செய்து இப்பெருஞ் சேனையையெல்லா மொரு கணப்பொழுதில் வெல்லுவேன் நீ சாரதியாகுகவென, உத்தரன் அதுவுங் கேளாதுடல் நடுங்கி உள்ளங் குன்றினான். அர்ச்சுனன் நமது அஞ்ஞாதவாசகாலம் கடந்த இரவோடு கழிந்தொழிந்தமையின் இனி நான் வெளிப்படினும் தோஷமாகாதெனத் துணிந்து தன்னை அர்ச்சுனனென வெளியிட, உத்தரன் போனாந்தமும் பேராண்மையும் பெற்றுடன்பட்டான். உடன்படுதலும் அர்ச்சுனன் தான் முன்னே காளிகோயிற் சந்நிதியிலே வன்னிமரப் பொந்தில் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களை யெடுக்குமாறு அவ்விடத்திற்குத் திரும்பி ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு யுத்தகளத்தை யடைந்தான். அங்கே அர்ச்சுனன் துரியோதனாதியரைக் கண்டு, இவர்க்கும் போர் மூளுங்காலத்தில் நான் செய்யும் போர்த்திறத்தை இன்று நான் செய்யும் போராண்மையினால் அவர் சுவைத்துணருமாறு செய்தல் வேண்டுமென வுள்ளத்திற்கொண்டான்.

அர்ச்சுனன் வருகின்ற வீரப்பொலிவையும் தேரிலே உத்தரனும் அர்ச்சுனனும் ஆள்மாறிக்கொண்டதையும் தேர் செலுத்தப்படுகின்ற பக்குவத்தையும் வீஷ்மதுரோணர்கள் ஊன்றி நோக்கினார்கள். அர்ச்சுனனை அவன் செயல்களாலும் ஆண்மையாலும் அவர்கள் அர்ச்சுனனென்றே துணிந்தார்கள். அவன் வருகின்ற வேகத்தையும்

பொலிவையும் நோக்குமிடத்து, அவன் தான் பெற்ற விஜயன் என்னும் காரணப்பிதானத்தை நாட்டாமற் போகானென்ப துண்மையாமெனவுந் துணிந்தார்கள். துணிந்தபின்னர் அவர்கள் உரியநாள் வருமுன்னே அர்ச்சுனன் வெளிப்பட்டுவிட்டானே வென்னும் அச்சமீதூர்ந்தவர்களாய்க் காலகணிதஞ் செய்தார்கள். கணிதத்தினால் முதனாளோடு அஞ்ஞாதவாசங் கழிந்ததெனக் கண்டு ஆனந்தித்து அர்ச்சுனனை முகமலர்ச்சியோடு உற்றுநோக்கிக் குறிப்பினால் வாழ்த்தினார்கள். அர்ச்சுனனும் அக்குறிப்புணர்ந்து பார்வைக் குறிப்பினால் தன் உவகையை வெளியிட்டான். அப்பொழுது துரியோதனனும் போருக்கு வந்திருப்பவன் அர்ச்சுனனென வொற்றராலுணர்ந்து, காலகணிதத்திலே தவறி, அர்ச்சுனன் முந்தி வெளிப்பட்டுவிட்டானெனக்கொண்டு ஆனந்தக் கூத்தாடினான். அவன் பாண்டவர்கள் பின்னரும் பதின்மூன்றுவருஷங் காடுகொள்ள வேண்டியவராய்விட்டனர் என்று ஆரவாரித்துக் கூறியெழுந்து பின்னருமாடினான். அதுகண்டு வீஷ்மர் அவனை மறுத்து நேற்றோடு அஞ்ஞாதவாசகாலம் முடிந்தது. ஆராயாமல் அகங்கரித்து அகங்களிப்பது அறிவின்மையாம் என்று கூற, துரியோதனன் அற்றாயின் யுத்தஞ்செய்வாமென்றான். வீஷ்மதுரோணர்கள் துரியோதனனை நோக்கி, நீ கூறுவது தகாது, பாண்டவர்கள் இதுகாறும் நீ செய்த தீங்குகட்கெல்லாம் தப்பி அவற்றால் மேன்மேலும் வலியுடையராய் விளங்குதலைக் கண்டும் நீ இன்னும் பகைக்கத்துணிவது வேரோடு மாளுவதற்கேதுவாகும். அவர்கள் நற்குண நற்செய்கையை ஈசுரபத்தியிலே சிறந்தவர்களாயிருத்தலின் அவரை வெல்வது யார்க்குமரிதாம். யாரையும் அவர்களே வெல்லுவார்கள். நீ அவர்க்கு நிகராகமாட்டாய். தோற்றோடுதலே உனக்குக் கிடைக்கும் பயனும். ஆதலால் நீ கவர்ந்த பசுநிரைகளை விடுத்துச் சமாதானப்படுவதே ஏற்ற வுபாயமென்றார்கள். அவ்வுரையெல்லாம் அவனுக்குப் புறக்குடத்து நீராயின.

---

## ௪௬. துரியோதனன் பசுநிரையைக் கவர்தல்.

எத்தனைதான் புத்திகூறினும் துரியோதனன் கேளானாய்ப் போர்க்கறை கூவினான். அர்ச்சுனன் தேர் கரகரவென்று விரைந்து களத்திற் புகுந்தது. அவன் கையிலிருந்த காண்டீவமென்னும்



வில்லினது நாணொலி பகைவர் நெஞ்சந் துணுக்குறச் செய்தது. கர்ணன் தன்மீது விடுத்த பாணங்களையெல்லாம் அர்ச்சுனன் பிரதி பாணங்களாற்றுணிந்து அவன் பாணம் தொடுக்குமுன் வேறு சரந் தொடுத்து அவனுடலைத் துளைத்து முதுகிடச் செய்தான். கர்ணன் தன் உடலெங்குஞ் சோரிகக்கக் களம்விட்டோடுவது கண்ட கிருபன் அர்ச்சுனனை எதிர்த்தான். அவனையும் அர்ச்சுனன் செவியைச் சிதைத்துவிட அவனும் புறங்காட்டினான். அதுகண்டு துரோணர் வீராவேசத்தோடு முற்பட்டார். அவர் குருவாதலின் அவரை வணங்கி நீர் பாணந்தொடுத்தருளிய பின்னரே யானும் பாணந் தொடுப்பேனென்றார்ச்சுனன் குறிப்பாலுணர்த்த அவர் அதனை யுணர்ந்து முதலிற் சாமாரி பொழிந்தனர். அம்மாரியை அர்ச்சுனன் தன் பாணவருஷத்தாலழிக்கக் குரு சீஷர் இருவர்க்குமிடையே கொடிய யுத்தமூண்டு சிறிதுநேரம் நடந்தது. அர்ச்சுனனது வில்லாண்மைக்கும் சரந்தொடுக்கும் கரவேகத்திற்குந் துரோணர் நிருவகிக்கவியலாது பின்வாங்கினர். அதுகண்டு அஸ்வத்தாமன் விஜய சங்கமுழக்கிக் களம்புகுந்தான். அவனும் சிறிதுநேரம் தனது வில்லாண்மையைக் காட்டி அர்ச்சுனன் வில்லாண்மைக்கு எதிர்நிற்கவியலாது மின்னெனப் பின்வாங்கினான்.

அப்பால் அர்ச்சுனன் தன் இரதத்தைப் பகைவர் சேனைக்குள்ளே செலுத்தித் துச்சாசனன் முதலியோரைத் துரத்த அவரெல்லாம் போர்க்களம் விட்டோட்டெடுத்தனர். அதுகண்டு வீஷ்மர் எதிர்க்க அவரையும் சிறிதுநேரங் கொடும்போரிலே மூர்ச்சையாக்கி வெற்றி கொண்டான். அதன் பின்னர் அர்ச்சுனன் தனது ஜயபேரி முழங்கத் துரியோதனனை எதிர்த்து அவனையுமொரு கணப்பொழுதில் முதுகிட்டோடச்செய்து தனது சங்கத்தில் விஜயமுகஞ்செய்தான். துரியோதனாதியர் சேனையெல்லாம் இவ்வாறே முனைகெட்டுப் போன திசைதெரியாமலோட்டெடுத்தபின்னர், அர்ச்சுனன் ஜயபேரி முழங்கவும், உத்தரன் ஆனந்தக்கூத்தாடிப் புகழவும், தேவர்கள் மலர்மாரி தூவிக் கொண்டாடவும், தனது தேரைத் திருப்பிக்கொண்டுபோய் வன்னிமரத்திலே தனது வில் முதலியவற்றை வைத்துவிட்டு, உத்தரனைத் தன்னாசனத்திருத்தித் தான் முன்போற் பேடிரூபங் கொண்டு சாரதியாகித் தன்னை வெளியிடாவகை உத்தரனுக்குக் கற்பித்து விராடநகரை நோக்கி மீண்டான்.

இதற்கிடையில் விராடன் கங்கமுனியை நோக்கித் தன்மைந்தன் விஜயபேரி கேட்கப்படுகின்றதென்றான். கங்கமுனியாகிய உதிஷ்டிரன், பிருகந்நளையோடு சென்ற உத்தரன்பால் விஜயபேரி முழக்கங் கேட்பதரிதோ வென்றான். அதுகேட்ட விராடன் பேடியால் நம்மைந்தனுக்கு ஜெயமுண்டாயிற்றோவெனச் சினந்து தன் கையிலிருந்த வில்லினால் உதிஷ்டிரன் நெற்றியிலடிக்க உதிரங் கக்கத் தலைப்பட்டது. அதனை உதிஷ்டிரன் கீழே விழவிடாது கையில் ஏந்தினான். அதுகண்ட திரௌபதி ஒரு பொற்கிண்ணத்திலே ஜலங் கொண்டுவந்து கொடுத்து அதனைக் கழுவுவித்து மேலிரத்தஞ் சோரா வகை செய்தாள். இது நிகழும்போது உத்தரனும் வந்து வாயில் சேர்ந்தான். வாயிலாளர் உத்தரன் வரவை விராடனுக்கு விண்ணப்பஞ் செய்ய, கங்கமுனிவன், பேடி இங்கே வந்து என் முகத்தில் உதிரஞ் சொரிவதைக் காண்பனேல் பெரும்போரே விளையுமெனச் சிந்தித்து வாயிலாளரை நோக்கி, பேடியைத் தடுத்து உத்தரன் மாத்திரம் வரட்டும் என்றான். அவ்வாறே உத்தரன் தந்தைசபையையடைந்து இருவரையும் வணங்கினான். இருவரும் வாழ்த்தினர். உத்தரன் கங்கமுனிக்கு நிகழ்ந்ததை அறிந்து விராடனை நோக்கி, தந்தாய், யாதுசெய்தனை! ஆராயாது கங்கமுனிக்குப் பிழைசெய்தனை; அவர் கூறியதனைத்து முண்மையன்றோ. நீ செய்த பிழையைப் பொறுத்தருளுமாறு அவர்பாலிரக்கக் கடவையென்றான். அதுகேட்ட விராடன் அவ்வாறு செய்யக் கங்கமுனி பொறுத்தேன் என்றனன். அப்பால் விராடன் தன் மைந்தனை நோக்கி நீ வெற்றி புனைந்த வரலாறு யாதென்ன, அவன் தனக்கு வெற்றி தந்தவன் திவ்விய பராக்கிரமசாலியாகிய ஓராண்சிங்கம், அவன் இன்னுஞ் சிறிதுநேரத்தில் இங்கு வருதலுங் கூடுமென்றான். அப்பால் அஸ்தமயனத்தின் மேல் நெடுநேரங் கழிந்தமையின் யாவரும் பெருமகிழ்ச்சியோடு போசன முடித்துத் தத்தம் பள்ளியறை சேர்ந்தனர்.

பாண்டவர்கள், பரகாயப்பிரவேசஞ்செய்து மீண்டு தம்முடல் புகுந்தார்போலத் தம் மெய்வடிவத்தோடும் ஆடையாபரணங்களோடும் வெளிப்படும்பகல் வந்ததென்றதனைக் காணுமாறு விரைந்து வந்தான்போன்று சூரியன் உதயஞ்செய்தான். அதற்குமுன்னர் நித்தியகருமமுடித்து ஆடையாபரணாலங்கிருதராகிப் பாண்டவர்களும் வெளிப்பட்டு விராடன் சபாமண்டபத்திற்போய் அரசர்க்குரிய



ஆசனங்களிலே வீற்றிருந்தார்கள். விராடனுமுரியகாலத்திலே மண்டபம் புகுந்தான். அப்போது அங்கே வீற்றிருந்த கங்கமுனியைநோக்கி அந்தணீர், இத்துஷ்டகிருத்தியத்திற் பிரவேசித்ததென்னை" யென்று கோபங்கொதித்துப் பொங்கவுரைத்தான் அதுகேட்டு அர்ச்சுனன், "இவனைக் குருகுலக் காளையும் அறச்செல்வனுமாகிய உதிஷ்டிரனென்றறிக" வென்றான். விராடன் அச்சொற்கேட்டலும் அதிசயமிக்கவனாய் அர்ச்சுனனைப்பார்த்து, அந்தோ! உதிஷ்டிரன் இவனாயின் இவன் தம்பியார்நால்வருமெங்கே! கற்புக்கிலக்காகிய பாஞ்சாலன் புத்திரியெங்கே; என்றான். அர்ச்சுனன், அரசர்கோமானே, அவர் எல்லாம் நின்மாளிகையிலேயே யுளர். இவர் வீமசேனன், இவர் நகுல சகாதேவர்கள், நின்னோடு பேசுகின்றவன் எஞ்சினேன் என்றான். அதுகேட்ட விராடன் அன்பும் ஆனந்தமும் மீதூரப்பெற்று யான்செய்த புண்யமே புண்ணியம்! யான்பெற்ற பேறுலகில் மற்றியாவர் பெற்றார் என்று அவரையெல்லாம் வணங்கி, அன்புறத் தழுவி என் அரசுமுழுவதும் பாண்டவர்க்கும் என்புத்திரி அர்ச்சுனனுக்குமாகுகவென்றான். அர்ச்சுனன் விராடனை நோக்கி நின் பெருந்தகைமை பெரிதும் பாராட்டற்பாலதே. உன் புத்திரியை யான் என் புத்திரியைப்போற் கொண்டொழுகினேன். ஆதலின் அவளை என் மைந்தன் அபிமன்னியுவுக்கு மனைவியாக்குவேன் என்றான். அதற்கு விராடனுமுடன்பட்டு அவர்களை வேந்தர்க்குச் செயற்பால முறையில் விருந்தருந்தித் தான் அவர்களை இன்னாரென்றறியாது ஏவலாளரைப் போல் நடாத்தியதைப் பொறுத்தருள வேண்டுமென்றிரந்தான். அவர்கள் தாம் விராடன் பாலடைந்த சுகம் எவ்வகையிலுந் தேயவுடையதன்றெனக் கூறி மிக்க கேண்மையோடங்கிருந்தார்கள்.

இவ்வாறு வெளிப்பட்ட பாண்டவர்களைக் காணுமாறு, கிருஷ்ணன், அபிமன்னியு, சுபத்திரை முதலிய பலர் விராடராஜதானியையடைந்தனர். அவ்வமயத்தை வாய்ப்பாகக்கொண்டு விராடன் தன் புத்திரியை அபிமன்னியுவுக்கு மணத்திற் கொடுத்தான். இம்மணக் கொண்டாட்டத்தோடு பாண்டவர்களுடைய பதின்மூன்றுவருஷ கஷ்டகாலமுந் தொலைந்து சுபகாலந் தொடங்கியது.

## ௪௭. தூது.

இவ்விவாகம் நடந்தபின்னர் அதன்பொருட்டு அங்கு சென்றிருந்த அரசரெல்லாம் அடுத்தநாளிலே சபாமண்டபத்திற் கூடிப் பாண்டவர்கள் இனிச் செயற்பாலது யாதெனச் சிந்திப்பாராயினார்கள். யாவர் கண்ணும் கிருஷ்ணன்மேல் வீழ, அவன் அச்சபையிலிருந்த பெரியோரை நோக்கி பாண்டவர்கள் தாம் பொருந்திக்கொண்டபடி பதின்மூன்று வருஷத்தையும் முறைப்படி ஆண்மையோடு கழித்து மீண்டார்களன்றோ. அவர்கள் சிறுவர்களாயிருந்த காலந்தொட்டுத் துரியோதனன்பாலடைந்த துன்பங்களும் பொறுத்தற்கரிய வஞ்சகங்களும் உலகறிந்த விஷயங்களேயாம். பாண்டவர்கள் தாஞ் செயற்பாலனவெல்லாஞ் செய்து பொறுக்கவேண்டியவரையும் பொறுத்துவிட்டார்கள் பாண்டவர்க்குரிய அரசைக் கொடுப்பது இப்போது துரியோதனன் கடனாய்விட்டது. கொடுப்பதைக் குறித்துத் துரியோதனன் கருத்து எங்ஙனமென்பதை யாந்துணிவது தக்கதன்று இருதிறத்தினர்க்கும் நன்மையை நாடுவதே அரசனாயினோர் கடனாம். ஆதலின் உதிஷ்டிரனுக்கு அரசிற் பாதி கொடுக்குமாறு துரியோதனன்பால் தூதுபோக்குதல் வேண்டுமென்றான். அதுகேட்ட பலதேவன், கிருஷ்ணன் கூறியதுண்மையே இன்னும் உதிஷ்டிரன் தன் அரசிற் பாதி தனக்குப் போதுமென்றேற்பலின் துரியோதனன் அதற்கு விரைந்துடன்படுதல் வேண்டுமெனவும் சூதாடித் தோற்றது உதிஷ்டிரன் குற்றமேயன்றித் துரியோதனனால் வந்ததன்றெனவும் அவன் உடன்படுமாறு வசியவுரைகளினாலேயே தூதன் கேட்கக் கடவன் என்று கூறினான்.

அதுகேட்ட சாத்தகியெழுந்து, பலதேவர் முந்திக் கூறிய தொக்கும்; பிந்திய கூற்றுச் சிறிதும் பொருந்தாது. அரசருக்குரியவொழுக்கத்தினைக் காக்குமாறே உதிஷ்டிரன் சூதாடினான். ஆதலின் தூதுசெல்வோர் அத்துஷ்டனாகிய துரியோதனன்பால் இரந்துரைக்க வேண்டுவது யாதுமில்லை ஆண்மைகூறிக் கேட்பதே முறையாமென்றான். இவற்றைக் கேட்ட துருபதன், நியாயவழியிலேயே தூதுபோக்கிச் சாந்தத்தோடு கேட்டல் ஆண்மைக்கிழுக்காகாது. ஆயினும் துரியோதனனது நடுநிலையின்மையையும் பேராசையையும், நன்மதிகொள்ளாமுரண்மனவியல்பையும் நோக்குமிடத்து, அயல் அரசர்



களைப் படைத்துணைகேட்டுத் தூதர்களை நாற்றிசைக்கண்ணும் முதலிலே போக்குதல்வேண்டும். முதலிற் படைத்துணை கேட்பவர்க்கே நந்நெறியொழுக்கம் புனைந்துள்ள அரசர் உடன்படுவர். ஆதலின் அதுவே விரைந்து செயற்பாலதாம். அதனையுஞ் செய்து திருதராஷ்டிரன்பாலும் ஒரு முனிவரைத் தூதாக அனுப்புவது நன்றாகுமென்றான். அது கிருஷ்ணனுக்கு முடன்பாடாயிற்று.

---

## ௪௮. தௌமியர் தூதுபோதல்.

அவ்வாறே துருபதன் தனது குருவாகிய தௌமியரைத் தூதாகத் திருதராஷ்டிரன்பால் அனுப்பினான். கிருஷ்ணனும் பாண்டவர்பால் விடைகொண்டு துவாரகைக்குச் சென்றான். மற்றைய அரசரும் தத்தந் தேசஞ்செல்லத் துருபதன் மாத்திரம் கிருஷ்ணனுடைய குறிப்பின்வழி அங்கேயிருந்து நாற்றிசைக்கண்ணும் தூதரை அரசர்பாற் படைத்துணை கேட்குமாறு விரைந்தனுப்பினான். இத்தூதரும் அரசர்பாற் சென்று தமது தௌத்தியத்தை யெடுத்துரைத்துத் தங்கருமமுடிக்கத் தௌமியமுனிவரும் அஸ்தினபுரத்தையடைந்தனர்.

திருதராஷ்டிரன் மாளிகைவாயிலைத் தௌமியர் சேர்தலும், வாயிலாளராலே தௌமியர் தூதாகவந்தனரென்ப துணர்ந்த திருதராஷ்டிரன், சபாமண்டபம் புகுந்து, அங்கே தௌமியரைக் கைகூப்பியுபசரித்தாசன மேற்கொள்ளுவித்தான். அச்செய்திகேட்டுத் திருதராஷ்டிரன் மந்திரத்தலைவரும் துரியோதனன் படைத்தலைவரும் அம்மண்டபஞ் சேர்ந்தனர். தௌமியர்க்குச் செயற்பால வழிபாடுகளை மந்திரத்தலைவரும் மற்றோருஞ் செய்தனர். தௌமியரும் அரசனையுள்ளிட்ட யாவர்க்கும் ஆசிகூறித் தாம் வந்ததூதைக் கேட்குமாறு விடைதருகவென்றனர். திருதராஷ்டிரன் விடைகொடுப்ப, அவர் கூறப்புகுந்தனர்.

"அரசனே! கேட்பாயாக; பாண்டு உன் தம்பியன்றோ. நீ ஆளுகின்ற அரசுஞ் செல்வமும் குருகுலத்துக்கு வழிவழியாக வருகின்ற உரிமையன்றோ. ஆதலாற் பிதிர்வழிவந்த வுரிமையாம். அது நின்னாற் படைக்கப்பட்டதன்று. நீ படைத்த செல்வமும் அரசுமாயின் பாண்டவர்க்குரிமையில்லை. பிதிரார்ச்சிதமாதலின், நின் அங்கனைத்

தினால் உனக்குச் சிறிது முரிமை யில்லையேயாகவும், உரிமையுண்டெனக்கொள்ளின் பாண்டவர்க்குச் சமபாகமுண்டன்றோ. நீயுநின்மைந்தரும் அவர்பாகத்தையெல்லா மொருங்கே கவர்ந்துகொண்டீர். கவர்ந்துகொண்டபின்னர் அவர் வில்லாண்மைக்கஞ்சி அவரைச் சாந்திசெய்யுமாறு ஓரற்ப நாட்டைக் கொடுத்தாய். அதனை அவர்கள் தமது பராக்கிரத்தாற் பேரரசாக்கிக்கொண்டு ராஜாதிராஜராக விளங்கினர். அதனையும் நின்மைந்தன் மாயச்சூதிற் கவர்ந்துகொண்டான். அப்பால் நின்மைந்தன் அவர் பன்னீராண்டு வனவாசமும் ஓராண்டஞ்ஞாதவாசமுஞ் செய்து மீண்டால் அவர்க் கரசுகொடுப்பதாகக் கூறி அவரை நாட்டைவிட்டோட்டிவிட்டான்.

அதற்குமுடன்பட்டு அதனையும் முடித்துமீண்டனர். ஆதலால் நின்மைந்தனும் நீயுஞ் செய்த வாக்கின்படி அவர்களுக்குரிய அரசை அவர்கள் தமக்குத் தந்துவிடும்படி கேட்கின்றார்கள். இது செய்வையேல், அவர்கள், தாம் நின்னாலும் நின்மைந்தனாலுமடைந்த எண்ணிறந்த துன்பங்களையும் கொடிய செயல்களையும் பொறுத்து மறந்துவிடுதற்கும் வாக்குத்தத்தஞ் செய்தார்கள். தாம் யுத்தத்திலே பகைவரைக் கொன்று உதிரப்பெருக்கில் மூழ்காவண்ணம் தாங்கள் செய்த வஞ்சின விரதங்களையும் துறந்துவிடுவதாகவுங் கூறினார்கள். யுத்தம் அவர்க்கு விருப்பன்று. அதனைத் தவிர்க்கும் வழியெல்லாந் தவிர்ப்பர். கூடாதாயின் யுத்தஞ்செய்யவுந் துணிந்திருக்கின்றார்கள். உன் சேனைக்கும் சேனாவீரருக்கும் அவர் அஞ்சுபவரெனக் கொள்ளாதிருக்கக்கடவை. அவர் இத்தூதை அனுப்பியது ஜீவகாருண்ணியம் பற்றியேயாம். அவர் தமது சாதியருள்ளே முதியோரும் பெரியோருமாயுள்ளார்மேல் வைத்திருக்கும் மதிப்பும் பக்தியுமே தாமடைந்த பழிக்குப்பழி கொள்ளாவகை அவரைத் தடுப்பனவன்றித் தடைபிறிதில்லையாம். என் வார்த்தையைக் கேட்பாயாக; இவ்வாய்ப்பாகிய காலத்தை வழுவவிடாமல் கொள்வாயாக. இதனை விடுவையேல் மாள்வதற்கே துணிந்தனையாவாய். உதிஷ்டிரன் வெகுளியும், அர்ச்சுனன் கோபமும், வீமன் கொடுஞ்சினமும் மூளுமாயின், கிருஷ்ணன் சகாயமாகிய காற்றுங்கூடி, நின் குலத்தையும் துணைவரையும் பரிநாசஞ்செய்யாமற் போகாவென்பதை நன்றாக நின்மனத்திடை கொள்ளக்கடவை.

இவ்வுறுதிமொழிகளைத் தௌமியர்வாய்க்கேட்ட சபையிலுள்ளார் அனைவரும் இடியேறு கேட்ட நாகம்போல் உள்ளம்நடுங்கி



அச்சமிகுதியால் யாதுங் கூறவியலாது சித்திரப்பாவையாயினர். அவரெல்லாம் சித்திரப்பாவைபோல் யாதும் பேசாதடங்கியிருத்தலைக் கண்டு வீஷ்மர் எழுந்து அவர்கள் மயக்கத்தை தீர்ப்பார்போல அவர்களைத் தெழித்தழைத்து, தூதாக வந்திருக்கும் தௌமியர் கூறியது முழுதும் சத்தியமே. அவர் கூறியபடி இசையீராயின் நீர் பாண்டவர்கள் கையால் மடிந்தொழிவதுமன்றிக் குலத்தையும் பரிநாசமாக்குவீர். அவருள்ளே வீமனுக்கு இணையான வீரன் நம்முள்ளே யாவனுளன்! அர்ச்சுனனுக்கு முன்னே வில்லெடுத்துப் பாணந்தொடுப்பவன் யாவன்! வாளா ஆண்மை கூறி நாசப்பட்டொழியாது பாண்டவர் அனுப்பிய தூதுக்கிசைந்து போதலே நன்மையின் பாலதாமென்றார். அதுகேட்ட கர்ணன், நகமிழந்த புலிபோல நன்னெறி பேசத் தலைப்பட்டீரென்று வீஷ்மரைப் பலவாறாக விகழ்ந்து தனது வில்லாண்மையைப் புகழ்ந்தான். வீஷ்மர் கர்ணனைப் பார்த்து நன்று கூறினை; உன் வில்லாண்மையைத் திரௌபதி விவாகத்திலே கண்டோம்! கந்தருவன் துரியோதனனைத் தூக்கிச் சென்றநாளிலும் உனது ஆண்மையை கண்டோம். சில பகலுக்குமுன் விராடராஜனை வீமன் மீட்டபோது நீ காட்டிய பேராண்மையையுங் கண்டுளோம். இனிக் கிருஷ்ணனைச் சாரதியாக்கி அர்ச்சுனன் செய்யும் போரிலும் நீயே அவனை வெல்லுவாயென்பதற் கையமில்லையென்று பரிகசித்தனர். அவ்வளவிலே கர்ணன் வாயடங்கினான்.

இவ்வாதங்களைக் கேட்டிருந்த திருதராஷ்டிரன் ஒருதலைத் துணிவுமின்றி உள்ளநடுங்கி மதிமயங்கியிருந்து பின்னர் ஒருவாறு தேறி முனிவரை நோக்கி, முனிவரே, என் மைந்தராகிய பாண்டவரைக் காண வேணவாவுற்றேன். அவரைப் பிரிந்தநாண் முதலாக ஊணுமறந்தேன். அவர் விதியை நினைந்து நினைந்து என் உள்ளமும் நைந்தேன் என்று கூறி, விலைமாதர் பொழியுந் தோதகக் கண்ணீர் பொழிந்து, நீர் சொன்ன தூதுக்கு உத்தரம், என் மந்திரத் தலைவரோடு சூழ்ந்து, எனது குருவாகிய சஞ்சயமுனிவர்பாற் சொல்லியனுப்புவேன் என்றுகூறி அவருக்கு விடையீந்தான்.

அப்பால் திருதராஷ்டிரன் பாண்டவர்க்குச் சொல்லியனுப்பும் உத்தரம் யாதெனத் தோன்றாது மயங்கிச் சிலதினங் கழித்தான். அவன் மனம் உள்ளவாறு அதனால் கலங்குவதாயிற்று. அவன் தன்

மந்திரத்தலைவரோடு ஆராய்வான். 'அவர் அவன் மைந்தனால் விளையப்போகும் கேட்டையும் பாண்டவர்களுடைய வலிமையு மெடுத்துரைப்பக்கேட்டு நெஞ்சந் துணுக்குறுவான். மைந்தனை நோக்கிப் பாண்டவரைப் பகையாதிருப்பவென் றிரப்பான். தன் மைந்தன் தன்கருத்துக்குடன்படாது மறுப்ப மீளவும் பாண்டவர்க் குத் துரோகஞ்செய்யத் துணிவான். துரோகஞ் செய்யும் வழி யாதெனத் தேறாது வாடுவான். தன் உள்ளக்கருத்தை வீஷ்மாதிய ருக்குச் சொல்ல நாணுவான். இப்படியெல்லாம் பலபடச் சிந்தித்து நெஞ்சம் புண்படக் கவன்று விதுரனை நோக்கி, நீயாயினுஞ் சென்று பாண்டவரைச் சாந்திசெய்து வரலாகாதாவென்றான். அவன் அக் கருமந் தன்னாலாகாதென, அந்தகன் சஞ்சயனைத் தூதுபோக்கிப் பாண்டவரைச் சாந்திசெய்யத் துணிந்தான். துணிந்தும் யாது சொல்லியனுப்புவதெனத் தேறாதிருந்தான். அவன் அனுப்புந் தூதும் செவிக்கின்பமும் காரியத்தில் பயனற்றதாயுமிருத்தல் வேண்டுமெனக் கருதினான். அவ்வகைத் தூதைச் சஞ்சயன் கூறுவானாயின் அவன் உயர்வைக் கருதியாயினும் பாண்டவர் கேட்டடங்குவரெனத் துணிந்தான். அவன் துணிந்தும் தூதுரையாதெனத் துணியாது சஞ்சயனோடு உசாவக்கருதி அவனை வரவழைத்துத் தன் கருத்தை யெடுத்துரைத்தான். அதற்குச் சஞ்சயன் பாண்டவர் கேட்பது நியாயமென்றும், அதற்கிணங்காவிடின் பெருங்கேடே வருமென்று மெடுத்துரைக்க, அவனுரையும் திருதராஷ்டிரனுக்கு ஆறாத்துயர் தருவதாயிற்று.

---

## ௫௨. சஞ்சயன் தூது.

ஈற்றிலே திருதராஷ்டிரன் ஒருவாறு துணிந்தான். அவன் தன்னைத் தந்தையென்பதும் துரியோதனாதியரைத் தம்பியரென்பதும் பாண்டவர் கருத்திலிருக்குமாயின் அவர்கள் செய்த குற்றங்களைச் சிறிதும் போற்றாமல் பொறுத்துக்கொள்வதே பாண்டவர்கள் கடனென்றும், தம்பி யரசுசெய்வது பாண்டவர்தமக்கே பெருமையா மென்றுங் கூறிப் பாண்டவர்க்கு அரசின்மேற் கருத்துச் செல்லா வகை உபதேசித்து வருவாயாகவென்று சஞ்சயனை ஏவினான். சஞ்சயன் அவ்வீனான தூதுக்குடன்படேன் எனப் பலவாறு மறுத்தும் திருதராஷ்டிரன் பன்முறை யிரந்தமையால் தூதுக்குடன்பட்டான்.



அவ்வாறே சஞ்சயன் புறப்பட்டு உதிஷ்டிரனிருக்கும் உபபிலாவிய நகரையடைந்தான், அங்கே பஞ்சபாண்டவரும் கிருஷ்ணனும் துருபதனும் விராடனு மிருந்தார்கள். உதிஷ்டிரன் விஷயத்தில் மிக்க அபிமானமுடையவனும் கிருஷ்ணன் தம்பியுமாகிய சாத்தியகியு மங்கேயிருந்தான். அர்ச்சுனனிலும் மிக்க போர்வலியுடைய அபிமன்னியுமங்கேயிருந்தான். இவர்களே யன்றிப் பாண்டவர் புத்திரருமிருந்தார்கள். இவரோடு பிரபல அரசரும் மண்டலீகரும் பலர் அங்கிருந்தார்கள். இப்பெருஞ் சபைநடுவே சஞ்சயன் புகுந்தான். புகுதலும் உதிஷ்டிரன் அஞ்சலிசெய்து அவனை ஆசனத்திருத்தினான். இருந்தபின்னர், உதிஷ்டிரன் சஞ்சயனை நோக்கி க்ஷேமம் வினாவிய பின்னர், நீ உரைக்க வந்த தூதைச் சொல்லக்கடவை யென்னச் சஞ்சயனுஞ் சொல்லப்புகுந்தான்.

வேந்தர்வேந்தே! கேட்பாயாக, திருதராஷ்டிரனும் அவன் புத்திரரும் தாம்செய்த தீவினைகளின் பயனை அநுபவிக்குங் காலம் வருமாயின் அவரைப்போலும் நிர்பாக்கியர் பிறரிவ்வுலகிலே பிறந்திலராவர். இனி அவர் க்ஷேமமாக வாழ்வது யாதுபற்றியோவெனின் அது நின்பொறுமையென்னும் பேரருளினாலேயன்றி மற்றன்று. அவர்கள் செய்த குற்றங்களுக்கு நீ வெகுளுவதானால் அவர்கள் தம் கிளையோடும் பரிநாசப்பட்டொழிதற் கையமில்லை. ஆதலால் இதுகாறும் நீ காட்டியருளிய பொறுமை அவர்கள் காலமரணமடையுங்காறும் நிலைபெறுவதாக. அவர்கள் வாழ்வும் பெருக்கமும் நின் பெருங் கருணையின் காரியமாம். நின்கருணை மாறுமேல் அவர் வாழ்வும் பெருக்கமும் ஒருகணத்தி லொழிந்துவிடும். நீ போருக்குத் துணிவதானால் இதுகாறு மீட்டிக்காத்த பொறையுடைமை யென்னும் பெருஞ் செல்வமும் அதன் காரியமாகிய கருணையென்னும் பெரும் புண்ணியமும் அழிந்துவிடும். நீ போர்விரும்பாதிருக்கவும் துரியோதனன் உன்னைப் போருக்குத் தூண்டுவானாயின் அதற்கு நீ உடன் படலாகாது. உடன்படுவையேல் அருளென்னும் பெருந்திருவும் பன்னாட்செய்த நன்னெறித் தவமும் உன்னைவிட்டு நீங்கிவிடும். அதுவொன்றோ! எத்தனை பெரியோரை எத்தனை ஜீவகோடிகளை வன் கொலைபுரிய நேரிடும்! அப்பழியினின்றும் நீ எளிதில் நீக்கிக்கொள்ள மாட்டாயன்றோ. இவைதாமா! எத்தனையோ வீரர் துரியோதனன் பக்கத்திலுமிருக்கின்றார்களன்றோ. அவரையெல்லாம் நீயு நின் துணை

வரும் ஒருங்கே வெல்வது எளிதன்று. ஆதலின் வெற்றியும் உனக்காமென்பது ஒருதலைதுணியத்தக்கதன்று என்று சஞ்சயன் தன் தூதை முடித்தான்.

அத்தூதுரையின் பின்னயவாசகங்களைக் கேட்குந்தோறுஞ் சினம் பொங்கப்பெற்ற உதிஷ்டிரன் அச்சினத்தின்வழி செல்லாது அதனை ஒருவாறடக்கிச் சஞ்சயனை நோக்கி, சஞ்சயனே! கேள்! நீயோ நமக்குப் புதியவனல்லன். நீ நற்குணமும் நீதியும் பொருந்திய வுத்தமன் என்பது உலகறியும். எம்மையும் நீ நம் சைசவந் தொடங்கி அறிவை, நமது ஒழுக்கத்தால் நமது நெறியையு நிதானஞ் செய்திருப்பாய். நாம் எப்போதாயினும் எம் ஒழுக்கத்தில் இழுக்கியதுண்டாயின் எடுத்துரைப்பாயாக. எம்மையும் துரியோதனாதியரையும் சீர்தூக்கி நிறுத்துத் தாரதம்மியங்காண வல்லவன் நீயன்றியொருவனில்லை. இருதிறத்தினருள்ளும் எத்திறத்தினர் பிழைபுரிந்துள்ளவர் என்பதை நின் நடுநிலை நீங்கா விவேகத்தால் அளவிட்டு வெளியிடக்கடவை. அஃதுன் கடனாக. இனி யுன் தூதையெடுத்தாராயப்புகின், இதுகாறும் பொறுத்தேனென்பது கொண்டு இன்னும் யான் பொறுத்தல்வேண்டுமென்பதே அதன் முடிந்த பொருளாகின்றது. பொறுமையென்பது எனக்கு விருப்பமும் உரிமையுமுடையதோ ருத்தமசீலமேயாம். நல்லறமுந் தீதா மாறுண்டு, பாபகருமமே அதிகரித்து நல்லறத்தைத் தலையெடுக்க விடாதோங்கி நிலைபெறுமாயின் யான் உயிர்க்கொலைக்கஞ்சிப் பாபகருமத்தை அடக்காது வாளாபார்த்திருத்தல் பொறுமையின் பாலதாகாதன்றோ.

மின்னுவனவெல்லாம் பொன்னல்ல; பாலெல்லாம் நல்லாவின் பாலல்ல. நல்லறம் நல்லறமாமாறு யாவர்க்கும் புலனாகாது. அது விவேகிகளாயுள்ள சிலர்க்கே புலப்படும். நல்லறத்தை நிலைபெறச் செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது. ஆதலான் அதனை யான் செய்யாது விடமாட்டேன். போர் எனக்கு விருப்பமானதொன்றன்று. போரைப்பற்றி யான் சிந்திக்கத் தொடங்கினேனுமல்லேன். போரென்னுஞ் சொல் நின்வாயிலேயே கேட்டேன். போரைத் தவிர்க்கும் வகையெல்லாம் நாடுவேன். எமதுரிமையை நாம் பெறத் துணிந்துவிட்டோமென்பதுண்மை. அதனைப் போரின்றிச் சமாதானவுபாயங்களாற் பெறமுயல்வேம். அதனாற் பெறப்படுமாயின்



போர்க்குடன் படேனென்பது சத்தியம். ஆயினும் நின்தூதுக்குத்தரனுசொல்லுங் கடன் நமதாயினும் நம்மிலும் சிறந்த பேரறிவாளனாகிய கிருஷ்ணனே அதற்கேற்ற வுத்தரங் கூறுவான் எனக் கூறிக் கிருஷ்ணன் முகத்தை உதிஷ்டிரன் நோக்கச் சபையும் அம்முகமாகத் திரும்பியது.

கிருஷ்ணன் சஞ்சயனை நோக்கிச் சஞ்சயனே! கேள் எனச் சிங்கேறுபோல் விளித்துக் கூறத் தொடங்கினான்:—"உதிஷ்டிரன் வாயிற் கேட்கப்பட்ட வாசகங்களின் முடிபை நோக்குமிடத்து, அஃது உதிஷ்டிரன் தன் உரிமையைப் பெறல்வேண்டுமென்பதாயிற்று. ஆரும் தத்தம் உரிமையைப் பெறல்வேண்டுமென்பது அறநெறியாம். அதனை மறுப்பார் அறநெறிபிழைத்தவரேயாதலின் அதற்கு மாறுகூறுதல் கூடாதாம். இனி அவ்வுரிமையைத் தான் பெறுமாறு யாதென்பதே வினாவாம். அஃதாவது யுத்தம் சமாதானமென்பவற்றுள் எதுவென்பதே ஆராயத்தக்கது. இயல்பினாலும், பழக்கத்தாலும் உள்ளக்கவிவினாலும் உதிஷ்டிரன் யுத்தோபாயத்திற்கு மாறுகொண்டவனே. அவ்வுத்தமோத்தமகுணத்தை வாய்ப்பாகக்கொண்டு துரியோதனன் உதிஷ்டிரனது உரிமையை மறுப்பது அறிவின்மையும் பெருங்கேட்டிற்கேதுவுமாம். உதிஷ்டிரன் தனக்குரிய பாகத்தைச் சாமோபாயத்தாற் பெறமுடியாதெனக் காணுமிடத்து யுத்தத்தையே மேற்கொள்ளுவானென்ப துண்மை. போருக்கெழுந்த தம்பியரையெல்லாந் தடுத்து அவர்க்குப் பொறையுடைமை கற்பித்துத் துரியோதனன் செய் பழிகளுக்கெல்லாம் பழிக்கொள்ளக் கருதாது இதுகாறும் பொறுத்திருந்தவன் உதிஷ்டிரனன்றோ. அவன், தனது தம்பியரது கருத்துக்கும் பிரதிக்கினைக்கும் மாறாக அவரைத் தடுத்தமையினாலேயே துரியோதனன் தாங்கொணாப் பெருங் கொடும்பழிகளையெல்லாம் செய்யப் புகுந்தான் என நன்கு துணிந்துகொண்டான். அவன் அங்ஙனம் தம் தம்பியரைத் தடுத்திடாதிருப்பனேல் இதுவரையில் எத்தனைகோடி உயிர் மாண்டொழிந்துவிடும். இப்போது அவன் தான் தம்பியரைத் தடுத்தது பெரும்பிழையென வுள்ளத்திற் கொண்டுவிட்டான். இவ்வுண்மையைத் துரியோதனன் தன்மனதிடை நன்கு கொள்ளக்கடவன்."

"இதுகாறும் உதிஷ்டிரனது குணவாய்ப்பைக்கொண்டு துரியோதனன் தான்செய்த துர்க்கிருத்தியக்களியாட்டை இனி விடக்

கடவன். இவற்றையெல்லாம் ஆராய்ந்து திருதராஷ்டிரன் தன் மைந்தர்மேல் வைத்த ஒருகலை அன்பைத் துறந்து நடுநிலையோம்பிப் பாண்டவர்க்குரிய ராச்சியபாகத்தைக் கொடுத்துவிடல்வேண்டும். அதுசெய்யானாயின் போருக்கு ஆயத்தனாகக்கடவன். போராயின் அவனும் அவன் கிளைஞரும் வாழக்கிடக்கும் நாள் சில பகலேயாம். அச்சில பகலினுள்ளே இவ்வுலகில் அவர் அநுபவியாத போகங்கள் உளவாயின் அவற்றை விரைந்து அநுபவித்து உள்ளத்தை மகிழ்விக்கக்கடவர். விண்ணுலக வின்பத்திலும் ஒரு சிறிது அவர்க்கு ஆசையுளதாயின் அதற்காக இயன்ற தருமங்களையெல்லாம் செய்து தம்முயிரைக் கையிலடக்கிக்கொண்டு விண்குடிபுக ஆயத்தராய்ப் போர்க்களப் பிரவேசஞ் செய்யக் கடவர். பாண்டவர்களோ படையெடுத்துச் செல்ல விரைகின்றனர்."

உதிஷ்டிரன் சினமானது சமுத்திரமத்தியிலுள்ள வடவாமுகாக்கினிபோல்வது. அதனை இன்னதென்றுணராது துரியோதனாதியர் அற்பமாக மதிக்கின்றனர்போலும். மூண்டெழுந்து அஃதோங்குமாயின் அதனைத் தடுப்பதெங்ஙனம்? பாண்டவர்களை நன்றாக ஊன்றி நோக்குவையாயின் உதிஷ்டிரன் தரும விருக்ஷமாகவும், அவ்விருக்ஷத்துக்கு வேதமும் தருமநூலும் யானும் வேர்களாகவும், அர்ச்சுனன் அதற்குப் பாரையாகவும் வீமன் அதன் வலிய கிளையாகவும், நகுல சகாதேவர்கள் புஷ்பமும் பழமுமாகவுமிருத்தலைக் காண்பாய். இனிக் கௌரவரை நோக்குவையாயின் துரியோதனன் அதரும விருக்ஷமாகவும், அதற்குத் திருதராஷ்டிரன் வேராகவும், கர்ணன் கணுநிறைந்த பாரையாகவும், சகுனி பணைகளாகவும், துர்ச்சாசனனும் அவன் சகோதரரும் புஷ்பபலங்களாகவுமிருத்தலைக் காண்பாய். இவ்விருகிறத்தினருள்ளே வெற்றி யாருக்குரியதென நீயே தெளியக்கடவை."

இவ்வுரைகளைக் கேட்ட சஞ்சயன் மந்திரத்தாற் கட்டுண்ட சர்ப்பம்போல் நாவெழப்பெறாது நின்றான். பின்னருங் கிருஷ்ணன் அவனை ஒருவாறு தெளிவிப்பான் கருதிச் சஞ்சயனே கேள், இன்னுமொருமுறை திருதராஷ்டிரன் தனக்கு வரற்பாலதாகிய கேட்டைச் சிந்தித்துத் துணியுமாறு அவனுக்கிடந்தருதும். யானும் அவன்பால்வந்து தூதுரைப்பேன் போய்வருக வென்றான்.



அதுகேட்ட சஞ்சயன் கிருஷ்ணன்பால் விடைகொண்டு போய்ப் பாண்டவர்கள் நால்வரையும் தனித்தனி கண்டு அவர் கருத்தையு நிதானித்துணர்ந்தான். அவருள்ளே வீமன் சஞ்சயனை நோக்கி, ஐய, கேள், துரியோதனன் போருக்கே துணிவானாயின் யான் செய்த சபதங்களை முடித்துக்கொள்ளவிடமுண்டாகும். என் சபதம் நிறைவேறாமற் போவது எனக்கு மனத்துயர்க்கேதுவாம். ஆதலின் துரியோதனன் போருக்குடன்படுவது எனக்கு மிக்க மகிழ்ச்சிக்கேதுவாமென்றான். அவ்வுரை கேட்ட சஞ்சயன் அர்ச்சுனன்பாற் சென்றான். அவனும் அவ்வாறு துரியோதனன் யுத்தத்தையே விரும்புவானாயின் தானும் அதற்குப் பின்னிடாது பொருதற்குத் துணிந்திருத்தலையும் தானுஞ் சகோதரரும் கிருஷ்ணன் சகாயத்தால் அறப்போர் செய்யப்புகுதலின் அறம் வெல்லாது அதருமமே வெல்லுங்கால் தனக்கு வருங்குறை யாதுமில்லாதிருத்தலையும் எடுத்துரைத்து, நல்லறந்தோற்குமாயின் தீயறமே வலியுடைத்தாமாறு காண்பேன் என்றுகூறி இதனைத் திருதராஷ்டிரனுக்கும் துரியோதனாதியருக்குஞ் சொல்லக்கடவை யென்றான். அவ்வாறே நகுலசகாதேவர்களும் சாமோபாயம் துரியோதனனுக்கு வேம்பாமாயின் யுத்தத்திற்கு அவன் ஆயத்தனாகக்கடவனென்றனர். அவ்வுரைக்கேட்ட சஞ்சயன் நால்வர்பாலும் விடைகொண்டேகி அஸ்தமயனத்தின் பின்னர் அஸ்தினபுரியை அடைந்தான்.

அவன் வரவை ஆவலோடு நோக்கியிருந்த திருதராஷ்டிரன் அவனை வரவழைத்துத் தனிமையிற் கொண்டேகிப் பாண்டவர் மனநிலையை வினவினான். சஞ்சயன் தான் சென்றதும் உரைத்ததும் அதுகேட்ட உதிஷ்டிரன் முகம்வியர்த்துக் கூறிய உத்தரமும், பின்னர்க் கிருஷ்ணன் கூறியதும், அதன் பின்னர்த் தனித்தனி வீமன் முதலியோர் கூறியதும் ஆதியோடந்த மெடுத்துக் கூறிச் சாமோபாயத்தை மேற்கொள்ளுவதே துரியோதனன் செயற்பாலதென்றும் அது செய்யா தொழியின் பெரும் போரிலே அவனுங் கிளையும் மாண்டொழிவது சரதமென்றுந் தன்கருத்துங் கூறினான். சஞ்சயனது நடுநிலைகுன்றாச் சத்தியவுரைகளையும் அவன் எண்ணத்தையும் திருதராஷ்டிரன் கேட்டமாத்திரத்தே இடியேறுகேட்ட நாகம்போல் மயங்கி மேல்வரப்போகின்ற போரையும் அதனால் வரற்பாலதாகிய பெருங் கேட்டையும் சிந்தித்தான். மனத்துயர் பெரி

தாக அவன் அதனைக் கடக்கும்வகை யாதென நாடுமாறு கருதிச் சஞ்சயனை அனுப்பிவிட்டுத் தனியிடம் புகுந்து அன்றிரவெல்லாம் நித்திரையின்றிப் பலவாறு எண்ணியெண்ணிப் புண்பட்டான். விடியற்காலத்திலே அவன் தன் மைந்தனை அழைத்து அருகிருத்திப் பாண்டவரால் விளையப்போகும் பெருங் கேட்டை யெடுத்துரைத்து அவரோடிணங்கி வாழுமாறு பல கூறினான். துரியோதனன் பாவமெல்லாந் திரண்டொரு வடிவங்கொண்டவனாதலின், தந்தை சொல்லைச் சிறிதும் பொருட்படுத்தாது, அவன் பயங்கரத்துக்காக அவனைப் பரிகசித்துப், பாண்டவர் பலம் தன்பலத்துக்கு எம்மாத்திரமென்றுங் கூறிப் பாண்டவர்க்கு அஞ்சவேண்டுவதில்லை யெனத் தேற்றினான்.

திருதராஷ்டிரன் செய்தி இதுவாக, சஞ்சயன் தூதுக்கு முன்னர் நிகழ்ந்த தொன்று கூறுவாம். கிருஷ்ணன் பாண்டவர்களை விடுத்தகன்றுபோய்த் துவாரகைச் சேர்ந்தான். அவன் போன பின்னர் அவன்பாற் படைத்துணை கேட்குமாறு அர்ச்சுனன் உதிஷ்டிரன் அநுமதிகொண்டு துவாரகை சென்றான். அவன் போன காலத்தில் துரியோதனனும் கிருஷ்ணன்பாற் படைத்துணைகேட்க அங்கு சென்றிருந்தான். துரியோதனன் முதலிற் சென்று கிருஷ்ணன் நித்திரைசெய்தலைக் கண்டு அவன் துயிலுணருங்காறும் அவன் திருமுடிப்பக்கத்தே யிட்டிருந்த ஆசனத்தில் வீற்றிருந்தான். அதன்பின்னர் அர்ச்சுனன் சென்று கிருஷ்ணன் பாதங்களைப் பணிந்து நின்றான். அது நிகழுங்காறும் நோக்கியிருந்த கிருஷ்ணன் உடனே துயிலுணர்ந்தான் போன்றெழுந்து அர்ச்சுனனை அருளொடு நோக்கி மகிழ்ந்தான். அர்ச்சுனன் யான் மாத்திரமன்று இன்னுமொருவர் நின் திருமுடிப்பக்கத்தே வீற்றிருக்கின்றாரென்றான். அதுகேட்டுக் கிருஷ்ணன் துரியோதனனை நோக்கி நின்வரவுரையாதிருந்ததென்னை யென்று தன் மஞ்சத்தை விட்டெழுந்தோடி அவனவனைத் தழுவி முகமன் பகர்ந்து நீவிர் இருவீரும் வந்ததென்னை கொலாமென்றான். இருவரும் கிருஷ்ணனை நோக்கி நீ எமக்குப் படைத்துணையாக வேண்டுமென்றார். அதற்குக் கிருஷ்ணன் துரியோதனனைப் பார்த்து அர்ச்சுனனே முதலிலே என் கண்ணுக்கிலக்காயினான். ஆதலின் அவனுக்கே யான் படைத்துணையாதல் வேண்டும். அஃதொழிய யான் உனக்குச் செயற்பாலதுளதேல் கூறுகவென்றான். துரியோதனன், அர்ச்சுனன் முதலிலே நின்



கண்ணுக்கெதிர்ப்பட்டானாயினும் முதலிலே நின்பால் வந்தணைந்தவன் யானே. அவ்வுண்மையால் எனக்குமோர் உரிமையுண்டு. நீ அர்ச்சுனனுக்குப் படைத்துணையாதல் அவனை முதலிற் கண்டமையால் தக்கதேயாம். ஆயினும் நீ எனக்கு மாறாக ஆயுதபாணியாகிப் போர்செய்யாதிருக்கவென்றான். அதுகேட்ட கிருஷ்ணன் அர்ச்சுனனை நோக்கி யான் போர்செய்யாமல் நினக்குப் படைத்துணை புரிதலுக் குடன்பாடாமோவென்றான். அர்ச்சுனன் அஃது எனக் குடன்பாடேயென்ன, கிருஷ்ணன் அற்றாயின் என்னாலுனக்குளதாகும் பயன் யாதென்றான்.

நீயெனக்குச் சாரதியாகவிருந்து தேர் செலுத்துவையேல் இவ்வுலகில் யான் அஞ்சத்தக்க படைவீரருஞ் சேனாசமுத்திரமுமுண்டோ அவ்வுபகாரமொன்றுமே போதுமென்றான். அங்ஙனமாயின், துரியோதனா, என் சேனையும் என் சேனைத்தலைவருமாகிய யாதவவீரரெல்லாம் உனக்குத் துணையாகுகவென்ற கிருஷ்ணன் வார்த்தையைக் கேட்ட துரியோதனன் மிகமகிழ்ந்து கிருஷ்ணன் வீரராகிய பத்துக்கோடி சேனையையுமேற்று நடத்திக்கொண்டு துவாரகையை நீங்கினான்.

அதன்பின்னர்க் கிருஷ்ணனும் அர்ச்சுனனும் உபபிலாவியஞ் சென்று உதிஷ்டிரனோடிருந்தார்கள். அதுநிற்க, திருதராஷ்டிரன் சஞ்சயன் கூறியவுரைகளை மீண்டுஞ் சிந்தித்துத் துரோணகிருபவிதுரர்பாலும் யாது செயற்பாலதென்று வினவினான். அவரெல்லாம் மேல்விளையப்போகும் குலநாசத்தை யெடுத்துக்கூறத், திருதராஷ்டிரன் முன்னையிலும் பன்மடங்கு பேரச்சமும் ஆறுதற்கரிய மனக்கவற்சியுமுடையவனாய்த் தன்மைந்தனை யழைத்துப் பாண்டவரால் விளையப்போகுந் தீங்கு தடுத்தற்கும் எண்ணுதற்குமரியதெனக் கூறி, அவர்க்குரிய பாகத்தைக் கொடுத்துவிடக்கடவை யென்றிரந்தான். அதற்குத் துரியோதனன் சிறிதும் மனமிளகாது தனக்கியல்பாகிய முரண்மாற்றங்களையே சாதித்தான். திருதராஷ்டிரன் மிக்க மனத்துயரமுடையவனாய்த் தன்மனைவியை யழைத்துத் தன் மைந்தனுக்கும் குலத்துக்கும் வரப்போகும் நாசத்தை யெடுத்துக் கூறினான்.

இங்கே அஸ்தினாபுரியிலே திருதராஷ்டிரன் மனநிலையும் துரியோதனன் வஞ்சநிலையும் இவ்வாறாக, அங்கே உபபிலாவியத்திலே

உதிஷ்டிரனுஞ் சகோதாரும், தமது தூத்க்குத் திருதராஷ்டிரன் உத்தரம் அனுப்புவானென்று கணந்தோறும் வீணே காத்திருந்து சிலநாட் கழிந்தனர். அப்பால் உதிஷ்டிரன் கிருஷ்ணனைப் பார்த்து, எல்லாம் வல்ல புருஷோத்தமனே, நீ திருதராஷ்டிரன்பால் வருவதாகச் சஞ்சயனுக்குச் சொன்னதை மறந்தாய் போலும் என்றான். அதுகேட்ட கிருஷ்ணன் உதிஷ்டிரனை நோக்கி உனது கருத்தென்னையென்றான். உதிஷ்டிரன் கிருஷ்ணனைப் பார்த்துத் துரியோதனாதியர் நீ சொல்லியனுப்பிய வார்த்தையை நம்பியே தமது கருத்தை அறிவிக்காதிருக்கின்றனர்போலும். அவர் கருத்தை நன்கறியாது போருக்கெழுந்து செல்லுமிடத்து, ஒரு குலத்திற் பிறந்து ஓரிடத்தில் வளர்ந்து, ஓரிடத்திற் பயின்று, ஓரன்னத்தையேயுண்டு, ஒருடலிற் பிறந்தார்போலுள்ள துரியோதனாதியரைக் கொல்லநேரிடுமே. அவரைக் கொன்றுவிட்டு நாம் யாரை உறவெனக்கொண்டிவ்வுலகிலே வாழப்போகின்றோமென்னுமெண்ணமே என்னை வருத்துவதென்றான். அதனைக் கேட்டிருந்த வீமன் உதிஷ்டிரனை நோக்கி, உத்தமகுணசீலனாகிய நீ மானஞ்சிறிதுமில்லா தின்னும் பொறையுடைமையினையே சாதிக்க முயல்வது யாது கருதியோ! கற்பினுக் கருங்கலமாகிய பாஞ்சாலி நாணத்தால் வருந்தி ராஜசபையிலே முறையிட்டநாளிலே கோபத்தை யடக்குகவென் றெம்மையெல்லா மடக்கி உலகுள்ளளவும் தீராத வசையினை ஆக்கிக்கொண்டாய். அதுபோகினும், நாடுசென்று பதின்மூன்றுவருஷகாலங் கஷ்டப்பட்டு மீண்டுவந்தும் நாள் பல கடந்தன.

இப்போதாயினும் நம தரசுரிமையைக் கொள்ளக் கருதாமல் இன்னும் காலம்போக்கக் கருத்துற்று அறமும் உறவும் பார்க்கின்றாய். துரியோதனன் செய்யும் கொடுமைகளுக்கு யான் அஞ்சுகின்றிலேன். நினது பொறையுடைமைக்கும் கருணைக்குமே யான் பெரிதுமஞ்சுகின்றேன். எமக்குரிய அரசையெல்லாம் மாயச்சூதாடி முற்றுங் கவர்ந்துகொண்டு காட்டுக்கோட்டிவிட்ட கொடிய பாதகனைக் கொன்றொழித்துவிட்டு நானே நினக்கு முடிசூட்டுவேன். கிருஷ்ணமூர்த்தியைத் தூதுபோக்கவேண்டாம். என்னை விடுத்தால் யானே போய்த் தூதுரைத்து, உடன்படாவிடில், உடனே தானே யான் தனியே துரியோதனாதியரையெல்லாந் துணித்துச் சங்கரித்து மீளுவேன் என்றான். அப்போது கிருஷ்ணன் வீமனை



நோக்கி, மூத்தோர் ராஜநீதியெடுத்துரைத்தால், அதனைக் கேளாது, இளையோர் தடுத்துரைப்பது அழகன்று. ஆதலால், வீர, நின்கோபந் தணிகவென்றான். அவ்வளவில் வீமனுந் தணிந்தான்.

அப்பால், கிருஷ்ணன் உதிஷ்டிரனை நோக்கி, ஐய, நீ யுரைத்தவைகளை எடுத்துச் சிந்திக்குமிடத்து, நான் துரியோதனன்பாற் சென்று அவனுக்கு நன்மதிகூறினால் யுத்தம் வாராமற் காத்துக் கொள்ளுதல் கூடுமென்னு மெண்ணமானது நின் மனத்திடையுறங்குவதாக எனக்குப் புலப்படுகின்றது. அதுமாத்திரமன்று, நான் தமியனாய் வஞ்சப்பாதகராகிய துரியோதனாதியர்பாற் செல்வதால் எனக்குத் தீதுவந்திடுமெனவு மஞ்சுகின்றனைபோலும். நின்னையும் நின் தாயத்தாரையும், சந்துசெய்யும் தூதினை மேற்கொண்டு நின் தாயத்தாரைக் காப்பது எனக்கின்பந் தருவதோர் உத்தம தொழிலாம். அதனை மனத்திடைக்கொண்டே சஞ்சயனுக்கு யான் வருவேனென முன்னர்ச் சொன்னேன். இனி எனக்குத் துரியோதனாதியர் தீங்கிழைத்திடுதலைக் குறித்து எள்ளளவேனும் நீ சிந்திக்க வேண்டாம். எனக்குத் தீங்குசெய்யப் புகுவரேல் அவர் தமக்கே கேடுசூழ்பவராவர். என் சிரசிலேயுள்ள ஒரு ரோமத்தைத்தானுஞ் சிதைக்க வல்லவர் இவ்வுலகிலேயில்லை. சிதைக்கத்துணிவார் உடனே தாமே சிதைக்கப்பட்டொழிவாரென்பது சத்தியமெனக் கொள்ளக் கடவை. நீ விரும்புகின்ற பிரகாரம் தூதுசென்று கூறுதற்குரிய நன்னெறிகளையெல்லா மெடுத்துரைத்து யாதொரு தீங்கு மெனக் குறுவகை மீளுவேன். அவ்விஷயத்தைக் குறித்து நீ சிறிதும் அஞ்ச வேண்டாம். நாளை உதயத்திலே அஸ்தினாபுரம் செல்வேன். யான் தூது போகுமுன்னே நின்பாலும் நின் தம்பியர்பாலும் வினவ வேண்டுவன சிலவுளவெனக் கூறி, உதிஷ்டிரனைத் தனியிடங் கொண்டேகி, அங்கிருந்து, சத்திய விரதமுடைய வேந்தனே, துரியோதனன் நினது கேள்விக்குடன்படாது மறுப்பனேல் யான் செய்யத்தக்கது யாதென்றான்.

உதிஷ்டிரன், அவனை நோக்கி, ஐய, நீ தூதுசென்று எமது கருத்தை வெளிப்படுத்தி எமக்குரிய அரசைக் கேட்பாயாக. அதற்கவன் மறுப்பானாயின் நீர்வளம்பொருந்திய நாடொன்று வேண்டக் கடவை. அதுவும் மறுப்பானாயின், ஐந்தூர் வேண்டுக. அதுவுமில்லை

யாயின் கொடுங் கூற்றுவனும் அவன் தூதருங் கொண்டாடுமாறு பெரும்போர் செய்து எமது அரசு முழுதுங் கைக்கொள்வோமென்று கூறி மீளக்கடவை யென்றான். அதுகேட்ட வீமன் அகத்தே பொங்கியெழுந்த சினத்தை அடக்கிக்கொண்டு இகழ்ச்சிக் குறிப்பாகச் சமாதானமே நன்றென்றான். மற்றைய பாண்டவர் சமாதானமெக்காலத்திலும் வராத கருமமென நிச்சயித்துக்கொண்டவராதலின் அவர் யாதும் பேசாதிருந்தனர்.

அப்பால் கிருஷ்ணன் திரௌபதியிருக்கும் அந்தப்புரஞ் சென்று அவளை நோக்கி உதிஷ்டிரன் தமருடன் போர்புரியாமல் சமாதானமாகவிருந்து வாழ்வதே தனது கருத்தென்றும், தனக்குரிய பாகந் தராது துரியோதனன் மறுப்பனேல் ஐந்தூர் வேண்டுமாறு கற்பித்தானென்றுங் கூறித் தான் தூதுபோகும் விஷயத்தில் அவள் கருத்து யாதென்று வினவ, அவள் தன் கண்ணினின்றும் நீர் பேராறாகப் பெருக அவன் பாதங்களில் வீழ்ந்து கோபாலா,

"கற்றைக் குழல்பிடித்துக் கண்ணிலான் பெற்றெடுத்தோன்
பற்றித் துகிலுரியப் பாண்டவரும் பார்த்திருந்தார்
கொற்றத் தனித்திகிரிக் கோவிந்தா நீயன்றி
யற்றைக்கு மென்மான மார்வேறு காத்தாரே."

புகத்தகாத சபையிலே என்னைப் புகுவித்து என் மானத்தைக் கெடுக்கத் துணிந்த பாதகன்பாற் பாண்டவர் ஐந்தூர் வேண்டிப் பெற்று வாழ்தற்கெண்ணினராயின் யான் அன்று விரித்த கூந்தலை இனி என்று முடிப்பதோ வறியேன் எம்பெருமானே யென்றுரைத்த குரலிட்டழுதாள். அதுகேட்ட சாத்தியகி, பாண்டவரைப் பார்த்து, திரௌபதியை மானங்குலைத்த காலத்தில் இங்கே மலைபோனிற்கின்ற வீமன் கையிலோ கதாயுதமிருந்தது; அர்ச்சுனன் கையிலோ வில்லிருந்தது. துச்சாசனன் திரௌபதியை அளகபாரத்தைப் பற்றியிழுத்தமையால் அவள் கூந்தல் அவிழ்ந்து அமங்கலப்பட்டிருந்தது. அதுகண்டும் எல்லீரும் பொறுத்திருந்தீர். ஆயுதந் தாங்கியிருக்கும் சித்திரப் பாவைதானும் திரௌபதியினது அவலநிலையைக் கண்டாற் பேசாதிராதே. உங்களாயுதங்களாலும் மலைபோலும் நும் பொலிவினாலும் பயன் யாதாமோ? மானமில்லாத மதியிலிகாள், இன்னும் மானங் கொன்று பாதகர்பால் ஊரிலிருந்து பெற்றுயிர் வாழப்போகின்றீர்போலும். சை! நும்மானமும் வீரமுமிருந்தபடியென்னை! துரியோ



தனன் கருத்தை நன்றாக வுணர்ந்திருந்தும் அவன்பா லூர்வேண்டத் தூது போக்குவது சராசந்தனுக்கஞ்சி வடமதுரை கைவிட்டுத் துவாரகை புகுந்தொளித்த கோவிந்தன் மதியோ அன்றித் தருமன் மதிதானோ வென்றான்.

சாத்தியகி யிதுகூறக் கிருஷ்ணன் திரௌபதியைப் பார்த்துப் பாண்டவர்க்காகத் தூதுபோய்த் துரியோதனன் செய்தியைக் கண்டு மீண்டுவந்து நானே உன் கூந்தலை முடிக்கின்றேன் நீ அஞ்சி அழவேண்டாம். உலகம் முழுதுங் காணுமாறு துரியோதனாதியராகிய புல்லர்களது மனைவியரைத் தங்கூந்தலை விரித்துத் தெருவினின்றும் புலம்பவைப்பேன். எனக் கூறிக் கண்ணீர் துடைத்து அவளைத் தேற்றினான். அதுகேட்ட திரௌபதி எம்பெருமானே நின்வாக்கிற்கு எதிர்பேசேன். நீ தூதுபோய் மீண்டு வருங்காறும் என் மனத்துயரை அடக்கியிருப்பேன். பாண்டவர் தமதெண்ணப்படி துரியோதனன்பால்ஐந்தூர்வேண்டிப் பெறுவாராயின் அன்றே எனதுயிர்முடித்து என் விரதத்திற் கெல்லைகாண்பேன். உலகமாயினும் என்மரணகாரணத்தை யுணர்ந்து அப்பாதகரைக் கொன்று பழிவாங்கட்டுமென்றாள்.

கிருஷ்ணன் திரௌபதியால் விடைகொண்டு அடுத்தநாளுதயத்திலே சாத்தியகியையும் கிருதவர்மனையும் துணையாகவழைத்துக்கொண்டு தேர்மிசையேறித், தன் தூதுபோதலைக் காணுமாறு வீதிகளிலே இருமருங்குந் திரள்திரளாக நின்ற நகரமாந்தரெல்லாம் வாழ்த்திசைப்ப வீதிவழியே சென்று நகரை நீங்கி, விரைந்து தேரைச் செலுத்திப்போய்ப் பலநாடுகளையும் பலவனங்களையும் ஆங்காங்குமுள்ள முனிவர் வாசங்கள்தோறும் தங்கிக் கடந்துபோய் அஸ்தினாபுரத்தை யடுத்தான். அவன் வரவை ஒற்றராலுணர்ந்த திருதராஷ்டிரன் தன் மந்திரத்தலைவரெல்லோரையு மழைத்துக் கிருஷ்ணனை எதிர்சென்று உபசரிப்பது யார், அவனை உபசரிக்கும் உபாயம் யாது, அவற்கு மாளிகை யாது என்று சூழ்ச்சிசெய்தபோது, விதுரனும் வீஷ்மதுரோணகிருபர்களும் திருதராஷ்டிரனை நோக்கி, நீ உபசாரங்களாலும், உயர்ந்த மாளிகை பூஷணம் விருந்து முதலியவற்றாலுங் கிருஷ்ணனை மகிழ்விக்கமாட்டாய். அவற்றால் அவன் நின் பக்ஷத்துக்கு அநுகூலியாகமாட்டான் என்றுகூற, வேந்தன் மனமழுவுடையனாகித் துரோணகிருபவிதுரர்களை எதிர்சென்றுப

சரித்தழைத்து வருமாறு அனுப்பினான். அவ்வாறே அவரெல்லாஞ் சென்று வரிசையோடு கிருஷ்ணனை அழைத்துச் சென்றுபோய்த் திருதராஷ்டிரன் சபை சேர்ந்தனர். அங்கே நவமணிகளிழைத்த சிங்காசனமொன்றில் அவனையிருத்த, கிருஷ்ணன் அஸ்தினாபுரஞ் சேர்ந்தானென்பது பலவகைப் பேரிகைகளின் முழக்கொலியாலும், இன்னிசைக்கருவிகளினது பண்ணோசையாலும், எதிர்சென்றுபசரிக்கப்புகுந்த இரதங்களினது வேகத்தாலெழுந்த பேரொலியாலும் உணர்ந்த நகரமாந்தர்,எள்ளிடவிடமின்றி நெருங்கிக்கூடிக், கிருஷ்ணனது அழகும் அருளும் அறிவும் ஆண்மையும் பொலிந்த முகத்தினைக் காணுமாறு கோபுரவாயிலிற் காத்திருந்து கண்குளிரக் கண்டும் ஆராமை மிகுதியினாலே சபாமண்டபத்தினுள்ளும் புகுந்து பேரரவஞ் செய்தனர்.

சிறிதுநேரத்தில் அவர்கள் தாமே அடங்கக் கிருஷ்ணன் அவர்களை அருளோடு நோக்கி அவரை அகன்மின் என்றான். அவர்களெல்லாம் அவனை வணங்கி அகன்றபின்னர்த் திருதராஷ்டிரன் கிருஷ்ணனை நோக்கி முகமன் பலபகர்ந்து, அவனையுள்ளிட்ட யாதவர்கள் க்ஷேமத்தையும் பாண்டவர்கள் க்ஷேமத்தையும் வினவி அளவளாவியபின்னர், அவனுக்காகத் தான் அமைத்திருக்கும் மாளிகாலங்காரங்களையும் ஏனையவுபசார போக்கியங்களையு மெடுத்துரைத்து அம்மாளிகைக் கெழுந்தருளுகவென் றிரந்தான். கிருஷ்ணன் தான் வந்த கருமம் இனிது முற்றியபின்னர் அவ்வுபசாரங்களுக்கு இசைவதன்றி அதற்குமுன்னர் அவன் வேண்டுகோளுக்குடன்படுதல் கூடாதென்றான். அங்ஙனங்கூறல் போந்த நியாயமாகாதென்று அந்தகன் கூறக் கண்ணபிரான் நியாயங் கூறவேண்டுமாயிற் கூறுவேன்; பகைவர்கையிலே விருந்துண்ணல் தருமநூற் கியைந்ததன்று. பகைவரென்ற தெங்ஙனமெனில் அதுவுங் கூறுவேன்; பாண்டவர்மீது பகைதூண்டி அவரைப் பின்னரும் நாட்டைவிட்டு ஓட்டிவிடுமாறு சூழ்ச்சிசெய்கின்ற நினக்கும் நின் குழாத்தினர்க்கும் அறமெல்லாந் திரண்டோருருவாகிய உதிஷ்டிரனையும் அவன் தம்பியரையும் எனதாருயிர்போ லெண்ணியொழுகும் யானும் பகையாயுள்ளேன். ஆதலின் நீவிரெல்லீரும் எனக்கும் உயிர்ப்பகைஞராயினீர் என்றான். அச்சொல் துரியோதனன் மனத்தை உவர்ப்பித்தது. அவ்வளவிற் கிருஷ்ணன் அங்குநின்றும் நீங்கி விதுரன் மாளிகையை நோக்கிச்



செல்வானாயினான். அப்பொழுது வீஷ்மரும் துரோணரும் வேறு பல பெரியோரும் கிருஷ்ணனைத் தத்தமது இல்லத்தில் விருந்தருந்தியருளுமாறு வேண்டினார்கள். கிருஷ்ணன் அவர்களை நோக்கி, நும் அன்பளைந்த வேண்டுகோளை இன்பளைந்த விருந்தாகக் கொண்டேன். மறுக்கின்றேன் எனக்கொண்டு மனம் மறுகா தொழிகவென்று கூறி அவர்பால் விடைகொண்டேகி விதுரன் மாளிகையை நோக்கி நடந்தான்.

விதுரன் கிருஷ்ணன் வரவுணர்ந்து நெடுந்தூர மெதிர்சென்றுபசரித் தழைத்துப்போய்ப் பாதம்விளக்கி உபசாரங்கள் முறைப்படிபுரிந்து ஆசனத்திருத்தி அவன் திருவடித்தாமரைகளைத் தன்முடிமேற் சூடி,

“முன்னமேதுயின்றருளியமுதுபயோத்தியோ
பன்னகாதிபப்பாயலோபச்சையாலிலையோ
சொன்னநால்வகைச்சுருதியோகருதிநீயெய்தற்
கென்னமாதவஞ்செய்ததிச்சிறுகுடிலென்றான்.”

கிருஷ்ணபகவான் அவனை வாழ்த்திப் பாண்டவர் க்ஷேமத்தையுமெடுத்துரைத்தான். அதன்பின்னர் விதுரன் கிருஷ்ணபகவானுக்குத் தேவரும் விரும்பத்தக்க அத்தியற்புத ரசபோசனங்களால் விருந்தருத்தி வாசமலராசனத்திருத்திச் சாமரம்வீசல் முதலியவுபசாரங்களெல்லாங் கிரமமாகச் செய்ததன்றிக் கிருஷ்ணனோடு வந்த பரிவாரத்தினர்க்கும் ஆனை குதிரைகளுக்கும் வேண்டுவவுதவிகளெல்லாஞ் செய்தான். அதுகண்டு கிருஷ்ணன் அவன் அன்பையும் சிரத்தையையும் பாராட்டி, அவனோடு மாமியாகிய குந்திதேவியிருக்கும் அந்தப்புரஞ்சென்று, அவளைக் கண்டு, அவன் அன்புறத் தழுவி அழுது தன் மைந்தர் க்ஷேமத்தை வினவ, தானும் அவளை எதிர்தழுவி அவள் க்ஷேமத்தை அதன்பின் கண்ணீரோடும் வினவி அளவளாவியபின்னர்த் தான்வந்த கருமத்தையும் பாண்டவர் கருத்தையுமெடுத்து அவளுக்குரைத்தான். அதுகேட்ட குந்தி, தன் க்ஷத்திரிய குலத்துக்குரிய குணதருமங்கள் மனத்திடை யுதிக்கப் பெற்றவளாய்க் கிருஷ்ணனை நோக்கி,ஐய,யான்கூறும் இச்சிறுதூதை என்மைந்தர் ஐவருக்குந் தனித்தனி உரைக்கக்கடவை:—“க்ஷத்திரியமாதர் புத்திரரை யாதுபயன் குறித்து ஈன்றெடுத்து வளர்க்கின்றாரோ அப்பயனைச் சாதித்தற்குரிய காலம் வந்துவிட்டது. அது

செய்யாது காலத்தை அவமே கழிப்பீராயின் உம்மை உலகம் இப்போது புகழ்வதாயினும் அழியா இகழ்ச்சிக்குரிய கருமத்தையே புரிவீராவீர். இகழ்ச்சிக்குரியீராகுங்கால் யான் உம்மைத்துறந் துயிர் விட்டுய்வது திண்ணம். மானமழியுங் காலம் வருமாயின் உயிரும் ஒருவர்க் கரியதொன்றாகாது. இதுவே என் தூது" என்று கூறினாள். அதனைக் கேட்டபின்னர்க் கிருஷ்ணன் அவளைத் தேற்றி அவள்பால் விடைகொண்டேகித் துரியோதனன்பாற் சென்றான். அங்கே நான்மருங்கும் பசும்பொன்னினாலெடுத்த சுவரும், அச்சுவரிலே இடையிடையே நவரத்தினகசிதமான பலகணிகளும் மரகதத்தூண்கள் ஒருகோடியும் அத்தூண்கண்மீது குருவிந்தச்சாதி மாணிக்கத்தினாலியற்றிய போதிகைகளும் அப்போதிகைகண்மீது வயிரத் துலாக்கள் பரப்பி அவற்றின்மீது பளிங்குப் பலகைகள் வேய்ந்த விதானமும் அமைத்த மண்டபத்திலே, முத்தினாற் பந்தரிட்டு அதன்கீழிட்ட சிங்காசனத்திலே துரியோதனன் வீற்றிருந்தான்.

அவனைச் சூழ்ந்து துரோண வீஷ்மர் முதலிய பெரியோர்களும், பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர்களும், படைத்தலைவர் மண்டலீகர்களும் ஆசனங்கொண்டிருந்தார்கள். அவரையெல்லாம் துரியோதனன் நோக்கி, நமது சபைக்குப் பாண்டவர் தூதாக இடையனாகிய கிருஷ்ணன் வரப்போகின்றான். அவன் வரின், அவனையெதிர்சென்று உபசாரம் புரிந்து உறவு பாராட்டுவீராயின் உமது நாடு நகரங்களை அக்கினிக்கிரையூட்டி உம்மையும் ஏற்றவாறு தண்டிப்பனென்று அவரை அச்சுறுத்தி அவ்வாஞ்ஞைக்கு அவரை யெல்லா முடன் படுத்தித் தானும் இறுமாந்திருந்தான்.

இவ்வண்ணமாக விருக்கையில், நீலமுகில் வண்ணனாகிய கிருஷ்ணன், முகமுங் கண்ணும் கரங்களும் உந்தியும் திருவடிகளும் குளிர்ந்த அற்புத திவ்விய செந்தாமரை மலர்கள்போல் விளங்கப் பீதாம்பரம் துலங்க, கௌஸ்துவமணி முதலிய திவ்விய ஆபரணங்கள் கண்டோர் கண்களை மயக்கித் தம்வச மிழுப்ப, அம்மண்டபவாயிலை அடைதலும் வீஷ்மதுரோணரும், விதுரனும். எழுந்தோடித்திருவடி வணங்கத், துரியோதனனொழிந்த மன்னவர்களும் மற்றுமுள்ளோர்களுந் தம்வசமின்றி யெழுந்தோடித் திருவடி தொழுதார்கள். அதுகண்டு சகுனி முகமும் அகமுங் கருகினான். கன்னனுந் தலை



குனிந்தான். துரியோதனன் சிந்தைமறந்து மரம்போலிருந்தான். வீஷ்ம துரோணர் கிருஷ்ணனை அழைத்துப்போய்த் துரியோதனன் முன்னே யிட்டிருந்த ஆசனத்திருத்தினார்கள். அங்கொருபாலில் திருதராஷ்டிரனும் வீற்றிருந்தான். அப்பெருஞ் சபையிலே வீற்றிருந்தோர் கண்களெல்லாம் கிருஷ்ணன்மீதே வீழ்ந்து புறம்பெயரமாட்டாது கிடந்தன. அங்கிருந்தோரெல்லாம் தம் சித்தங்களைக் கிருஷ்ணன் கொள்ளைகொண்டானாக வாக்கு மறந்திருந்தார்கள். அதனால் சிறிதுநேரம் அச்சபை நிஸ்தரங்க சமுத்திரம்போற் சிறிதும் அரவமின்றிக் கிடந்தது.

அப்பொழுது கிருஷ்ணபகவான் திருதராஷ்டிரனை நோக்கி,

"வேந்தே கேள், நீ அறியாததொரு கருமத்தை உனக்கு நான் எடுத்துரைக்க இங்கு வந்திலேன். உனக்கும் பாண்டவர்க்கும் பொது உறவினனாகிய யான் இருவரையும் சந்தி செய்யுங் கடப்பாடுடையேனாதலின் அதனைச் செய்யுமாறே இங்கு வந்தேன். உன் புத்திரரும் பாண்டவரும் ஒரு குடும்பத்திற் பிறந்து ஓரிடத்தில் வளர்ந்தாராதலின் ஒருமித்தெழுந்திடுவரேல் உலகத்தை யொருங்கே வெல்லும் பெருவலி யுடையவராவரென்பதைச் சிந்திக்கக்கடவை. சந்திரவமிசமோ பண்டைக்காலந்தொடங்கி நடுநிலை கலங்கா நீதியினையும், நேர்மையினையும், சத்தியத்தையும், பேரருளுடைமையினையும், குன்றாத செல்வத்தினையும் காத்து வருவதொன்றாதலின் பெருங் கீர்த்தியினை யுடையதன்றோ. இத்தகைய சந்திரவமிசத் தொழுக்கத்திற்கும் புகழிற்கும் இழுக்கத்தை யுண்டாக்கப்புகுந்து கொண்டனை. உதிஷ்டிரன் உத்தம குணத்தையும் அவன் உரிமையையும் நோக்கி அவனை உபராஜாவாக்கியவனும் நீயேயன்றோ.

அது நீதியின் பாலதே. அதுகண்டு பொறாது நின் மைந்தர் செய்த அறக்கொடிய வஞ்சச் சூழ்ச்சியிற் சிக்கியும் அவைகளுக்கெல்லாம் உயிர்பிழைத்து மீண்ட பாண்டவர்களது அளப்பரும் பெருமையையும் ஆற்றலையுங் கண்டு நீயே மீளவும் அவர்க்குரிய அரசில் அற்பபாகங் கொடுத்தனை, அதனை அவர்கள் அற்பபாகமெனவுணர்ந்தும் பெரியோருரையை அவமதித்தலாகாதெனக் கொண்டே அவ்விடக்கரக் கொடையை அங்கீகரித் துள்ளங்குளிர்ந்தார்கள். அதன் பின்னர் அவர் தமது ஒப்புயர்வில்லாத புஜபலத்தினாலும்

தருமநெறியினாலும் சுவயார்ச்சிதமாக வெண்ணில்லாத தேசங்களை வென்று தமதரசு நிலையிட்டார்கள். அவர் நினதரசையும் நின் மைந்தன் உரிமையையும் நீ அவர்பாற் கவர்ந்ததையு மோரற்பமேனும் பொருட்படுத்தினாரல்லர். அவர் ராஜசூய வேள்வி செய்த காலத்திலும் நின்மைந்தர் அவ்வேள்வியை அவருடனின்று மிக்க கேண்மையோடு முற்றுவித்ததுமன்றித் தாமும் பாண்டவரும் வேறல்லர் என்பதும் உலகறிய நாட்டினர். அதன்பின்னர் அழுக்காறென்னும் கொடிய பைசாசம் நின் மைந்தன் இதயத்திற் கோயில் கொண்டது. வஞ்சமே யோருருவாகிய சகுனியும் அப் பைசாசத்தை வசப்படுத்தி யாட்டும் கொடிய மாந்திரிகனாயினான். சகுனி யேவலின்வழி யொழுகுவதே நின் மைந்தனுக்குப் பரமசாம்பிராச்சிய மாயிற்று. அதுகண்டு சகுனி பாண்டவர் செல்வத்தையெல்லாம் மாயச்சூதினாற் கவர்ந்து தருவேனெனக் கூறித் துரியோதனனைத் தூண்டிப் பாண்டவரை யழைப்பித்துப் பொய்ச்சூதாடி அவர் செல்வத்திற்கு மண்ணிட்டதும் அதுகண்டு மீண்டும் அவர்க்கு நீ அரசளித்ததும் அறிவையன்றோ.

அப்பொழுது உன் மைந்தனும் கொடிய சகுனியும் சொன்ன மந்திரோபதேசத்தால் நீ மயங்கியதும், உதிஷ்டிரன் தன் நேர்மை குன்றாவொழுக்கத்திற் கிழுக்கமுண்டாமென வஞ்சி நீ கொடுத்த அரசை மறுத்ததும், பின்னர் வனவாசமும் அஞ்ஞாதவாசமும் கற்பிக்கப்பட்டதும் நின் மனத்திடைப் புதுமை நீங்கா தின்றுமுள்ள சம்பவங்களாமன்றோ. அப்பால் நிகழ்ந்தனவெல்லாம், நீயறியாமல் நிகழ்ந்தன சிலவும், நியறிந்தும் நின்னாற் றடுக்கும் வலியின்றி நிகழ்ந்தன சிலவுமாக நிகழ்ந்தனவாதலின் உலகம் உன்மீது பழி சுமத்தமாட்டாது. நின் மைந்தனே காரண கர்த்தனாக அவனால் நற்குண பாத்திரங்களாகிய பாண்டவரடைந்த எல்லையில்லாக் கொடுந் துன்பங்களை நான் எடுத்திங்குரைத்தல் ஆவசியகமன்று. அவற்றை நின்மனமே சிந்திக்கக்கடவது. கடந்துபோயினவெல்லாம் போக, புருஷோத்தமராகிய பாண்டவர்களது பாரி கற்பினுக்கருங் கலமாகிய திரௌபதிக்கு நின்மைந்தர் செய்த சகித்தற்கரிய, அந்தோ நினைக்கினும் நெஞ்சம் வேகுமே! சொல்லினும் நாக்குத் தீயுமே! கொடிய புலைச்செயலையும் சமாதானத்தின் பொருட்டாக என் உள்ளத்திற் கொள்ளாதொழிகின்றேன். அச்செயல் காரணமாக



அற்றைநாட் பெரும்போர் மூண்டுலகம் பரிநாசப்பட்டொழிந்திடாமற் காத்தது தெய்வசங்கர்ப்பமே. அதுவுமன்றி வீமார்ச்சுனர் இருவருஞ் செய்த தவறத்தகாத கொடுஞ் சபதங்களையும் சமாதானத்தின்பொருட்டு முடியாது தடுக்கின்றேன்.

இஃது நான் செய்யும் வாக்குத்தத்தங்கள், பாண்டவர்பால் நீயும் நின் மைந்தருங் கூடிக் கவர்ந்துகொண்ட அரசுரிமையையும் அவர் செல்வங்களையும் மீளவும் அவர்க்குக் கொடுத்திடினன்றிப் பயனிலவா மென்பதை நன்றாக நின்மனத்திடை யிருத்தக்கடவை. தவறலாகாத சபதங்களையும் யான் தவறச் செய்வேனெனக் கூறிப் புகுந்தது இருதிறத்தினரையுஞ் சந்திசெய்துஉய்விக்கும் பொருட்டும், பாண்டவர்க்கு மாறாக நீயும் நின் மைந்தருஞ் செய்த பொல்லாங்குகளை யெல்லாம் அவர் பொறுத்து மறந்து நம்முடன் பொருந்தி வாழும் பொருட்டுமேயாம். நின்னாற் செயற்பாலது யாதெனிற் கூறுவன்.

நின் மைந்தர் செய்த ஆற்றுதற்கரிய கொடுஞ்செயல்களும் துஷ்டமந்திரிகள் சொற்கேட்டொழுகுந் தீயகுணமுமே நீ நின் மனதிடை முதற்கண் கொள்ளத்தக்கன. அவற்றை நோக்குவையேல் சமாதானோபாயம் பிரகாசமாம். நீயும் நின் கிளையும் க்ஷேமப்பட விரும்புவையேல், பாண்டவர் தம்பொருத்தப்படி வனவாசமும் அஞ்ஞாதவாசமும் முடிந்தமையால் இனித் தாம் பெறற்பாலதாகிய அரசுரிமையைப் பெறின், தமக்கு நின் மைந்தர் செய்த தீமைகளை யெல்லாம் பொறுத்திடுவோமென்று பரமதயாள குணத்தோடு கூறுகின்ற இவ்வமையம் போலும் அமையம், இனி உனக்கு வாய்ப்பதரிதாகலின், இப்போதுதானே அவர் கூறுவதைக் கேட்டுச் சமாதானம் புகக்கடவை. இவ்வமையத்தை அலட்சியம்பண்ணிக் காலதாமதஞ் செய்வையேல், தப்பாது நின்கிளையோடு வேரற்றொழிவதற்கே துணிகின்றனையாவை. ஆதலின் பாண்டவரை இன்னும் நீ தூரத்தே நிறுத்தி வைப்பது விவேகமாகாது.

தாமுரைத்த சூளுரைப்படியே பழிசாதிக்கத் துணியா தின்னமும் கருணையே மேற்கொண்டவராய் நிற்கும் பாண்டவரைச் சிநேகித்து அவரோடிணங்குவதே நின்கடனும். அது செய்யத் தவறுவையேல் பச்சாத்தாபப்படுதற்குப் பின்னர்க் காலம் வாய்த்திடமாட்டாது. பாண்டவர்பால் வஞ்சச் சூதினாற் கவர்ந்த அரசை அவர்க்கு

நீ மீளவுங் கொடுத்திடுவையேல், அவர்க்கு நீயும் நின் மைந்தரும் செய்த பழிகளெல்லாம் கனவிடைச் செய்தவைகளாகக் கொண்டு பொறுத்திடப்படுமென்பதையும், மேல்விளையத்தக்க பெருங் கேட்டினுக்கும் நிரயத் துன்பத்தினுக்கும் பிழைத்துய்வீரென்பதையும் உறுதியுரையாக வலியுறுத்துகின்றேன். ஆதலால் நீவிர் இணங்கி வாழ்தற்கு இதுவே காலமாம். இது தப்பினால் இனி நல்ல காலம் வாய்த்திடாது. நான் சொன்ன இத்தூதையும் மேல்வரக்கடவதாகிய பெரு நாசத்தையும், அபகீர்த்தியையும் சீர்தூக்கிச் சிந்தித்துக் காலந்தாழ்க்காது பாண்டவர் கேள்விக் குடன்படக்கடவை. பாண்டவர் தூதை அங்கிகரியாது தள்ளுதற்காயினும், ஒரு கூற்றை அங்கீகாரம் பண்ணி ஒரு கூற்றை மறுத்தற்காயினும் நின்பால் நியாயமுளதாயிற் கூறுகவெனக் கூறித் தன் தூதை முடித்தான்.

அதுகேட்ட அச்சபை முழுதுஞ், "இத்தூது தகும்! தகும்!" என்று ஏகோபித்துக் கூறிற்று. அங்கிருந்த முனிவர் குழாமும் மாதவன் தூது தகும் தகுமெனக் கூறியதோடமையாது, துரியோதனனையும் திருதராஷ்டிரனையும் நோக்கி, பாண்டவர் அனுப்பிய தூதைத் தள்ளிவிடாது அங்கீகரித்து அவ்வாறு செய்தலே தக்கதாமெனவு மிடித்துரைத்தனர்.

அதுகேட்ட திருதராஷ்டிரன், கிருஷ்ணன் உரைப்படி செய்வேன் எனக் கூறினான். உடனே துரியோதனன், கிருஷ்ணனை நோக்கி, நீ வெறுக்கினும் பொருட்படுத்துகின்றிலேன், இங்குள்ள அரசர் மயங்கி யாது நினைக்கினும் அஞ்சேன், அவர் நகைக்கினும் அஞ்சேன். என்வாயுரை பிழைத்தென் றுலகம் பழிக்கினும் அஞ்சேன், பாண்டவர் கதித்தெழுந்து போருக் கெதிர்ப்படினும் அஞ்சேன். ஆதலால் நீயிருக்கும் இச்சிறிய விடந்தானும் பாண்டவர்க்கு நான் கொடுப்பதில்லை இது சத்தியமென்றான்.

கிருஷ்ணன் அவனை நோக்கி, இது நினக்கும் நின் குலத்திற்கும் பேரிழிவைத் தருவதோர் உரையாம். தந்தையினது விருப்பத்தை நிறைவேற்றக் கருதித் தன் இளையதாய் பெற்ற புத்திரரிருவர்க்கும் இவ்வாழ்வும் இவ்வரசும் வழங்கிய நின்குலப் பெருந்தகை யொருவன் இச்சபையின்கண்ணே விளங்குகின்றானன்றே. அவன் செயற்கருஞ் செயலால் சந்திரவமிச மடைந்த கீர்த்தி இன்றுங் குன்றாது நின்று விளங்குவதன்றே. அதனையாயினுஞ் சிந்திக்கக் கடவை. சந்திர



வமிசத்துக்குரிய பெருங் கீர்த்தியைக் காக்கும் பொருட்டாயினும் பாண்டவர் உரிமையை மறாது கொடுக்கக் கடவை யென்றான்.

துரியோதனன் கிருஷ்ணனை நோக்கி, பாண்டவர் வீரத்தாற் சிறந்தவரென்பது உலகப் பிரசித்தி. அங்ஙனமாகவும் வீரத்தால் இவ்வரசைக்கொள்ளாது இரந்து நாடுபெற விரும்புவதென்னை. இப்பூமியானது வீரரானவர்க்குரியதொன்றன்றே. அங்ஙனமாகவும் உரிமை வேண்டுவதென்னை யென்றான். அவ்வுரை செவிப்படுதலும் கிருஷ்ணன் நகைத்தெழுந்து நீ போருக்கே துணிந்தனையாயின் குருக்ஷேத்திரத்திலே போர் செய்தற்குக் கைகொடுக்கக் கடவை யென்று அங்குள்ள தூணிடை அறைந்தான்.

அறைந்தவுடனே, துரியோதனன் சினந்தெழுந்து, இழிகுலத்தவராகிய இடையரோடு கூடி ஆனிரை மேய்த்துத் திரியும் உனது புன்பிறப்பியல்பு பற்றியே குலங்களுள்ளே சிறந்த சந்திரகுலத்தில் உதித்த என்னை நோக்கிக் கைதருகவென்று கேட்டனை. அது சாலவு மழகியது! எனது பேராண்மையும் வாய்மையும் அறியாய்போலும். யானைகள் போருக்கழைக்கு மிடத்துச் சிங்கேறு அஞ்சி யொடுங்கிவிடுமெனக் கருதினைபோலும். நன்று நன்று நின் நியாயமென்றான். அறிவொழுக்க மில்லாத துரியோதனன் கோபத்தைப் பொருட்படுத்தாது குணக்கடலாகிய கிருஷ்ணன், அச்சபையினின்றும் நீங்கி விதுரன் மனையை அடைந்தான். அப்பொழுது கோபப் பெருமூச்சென்னும் பெரு நெருப்பினால் கரிந்த முகத்தினையுடைய துரியோதனன், விதுரனை நோக்கி, நீ எனது தந்தையோடு பிறந்து எனக்குச் சிற்றப்பனாகியும், என் சோற்றையே இன்று முண்ணுகின்றனையாகியும், என் பகைவர்க்குத் துணைவனாகிய கிருஷ்ணனுக்கு உன் மனையில் விருந்திட்டது யாது கருதி. பொருள் அதிகமாக யார் கொடுப்பரோ அவர்பாற் றிரும்புதல் வேசியர்க் கியல்பன்றே. வேசி புத்திரனாகிய வுனக்கும் அவ்வாறு திரும்புதல் இயல்பேயாம் என்றான்.

## 53. விதுரன் வில்லொடித்தல்.

அவ்வுரை விதுரன் செவித்துவாரங்களுக்கு உருகிக் கொதித்த செம்புநீராக, அவன் எழுந்து துரியோதனனை நோக்கி, துரியோதனா கேள், என்னை வசை பேசிய வுனது நாவையுஞ் சிரசையுங் கொய்து

யான் கோபந் தணிதற்கு என் கரத்திலே கூரிய வாட்படையொன்
றுளது. ஆயினுஞ் சந்திரகுலத்திற் பிறந்தானொருவன் தன் மைந்த
னுயிரைக் கவர்ந்தானென வுலகம் பழிக்குமென்றஞ்சி அது செய்
யாது விடுகின்றேன். அறமு மாண்மையும் சிறந்த பாண்டவர்க்கும்
அவர் தூதாகவந்த கிருஷ்ணனுக்கும் துணையாயினேனென நீ
கூறியது எனக்கு வசையாகுமென யான் அஞ்சுகின்றிலேன். நான்
அவர்க்குத் துணையாயினேனென நீ கூறினமையால் அவ்வுரை
பொய்யாவண்ணம் இவ்வில்லை இச்சபையிலேதானே முரிக்கின்றேன்
எனக் கூறித் தன் நிகரற்ற வில்லை முரித்தெறிந்துவிட்டு அங்கு
நின்றும் அகன்றான்.

அதுகண்டார் ஏங்கினர். அங்கிருந்த வேந்தரெல்லாம் வாயிற்
கைவைத்தனர்; வில்லுக்கு அர்ச்சுனன் எனப் பெயர்படைத்த
அர்ச்சுனன் வில்லெடுக்க வரும்போது இனி அவனுக்கு எதிர்நிற்கத்
தக்க வில்லியாரென்றிரங்கினர். அதுகேட்ட கர்ணன் விசயனைப்
போரில் வெல்லுதற்கு யான் தமியனே நிற்பேனாகவும் அவனை
வெல்லுதற்கு இனி யாருளரென்றிரங்குவதென்னை யென்ன, வீஷ்மர்
உனது வில்லாண்மையை விராடனது நிரைகவர்ந்தபோது கண்டா
மன்றே வென்றான். அவ்வளவில் ராஜசபையினின்றும் யாவரும்
விடைகொண்டகன்றனர்.

முன்னே விதுரன் மாளிகையை நோக்கி நடந்த கிருஷ்ணன்,
அங்கே சேர்தலும் விதுரனை நோக்கி, நீ வில்லை முரித்தது யாது
கருதியோவென்ன, விதுரன் கண்ணபிரானை நோக்கி, ஒரு வேந்தன்
தனக்கு வரற்பால தீமைகளை நோக்காதவனாயும், தன் மந்திரிக
ளுரையைக் கொள்ளாதவனாயும், தனது நாவினைக் காவாதவனாயு
முளனேல் அவனுக்காகப் போரிற்சென்று சாவார் பழுதுடையோ
ரென்றுலகங் கூறுகின்ற தன்றே.

"செல்வம்வந் துற்றகாலைத் தெய்வமுஞ் சிறிதுபேணார்
சொல்வன வறிந்துசொல்லார் சுற்றமுந் துணையுநோக்கார்
வெல்வதே நினைவதல்லால் வெம்பகை வலிதென்றெண்ணார்
வல்வினை விளைவுமோரார் மண்ணின்மேல் வாழுமாந்தர்."

துரியோதனன் தனது மாளிகையின் கண்ணே நீ யெழுந்தருளு
தற்குத் தான்செய்த புண்ணியமே புண்ணியமெனக் கருதாமலும்,



நீ கூறிய நன்மதிகளைக் கேட்டு அவ்வாறு தன் கிளைஞரோடொத்து
வாழவுங் கருதாமலுங் கூறிய புன்சொல் எனக் கிசையாமையால்
என் வில்லை முரித்தேன் என்றான். அவ்வாசகங்களைக் கேட்ட
கிருஷ்ணன், மகிழ்ச்சியோடு விதுரன் முகத்தை நோக்கித் துரியோ
தனன் கூறிய புன்சொற்களைப் பொறுத்தருளக் கடவையென்று
கூறி அவனையு முடன்கொண்டு சென்று குந்திதேவியிருக்கு மந்தப்
புரத்தை யடைந்தான்.

குந்தி கிருஷ்ணன் வரவையுணர்ந்து, அவனைத் தன் மைந்த
ரைக் கண்டாள்போல் மகிழ்ந்து தழுவி, என்பால் நீ வந்தது யாது
குறித்தென்று வினவினாள். கிருஷ்ணன் அவளைநோக்கித் துரியோ
தனன் நின்மைந்தர்க்கு நாடு கொடுப்பதில்லையென்றும், போர்
செய்வதே தன் துணிவென்றுங் கூறிவிட்டான். இனிப் பல சொல்லி
யாவதென்னை? நாளைப் போரிலெதிர்ப்பதே கடனென்றான். அது
கேட்ட குந்தி, போரிலே வெல்பவர் யாரோ? யாது விளையுமோ
வென்றேங்கி மனந்தளர்ந் தழுதாள். கிருஷ்ணன் அவளைத் தேற்றி
நான் சொல்வதைக் கேட்டொழுகுவையேல் நின்மைந்தரே வெல்லு
வார் என்றான். அவள் அஃது யாதென்ன, அவன், நீ கன்னிகையா
யிருக்கையில் ஒரு முனிவர் சொன்ன மந்திரமொன்றாற் சூரியனை
நினைக்க, அவன் வெளிப்பட்டருளி உனக்கொரு புத்திரனை அருளிப்
போக, அப்புத்திரனை வடுவென்றஞ்சிப் பேழையிலிட்டுக் கங்கையில்
விட்டதறிவையன்றே. அப்புத்திரன்றான் கர்ணன். அவன் உன்னைத்
தாயென்றும் பாண்டவரைத் தம்பியரென்றும் உணரான். அதனை
அவனுக் குணர்த்தி அவனைப் பாண்டவரோடு கூடி அரசாள வருக
வென்று கேட்பாயாக. அதற்கவன் மறுப்பானாகில், அர்ச்சுனன்
காண்டவதகனஞ் செய்தஞான்று தப்பிப்போன சர்ப்பத்தைக்
கர்ணன் பாணமாக வைத்து வளர்க்கின்றான்; அச்சர்ப்பக்கணையை
அர்ச்சுனன்மீது ஒருமுறையன்றி மறுமுறை தொடுக்காவண்ணம்
ஒரு வரம் தருகவென்று அவன்பால் வேண்டக்கடவையென்றான்.

அதுகேட்ட குந்தி துணுக்குற்று ஐயா, கிருஷ்ணா கர்ணன்
என் புத்திரனென்பது அந்நாளிலே தெரிவித்தாயாயின் அவனைத்
துரியோதனனோடு சேரவொட்டேன். போர் மூண்டபின்னர் இப்
போது அவ்வுண்மையை யெனக் குரைத்தாய்; ஐயா, என்னத்தை

நினைந்து என்ன செய்தாய். சர்ப்பக்கணையை விலக்குவேனாயின் கர்ணன் இறந்து படுவான். விலக்கேனாயின் அர்ச்சுனன் இறந்து படுவான். அந்தோ இப்பெருங் கொடுமைக் கென்செய்வேன். யான் பெண் பிறந்து பெற்ற புண்ணியம் நன்று நன்றெனக் கூறி இரங்கி நிலத்தில் வீழ்ந்து புலம்பினாள். அவள் வீழ்ந்து புலம்பி யழுதலைக் கண்டு சகிக்கலாற்றாத கண்ணன் அவளை நோக்கி, ஓருயிரும் ஐந்து சரீரமும்போன்று விளங்குபவராகிய பாண்டவர் ஒருவரிறப்பின் மற்ற நால்வரும் மடிவர். ஆதலின் ஐவரிறப்பது நன்றோ ஒருவனாகிய கர்ணன் இறப்பது நன்றோவென்றான். அவ்வுரை கேட்ட குந்தி மனத்தளர்ச்சி நீங்கி, நீ சொன்னவாறு செய்வேனென்ன, கண்ணன் விதுரன் மனையை யடைந்தான்.

அங்கே துரியோதனனும் தம்பியரும் கர்ணனும் சகுனியும் நள்ளிரவிலே தமியராயிருந்து கிருஷ்ணனது தூதைச் சிந்தித்து, இனி நாம் செயற்பாலது யாதெனச் சூழ்ச்சி செய்தார்கள். அப்போது துரியோதனன், சகுனி முதலியோரை நோக்கிப் பாண்டவர்க்கு எவ்வகையாலும் துணையும் வலியும் பற்றுக்கோடுமாயிருப்பவன் கிருஷ்ணனாதலின் அவனைப் பிடித்துச் சிறையிலிட்டுவிடின், பாண்டவர்க்கு நாம் அஞ்சவேண்டுவதில்லை யென்றான். அதுகேட்ட துச்சாசனன், அவனை நோக்கி கிருஷ்ணனைச் சிறையிலிடுதற்குப் பெருஞ் சேனை சேர்க்க வெண்ணுவது மதியீனம். நானே சென்று இவ்விருளில் விதுரன் மனைக்கு நெருப்பிட்டு விதுரனையும கிருஷ்ணனையும் ஒருசேரக் கொன்றுவருவேன் விடைதருகவென்றான். அது கர்ணன் செவிப்பட, அவன் துரியோதனனை நோக்கி, இதற்கு நெருப்புத்தேடி அலையவேண்டுமோ, யான் நாளை யுதயத்திற் சரமொன்று தொடுத்துக் கிருஷ்ணனைக் கொன்று மீளுவேன் எழுந்திடுகவென்றான். விகர்ணன் துரியோதனனை நோக்கி, பொறுத்தற்கரிய கொடும்பழிசெய்த பகைவர்தாம் வரினும் அவரை உண்மை வீரரானவர்கள் தமது பதியிலே கொல்ல மனம் பொருந்தார்கள். அது ஆண்மையுமன்று. அதுவுமன்றி,

“மூத்தவ ரிளையோர் வேத முனிவரர் பிணியின்மிக்கோர்
தோத்திர மொழிவோர் மாதர் தூதரென் றிவரைக் கொல்லிற்
பார்த்திவர் தமக்கு வேறு பாவமற் றிதனி னில்லை
பூத்தெரி தொடையாய் பின்னு நரகினும் புகுவரென்றான்.”



இங்ஙனங் கூறிய விகர்ணனைத் துரியோதனன் நோக்கி, இளையோர்க்கு மந்திரசபையிலே கருமமில்லை நீ புறத்தே செல்லக்கடவை யென்றான். அப்பாற் சகுனி துரியோதனனை நோக்கித் தூதரைக் கொல்லுவது வழக்கன்று. ஆதலால் ஒரு நிலவறை செய்து அவ்வறையிலே அரக்கரையும் மல்லரையு மிருத்தி அவ்வறையின் மேல் ஓராசனம் நவரத்தின மயமாக வியற்றி,நாளைப் பகலிலே கிருஷ்ணனை யழைத்து, அவ்வாசனத்திருத்தி வீழ்ததி, அவ்வரக்கர் மல்லர்கள் கைக்ககப்படுத்தி, விலங்கிட்டுச் சிறையில் வைப்பதே தூதருக்குரிய தண்டமாகு மென்றான். இச் சூழ்ச்சியுரை துரியோதனன் செவிக்குத் தேன்மாரி போலாக அவன் பேரானந்த முற்று இவ்வுபாயமே தக்கதா மென்றான். அவ்வாறே மிக்க ஆழமுள்ள பெருங்குழி பறித்து அதின்மேல் ஒரு மண்டபமும், அம்மண்டப நடுவே ஒரு திவ்வியாசனமும் அமைத்து அக்குழியினுள்ளே ஆயுத பாணிகளாகிய வீரர் பல்லாயிரவரை வைத்து ஆசனத்துப் பொறிப்பலகைக் கயிற்றையும் அவ்வீரர்கையிற் கொடுத்தான். அடுத்தநாட் சூரியோதயத்திலே துரியோதனன் கிருஷ்ணனை அழைத்து வருகவென்று அவன்பாற் சில தூதரை யேவினான். முன்னரே இச்சூழ்ச்சியெல்லாம் சாத்தியகியாலுணர்ந்திருந்த கிருஷ்ணன்பால் துரியோதனன் தூதர் சென்று அவனை வணங்கி யாதவ தீபமே, உன்னை அரசன் எழுந்தருளுக வென்றான் என்றுவிண்ணப்பஞ் செய்தனர்.

## கிருஷ்ணபகவான் மீட்சி.

கிருஷ்ணன் உடனே தனது பரிவாரங்களோடு புறப்பட்டுப் போய் அரசன் சபையை யடைந்தான். அரசன் அவன் வரவையுணர்ந்து பொய்யுபசாரம் பலபுரிந்து, இவ்வாசனத் தெழுந்தருளுக வென்று அப்பொறியாசனத்தைக் காட்டினான். கிருஷ்ணன் புன்னகையோடு அவ்வாசனத்தேறி அதனைப்பாதலம்புக மிதித்துத் தானும் ஆகாய முகடளமும் வளர்ந்து திசையெங்குந்தானேயாகப் பருத்துத் தன் விசுவரூபத்தைக் காட்டினான். அந்நிலவறையிற் பதிவிருந்த வீரரெல்லோரும் காலாலரைபட்டுயிர் துறந்தனர். அச்சபையிலிருந்தோர் யாவரும சிரமிசைக் கூப்பிய கையோடு சித்திரப்பாவையாயினர். வீஷ்ம துரோணர்கள் கிருஷ்ணனது மெய்வடிவம் இதுவேயாமென்று துதித்தனர். துரியோதனன் மாத்திரம் அசையாது

பிரமித்திருந்தான். தேவர்கள் மலர்மாரி தூவி வாழ்த்தினார்கள். அதுகண்ட கிருஷ்ணன் தனது விசுவரூபத்தை யொடுக்கி மீளவும் தன் வடிவங்கொண்டு எதிரேயிருந்த துரியோதனனை நோக்கி, நீ சில தினங்களுக்கு முன்னே என்பால் வந்து வரங்கிடந்தபோது உனக்கு மாறாகக் கையிற் படையெடேனெனச் சொன்ன வாக்குறுதியினாலும், பாண்டவர் தனித் தனிச் செய்த சூளுரை பொய்யா வண்ணம் அவரால் நீயுநின்குலமும் பரிநாசப்பட வேண்டியிருத்தலாலும் உன்னை இப்போது கொல்லாதொழிகின்றேன், எனக்கூறி அங்கு நின்று மீண்டான். அப்போது துரியோதனனொழிந்த ஏனைய அரசரும் வீஷ்ம துரோணர் முதலிய பெரியோரும்சிரமேற் கூப்பிய கையராய்க் கிருஷ்ணனது இரதத்தின் பின்னே சிறிது தூரஞ் சென்று அவனை நோக்கி,

“கண்ணபொறுத்தருள்வெண்ணெயருந்தியகள்வபொறுத்தருள்கார்
வண்ணபொறுத்தருள்வாமபொறுத்தருள்வரதபொறுத்தருணீ
திண்ணமனத்துணர்வொன்றுமில்லாதவர்செய்தபெரும்பிழையென்
றண்ணல்மலர்க்கழல்சென்னியில்வைத்தெதிரென்றுதுதித்தனரே.”

இங்ஙனந் துதித்தவர்களை யெல்லாம் கண்ணபிரான் நிறுத்திவிட்டு அவருள்ளே கர்ணனை அழைத்துத் தனது இரதத்திலேற்றிக் கொண்டு சிறிது தூரஞ் சென்றபின், அவனை நோக்கி, இதுகாறும் நீயறியாத ஒரு மறைப்பொருளை யுனக்குணர்த்தப் போகின்றேன் கேட்பாயாக. பாண்டவர் உனக்குத் தம்பியர். குந்தி கன்னிகையாயிருந்த காலத்திலே தான் ஓரிருஷிபாற்பெற்றமந்திரத்தைப்பரீக்ஷிக்குமாறு அதனைச் செபித்தாள். சூரியன் பிரசன்னமாகி, அவள் தன் பிழையைப் பொறுத்தருளென்று பன்முறை வேண்டவும் அவன் பொறாது விதிவலியால் ஒரு புத்திரனை அநுக்கிரகித்துச் சென்றான். பெற்ற புத்திரனைக் குந்தி வடுவுக்கஞ்சிப் பேழையிலிட்டுக்கங்கையில் விடுத்தாள். நீயே அப்புத்திரன். அதன் பின்னரே குந்தி பாண்டவர்களை யீன்றாள். பாண்டவருள் நீயே மூத்தோனாதலின் இந்நிலமுழுது முனக்கே யுரியதாம். நீ உன் தம்பியரோடு சேர்ந்து அரசு கைக்கொண்டு ஆளக்கடவை யென்றான்.

அது கேட்ட கர்ணன், கிருஷ்ணனை வணங்கி, உயர்வொப்பில்லாத பெரியோனே, நீயறியாத தருமமும் உபாயமு முலகில் வேறு



முளவோ! இன்று உன்னால் என் பிறப்புணர்ந்தேன். இனி யான் பாண்டவரைத் தம்பியரென்று அன்புகொண்டு அவரோடு சேர்ந்துகொள்ளுமிடத்து உலகம் என்னைச் சிரியாதோ! என்னை இன்னானென்றறியாமல் எனக்கு முடிசூட்டி, அரசும் சீரும் திருவும் தந்து என்னை உயர்பதத்தில் வைத்த துரியோதனன் நன்றியை மறந்து, பாண்டவர்க்கும் நூற்றுவர்க்தும் போர்வந்தடுத்ததென்பது கண்டும் பாண்டவர்பாற் செல்வேனாயின் என்னினும் நன்றியில்லாத தீயவன் ஒருவன் உலகிலுளனாவனோ! உலகம் என் சொல்லி நகையாது என்றான். கிருஷ்ணன் அவ்வளவில் அவனைப் போகவென்று விடையீந்தருளக், கர்ணன் கிருஷ்ணனை மார்புறத்தழுவி யாம்இருவோமும் இனிச்சந்திப்பது எங்கேயாமென்று வினவ, அவன் தருமசீலனே, இனி நாம் சந்திப்பது மோக்ஷத்திலேயே யாமென்ன, கர்ணனுக்கு ஒரு தோற்றம் வெளிப்பட்டது.

அத்தோற்றத்திலே மேல்வரும் போரில், துரியோதனன் பக்கத்தில் அசுவத்தாமாவும் கிருதவர்மாவும் கிருபனுமே உயிர்பிழைக்க மற்றையோர் யாவரும் மாண்டொழியக் கண்டான். இதனையும் அவன் கண்ணனுக்கெடுத்துக் கூறித், தனது பிறப்பைப் பாண்டவர்க்குணர்த்தின், அவர் தன்னோடு போருக்கெதிர்ப்படாராதலால் அதனை வெளியிடா திருப்பாயாகவென்று அவன்பால் வேண்டி, அத்தேரினின்றுமிறங்கித் தன் தேர்மிசைக்கொண்டு மீண்டான். அவன் மீண்ட பின்னர் கிருஷ்ணன் அசுவத்தாமாவை யழைத்து, நீயோ பாண்டவர் மீது அன்பும் அருளுமுடையை. அதுவுமன்றி நடுநிலையு முடையையன்றோ. ஆண்மைக்கும் பேரறிவுக்கும் முதல்வனும் நீயே யன்றோ. ஆதலால் துரியோதனன் உன்னைச் சேனாபதியாகவென்று பணிந்து கேட்பினும் அதற்குடன்படா திருக்கக்கடவை யென்று கூறித் தன் விரன்மோதிரத்தை நழுவவிட்டான். அதனை அசுவத்தாமா எடுத்துக் கொடுக்கக் கிருஷ்ணன் வாங்காது, சூரியனை ஓர்கோள் சூழ்ந்தது பாரென்ன அவனும் அம்மோதிரத்தோடே சூரியனை நோக்கினான். அது நோக்கினாரெல்லாம் கிருஷ்ணன் அசுவத்தாமனை மயக்கிவிட்டான். அசுவத்தாமா கிருஷ்ணனது உபாயத்தை யறியாது சத்தியஞ் செய்தானாயினானென்றார்கள். அஃதுணர்ந்த துரியோதனன் அசுவத்தாமாவையும் கிருஷ்ணன் பிரித்துவிட்டானென் றேங்கினான்.

அவ்வளவில் அசுவத்தாமாவை விடுத்தகன்று கிருஷ்ணன் விதுரன் மாளிகையை யடைந்தான். அதன்பின்னர் அசுவத்தாமா துரியோதனன் சபையை அடைதலும், துரியோதனனும் அவன் சபையிலிருந்த அரசரும் அவனைநோக்கிச் சேனாபதியாகாதிருவென்று உன்னைச் சத்தியத்தாற் கிருஷ்ணன் மயக்கினனேயென்ன, அவன் அப்பொழுதுதான் அதனையுணர்ந்து, யாதுசெய்வேன்! என்னைக் கிருஷ்ணன் மயக்கினானென்றான்.

அதுநிற்க, கிருஷ்ணன் விதுரன் மனையை யடைந்து தனியிடத்திருந்து இந்திரனை மனத்திடை எண்ணினான். அந்தக்கணமே இந்திரனும் அங்கெழுந்தருளக் கண்ணன் அவனை உபசரித்து ஆசனத்திருத்தி, ஐயகேள், பாண்டவர்க்கும் துரியோதனாதியர்க்கும் போர் வந்தடுத்தமை யறிவையன்றோ. அப்போரில் விசயனைக் கர்ணன் கொல்வனாயின் மற்றைய பாண்டவர் தப்பா துயிர்துறப்பர் அரசும் துரியோதனனுக்காம். அப்போது தருமமெவ்வாறு நடைபெறுமென்பதை நீயே சிந்திக்கக்கடவை.

ஆதலிற் கர்ணனுடைய கவசகுண்டலங்களைக் கவர்ந்து தருதல் வேண்டும். அது செய்யாயாயின் கற்பாந்தம்வரையும் கர்ணனோடு போர் செய்யினும் அவனை வெல்வதரிதாம். பாண்டவரும் தம் சூளுரை முடிப்பதுமில்லை. கர்ணனோ கலைவல்லோர்க்கும் மறையில் வல்ல வேதியர்க்கும் இல்லாதவர்க்கும் இரந்தோர்க்கும் துறந்தோர்க்கும் மற்றெல்லோர்க்கும் கேட்டதை மறாது கொடுக்கும் பேரீகையாளனென்பது மறிவையன்றோ. ஆதலின் நீ இப்பொழுதுதானே முனிவர் வடிவங்கொண்டு அவன்பாற் சென்று, கவசகுண்டலங்களைத் தானஞ்செய்கவென்று இரப்பையேல் அவன் மறாது கொடுப்பான் என்றான்.

இந்திரன் அதற்கிசைந்து கிழ வேதிய வடிவந்தாங்கிக் கர்ணன்பாற் சென்றான். நரை திரை மூப்பு மூன்று மோருருக் கொண்டதாமெனச் சென்ற மறையவன் முகத்திலும், திருமேனியிலும் விளங்கிய தவப்பொலிவைக் கர்ணன் கண்டு, விரைந்தெழுந்தோடி, அவன் பாதங்களில் வீழ்ந்து தொழுதான். மறையவன் அவனை வாழ்த்த, அவன் எழுந்து அவனை ஆசனத்திருத்திப் பாதங்களை அர்ச்சித்து, அடிகள் தமியேன்பால் எழுந்தருளுதற்கு எளியேன் செய்த மாதவமே



மாதவமாம். தேவரீருக்கு வேண்டுவது யாதென்றான். வேதியன் எனக்கு வேண்டுவதெல்லாங் கொடுத்தல் கற்பகதருவிற்கு மரிதாம். நீ கொடுத்திட வல்லையோவென்ன, கர்ணன், நீ விரும்பியதைக் கொடேனாயின், போர்முனையில் முதுகிட்டோடும் வேந்தர் போய்ச்சேரும்பதம் பெறுவேனாகவென்றான். மறையவன் மகிழ்ந்து, மனக்கோட்டஞ் சிறிதுமின்றிக் கொடுக்குங் கொடையாளனே கேள், நான் நின்பா லிரக்கவந்த பொருள் நின் கவசகுண்டலங்களாம் என்ன, கர்ணன் என்பாலுள்ள பொருளையே யிரந்தீர்; அஃதென் தவப்பயனேயாமென மகிழ்ந்து தன் சரீரத்தினின்றும் அவற்றை வாங்கி இருகையாலும் வழங்கினான். வழங்குதலும், ஓரசரீரி "இரப்பவன் இந்திரன், அவன் கிருஷ்ணன் ஏவலால் வந்தான், கவசகுண்டலங்களை வழங்காதொழிக" என்றது. கர்ணன் அவ்வுரை கேட்டும் சிந்தையிற் சிறிதும் கோட்டமுற்றானல்லன். அதுகண்ட இந்திரன் அவ்வடிவத்தை நீக்கித் தன் மெய்வடிவைக் காட்டி, அவனுக்கு ஒரு திவ்வியாஸ்திரம் வழங்கி, அவனை வாழ்த்தி, அவன் கொடையைப் பாராட்டி மீண்டு சென்று கிருஷ்ணனை யடைந்தான். கண்ணன் கர்ணன்பால் நிகழ்ந்தனவெல்லாம் இந்திரன்வாய்க் கேட்டு மகிழ்கூர்ந்து கர்ணனது வண்மை யெடுத்துரைத்து வியந்து இந்திரனுக்கு விடைகொடுத்தான்.

அதன்பின்னர்க் கிருஷ்ணன் குந்தியைக் கிட்டி, நீ கர்ணன்பால் விரைந்து செல்கவென் றேவினான். அவளும் தன் மைந்தர் மேலுள்ள பாசமிகுதியினாலே தன்பாதங்கள் நோவ நடந்து கர்ணன் வாயிலை யடைந்தாள். அவள் வரவுணர்ந்த கர்ணன், அவளை யெதிர்கொண்டு அழைத்துப்போய் ஆசனத்திருத்தி உபசரித்து வணங்கி, நீர் என்பால் வந்தது யாது குறித்தென்று வினவினான். குந்தி அவனைநோக்கி, என் கண்மணியே கேள், யானே உன்னைப் பெற்ற தாய்; சூரியனே உன் தந்தை. யான் கன்னிகையாயிருந்தபோது எனக்கொரு முனிவர் சொன்ன மந்திரத்தைப் பரீக்ஷார்த்தமாகச் செபித்தேன். அதனால் சூரியன் பிரசன்னமாகி உன்னை அநுக்கிரகித்துச் சென்றான். நான் வசைக்கஞ்சிப் பேழையிலிட்டுக் கங்கையில்விட்டுச் சென்றேன் என்றாள்.

நீர்தாம் என்னைப்பெற்ற தாயெனக் கூறியதை நான் நம்பமாட்டேன். இங்ஙனம்கூறி என்பால் வந்தோர் எண்ணிலர். அவ

ருள்ளும் என்பாலுள்ள ஒரு வஸ்திரத்தைத் தரித்து எற்புடம்பு கொண்டாரும் பலர். அவ்வென்புகளிங்கே இவ்வறையிற் கிடத்தலுங் காண்கவென்று அவ்வறையையும் அவ்வற்புத வஸ்திரத்தையுங் காட்டி, இவ்வஸ்திரத்தைத் தரிப்பவள் என்னைப் பெற்ற தாயாயின் உயிர் துறவாள்; அல்லளேல் உயிர்துறப்பள். ஆதலால் இங்கேயிறந்து எலும்புருவாகிய மாதர்களைப்போல் நீருமாகாது உமக்கு வேண்டு வதைப் பெற்றுக்கொண்டு மீளுகவென்று தூண்டினான். அதுகேட்ட குந்தி,

"பெற்றவுடம் பன்றாகி லென்னுடலைத் தின்னுகென்
றுற்ற படாத்துக் குறவுரைத்து—மற்றதனைச்
சென்றெடுத்துப் போர்த்திருந்தா டோர்வேந்தன் முன்னே
நன்றெடுத்த சொல்லா னயந்து."

அவ்வஸ்திரத்தால் அவள் அழகு மிக்குற்றிருப்பது கண்டு கர்ணன் "இவரே என்னை ஈன்றருளிய மாதாவென் றுள்ளமுருகி, ஆநந்தக்கண்ணீர் பொழிந்து, அவள் பாதங்களில் வீழ்ந்து தொழு தான். அவளும் அன்பேயுருவாகி ஆனந்தமயமாகி அவனை இரு கையாலும் தழுவித் தன் மடிமேல் வைத்து உச்சிமோந்து, அன்று நான் உன்னை ஈன்றெடுக்கப் பாக்கியம் பெற்றேனேயன்றி, வளர்த் தெடுக்கப் பாக்கியஞ் செய்திலேன். ஆயினும் இன்றுன் திரு மேனியை என் மடிமீதிருத்தித் திருமுடி மோந்திடப்பெற்றேன். இப்பேறுபோல் இன்னுமொரு பேற்றினை விரும்பி வந்தேன். என் அருமருந்தன்ன மைந்தனே கேட்பாயாக; உன் தம்பிமார் ஐவரோடு முறவாடி ஒன்றுபட்டு, அவர் அன்போடு உன் பணி கேட்ப நீ முடி சூடி, அரசர்களெல்லாம் உன் கோபுரவாயிலினின்று வணங்க, வலிமையும் செல்வமும் விளங்கச் செங்கோலோச்சக்கண்டு என் கண் குளிருமாறு என்னோ டெழுந்தருளும் .பேற்றினை எனக் களிப்பா யாகவென்றாள் .

கர்ணன் அவளை நோக்கி, நீர் என்னை ஈன்றபோது அன்பில் லாமையினாலோ அன்றி வடுவந்ததென்று நாணியோ விடுத்தகன்றீர். அற்றைநாட்டொடங்கி இன்றளவும் என்னைத் தனது உயிர்த்துணை யெனக் கருதி எனக்கு நாடு நகரந் தந்து முடிசூட்டியதுமன்றி என்னை இழிகுலத்தானென வுலகம் பழிக்கவும் அப்பழிக்கஞ்சாது,



என் நட்பையே பொருட்படுத்திக் கூடவுண்டு, தனது தம்பியருஞ் சுற்றமும் என்னடி வணங்க வெனக்கு ஏற்றமுஞ் சிறப்புந் தந்த துரியோதனனை நான் மறந்தால் எனக்கு உய்வுமுண்டாமோ! "எந்நன்றி கோன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கோன்ற மகற்கு" என்பது அறநூலுரையன்றோ. ஒருநாள் துரியோ தனனது தேவியும் யானுந் தனித்திருந்து விளையாடிக்கொண் டிருக்கையில், அவள் தன் நாயகன் வரவுணர்ந்து எழுந்தோட, அவன் வரவையுணராத யான் அவளை வஸ்திரம்பற்றியிழுக்க மேகலா பரண மறுந்து மணிகள் சிந்தின. பெரும்பிழை செய்தேனென வெண்ணி அம்மணிகளை யான் பொறுக்கிக் கோர்க்கப் புகுந்தேன். என் பின்புறமாக வந்த துரியோதனன் என்முன்னே வந்து,

"பன்மணிகள் சிந்திப் பரந்து கிடந்ததுகண்
டின்மணிக் கென்புகுந்த தென்னுமல்—நன்மணியைக்
கோக்கோ பொறுக்குகோ வென்றானுக் கென்னுயிரைப்
போக்கா தொழிவேனோ புக்கு"

இன்னும் யான் துரியோதனன் செய்த பேருபகாரத்தை மறக் கப்புகின் இலக்குமிதேவி என்னைத் தீண்டுவாளோவென்று கூறினான்.

அதுகேட்ட குந்தி, அவனை ஈன்று கங்கையில் விடும்போது பட்ட பதைப்பினும் பன்மடங்கு நெஞ்சழிந்து கண்களில் நீர் தாரைதாரையாகச் சொரிய அலறி வாய்குளறி நொந்தழுதாள். அப் பொழுது கர்ணனும் தன் கண்களில் நீர் ததும்ப அவளைத் தேற்றி, ஊழ்வழி நடப்பது நடந்தே தீருமாதலின் ஊழைத் தவிர்ப்பது யார்க்குமாகாது. இனி என்பால் உமக்கு வேண்டுவனவற்றைக் கேளும், வேண்டுவவெல்லாந் தருவேனென்றான். குந்தியும் அவ் வளவில் மனந்தேறி, அவனை நோக்கிப், போரிலே அர்ச்சுனன் உன்னை எதிர்ப்பனேல் அவன்மீது சர்ப்பக்கணையை ஒருகாலன்றி இருகால் ஏவாதொழிதலும், மற்றைய பாண்டவர்களைக் கொல்லா தொழிதலுமாகிய இருவரம் தருகவென்றாள். கர்ணன் யான் ஒருகாற் றொடுத்த கணையை மறுகாற்றொடுப்பதில்லை. அஃதாண்மையும் அறமு மன்றாம் எனக்கூறி, நீர் கேட்ட இருவரமும் தந்தேன், நீரும் எனக்குத் தருதற்கிருவரமுள. அவற்றுள், யான் அர்ச்சுனனால் இறக்குமிடத்து அரசரெல்லாம் அறியும்படி என்னை மடிமீது வைத்து

முலைப்பாலூட்டி என்னை உமது புத்திரனென்பது உலகுக்கறிவித்தல் ஒன்று, மற்றது போர் முடியுங்காறும் என்னை உமது மைந்தனென்று ஐவருமறியாவண்ணங் காத்தருளுதலாம். இவையிரண்டுமே நீர் எனக்குத் தரற்பால வரங்களாமென்றான்.

இவற்றைக் கர்ணன் கேட்குந்தோறுங் குந்திதேவி சிந்தை நைந்துருகி, அழுதழுது, நீ விரும்பியவாறே செய்வேனெனக் கூறிக், கண்ணீரால் அவனைத் தழுவி நீராட்டிப் புறம்பெயர மனம்வராது பிரிந்துபோய்க், கிருஷ்ணனிருக்கு மிடத்தையடைந்து, தான் போனதும் வரம்பெற்றதும் சொன்னாள். அதுகேட்டுக் கிருஷ்ணன், என் எண்ணம் பலித்ததென்று அகமிக மகிழ்ந்து, விதுரன்பாலும் குந்திபாலும் விடைபெற்றுத், தேர்மிசைக்கொண்டு பாண்டவர் இருக்கும் உபபிலாவிய நகரஞ் சென்றான்.

கிருஷ்ணன் மீண்டு வருகின்றானென்பது கேட்டுப் பாண்டவர்கள் எதிர்கொண் டுபசரித்தார்கள். கிருஷ்ணன், தான் சென்றதும், தானுரைத்ததும், அங்கு நிகழ்ந்ததும், துரியோதனன் சொன்னதும் ஆதியோடந்தங் கூறித், தமக்குத் துணையாயுள்ள அரசரும் குருக்ஷேத்திரத்திற்குப் போர்க்கோலங்கொண்டு புறப்பட்டனரென்பதும், அடுத்துவரும் அமாவாசியையில் யுத்தந் தொடங்குதல் வேண்டுமென்பதும் சொன்னான். அதுகேட்ட உதிஷ்டிரன், எமது சேனைகளெல்லாம் ஒருகூறு துருபதனையும், ஒருகூறு விராடனையும், ஒருகூறு திருஷ்டத்துய்மனையும், ஒருகூறு சிகண்டியையும், ஒருகூறு சாத்தியகியையும், ஒருகூறு சேகிதானவனையும், ஒருகூறு வீமனையும் தலைமையாகக்கொண்டு பலதிறப்பட்ட அட்சௌகிணிகளாகிக் கிடத்தலின் அவற்றையெல்லாம் நடாத்துதற்கு ஒரு சேனாபதி வேண்டுமன்றோ. அதற்கு யார் உரியர்? என்றான். கிருஷ்ணன் உதிஷ்டிரனை நோக்கிப் பலபட யோசித்தலாற் பயனென்னை? துரோணனைக் கொல்லுதற்கென்று பிறந்திருப்பவனாகிய திருஷ்டத்துய்மனே சேனாபதியாதற் குரியானென்ன, யாவரும் அவனே தக்கானென்றார்கள். அவ்வாறே பாண்டவர்கள் சேனையெல்லாம் ரணபேரி முழக்கி, விஜயசங்கமூதி, அணியணியாகக் கடல் கரைகடந்தெழுந்து போந்தாற்போலச் சென்று குருக்ஷேத்திரத்தை யடைந்தன.

துரியோதனன் அதனையுணர்ந்து தன் படைகளுக்கெல்லாம் வீஷ்மரைச் சேனாபதியாக்கினான். அது கர்ணன் மனத்துக்கு



வேம்பாகத் தான் வீஷ்மர் இறந்தபின்னரன்றி வில்லுக் கையிலெடுப்பதில்லையென்று சத்தியஞ் செய்தான். விதுரனும் தான் கையில் வில்லெடுப்பதில்லையென்று முன்னரே செய்த சூளுரையை நிலையிட்டான். இவ்வாறே துரியோதனன் பக்கத்திலே சிலரொழிய மற்றைய வேந்தரெல்லாம் அவனுக்காக உயிர்விட முற்பட்டுச் சேனைகளை நடத்திக்கொண்டு தாமும் குருக்ஷேத்திரத்தை யடைந்து எதிருநின்றனர்கள்.

இப்படி யிருதிறச் சேனைகளும் இருகடல் வந்தெதிருநின்றி நிற்றல்போலிருப்பது கண்டு இருதிறத் தலைவர்மனத்தும் ஓர் ஆசங்கை உதிப்பதாயிற்று. துரியோதனன் வீஷ்மரையுந் துரோணரையும் நோக்கி இப்பாண்டவர் சேனையை எததனை நாளில் வெல்லுவீர் என்றான். அவர்கள் தாம் தனித்தனி முப்பதுநாளிற் பாண்டவர் சேனையைத் தொலைத்தல் கூடுமென்றனர். அதுகேட்ட கர்ணன், நான் இப்பெருஞ் சேனாசமுத்திரத்தை ஐந்து தினத்திலே வற்றுவிப்பேன் என்றான். இவ்வுரைகளை ஒற்றராலுணர்ந்த உதிஷ்டிரனும் அர்ச்சுனனை நோக்கித், துரியோதனனது பதினோரக்குரோணி சேனைகளையும் எத்தனைநாளிலே வெல்வாயென்று வினவ, அவன் புன்முறுவல்செய்து, எதிரேயுள்ள சேனையினது பெருக்கத்தைக் கண்டு மயங்காதொழிக. இச்சேனைகள் நான் பெற்றிருக்கும் பாசுபதாஸ்திரத்திற்கு ஓரிமைப்பொழுதிற்குத்தானும் போதாவன்றோ. அந்த அஸ்திரத்தை யான் கையிலெடுப்பது மற்றெவ்வகையானுங் கூடாதெனக் காணும் பக்குவத்தன்றி மற்றன்று. அதனைப் பிரயோகியாமலே, கிருஷ்ணன் எமக்குத் துணையும் தொழுந் தெய்வமுமாயிருத்தலின் வெற்றிமாலை நாமே சூடுவோமென்பதற்கு ஐயஞ் சிறிதுமில்லை யென்றான்.

அவ்வசனம் உதிஷ்டிரன் மனத்தை ஊக்க, அவன் அங்கு வந்திருக்கும் துணையரசர்களையும் மற்றைய வீரர்களையும் நோக்கி, எனக்குறுதிச் சுற்றமும் துணையுமாயுள்ளீர் கேண்மின், யான் துரியோதனன்பால், "எமதுரிமை முழுவதும் தாராதொழியினும் ஐந்தூராயினுந் தருகவென்று தூதுபோக்கியிரந்தேன். அவன் ஈயிருக்குமிடந்தானுந் தருவதில்லையென்று மறுத்தது நீங்களெல்லீருமறி

வீர்கள். ஆதலின் போருக்குடன்பட்டேன். அப்போரிலே, எனது வாள்வலிமையினாலன்று, எனது வில்வலிமையினாலன்று, எனது மேன்மையினாலன்று. உங்கள் துணைவலியினாலே யான் வெற்றிமாலை சூடுவதுண்மை; இனி அஞ்சேன்" என்றான். சந்திரனைச் சூழ்ந்த தாரகாகணம்போல் அவனைச் சூழ்ந்துநின்ற வேந்தரெல்லாம் அவ்வுரை கேட்டமாத்திரத்தே, "வேந்தர் வேந்தே, நமது அரியவுயிரும் நமது சேனையும் இன்னும் நமக்குள்ள வெப்பொருளும் உனக்கேயுரியனவாம்" என்று ஆர்ப்பெடுத்துரைத்தார்கள்.

## யுத்தம்.

இப்படியிருக்கையில், வேதவியாசர் திருதராஷ்டிரனையடைந்து அவனுக்குப் போர்க்களத்தில் நிகழ்வதெல்லாங் காணுமாறு பார்வையைக் கொடுத்தருள, அவன் குரூர தரிசனத்தைக் காண்பதிலும் குருடனாயிருப்பதே தனக்கு விருப்பமென்று அதனை வேண்டாமென மறுத்தான். அதுகண்டு வேதவியாசர் திருதராஷ்டிரன் புரோகிதனாகிய சஞ்சயனுக்குப் போர்க்களத்தில் நடப்பனவற்றையும் அங்குள்ளார் மனத்திடை நினைப்பனவற்றையும் தூரத்தேயிருந்தபடியிருந்துணர்ந்து திருதராஷ்டிரனுக்குணர்த்துமாறு திவ்வியதிருஷ்டியை அநுக்கிரகித்தனர். அப்போது திருதராஷ்டிரன், ஜயம் யாருக்காகுமென்று வினவ, வியாசர், "தருமமெங்குள்ளது ஆங்குள்ளது ஜயம்" என்று கூறி மீண்டனர்.

அப்பால் அர்ச்சுனன், கிருஷ்ணனது ஏவலால் துர்க்கையை வழிபட்டு வரம்வேண்ட, சர்வ வல்லமையுடைய அத்தேவி வெளிப்பட்டு வாழ்த்தி, வெற்றி யுனக்கேயுரியதென் றநுக்கிரகிக்க, அவன் இனி நமக்கு அச்சமில்லையென்று தேறிப் போருக்காயத்தனாகித் தன் தேர்மிசைக்கொண்டான். கிருஷ்ணனும் சாரதியாகி அத்தேர்மேற் கொண்டான். கொள்ளுதலும், அநுமக்கொடி, ஜய! ஜய! வென்று கூறி யழைப்பதுபோல அத்தேர்முகட்டிடை விளங்குவதாயிற்று. அத்தேரிற் பூட்டிய வெண்ணிறக் குதிரைகள் எட்டும் கிருஷ்ணன் கையிலிருக்கும் கலினக்குறிப்பின்மேற் கருத்துடையனவாய்க் கால்களை நிலத்திடை வைத்தும் வையாதனவாய்ப் பரபரப்புடன் நின்றன. கிருஷ்ணன் கடிவாளத்தைத் தூக்க இரதம் இருதிறச் சேனைக்குமிடையே புகுந்தது.



புகுதலும், பகைவர் சேனைக்கிடையே விளங்குகின்ற பெரியோரையும் உறவினரையும் அர்ச்சுனன் கண்ணாரக் கண்டான். அவனை யறியாதே அவன் கையிலிருந்து வில்லு நழுவியது. அவனுந் தன்வசமின்றித் தேரணையிற் சாய்ந்தான். மனவலியும் வீரமும் அவனை விட்டகன்றன. அவன் அஞ்சி வீழ்ந்தது எதற்கு? சேனையின் பெருக்கத்தைக் கண்டன்று! அச்சேனைக்கஞ்சியன்று! சாவுக்கஞ்சியன்று! பகைவர் ஆண்மைக்கஞ்சியன்று! தனது சுற்றமாயுள்ளாரையும், குரவராயுள்ளாரையும், நட்பினராயுள்ளாரையுங் கொன்றொழிக்கவா இச்சரீரமெடுத்தேன் என நெஞ்சழிந்து கழிபேரிரக்கத்தினால் வீழ்ந்தான். வீஷ்மனே தந்தையினு மதிகனாயினன். துரோணனே குருவாயினன். இப்படியே யார் முகத்தைப் பார்க்கினும் அவரெல்லாம் சுற்றமும் குருவும் நட்புமாக, அவரைக் கொன்றொழிப்பது எப்படி யென்னும் எண்ணமே அவனை அவலப்படுத்துவதாயிற்று. அவன் முகத்திலே விளங்கிய காந்தியெல்லாம் குடிபோயது. நாவுந் தடுமாறியது. இவ்வாறு அர்ச்சுனன் சிறிதுநேரமிருந்து பின்னர் ஒருவாறு தெளிந்து கிருஷ்ணனை நோக்கி, "என் எதிரே போருக்கு வந்து நிற்பவர் எனது பிதாமகனார். அவர் பின்னே நிற்பவர் எனது குரு. அப்பால் நிற்பவர் எனது கிளைஞர். அப்பால் நிற்பவர் துணைவர். இப்படியுள்ளாரை நான் கொல்லமாட்டேன்."

"அவர்க்கு மாறாக வில்லுங் கையிலெடேன். அறநான்முறை வழுவி எமக்குரிய பூமியைக் கொடாது சகித்தற்கரிய கொடும் பழிகளெல்லாம் புரிந்த தீயவரைத் தண்டித்தற்குப் போர்க்கோலங் கொண்டேனேயன்றி மற்றன்று. அது செய்தல் எனக்குரிய கடன். அது க்ஷத்திரிய தருமமுமாம். அத்தீயவரை நாடித் தண்டிக்கப் புகுமிடத்து அப்பழிக் குடன்படாப் பெரியோரும் அவருடன் முற்பட்டனர். அத்தீயவரை யொறுக்குமிடத்து அவருடன் அப்பெரியோரையு மொறுக்கவேண்டியவனாகின்றேன். பிழை செய்தாரை ஒறுத்தற்கு என்மனம் விரைகின்றதாயினும், அவருடன் கூடிய பெரியோரை நினைக்கவோ என் நெஞ்சம் ஈடழிகின்றது. எம்முன்னே வந்து தம்முயிரை விடுதற்கு அணிவகுத்து நிற்கும் ஆன்மகோடிகளை நோக்குமிடத்து, என் நெஞ்சம் துணுக்குற்று நடுநடுங்குகின்றது. என்செய்யப்புகுந்தேன் என்று என்மனம் நிலைகுலைகின்றது. இது செய்யப் புகுந்தது அற்பமாகிய வுலகவின்பத்தை அவாவும் அவாவி

னாலன்றோ. இப்போர் முடிவிலே தம்மினத்தை யிழந்து துயர்கூறும் எனது கிளைஞர் கண்களிக்கவன்றோ நான் அரசுக்கு ஆசையுற்றேனாயினேன். ஒருபிடி கீரையும் அரைநாழி தண்ணீரும் இவ்வுடலை வளர்க்கப் போதுமாகவும் இந்நிலையில்லாத வுடம்புக்காகவா இத்தனை கோடி உயிர்களையும் வதைக்குங் கருமத்தை மேற்கொண்டேன்! ஆதலால் இப்போருக்கு நான் உடன்படேன் கேசவா வருக யாம் மீளுவோம்" என்றான்.

இவ்வுரையாற் கிருஷ்ணன் மனஞ் சிறிதுமசைந்ததில்லை. அர்ச்சுனனோடு பன்னெடுங்காலம் பயின்ற கிருஷ்ணன் அவன் மனச் சார்பும் இயல்புமறியாதவனல்லன். அர்ச்சுனனுக்குத் தத்துவோபதேசம் செய்தற்குப் பக்குவகாலம் எப்போது வாய்க்குமெனக் கிருஷ்ணன் நெடுங்காலம் நோக்கியிருந்தான். தன் கிளைஞரையும் துணைவரையும் குரவரையும் தான்கொல்ல நேர்பட்டதே என்று சிந்தித்தபொழுதே பிரபஞ்ச மயக்கமானது அர்ச்சுனனை அடியோடு விழுங்குவதாயிற்று. அவன் அம்மயக்கத்தில் வீழ்ந்து கரைதெரியாது தவிக்கு மவ்வமையமே கிருஷ்ணன் தான் கருதியதைச் சாதித்தற்கு ஏற்ற முகூர்த்தமாமெனக்கொண்டு அவனை நோக்கி, ஓ! அர்ச்சுனா! உனது அறிவும் ஆண்மையும் நன்றாயிருக்கின்றன. ஒருவருக்கு வஸ்திரம் எப்படியோ அப்படியே ஆன்மாவுக்கும் இத்தேகமாம். இத்தேகமோ நிலையற்றது. பிறந்தவன்றே யழியினு மழியும். பிறந்து சிலகாலமிருந் தழியினு மழியும். ஆதலின் இச்சரீரம் நிலையினையுடையதன்று. இச்சரீரத்தை நாமெடுத்தது முன்னர் நாம்செய்த கன்மப் பயனாகவேயாம். இச்சரீரம் நீங்கினால் மற்றொரு சரீரத்தை எடுப்போம்.

இம்மையிலே நற்கர்மங்களைச் செய்தால் அதன் பயனாக இதனினும் சிறந்த சரீரமும் போக்கியமும் பெறுவோம். எவன் எவ்வருணம் எவ்வாச்சிரமத்துக்குரிய சரீரத்தை யெடுக்கின்றானோ அவ்வருணம் அவ்வாச்சிரமத்துக்குரிய கருமங்களைத் தப்பாது செய்தற்குரியனாகின்றான். அது செய்யானாயின் அந்நிலையினின்றும் கீழே செல்லுதற்குரியனாகின்றான். அது செய்வானாயின் மேலே செல்லுதற் குரியனாகின்றான். நீயோ க்ஷத்திரியன். க்ஷத்திரியனுக்குரிய தருமம் யாது? உலகங் காத்தலன்றோ. அதனைக் காத்தலாவது மறங் கடிந்து அறநிலை நிறுத்தலன்றோ. மறங்கடியுமிடத்து இவர் நமர் இவர்



பிறர் என்னும் நோக்கங் கூடாதன்றோ. எதிருன்றியிருக்குஞ் சேனையிலுள்ளாரை இவர் நமர் இவர் பிறரென்னும் நோக்கம் க்ஷத்திரியனாகிய வுனக்குக் கூடாதன்றோ. உலகத்தைக் காக்க வெடுத்த விச்சரீரத்தை அது செய்யாது அவத்திற் செலுத்தத் துணிதல் அஞ்ஞானமாமன்றோ.

கருமஞ்செய்வோர் பலாபேக்ஷை யின்றிச் செய்தல்வேண்டும். தாஞ்செய்யுங் கருமத்தைத் தாஞ் செய்வதாகக் கொள்ளாது தமக்குரிய தருமமாகக்கொண்டு செய்தல் வேண்டும். பகைவரைப் பகைவரென்றும் உறவினரை உறவினரென்றும் கருதாது ஜீவர்கள் தோறும் இருந்து அவர்களை ஆட்டுவா னொருவனாதலின் அவர் நம்மின் வேறல்லரெனக் கருதுதலே மெய்யறிவாம். தாய்தந்தை மனைமக்கள் என்னும் பற்றும் நமர் பிறரென்னும் வேற்றுமையும் அஞ்ஞானத்தான் வந்தனவாம். அவ்வஞ்ஞான நீங்குமிடத்து இச் சராசரமெல்லாம் பிரமாய் விளங்கும். ஆதலின் மெய்யறிவுதித்தற்குத் தாம் தாம் செயற்பால கருமங்களைப் பலாபேக்ஷையின்றி யாவருஞ் செய்தல்வேண்டும். அதனாற் சித்தசுத்தியும், அதனால் மெய்யறிவும் உதயமாகும். இன்னும் தீயவரைத் தண்டிக்கு முறையாற் றண்டிக்குமிடத்து அவரும் அத்தீய கருமத்தைச் செய்தற்குக் கருவியாயிருந்த சரீரத்தை விடுத்து அப்பாபப்பயனை யனுபவித்து மேற்கதியை யடைகின்றாராதலின் அதுவும் புண்ணியமே யாமென்றின்னோரன்ன பொருளையுடைய திவ்விய நூலாகிய பகவற்கீதையை உபதேசித்தான். அப்பகவற்கீதை ஐயாயிரம் வருஷம் சென்றும் மங்காது இன்றும் புதுமையும் பெருமையும் இனிமையும் உறுதியும் பயப்பதாய் உலகத்தெத்திசையிலும் சோதிமயமாய் நின்று விளங்குதல், தான் நித்தியனாகிய ஞானமூர்த்தியினது திவ்விய வாயினின்றும் போந்தமையினாலன்றோ.

இத்திவ்விய ஞானோபதேசத்தால் அர்ச்சுனனது இருதயகமலம் வாட்டம்நீங்கி மலர்ந்து தெளிந்து கிளர்வுற்றது. அவன் உடனே கிருஷ்ணனை வணங்கி, என் அறியாமையைப் பொறுத்தருளுக வெனக் கூறித் தன் கையிற் காண்டீவத்தை யெடுத்தான்.

இது நிகழ்ந்தபின்னர், உதிஷ்டிரனும், சில கடன்களைச் செய்யாது போர் தொடங்கினேன் எனச் சிந்தித்துத் தன் கரத்திருந்த

ஆயுதங்களைப் புறத்தே வீசிவிட்டுத் தொழுத கையோடும் விரைந்து பகைவர் அணிகளை நோக்கி நடந்தான். அதுகண்டு அர்ச்சுனன் இஃதென்ன விபரீதமெனப் பிரமித்து அவன் பின்னர் ஓடுதற்குத் தேரினின்றும் பாய்ந்தான். அதுகண்டு மற்றைய பாண்டவரும் கிருஷ்ணனும் விரைந்து தொடர்ந்தனர். யாவரும், தருமசேனா! எங்குச் செல்கின்றாயென்று கூவினர். சிறிதுதூரம் தொடர்ந்து நடந்த பின்னர்க் கிருஷ்ணன், அர்ச்சுனன் முதலியோரைத் தடுத்து, உதிஷ்டிரன் கருத்துணர்ந்தேன் நில்லும் நில்லும் என்று புன்முறுவலோடுமுரைத்தான். அப்பொழுது பகைவர் சேனையிலுள்ளார், "உதிஷ்டிரன் அஞ்சிவிட்டான் பயந்து சரணடைய வருகின்றான்" "இதுவா பாண்டவர் வீரம்?" என்றுரக்கவுரைத்து நகையாடினார்கள்.

அவ்வுரைகளும் நகைத்துக் கைகொட்டலும் ஓர்பால் நிகழ உதிஷ்டிரன், சேனைக்கிடையே புகுந்து வீஷ்மரையடைந்து அவர் பாதங்களைப் பற்றிக்கொண்டு, ஒப்பற்ற வீரமும் பெருமையும் முதுமையும் உடையீர்! "உம்மோடு யாம் போர்செய்தற்கு அநுமதி தருதல்வேண்டும். அதுமாத்திரமன்று ஆசியுந் தருதல்வேண்டும்" என்றான். வீஷ்மர் மகிழ்ந்து, "உனக்கு வெற்றி உண்டாகக்கடவது; யானோ கௌரவரது செல்வத்தை அநுபவித்தலின் அவர்க்கு இச்சரீரமுரியதாயிற்று; ஆதலின் போர்க்கருமந் தவிர மற்றெது வேண்டினும் ஈகுவேன்" என்றார். உதிஷ்டிரன் அவரை நோக்கி உம்மை வெல்வது யார் என்றான். வீஷ்மர் யான் போர் செய்யுங்காறும் என்னை வெல்வார் யாருமில்லை. எனக்கு மரணகாலமும் சமீபித்திலது. இன்னுமொருதரம் என்பால் வந்து கேட்பாயாகவென்றனர்.

உதிஷ்டிரன் அதுகேட்டு மீண்டு, துரோணன்பாற் சென்று அவரை வணங்கி அவர்பாலும் அநுமதியும் ஆசியுங் கொண்டான். துரோணன் அவனைநோக்கி, சகித்தற்கரிய துக்கவுரைகளைக் கேட்டு வில்லை எப்போது வீசுவேனோ அப்போதுதான் எனக்கு மரணமென்பதறிகவென்றான். அப்பால் உதிஷ்டிரன் கிருபன் முதலியோரிடத்துச் சென்று அவர்பாலும் வாழ்த்தும் விடையும் பெற்றுத் தன் சேனையை நோக்கி நடந்தான். முன்னே நகைத்தோரெல்லாம் உதிஷ்டிரனது பெருந்தகைமையினையும் களங்கமிலாவொழுக்கத்தையுங் கண்டு புகழ்ந்து மெச்சினர். அப்போது இத்துணைச் சிறந்த



பெருந் தகைமையினையுடைய உதிஷ்டிரனுக்கு மாறாகப் போருக்கெழுந்த கொடுங்கோலேந்திய துரியோதனன்பக்கத்திலிருந்து பொருதற்கு மனந்துணியேன் எனக் கூறி, அவன் பக்கத்தை விடுத்து யுயுற்சன் என்பவன் தன்சேனையோடு உதிஷ்டிரனை யடைந்தான். யுயுற்சன் திருதராஷ்டிரனுக்கு வைசியப் பெண்ணிடத்தே பிறந்த புத்திரன்.

உதிஷ்டிரன் மீண்டு தன் சேனையை யடைதலும் போர்ப்பறையுஞ் சங்குகளும் முழங்கின. அம் முழக்கங்கேட்டுப் பகைவர் சேனையும் பறையுஞ் சங்குகளும் மாறு முழக்கின. அம்முழக்கத்தால் இருதிறச் சேனையும் ஆர்த்துக் குதித்தெழுந்தன. தேர்களோடு தேர்களும் யானைகளோடு யானைகளும், குதிரைகளோடு குதிரைகளும், வீரரோடு வீரருமாக ரத கஜ துரக பதாதிகளாகிய சதுரங்க சேனைகளும் சென்று சேர்ந்தன. வாளாயுதம் பிடித்தோர், வாளாயுதம் பிடித்தவரோடும், வேல் தரித்தோர் வேல் தரித்தவரோடும், வில்லாளிகள் வில்லாளிகளோடும், கதாயுதபாணிகள் கதாயுதபாணிகளோடும், முடிமன்னவரோடு முடிமன்னவரும், பட்டவர்த்தனரோடு பட்டவர்த்தனரும், மந்திரிகளுக்கு மாறாக மந்திரிகளும், மண்டலீகருக்கு மாறாக மண்டலீகருமாக முறையுந் தகுதியும் நோக்கிப் போர் கலந்தனர். பெருங் கொடிய யுத்தமூண்டு இருதிறச் சேனையும் வீரசூரத்துவத்தோடும் பொருதனவாயினும், வீஷ்மரே பாண்டவர் சேனையைத் துடைப்பாராயினர். அப்போரிலே விராடன் மகன் உத்தரன் உயிர்துறக்க, அவன் தமையன் சுவேதன் ஆற்றருஞ் சீற்றமுடையவனாய்ச் சிறிதுநேரம் மிக்க ஆண்மையோடும் பொருதான். அவனும் மாண்டான். அவ்வளவில் முதனாட்போர் முடிய வீஷ்மரே வெற்றிமாலை சூடினர்.

வீஷ்மர் வெற்றிமாலை சூடினர் என்பதும் தம்பக்கத்தில் அநேக வீரரும் ரதகஜதுரகங்களும் மடிந்ததுங் கேட்ட உதிஷ்டிரன் மனந்தளர்ந்து அர்ச்சுனனையும் கிருஷ்ணனையும் நோக்கி, இதற்கன்றோ போர் வேண்டாமென யான் முன்னர்ப் பன்னாட் பின்னிட்டேன் என்ன, இருவரும் உதிஷ்டிரனை நோக்கி, முதனாட் போரின் காரியத்தைக்கொண்டு இனி வரும்போரின் காரியத்தை நிச்சயித்தலாகாது. எங்களுக்கு விஜயம் இனிமேற்றான் கிடைக்குமென்று அவனைத் தேற்றினர்.

அப்பா லிரண்டாநாட் போர் தொடங்கியது. இருதிறச் சேனையும் களங்கொண்டன. பாண்டவசேனை, தான் முதனாளிற் புறங்கொண்டதை நினைந்து இன்று துரியோதனன் சேனையைப் புறங்காணாது மீள்வதில்லையென்னும் பிரதிக்கினையோடும் முனைந்து நின்று போர்செய்தது. அப்போது அர்ச்சுனன் கிருஷ்ணனை நோக்கி, வீஷ்மாசாரியர்முன்னே தேரைச் செலுத்துகவென்னக் கிருஷ்ணன் செலுத்தி அவர்முன்னே நிறுத்தினன். வீஷ்மர்க்கும் அர்ச்சுனனுக்கும் கொடிய யுத்தம் மூண்டது. இருவர் தொடுத்த பாணங்களாலும் ஆகாயம் எள்ளிடவிடமின்றித் தூர்ந்து சூரியனும் மறைந்து இருளும் மேற்பட்டது. இப்படி இருவரும் சரமாரி பொழிந்தும் ஒருவரையொருவர் வெல்வதின்றி நெடுநேரம் போராடினர். இது நிகழ, அவ்விரு சேனைக்கும் அப்பாற் சூழ்ந்துள்ள வீரரும் தத்தம் படைகளோடு பகைவர் படைகளைத் தாக்கிக் கொடும் போர் புரிந்தனர்.

வீமனும் ஒருபால்நின்று கலிங்கதேசத் தரசனைக் கொன்று அப்பால் வீஷ்மர் சேனையைத் தாக்கிப் புறங்கொடுத்தோடச் செய்தான். அதுகண்டு வீஷ்மர் மீட்டுவருமாறு திரும்பினர். திரும்பும் போது சாரதி தலையிழந் துயிர்துறக்கக் குதிரைகள் தேரை யிழுத்துக் கொண்டு களத்தைவிட்டுப் புறங்கொடுத்தோடின. வீஷ்மர் களத்தை விட்டகலுதலும் அர்ச்சுனன் தனதிரதத்தைத் திருப்பிக்கொண்டு போய் அபிமன்னியு போர்செய்யுமிடத்தை யடைந்தான். அங்கே சத்துரு சேனைகள் தன்னைச் சூழ்ந்துநின்று சரமாரி வருஷித்தலைப் பொருட்படுத்தாது, மிக்க ஆண்மையோடும் கொடிய சீற்றத்தோடும் ஆணிளஞ் சிங்கம்போல நடுவேநின்று, நாற்பாலும் பொழிகின்ற சரமாரியைத் தன் ஒருகையாலே தொடுக்கின்ற பாணங்களால் தொலைத்துத் தொலைத்துப் போர் செய்தலைக் கண்டு அர்ச்சுனன் அப்பகைவர்மீது தானும் சரங்களைத் தொடுத்தான். அவன் சரங்களால் பகைவர் வலிகுன்றித் தொகைமெலிந்து புறங்கொடுத்தனர். அவ்வளவில் சூரியனும் அஸ்தகிரியை யடைந்தான். போர்க் களமும் இரத்தக்கடலாகிப் பெருக்கெடுத்துக் கரைகடந்தெழுந்தது. பாண்டவர்களும் வெற்றிமாலைபுனைந்து விஜயசங்க முழக்கி மீண்டனர்.

மூன்றுநாள் யுத்தந் தொடங்கிற்று. வீஷ்மர் காருடயூகம் வகுத்து மிக்க வீரமும் ஆண்மையுங்கூறி நின்றனர். பாண்டவரும்



தமது சேனையைக்கொண்டு அர்த்த சந்திர வியூகம்வகுத்து முழங்கி நின்றனர். போர்ப்பறை முழக்கங் கேட்டலும் இருதிறச் சேனையும் யுகாந்த மழைபோலப் பாணப்பிரயோகஞ் செய்தன. அச்சரங்களால் ஆகாயமண்டலம் மறைந்தது. அச்சரத்தாலுதிர்ந்தசிரங்களால் நிலமுழுதும் மறைந்தன. அச்சரங்கள் கான்ற உதிரச்சேற்றினாலே நாற்றிசையு முருமாறின. வீஷ்மர் சேனை பாண்டவர் சேனைக்கு முன்னே நின்று நிருவகிக்கவாற்றாது முறிந்து முதுகிட்டது. அப்பொழுது வீஷ்மர், மிக்க கோபமும் வீராவேசமுமுடையராய்த் தமது வீரரை மடக்கித் தேற்றிக்கொண்டு, தமது தேரைத் தூண்டிப் பாண்டவர்சேனைக்கு முற்பட்டுப் பாணமழை பொழியப், பாண்டவர் சேனை நிலைகுலைந்து வலிகெட்டுப் புறகிட்டது. அர்ச்சுனன் அது கண்டும் ஊக்கமின்றியிருத்தலை நோக்கிக் கிருஷ்ணன் சரேலெனத் தேரினின்றும் கீழே பாய்ந்து, தனது சக்கரத்தைச் சுழற்றிக்கொண்டு வீஷ்மரையும் அவர் சேனைகளையும் மற்றைய வீரரையுந் தொலைத்து மீளுவேனென விரைந்தோடினர்.

அப்பொழுது அர்ச்சுனன் மின்னெனப் பாய்ந்தோடித் தொடர்ந்து கிருஷ்ணனைப்பற்றிக்கொண்டு, யாதுசெய்யப்புகுந்தனை! நீ கூறிய சத்தியத்தை மறந்தனைபோலும். கையிற் படையெடுப்பதில்லையென்று நீ துரியோதனனுக்குச் சொன்ன வாய்மையை மறந்தனையோ! இதுவும் ராஜதருமமாமோ! இச்சேனையைத் தொலைக்க நீ கையிற் படையெடுக்கவேண்டுமோ! யானே ஒரு கணத்தில் இப்பெருஞ் சேனையைத் தொலைப்பன் வருகவென்று அவனை அழைத்துக்கொண்டு மீண்டுபோய்த் தேர்மிசைக்கொண்டான். கிருஷ்ணன் தானுந் தேரேறிக் குதிரைகளைத் தூண்டினன். வீமனும் மிக்க வீரமும் மானமுமுடையனாய் ஒருபாற் புகுந்து போர் தொடுத்தான். அவன் மகன் கடோற்கசனும் ஒருபாற்புகுந்து பகைவர் சேனையிற் புகுந்தான். அர்ச்சுனன் கரவேகத்தோடு சரந்தொடுக்கத் தலைப்பட்டான். வருகின்ற பாணங்களையெல்லா முடனுக்குடனே தொலைத்து அவைகளைத் தொடுத்த வீரர்தலையிலும் தோளிலும் மார்பிலும் பாணங்கள் சென்று செருமச் சரமாரி பொழிந்தான். பகைவர் ஒருசரம் ஆய்ந்தெடுத்துத் தொடுக்குமுன்னே பத்துச் சரந்தொடுத்தான். இப்படி விட்ட பாணங்களை நிருவகிக்தலாற்றாது

துரியோதனன் சேனை நாற்றிசையிலும் முறிந்தோடின. வீரரெல்லாம் சென்றொளித்தனர்; அர்ச்சுனன் கரவேகம் இத்துணைச் சிறந்ததா வென்று அதிசயித்தனர். கடோற்கசனால் முனைகெட்டோடினோர் அவன் வில்லாண்மையைப் பாராட்டினர். துரியோதனனும் அவன் தம்பிமாரும் தப்பியோடினர். அவ்வளவில் சூரியனும் அப்போர்க் களத்திலே அற்றைப் பிற்பகற் போரிலேபட்ட வீரர் சரீரத்தினின்றும் கான்று தெறித்த உதிரந் தன்மேலும் வீழப்பெற்று அக்கறையினைப் போக்குதற்கு நீராடப்புகுந்தான்போன்று மேல்கடற் புகுந்தான். வீஷ்மரும் தன் சேனையோடு பாசறை சேர்ந்தனர். பாண்டவர் விஜயபேரி முழக்கித் தம் பாசறைக்கு மீண்டனர்.

வீஷ்மர் தம்முன்னே கிருஷ்ணன் சக்கரதாரியாய்ப் பாய்ந் தோடிவந்ததும் அதுகண்டு அர்ச்சுனன் அவனைத் தொடர்ந்து அழைத்து மீண்டதும், கிருஷ்ணன் அது செய்தது அர்ச்சுனனைத் தூண்டும்பொருட்டென்பதும் எடுத்துத் தமது பக்கத்து மன்னர்க்கு விளக்கினார்.

நான்காம்நாட் சூரியோதயத்திலே இருதிறச் சேனைகளும் போர்ப்பறை முழக்கி ஆர்ப்பரித்தெழுந்து களம்புகுந்தன. அற்றை நாட் போர்க்கு யானைப்படையே கௌரவரால் விடப்பட்டது. கருங் கடல்போல வந்த யானைப்படையை வீமன் எதிர்த்துத் தன் கதா யுதத்தாலும் பாணங்களாலும் தொலைத்துத், தொலையாதெஞ்சிய யானைப்படைகளை வீழ்ந்த யானைகளை ஆயுதமாகத் தூக்கி மோதிச் சிலவற்றையும், கையாற்பற்றி நிலத்திடையறைந்து சிலவற்றையும், அந்தரத்தெறிந்து சிலவற்றையும், காலாலுதைந்து சிலவற்றையும், துதிக்கையிற்பற்றிச் சுழற்றிச் சுழற்றி வீரர்சேனையுட் புகுந்து அவ் விசையினாலும் தாக்கினாலும் பல்லாயிரம் வீரரிறப்பச் சிலவற்றையு மாக அவ்யானைப்படை முழுதையுங் கொன்று தொலைத்தான். அவன் மகன் கடோற்கசனும், மாயத்தால் யானைப்படையொன்று செய்து, ஒருபால்நின்று,அற்புதசாமர்த்தியத்தோடும்,ஆண்மையோடும்,இவன் வீமனிலும் சிறந்த வீரனென்று எதிர்த்த பகதத்தனும், கௌரவ சேனாபதியாகிய வீஷ்மரும் மற்றைய வீரருங் கொண்டாடிப் புகழு மாறு போர்புரிந்து கௌரவ சேனையை மெலிந்து புறங்கொடுக்கச் செய்தான். அர்ச்சுனன் வீஷ்மரை எதிர்த்து அவர் சேனையை மெலிவித்தான். இப்படி நிற்கையில் சூரியன் வருணதிசை சேர்ந்



தான். பாண்டவ வீரருங் ஜயபேரி முழக்கித் தம் பாசறை புகுந் தனர். இங்நான்குநாட் போரிலும் இருதிறச் சேனையிலும் மாண் டோர் பல்லாயிரவராயினும், துரியோதனன் சேனையில் மடிந்தோர் தொகை பாண்டவர்சேனையி லிறந்தோர் தொகையில் இரட்டியினு மதிகமாம்.

இவ்வாறே உதிஷ்டிரன் சேனை நாள்தோறும் போரிலே வெற்றிபெற்று வரும்போது எட்டாநாட் போரிலே அர்ச்சுனனுக்கு நாககன்னிகை வயிற்றிற் பிறந்த புத்திரன் இறந்தான். அதனால் வீமன் மனமும் மற்றைய பாண்டவர் மனமுஞ் சிறிது சலித்தன வாயினும் வீமன் முன்னையிலும் பன்மடங்கு வீராவேசமுங் கோபாக் கினியுமுளப் பொருது அற்றைநாளும் அடுத்தநாளும் கொடும் போர் செய்து பகைவர் சேனையை மெலிவித்ததுமன்றித் துரியோதனன் மனவலியையுந் தளர்வித்து அவரையெல்லாம் புறங்கொடுத் தோடச் செய்தான்.

இங்ஙனம் பாண்டவர்க்கு நாள்தோறும் அநுகூலமே பலிப்ப தாயினும் வீஷ்மரை வெல்வதும் தமது எண்ணம் முடிப்பதும் கூடாத கருமமென்பது உதிஷ்டிரன் மனத்திடை உதிப்பதாயிற்று. ஒன்பதாநாளிரவு கிருஷ்ணனையும் மற்றைய துணையரசையுமழைத்து அவரோடு கலந்து தன் மனக்கிடக்கையையும் பகைவரது நிலையையு மெடுத்துரைத்தான். அப்போது கிருஷ்ணன் உதிஷ்டிரனை நோக்கி வீஷ்மரை வில்லாண்மையினின்றும் நீக்கித் தவத்தினை மேற்கொள்ளு மாறு செய்யினன்றி நம்மெண்ணமுடிப்பது அரிதினுமரிதாம். வீஷ் மரை அதுசெய்யுமாறு தூண்டுதற்கு யாது செய்யத்தக்கதென்றால், அவர் உன்னை இன்னுமொருக்கால் தம்பால் வருமாறு சொற்றன ரன்றே. அவ்வாறே அவர்பாற் சென்று நாம் வெற்றிபெறுதற்கு உபாயங் கூறுதல்வேண்டுமென்று அவரை வேண்டுவையாயின் அது பலிக்குமென்றான். அவ்வாறே உதிஷ்டிரன் அவர்பாற் சென்று வணங்கி, வெல்லுதற்கு உபாயங் கற்பித்தருளுக வென்றான். அது கேட்ட வீஷ்மர், உதிஷ்டிரனை நோக்கி, மைந்தாகேள், என்னைக் கொல்லும்பொருட்டுச் சிகண்டி யென்பவன் அவதரித்திருக்கின்றான். அவன் என்னை எதிர்ப்பானாயின் அவனுக்கு நான் அஞ்சுவதன்றி மற்று யார்தாம் வரினும் என்னை வெல்லார். அவன் பெண்வடி

னுடையனாதலின் அவனை யான் எதிர்த்துப் போர் புரிதற்குக் கையில் வில்லெடேன். இதுவே அவன் என்னை வெல்லு முபாயமாமென்றார்.

இது நிகழ்ந்தபின்னர் ஓர் அசரீரியெழுந்து, கங்கைமைந்தனே, தீயவர்பொருட்டு நீ யுத்தஞ்செய்வது தருமமன்று. இதுகாறும் நீ பெற்ற நன்றியின்பொருட்டுத் துரியோதனனுக்காகப் பொருதது தகும். இனி நல்லறமே மேற்படுதல்வேண்டும். ஆதலின் இந் நிலையற்ற காயத்தைக் களைந்துவிட்டுச் சுவர்க்க இன்பத்தை அநுபவிக்க வருதியென்றொலித்தது. அதுகேட்டு வீஷ்மரும் வீடுபேற்றின்மேல் மனம் வைப்பாராயினர்.

அப்பொழுது பத்தாநாள் உதயஞ்செய்தது. இரணபேரி முழக்கமும் சங்கநாதமும் இருதிறச் சேனையினின்று மெழுந்து அண்டகடாகங்களைக் குலுக்கின. படைகள் விரைந்தெழுந்து களம்புகுந்த விசையினாலெழுந்த பூதூளி விண்ணைமூடி உதித்த சூரியனையும் மீளவும் மறைத்தது. வீஷ்மர் அன்று மிக்க அலங்காரமாக ஆடையாபரணங்களை யணிந்துகொண்டு வெளிப்பட்டுச் சூரியனை வணங்கித் தேர்மிசைக்கொண்டனர். தம்மைச் சூழ்ந்து துரியோதனன் முதலிய மன்னர்கள்தாமும் ஆயுதபாணிகளாய்ப் புறப்பட வீஷ்மர் யுத்தகளத்தை அடைந்தனர்.

பாண்டவர்சேனையும் களம்புகுந்து விஜயசங்கநாதஞ் செய்தது. அர்ச்சுனனும் கிருஷ்ணனும் தேரேறிப்போய் வீஷ்மருடைய இரதத்திற்கு முன்னே எதிரூன்றினர். அப்பொழுது கிருஷ்ணன் அர்ச்சுனனை நோக்கி, இன்று நீ வீஷ்மருக்கு விண்ணுலகஞ் செல்லுதற்கு விமானங்கொடுத்தல் வேண்டும் என்றான். அர்ச்சுனன் தன் எதிரே நிற்கின்ற மூதாதையாகிய வீஷ்மரை நோக்கினான். வீஷ்மரும் தமது அன்புமயமாகிய பார்வையை அவன்மீது செலுத்தினார். அதுநோக்கி, அர்ச்சுனன் கிருஷ்ணனை நோக்கிக் கேசவா! என்னைத் தூக்கித் தம் மடிமீதிருத்தி உச்சிமோந்து தம் மேனியை யான் என் அழுக்குப் படிந்த கரங்களாலும் கால்களாலும் அசுசிப்படுத்தவும் அதனை அசுசியெனக்கொள்ளாது பெரும் போகமாகக் கொண்டு என்னை அன்பும் இனிமையுங்குழைத்த சொற்களால் ஆதரித்து அணைத்து வளர்த்த இப்பெரியோனை, இம்மாந்தர் பெருந்தகையை எப்படிக் கொல்வேன். அவர் திருமேனியில் எப்படிச் சரந்தொடுப்பேன்!



என்னினும் கொடியன் வன்கண்ணன் ஈரமில்லாத் தீயன் உலகில் ஒருவன் உளனோ? தன்னை வளர்த்த மூதாதையைக் கொன்றானென்னும் பழிமொழி உலகுள்ளளவும் நீங்காதன்றோ. ஆதலின் இவரைக் கொல்லப் புகுவதினும் யானும் என் சேனையும் அவரால் அழிவது நன்றென்று தன் காண்டீவத்தைக் கீழே நழுவவிட்டான்.

அதுகேட்ட கிருஷ்ணன் அவனைநோக்கி, உலகத்தை மறங்களைந்து காத்தல் க்ஷத்திரியர் கடனன்றோ. அதனைச் செய்யும்போது, இவர் நமர் இவர் பிறரெனக்கொண்டு நடுநிலை பிழையாது யாவரையும் ஒப்பநோக்கி மறங்கடிந்துலகங் காப்பவனே க்ஷத்திரியனாவான். அந்நடுநிலை பிழைப்பவன் க்ஷத்திரியனாகான். அவன் பிறப்பினால் க்ஷத்திரியனேனும் அவன் க்ஷத்திரியருட் பதரென்றே தள்ளப்படுவான் ஆதலின் மறங்கடிந்துலகங் காத்தலை மேற்கொண்ட க்ஷத்திரியனாகிய நீ நடுநிலை திறம்பலாகாது. இவர் நமர் இவர் பிறர் என்னும் பேதம் பாராட்டலாகாது. உன் வில்லைக் கையிலெடுத்து நீ முடிக்கத் தொடுத்த கருமத்தை முடிக்கக்கடவை யென்றான்.

அர்ச்சுனன், கேசவா, மயக்கந் தீர்ந்தேன். வேதமுடிவாகிய பரம்பொருளினது தத்துவத்தை நான் உணர்ந்துய்யுமாறு ஞானக்கண்ணைத் தந்தருளிய ஞானகுருவே! இனி எனதருமைத் தந்தையேயாயினுமாகுக, என துயிர் போலுந் துணைவரேயாயினுமாகுக, எனது தந்தைக்குத் தந்தையே யாயினு மாகுக, என் அருந்தவப் புதல்வரேயாயினுமாகுக, நீ சொல்லுவாயாயின் யாரையுங் கொல்லுவேன். இனி அஞ்சேன் என்றான். அவ்வளவில் கிருஷ்ணன் தேரைத் தூண்ட அர்ச்சுனனும் காண்டீவத்தை யெடுத்துப் பாணங்களைத் தொடுத்து மழைபோலப் பொழிந்தான். அப் பாணங்களை யெல்லாங் கண்டு வீஷ்மரும் உருத்தெழுந்து தமது வில்லை வளைத்துச் சரமாரி பொழிந்தார். அர்ச்சுனன் சினந்து ஒரு தொடையிலே ஆயிரம் ஆயிரம் பாணங்களை அண்டங்களையெல்லாம் அதிர்விக்கும் வலியுடையனவாகக் கரவேகத்தோடு பிரயோகித்தான். வீஷ்மர் சரீரத்திலே எள்ளிடவிடமின்றிச் சரங்கள் பாய்ந்து கோத்தன. அதுகண்டு கிருப துரோணர்களும் அசுவத்தாமனும் சயத்திரதனும்பகதத்தனுஞ் சகுனியும் துரியோதனன் தம்பியருஞ் சென்று வீஷ்மரோடு கூடி பாணங்களைத் தொடுத்து யுகாந்தகாலத் தெழுந்த மேகவருஷம் போலப் பாண்டவர் சேனைமேற் பொழிந்தார்கள். அதனால் முடி

துணிந்தவரும் அடிதுணிந்தவரும் வில்லற்றவரும் தேரற்றவரும் யானையற்றவரும் தலையற்றவரும் கரமற்றவருமாய்ப் பாண்டவசேனை கலங்குவதாயிற்று.

அப்போது வீமன் தனது கதாயுதத்தோடு பாய்ந்து பகைவர் சேனையினுள்ளே நுழைந்து முடிகள் சிதறவும் கைகள் சிதறவும் மார்பு சிதறவும் பற்கள் உதிரவும் கதையினால் மோதி மோதி அச் சேனைசமுத்திரத்தைச் சில கணப்பொழுதிற் கலக்கினான். இங்ஙனம் கலக்கியும் கலங்காது வீஷ்மரது சோராத கரவேகத்தினாலெழும் சரமாரியாற் பாண்டவர்சேனையில்,

"எத்தனை முடித்தலைகளெத்தனை புயக்கிரிகளெத்தனை கரக்கமலம்வே
றெத்தனை யுடற்சுமைகளெத்தனை யுறுப்பினினமெத்தனை கொடிக்குடர்களு
மெத்தனை நிணத்தடிக ளெத்தனை நரப்புவகை யெத்தனை யெலும்புநிரையே
லெத்தனை மணித்தொடைக ளெத்தனை மலர்க்கழல்களிற்றன களத்தினிடை
[யே."

இவ்வாறாகப் பாண்டவர் சேனை மாய்வதைக்கண்ட கிருஷ்ணன் தனது சங்கையெடுத்து வீரநாதஞ்செய்ய, அர்ச்சுனன் இதுவே வீஷ்மரை வீழ்த்துதற்கு ஏற்ற சமயமெனக் கருதிச் சிகண்டியை முன்னணியில் விடுத்துத் தன் காண்டீவத்தை யெடுத்து அண்டங் குலுங்கி, அதிரும்வண்ணம் கொடிய பாணங்களைத் தொடுத்தான். அப்பாணங்களைத் தடுத்துப் போர்புரிதற்கு வீஷ்மரும் தனது தூணியிற் கையிட்டு அம்பினையெடுக்குமளவில் சிகண்டி எதிர்ப் பட்டுச் சரமாரி பொழிந்தான். அவ்வளவில் வீஷ்மர் பேடியோடு யுத்தஞ் செய்வதில்லை யென்ற விரதம் மனத்திடைத் தலைப்படக் கைசோர்ந்து வாளாவிருந்தனர். அர்ச்சுனன் விடுத்த பாணங்கள் வீஷ்மர் உடலிற் கோத்து உரோமங்கள்போல் நிமிர்ந்து நின்றன. அவர் அப்பாணங்களால் வலிதளர்ந்து சூரியாஸ்தமயன காலத்தில் இதுவே நாம் போர் தணிதற்குரிய காலமாமெனச் சிந்தித்துத் தேரி னின்றும் வீழ்ந்தனர்.

உடம்பெங்கும் ரோமம்போலக் கோத்துக்கிடந்த அம்புகள் அவரை நிலத்திற் படியவிடாது வருத்தவும் அவ்வருத்தத்தைத் தாங்கிக்கொண்டு, போர்வீரன் வீழ்ந்தால் அவனுக்குப் பாயல் அம்புகளேயாமாதலின் அதுவே தமக்கு ஏற்ற பாயலாகவென்று அந்



நிலையிற் றலையிற் றலைகீழே தொங்கக் கிடந்தார். அப்போது தக்ஷிணாயன காலமாதலின் அக்காலத்தில் தாம் உயிர்விடுதல் தகாதெனக் கருதி உத்தராயணம் வருங்காறும் உயிர்விடுவதில்லையென மனத் திடைத் துணிந்தனர்.

யோகசாதனையில் மிகவும் வல்லுநராதலாலே தமதுயிரைவிடாது நிறுத்திக்கொண்டு கிடக்கும் வீஷ்மரைத் தரிசிக்குமாறு தேவர்கள் புஷ்பமாரி பொழிந்துகொண்டு அங்கே சென்றனர். வீஷ்மர் வீழ்ந் தார் என்றவளவில் இருதிற வேந்தரும் போரை விடுத்துத் தத்தம் தேரினின்று மிறங்கி வீஷ்மரையடைந்தனர். அதுகண்டு சூரியனும் வாட்டமுற்றான்போன்று முகம் இருண்டான். பூமியும் துயர்கூர்ந்து புலம்புவதாயிற்று. அப்போது துரியோதனன் முதலிய அரசர்கள் சூழ்ந்துநின்று அஞ்சலி செய்தார்கள். அவர், அவர்களையெல்லாம் அருளோடு நோக்கி ஆசீர்வதித்து எனக்கு ஒரு தலையணை தருமி னென்றார். மிருதுவாகிய அம்சதூளிகையாற் செய்யப்பட்ட தலை யணைகளைக் கொண்டுபோய்த் துரியோதனன் கொடுக்க அவர் அவைகளை வாங்கி வீசிவிட்டு, இதுவா போர்க்களத்தில் வீழ்ந்த வீரர்க்குரிய தலையணையென்று நகைத்துப் பக்கத்தேநின்ற அர்ச் சுனனை நோக்கி நீயொரு தலையணை தருவாயாகவென்றனர். அவன் அதுகேட்டுக் கண்ணீர் தாரை தாரையாகக் காலக் கசிந்தழுது மூன்று அஸ்திரங்களையெடுத்து மந்திரித்து அணையாக நிறுத்தினான். அதுகண்டு அவர் அவனைமெச்சி வாழ்த்தினார். அவருடைய சரீரத்திற் கோத்த அஸ்திரங்களை வாங்கி இரணங்களை ஆற்றுமாறு வந்த ஆயுள்வேதியரை அது செய்யாவகை தடுத்துப் புரண்டு யோக நித்திரை செய்தனர். அடுத்தநாளுதயத்திலே அவ்விரணங்களால் எரியும் சுரமும் அதிகரிக்க அவற்றாற் றணித்தற்கரிய தாகமு மீதூரப் பெற்றனர்.

அப்போது அவர் அங்குநின்ற மன்னவரைநோக்கித் தண்ணீர் தருகவென்ன, அவர் தங்கப் பாத்திரங்களில் கொணர்ந்த தண்ணீரை மறுத்து மீட்டும் அர்ச்சுனனைநோக்கி, அர்ச்சுனா! உன் பாணங்களால் என் சரீரம் துளைபட்டுப் புண்ணாகி எரிகின்றது, என் நாவும் வரள் கின்றது. உன் அம்பால் வந்த இவ்வருத்தத்தை நீயே தணித்தற்குத் தக்கான் என்னலும், அர்ச்சுனன் தன் காண்டீவத்தை வளைத்து

ஒரு பாணத்தைத் தொடுத்துப் பூமியைப் பிளந்து அவ்வாயினின்றும் பொங்கியெழுந்த நன்னீரை அள்ளிக் கொடுத்து அவர் தாகத்தைத் தணித்தான். அவர் சோகந்தவிர்ந்து மீண்டும் யோகநித்திரை செய்வாராயினர். அவ்வளவில் எல்லோரும் அங்கு நின்று மகலக் கர்ணன் அழுதகண்ணோடும் சிரசின்மேற் குவித்த கரங்களோடும் சென்று வீஷ்மர் பாதங்களில் வீழ்ந்து தொழுது, குருகுலாதிப, உன் கண்ணெதிர்ப்பட்டபோதெல்லாம் நின்னால் உவர்க்கப்பட்ட ராதாபுத்திரனாகிய கர்ணன் வந்திருக்கின்றேன் என்றான். வீஷ்மர் அச்சொற் கேட்டலும் அவனைத் தமது கையாற்பற்றித் தழுவி, நின்னையொப்பார் உலகிலில்லை. நீயோ பெருந்தகை. துரியோதனன் செய்த வஞ்சனைகளுக்கெல்லாம் நீயும் அநுகூலியாயிருந்தமையால் உன்னை வனசொற்களாற் கடிந்து வந்தேனேயன்றி மற்றன்று. அவன் சோற்றையும்உண்பவனாகிய நீஅவன்கருத்தின்வழி யொழுகுதல் நின் கடனன்றோ. அது நின் குற்றமன்று. நீ சுத்தவீரன். நின்னிலும் சிறந்த வள்ளலில்லை. நின்னிலுஞ் சிறந்த நன்றியுள்ளானில்லை. அன்னாகியவுன்னை நான் உவர்த்தல் எப்படியென்று புகழ்ந்தனர். கர்ணன், நான் என் அறியாமை காரணமாக உன்னையிகழ்ந்து தகாத வனசொறகள கூறியுளேன். அவற்றைப் பொறுத்தருளுதல் வேண்டுமென்றிரந்து போர்செய்தற்கும் அநுமதி தருகவென்றான்.

வீஷ்மா மகிழ்ந்து அவனைநோக்கி, சுவர்க்கத்தை அடையவேண்டுமெனனும் அவாவோடுமே நீ போர்புரியக் கடவை. கோபத்தோடும மாச்சரியத்தோடும் போர்செய்யாது தருமத்தையே கைக்கொண்டவனாய் உனது அரசனுக்குத் துணைசெய்யக் கடவையென்றார். அவ்வளவிற் கர்ணன் நீங்கித் துரியோதனனையடைந்தான். வீஷ்மரும் யோகத்தைச் சாதிக்கத் தலைப்பட்டனர்.

வீஷ்மர் வீழ்ந்துகிடக்குஞ் செய்தியைத் துரியோதனன் சஞ்சயன் மூலமாகத் திருதராஷ்டிரனுக்கு அறிவித்தான். அவன்காதில் அசசெயதி வீழ்தலும், அந்தோ! இனி என் மைந்தர்க்கு உறுதி யாவார் யாருமில்லையே யென் றலறி நிலத்திடை வீழ்ந்து கண்ணீர் வெள்ளமாய்ச சொரியக் கண்ணிலலாத வெனக்குக் கண்பாலிருந்த வீஷ்மன் வீழ்ந்தமையால் இன்றுதான் கண்ணிழந்தேன் என்றான். மானமும் போனதென்றான். துரியோதனனும் சிந்தை[illegible]ங்கி இனிச்



சேனாபதியாதற் குரியார் யாரென்றான். கர்ணன், யானே சேனாதிபதியாகிப் போரினை வென்று தருவேன் என, துரியோதனன் கர்ணனை நோக்கி, நீ சேனாதிபதியானால் அரசாய் நிற்பவர் யாவர்? என்றான். அதுகேட்டுக் கர்ணன், நமது வில்லாசிரியராகிய துரோணரே சேனைத்தலைவராகவென்ன. அரசரெல்லாம் தகும்! தகும்! என்று ஆர்ப்பரித்தனர். அதுகேட்டுத் துரோணரும் உடன்பட அதற்குரிய சடங்கெல்லாஞ் செய்து சேனாபதியாக்கப்பட்டனர். துரோணர், துரியோதனனை நோக்கி, வேந்தர் வேந்த, நீ என்பால் விரும்பும் வரமுளதேற் கேட்கவென்றார். துரியோதனன் அவரை நோக்கி, வேதக்கொடியுடையீர், யான் உம்மிடத்து வேண்டுவது ஒன்றுளது. உதிஷ்டிரனைக் கொல்லாமற் சிறைசெய்து கொண்டுவந்து என் கையிற் கொடுத்தல்வேண்டும். அது செய்வீராயின் அவனைச் சூதாட்டுக் குடன்படுத்தி மீண்டும் வனம் புகுவிப்பேன். போரிலே அர்ச்சுனனை வெல்வதோ அரிது. ஒருக்கால் வென்றாலும், கிருஷ்ணன் உபாயங்களைக் கடத்தலரிது. ஆதலின் போரில்லாமலே பாண்டவரை இவ்வுபாயத்தால் வெல்வது எளிதாம். உதிஷ்டிரனைச் சிறைசெய்யும்போது சிறிதும் ஊறுசெய்யாது சிறைசெய்தல் வேண்டும். ஊறுசெய்யின் தம்பியர் நால்வருங் கொடுஞ் சீற்றங்கொண்டு இவ்வுலகை அழித்துவிடுவார்கள். தங்கள் உயிரைத் துரும்பாகவும் எண்ணார்கள். ஆதலால் உதிஷ்டிரன் சரீரத்தில் அற்பமேனும் ஊறுசெய்யாது சிறைசெய்துவருதல் வேண்டுமே என்றான்.

துரோணர், அர்ச்சுனனைத் தடுத்து யுத்தஞ்செய்யவல்ல ஒருவனைத் தருவையேல் உதிஷ்டிரனைச் சிறைசெய்து தருவது சத்தியமென்றார். இதனை யுணர்ந்த பாண்டவர்கள், தாமும் அச்சூழ்ச்சியைத் தடுப்பதற்கு மறுசூழ்ச்சி செய்தார்கள். தன் ஆசிரியனைக் கொல்வது கூடாதாயினும் தான் உயிரோடிருக்குங்காறும் உதிஷ்டிரனை அகப்படுத்த விடுவதில்லையென்று அர்ச்சுனனுஞ் சூளுரைத்தான். அச்சத்தியத்தோடும் பதினோராம்போருக்கு முகூர்த்தம் வந்தடுத்தது.

கிருஷ்ணன் பாண்டவரை நோக்கி, நாம் வெல்லுதற்குப் பெருந்தடையாயிருந்த வீஷ்மரும் போயினர். கர்ணனோ இனிப் போர்

வீரனாக வருவான். துரோணன் மகனோ முழுமனதினோடும் போர் செய்யான். ஆதலால் நமக்கு இனி வெற்றிமாலை நிச்சயம் என்றான். அவ்வுரைகேட்ட பாண்டவசேனை பூரித்த புஷ்பமும் முகமுமுடைய தாய்க் களித்து ஆர்ப்பரித்தெழுந்து களம்புகுந்தது. துரோணரும் தமது நால்வகைச் சேனையோடுங் களத்திற் புகுந்து சகடவியூகம் வகுத்து நின்றனர். பாண்டவ சேனாபதியாகிய திருஷ்டத்துயுமனும் தனது சதுரங்க சேனையைக்கொண்டு கிரவுஞ்ச வியூகம் வகுத்துச் சங்கத்தொனி செய்தான். இருதிறச் சேனையும் தமது வலியும் ஆண்மையும் உபாயமும் காட்டிச் சரமாரி பொழிந்தனர்.

சகாதேவனைச் சகுனியெதிர்த்து மடக்கிப் பாணங்களை அவன் றலைக்கு நேரே விடுத்தான். சகாதேவன் சில பாணங்களால் அவன் தேர்க்குதிரைகளையும் பாகர்களையும் அவன் கையிலிருந்த வில்லையுஞ் சேதித்தான். சகுனி வேறு வழியின்றித் தண்டாயுதமொன்று கையிற் றாங்கிக் கீழே குதித்துச் சகாதேவனைச்சாட அவனும் தண்டமொன்றேந்திச் சிங்கம்போற் பாய்ந்து தாக்கி முதுகிட்டோடச்செய்து மீண்டான். அர்ச்சுனன் அருமைப்புதல்வனாகிய அபிமன்னியு வென்னுஞ் சிறுவனும் வீமன் புத்திரனாகிய கடோற்கசனும் தனித்தனி ஜயந்திரதன் சல்லியன் முதலியோருடன் செய்த போராண்மை துரியோதனன் சேனையிலுள்ள வீரரையெல்லாம் எண்ணுந்தோறு நெஞ்சந் துணுக்குற்று நடுநடுங்க வைத்ததென்றால் எடுத்துரைக்கவும் வேண்டுமோ. கர்ணனும் விராடனும் மலையோடு மலை முட்டினாற்போல வெதிர்த்துப் பூமியுங் கம்பிக்கும்படி செய்த போரிலே இருவரும் விடுத்த சரமாரியால் ஆகாயமும் இடையின்றித் தூர்ந்ததேயன்றி ஒருவரையொருவர் வென்றனரல்லர்.

அப்பொழுது துரியோதனன் மைந்தனாகிய இலக்கணகுமாரன் தேர்ப்படையும் குதிரைப்படையும் யானைத்திரளும் ராஜகுமாரரது திரளும் தற்சூழத் தும்பைமாலைசூடி நிற்பக்கண்ட அர்ச்சுனன் மகனாகிய அபிமன்னியு அவனை யெதிர்த்து யுகாந்தகாலத்து மேகம் போற் சரவருஷஞ்செய்து அவன் படைகளையெல்லா மழித்தும் முதுகிட்டோடச்செய்தும் அவன் கையிலிருந்த வில்லை யறுத்தும் அவனைத் தமியனாக்கிச் சிறைசெய்து தனது தேரிலிட்டு விஜயசங்க மூதிக்கொண்டு நடந்தான். அதுகண்டு துரியோதனன் சேனை



கலங்கித் திகைக்கச் சிந்துதேசாதிபதி வீராவேசத்தோடு தனது தேரை விரைந்து செலுத்திக்கொண்டுபோய் அபிமன்னியுவை மடக்கி யுத்தஞ்செய்தான். அவனும் அவனைச் சூழ்ந்துவரும் சேனையும் அபிமன்னியுவுக்குச் சிங்கத்தைப் பிணிக்கவிட்ட சிலம்பிவலை போலாக அவன் அவனைச் சில பாணங்களாற் சில கணப்போதில் வலியிழந்து முதுகிட்டோடச் செய்தனர்.

அதுகண்டு கர்ணன் முதலிய வீரரெல்லாம் திரண்டு இஃதென்ன விபரீதமென் றதிசயித்து ஒருவனாகிய அபிமன்னியுவை வளைந்து பாணங்களை நாற்பாலும் பிரயோகித்து மடக்க, அவன் அவர்க்கெல்லாம் ஒவ்வொரு பாணங்களை விடுத்து ஒவ்வொருவர் நெற்றியிலும் சிந்துரப்பொட்டிட்டாற்போல வுதிரஞ் சிந்தத் துளையிட்டான். அதனால் அவ்வீரரெல்லாம் மதி மயங்கிப் பின்னிட்டோடக்கண்ட சல்லிவன் தன் படையோடு அபிமன்னியுவை மடக்கி வளைத்தான். அவனையும் எட்டுப் பாணங்களால் தோளையும் துளைத்துத் தேர்ப் பாகனையுந் தொலைவித்துக் குதிரைகளையும் சிதைத்தான். அதுகண்டு சல்லியன் ஒரு கதாயுதத்தை யெடுத்துக்கொண்டு தேரினின்றுஞ் சிங்கேறுபோலப் பாய்ந்து நிலத்திடை வந்து சிறுவனை யெதிர்த்தான். அதுகண்டு கடோற்கசனோடிச் சல்லியன்மீது பாய்ந்து கதையினால் அவன் புயமும் முடியும் பொடிபட மோதினான்.

அவ்வளவில் அபிமன்னியுவும் களைத்து மேற் றனிப்போர்புரிய வியலாது சோர்வுற்றுத் தனது தந்தையை அழைக்குமாறு சங்கை யெடுத்தூதினான். அர்ச்சுனன் தூரத்தேநின்று துரியோதனன் சேனையை யெதிர்த்துக் கொடிய யுத்தஞ் செய்தானாதலின் அவ்வுதவிக் குறியாகிய சங்கநாதம் அவன் காதில் வீழ்ந்திலது. கடோற்கசனும் தன்னை யெதிர்த்த சேனையோடு ஒருபானின்று போர்புரியப் போயினான். இப்படியிருக்கையில் மேல்வந்த கிருதவர்மாவை அபிமன்னியு தனித்து நின்று வெல்லவியலாது நிற்ப, அவன் வீழ்ந்து கிடந்த சல்லியனையும் இலக்கணகுமாரனையுஞ் சிறைமீட்டுத் தேரிலிட்டுக்கொண்டு மீண்டான். இதற்கிடையில் துரோணர் தமதுதேரைச் செலுத்தி எதிர்த்த அணிகளையெல்லாம் ஊடறுத்துக்கொண்டுபோய் உதிஷ்டிரனைச் சமீபித்தலும், "உதிஷ்டின் அகப்பட்டான் அகப்பட்டான்" என்று துரியோதனன் சேனை ஆர்த்து, ஜயம்! ஜயம்!!

என் றண்டங்கிழிய முழங்கிற்று. அது கேட்டலும் அர்ச்சுனன் தேரானது வெள்ளிமயமான குதிரைகளோடும் மின்னெனக் குறுக்கிடத் துரோணரும் அவர் சேனைவீரரும் போனவிடந் தெரியாது முரிந்தோடினர். அவ்வளவில் சூரியனும் இருட்படாம் போர்த்தொளிந்தானாகப் பதினொராம் போரும் முடிந்தது.

அன்றிரவு திரிகர்த்த தேசாதிபதியாகிய சுசர்மனும் அவன் சகோதரரும் தாம் அடுத்தநாட்போரிலே அர்ச்சுனனைக் கொல்வதாகவும் தவறினால் உயிர் துறப்பதாகவும் விரதம்பூண்டு சத்தியமுஞ் செய்தார்கள்.

சூரியன் உதயமாகப் பன்னிரண்டாநாளும் வந்து புகுந்தது. இருதிறச்சேனைகளும் தும்பைமாலைசூடி இடிமுழக்கெனப் போர்ப்பேரி முழக்கிக் களம்புகுந்தன. பாண்டவர் சேனையைக் கிருஷ்ணன் மண்டல வியூகமாகச்செய்து வீமனைப் பின்னே நிறுத்திப் போரணியிலே துணையரசர்களை நிறுத்தி இருபக்கத்திலும் நகுல சகாதேவர்களை நிறுத்தி அர்ச்சுனனையும் அபிமன்னியுவையும் முன்னே நிறுத்தி உதிஷ்டிரனை நடுவே நிறுத்தினான். துரோணர் தமது சேனையை மகர வியூகமாக வகுத்துத் திரிகர்த்த தேசாதிபதியும் சம்சத்தகரு முன்னே நிற்பத் தாமும் வீரம்பகர்ந்து நின்றார். அப்பொழுது சுசர்மனும் சம்சத்தகரும் அர்ச்சுனனைப் போருக் கறைகூவினார்கள். அதுகண்டு அர்ச்சுனன், உதிஷ்டிரனை நோக்கி அநுமதி தருகவென்று விடைபெற்றுக்கொண்டு, சாத்தியகியை அழைத்து உதிஷ்டிரனுக்குக் காவல்வைத்துவிட்டு, அறைகூவினார்பக்கஞ்சென்று அவர் விடுத்த பாணமழையைத் தனது பாணங்களாற் கண்டித்துத் தானும் பாணங்களை அண்டம் விண்டதிருமாறு தொடுத்து அவரோடு கொடிய யுத்தஞ் செய்தான். துரோணரும் தமது துணையரோடும் வீரரோடும் முனைந்து, எதிர்த்து வந்த படைகளையெல்லாம் தமது யானை ஒன்று அரைத்தும் வாரிக் களத்திடை யறைந்தும் கொன்று கொன்று செல்லப் போய் உதிஷ்டிரனை யெதிர்த்தார். உதிஷ்டிரன் வில்லாண்மைக்குத் துரோணரும் மற்றைய வீரரும் நிருவகிக்க வியலாது சிறிதுநேரம் போர்செய்து முரிந்தோடுமளவில், துரோணர் மானம்போயிற்றேயென்று கூறி மிக்க கோபமுடையராய்க் கொடிய பாணங்களை யெடுத்து விடுத்தார். உதிஷ்டிரனும் ஓடத்தலைப்பட்டான். சம்சத்தகரோடு கொடிய யுத்தஞ்செய்துகொண்டு நின்ற அர்ச்சுனன்



உதிஷ்டிரனுடைய நிலையை யுணர்ந்து, அவனை மீட்டற்கு ஓடுதற்கும் சம்சத்தகர் தொடுத்த போரை விடுத்தற்குத் துணியாது சிறிது நேரஞ் சிந்தைகலங்கி நின்று தெளிந்து, கோபத்தோடு காண்டீவத்திற் சில பாணங்களைத் தொடுத்துச் சம்சத்தகர்மீது விடுக்க அவரெல்லாரும் அடியோடு மாண்டனர். அவரைச் சூழ்ந்துசென்ற படைகளும் அழிந்தன. அதன்பின்னர்க் கிருஷ்ணன் குதிரைகளைத் தூண்டித் தேரை உதிஷ்டிரன் பக்கம் விடுத்தான். தேர் பகதத்தன் ஏறியிருக்கும் யானைக்குப் பின்புறஞ் சென்றது. அர்ச்சுனன் அந்த யானையே முன்னர்ப் பாண்டவ சேனையைச் சிதைத்து மெலிவித்ததென வுணர்ந்தும் பின்னே நின்று கொல்வது தருமமன்றெனக் கருதித் தேரை அதன்முன்னே விடுகவென்னக், கிருஷ்ணன் அவ்வாறு செய்தான். அர்ச்சுனனைக் காண்டலும் பகதத்தன் ஒரு திவ்வியாஸ்திரத்தை அர்ச்சுனன்மேல் விடுத்தான்.

அவ்வஸ்திரத்தைக் கிருஷ்ணன் தனது மார்பிலேற்றான். அது அர்ச்சுனனுக்குப் பெருங் கோபத்தை மூட்டக் கிருஷ்ணன் இவ்வஸ்திரம் விஷ்ணுவாலருளப்பட்டது. அதனை மற்றொருவர் தடுத்தலுமேற்றலுங் கூடாதாதலின் யானேற்றேனென் றவன் கோபத்தைத் தணிக்க, அவன் ஓரஸ்திரத்தால் பகதத்தனையும் யானையையும் விண்ணுலகஞ் சேர்த்தான். அப்பால் துரோணர்மேற் செல்ல, அவரும் தமது சேனையோடு கருடனைக் கண்ட சர்ப்பம்போல முதுகிட்டு முந்துவார்க்கு முந்தியோடி, உதிஷ்டிரனைச் சிறைசெய்வேனெனக் கூறிய சத்தியமும் பொய்த்துத் தலையிறங்கித் துரியோதனன் பக்கஞ்சேர்ந்து பாசறை புகுந்தனர். அற்றைப் பேராண்மைக்குப் பாண்டவரைக் கண்டு மகிழ்ந்து முறுவல்பூத்த தேவர்களது பல்வரிசைபோல நக்ஷத்திரங்களும் ஆகாயத்திற் பிரகாசிக்க, அற்றைநாட்போரும் முடிந்தது. துரியோதனாதியரும் தம்படையில் பகதத்தன் முதலிய எண்ணிறந்த வீரரும் கஜரத துரக பதாதிகளும் மாண்டமையால் தம் முகமுழுது மிருண்ட இருட்படலத்தால் சூரியனை அஸ்தமயனமடைவித்துப் பாசறை புகுந்தார்கள்.

பதின்மூன்றாநாள் வைகறையில், இருதிறச் சேனைகளையும், எழுமின் எழுமின்! என்று துயிலுணர்த்துவதுபோன்று கோழி கூவிற்று. சூரியனும் இத்தினம் அபிமன்னியு தினமாதலின் அதனை

நாம் சிறப்பித்தல் வேண்டுமெனக் கருதித் தனது கிரணக் கற்றைகளால் விண்ணுலகையும் மண்ணுலகையும் பரந்து கிடந்த இருட்குப்பைகளைத் துடைத்து விளக்கி அலங்கரித்து விரைந்தெழுந்தான். அதுகண்டு இருதிறச் சேனைகளும் களம்புகுந்தன. பாண்டவர்சேனை மிக்க வீரசூரத்தோடார்ப்பரித்து மகரவியூகம் வகுத்து இன்று பகைவர் சேனாசமுத்திரத்தை முற்றவும் பருகுவோமென நின்றது. துரோணர் சேனையும் வீரவுரை கூறி விண்ணுலகநடுங்க அட்டகாசஞ் செய்து, சக்ரவியூகம் வகுத்து நின்று அர்ச்சுனனை அறைகூவிச் சரமாரி பொழிய, அர்ச்சுனன் தனது சேனாசமுகத்தோடு சென்று கொடிய யுத்தஞ் செய்யப் புகுந்தான். துரோணர் தாமுமோரனிகத்தோடு சக்ரவியூகம் வகுத்து உதிஷ்டிரனை நாடிச் சென்றனர்.

அதுகண்ட உதிஷ்டிரன், அபிமன்னியுவை நோக்கித், துரோணரது சக்ரவியூகத்தை நீயும், நின் தந்தை அர்ச்சுனனும், கேசவனும், பிரத்தியுமனனுமே உடைத்து அழிக்கும் ஆற்றலுடையி ராதலின், நீயே அவ்வியூகத்தை எதிர்க்கவென்றான். அபிமன்னியு, பதினாறு வயசுடைய சிறுவனாயினும், அதற்கஞ்சாது மிக்க களிப்போடு, அச்சக்ரவியூகத்தை நான் பிளந்து சிதைத்து வென்று வருவேன் விடைதருக வென்றான். உதிஷ்டிரன் நீ முன்னர் சென்று அவ்வியூகத்தைச் சிதைப்பாயாக உன்பின்னே மற்றைய மூவரும் வருவார்களென்று கூறி விடையீந்தான். அவ்வாறே அவ்விளஞ்சிங்கம் பகைவராகிய யானைக்கூட்டத்தினுள்ளே புகுமாறு தன் சாரதியை ஏவ, அவன் சிறிதும் மனத்துணிவில்லாதவனாய்த் தேரைத் தூண்டினான். தேர் புகுந்த அளவில் அபிமன்னியு கொடிய யுத்தஞ்செய்து அவ்வியூகத்தைப் பிளந்து சிதைத்தான். உள்ளே தமியேனாகப் புகுந்தான். துரோணரை எதிர்த்துப் பொருது நிலைகலக்கினான். அசுவத்தாமாவைத் தடுமாற வைத்தான். கிருபனையுங் கர்ணனையும் மற்றைய வீரரையும் வலியழித்துத் தலைகுனிவித்தான். துரியோதனனை முதுகிடச் செய்தான்.

துரோணருடைய சக்ரவியூகம் காற்றின் முற்பட்ட பூளையாயிற்று. வீரம்பகர்ந்த துச்சாசனன் சிறிது நேரம் எதிர்த்து மூர்ச்சையுற்றான். கர்ணன் தம்பி உயிர்துறந்தான். அதுகண்டு எதிர்த்த கர்ணனையும் முதுகிட்டோடச் செய்தான். துரியோதனன்



மீண்டும் போர் தொடுத்தான். அவனையும் சிறிதுபோதில் முதுகிடச் செய்தான். ஜயத்திரதனும் முதுகிட்டோடிய சேனையைத் திருப்பிக் கொண்டுபோய்ப் போர் தொடுத்தான். அவனையும் அபிமன்னியு முனைமுரிந்தோடச்செய்தான். இலக்கணகுமாரனுங் கொடிய போர் தொடுத்து அபிமன்னியுவை வாட்டினான். அஃது அபிமன்னியுவினது ஆண்மையை இருமடங்காகத் தூண்ட, அவன் மிக்க மூர்க்கத்தோடு பொருது இலக்கணகுமாரனுயிரைக் குடித்தான். இலக்கணகுமாரனிறந்தானென்பது மின்னெனத் துரியோதனன் சேனையெங்கணும் பரந்தது. துரோண கிருப அசுவத்தாம கர்ண கிருதவர்ம பிருகத் பலர்கள் செவிகளுக்கு அச்செய்தி உருக்கிய லோகநீராக, அத்தேர்வீரர் அறுவரும் திரண்டு விரைந்து தமியனாய் நின்று அற்புத சாமர்த்தியத்தோடும் சூரத்துவத்தோடும் போர்புரியுஞ் சிறுவன்மீது தமது பாணங்களைத் தூண்டினார்கள்.

அப்பொழுது சிறுவனுக்குப் படைத்துணை அனுப்பாவகை ஜயத்திரதன் உதிஷ்டிரனைத் தடுத்து மடக்கிப் போர்செய்தான். துணையில்லாதிருந்தும் அபிமன்னியு சிறிதுந் தளர்ந்தானல்லன். அவன் தமியனாக நின்று அவ்வீரரெல்லாம் நெஞ்சங் கலங்கி நடுங்கிப் பின் வாங்குமாறு செய்த கொடிய போரைக்கண்டு தேவர்களும் அந்தரத்தில்நின்று புகழ்ந்து மலர்மாரி தூவினார்கள். இப்பொழுது இனி யுத்தமுறை நோக்கலாகாது என்று துணிந்த ஈரமிலா மனத்தினராகிய துரோணர் ஏவலால் கர்ணன் அபிமன்னியுவுக்குப் பின்னே மறைந்துநின்று அவன் வில்லை அறுத்துப் பொடியாக்கினான். கிருதவர்மா அவன் தேர்க்குதிரைகளைக் கொன்றான். கிருபன் அவன் சாரதியை அழித்தான்.

அபிமன்னியு தேரற்று வில்லற்றுத் தனித்து நின்றவழியும் அஞ்சா ஆண்மையும் எஞ்சா வீரமு முடையனாய் ஒருகையிலே கேடகமும் ஒரு கையிலே வாளுந் தாங்கிப் பகைவர் கூட்டத்திற் புகுந்து சிரங்கள் வீழ்ந்து மலைபோற் குவியும் உடல்கள் வீழ்ந்து தறித்து வீழ்ந்த மரக்காடுபோற் கிடக்கவும் வீசி வீசிப் பகைவர் சேனையைச் சிதைத்தான். அதுகண்ட துரோணர், அவ்வாளையும் அறமுறை திறம்பிப் பாணங்களாற் பொடியாக்குவித்தார். அவ்வழியுங் கலங்காத ஆண்சிங்கமாகிய அபிமன்யு ஒரு தேர்ச்சக்கரத்தை ஆயுதமாகத் தாங்கிக்கொண்டு துரோணரைக் கொல்லுமாறு அவர்

மேற் பாய்ந்தான். அதனையும் பகைவீரர்கள் முறைகேடாகத் துகளாக்கினர். அப்பொழுது தன் நிலையைத் தந்தைக் கறிவிக்குமாறு சங்கை யெடுத்து ஊதினான். அவ்வொலி அர்ச்சுனன் காதில் வீழ்ந்திலது. அதன்பின்னர் அபிமன்னியு தந்தை வருங்காறும் போர் புரிவேன் எனத் துணிந்து ஒரு காதாயுதத்தை யெடுத்துக்கொண்டு அசுவத்தாமாவைத் தாக்க, அவன் முதுகிட்டான். அப்பால் துச்சாசனன் மகன் எதிர்ப்பட அவன் தேரையுங் குதிரையையு மழித்தான். இருவரும் கதைகொண்டு பொருதபோது துச்சாசனன் மகன் நிலத்தில் வீழ்ந்தான். வீழ்ந்தவனை விடுத்து அபிமன்னியு அப்பாற் செல்ல, அவன் எழுந்தோடிப் பின்னே சென்று கதையால் அபிமன்னியுவை மோதிக் கொன்றான்.

அபிமன்னியு வீழ்ந்தவளவில் சூரியனும் மேற்றிசையில் வீழ்ந்தான். போரும் ஒழிந்தது. அபிமன்னியு வீழ்ந்தானென்னுஞ் சொல்லும் உதிஷ்டிரன் காதிற் பட்டது. அவனும் உயிர்பட்டான்போல் நிலையற்று வீழ்ந்து மூர்ச்சையுற்றான். சிறிதுநேரத்தில் உயிர்ப்புவர எழுந்து, நாவும் கண்ணும் நீரற்று வரளப் புலம்பினான். யாது செய்தேன் என்றேங்கினான். போகவென்றேவி விடுததுப் பின்னர்த் துணையனுப்பாதுவிட்ட மகாபாவி நானேயன்றோ. அருமை மைந்தனை நானே கொன்றேனாயினேன்! அந்தோ! இப்பழிக்கும் பரிகாரந்தான் யாதோ! அர்ச்சுனன் முகத்தை எப்படி நோக்குவேன்! அவன் வருங் காலமாயிற்றே! வந்தவுடன் வற்சாவென் றழைக்கப்போகின்றானே! என்று மிகவிரங்கித் துயரக்கடலி னீராடினான். அப்பொழுது பகவான் வேதவியாசர் அங்கெழுந்தருளி, உதிஷ்டிரனை நோக்கி, நீயும் அறிவிலாரைப்போல விரங்குகின்றனையோ? இறந்தவர்பொருட்டிரங்காது "இறந்தவர் பெருமையையும் அவர்க்குளதாகும் ஆனந்தத்தையும் சிந்திப்பதே உயிர்வாழ்வான் கடனாம்."

"வந்துபிற வாதமனை யில்லைமுலை மாறித்
தந்துபரி யாமலொழி தாயர்களு மில்லை
புந்தியுணர் வற்றவர் புலம்புறுவ தல்லா
லிந்தவுல கத்தறிஞர் யாதினு மயங்கார்."

என்று பலவாறு கூறித் தேற்ற, உதிஷ்டிரனும் ஒருவாறு தெளிந்தான். அவ்வளவில் பகவான் வேதவியாசரும் அங்குநின்று நீங்கி மறைந்தனர்.



அப்பொழுது அர்ச்சுனனும் போர்க்களத்தினின்றும் மீள்வானாயினான். அவன் இடக்கண்ணுந் தோளும் மார்பும் துடிக்க அதிசயித்துக் கிருஷ்ணனை நோக்கினான். முக்காலமும் மூவுலகுமுணர்ந்த கிருஷ்ணன் கண்ணிலும் நீர் துளித்து வீழ்தலைக் கண்டான். பயங்கரமானது மனத்தில் மீற, அவன் கிருஷ்ணனை நோக்கி இத்தீக்குறிகளின் கருத்தென்னை யென்றான். அதற்கிடையில் ரதமும் உதிஷ்டிரனிருக்கும் பாசறையை யடைந்தது. அங்கே தமையனுந் தம்பிமாரும் இருக்கின்ற நிலையைக் கண்டான். மைந்தனில்லாமையையுங் குறிக்கொண்டான். இறந்தது மைந்தன்றானென்பதும் அயிர்த்துணர்ந்தான். கிருஷ்ணனை நோக்கித், திருவளமறியாத தொன்றுண்டோ? நடந்ததைக் கூறுகவென்ன, என் மருகன்றானிறந்தானென்று கூறி, அவன்செய்த, ஆண்மையையும் முடிந்த வழியையு முடனெடுத் துரைத்தான். அவ்வுரை அர்ச்சுனன் செவிக்குத் தீக்கோல்போன் றிருபுறத்தையுந் தகித் துள்ளுஞ் சென்று சுட்டது.

சுடுதலும் அர்ச்சுனன் புத்திரசோகத்தால் அடியற்ற மரம்போல் வீழ்ந்து மூர்ச்சித்தான். கிருஷ்ணன் அவனை எடுத்து மார்போடணைத்து வாசநீர்தெளித்து மூர்ச்சை தீர்த்தான். அதனால் அவன் தெளிந்து அங்கிருந்தவர்களை நோக்கிச் சீறி, நீங்கள் வாள் பிடித்ததும் கதை தரித்ததும் வில்லெடுத்ததும் ஆண்மைக்கோ! அழகுக்குத்தானோ! என் இவ்வாயுதங்களை யெல்லாம் தரித்தீர்கள்! வியூகத்தைப் பிளந்து சென்ற மகனைத் தனிக்கவிடுத்து யாது செய்தீர்! அவனுக்கு வியூகத்தைப் பிளக்கமாத்திரம் கற்பித்தேனேயன்றி மீண்டு வெளிப்படக் கற்பித்தேனில்லை. அவன் துரோண கிருப கர்ணர்களால் சூழப்பட்டபோது தனித்துப் போர்புரிந்து சோர்ந்தும், என் தந்தை வந்தென்னைக் காத்திடுவானென்னும் நம்பிக்கையோடுமே பின்னரும் நெடுநேரம் போர்செய்து இறந்தானாதல் வேண்டும். அந்தோ! நான் உன்னைத் தனிவிடுத்துப் பலிகொடுத்தேனே என்று பலவாறு கூறி யிரங்கிப் புலம்பினான். உதிஷ்டிரன் முதலியோரும் புலம்பி யழுதார்கள்.

அதன்பின்னர் யாவரும் ஒருவாறு தேற, உதிஷ்டிரன் அர்ச்சுனனை நோக்கி, அபிமன்னியுவைச் சக்கரவியூகத்தை யுடைக்குமாறு

ஏவி அவன் புகுந்தபின்னர், அவனுக்குத் துணைச்செய்யுமாறு நாமெல்லா முயன்றபோது, ஜயத்திரதன் அபிமன்னியுவை வியூகத்தால் மடுத்து எம்மையும் மேற்செல்லாவகை தடுத்துக் கொடும்போர் செய்தான். அவனே அபிமன்னியுவை வஞ்சனையாற் கொல்வித்தானென்றான். அர்ச்சுனன் சினங்கொண்ட சிங்கேறுபோல ஆர்த்தெழுந்து,

"சிந்துபதி யாகிய ஜயத்திர தனைத்தே
றாந்தமரி னாளையுரு மேறென வுடற்றா
வந்திபடு மவ்வளவி னாவிகவ ரேனேல்
வெந்தழலின் வீழ்வனிது வேதமொழி யென்றான்"

உதிஷ்டிரன் இதனைப் பகைவர்க் குணர்த்தாது செய்ய லாகாதெனவெண்ணித் துரியோதனனுக் குணர்த்தி வருக வென்று கடோற்கசனைத் தூதாக அனுப்பினான். கடோற்கசனும் பகைவர் பாசறையை யடைந்து துரியோதனனைக் கண்டு, 'அர்ச்சுனன் தன் மகன் அபிமன்னியுவைக் கொல்வித்த ஜயத்திரதனை நாளையந்தி படுவதன்முன்னே கொன்றுயிர் வாங்காதொழியின் அக்கினிப் பிரவேசஞ் செய்வது சத்தியம் என்று வஞ்சினமுரைத்தான் என்றான்.

தன் மைந்த னிறந்தா னென்று துக்கசாகரத்தில் கிடந்த துரியோதனன் அத்தூதுரையைக் கேட்டமாத்திரத்தே சோகமெல்லாந் தீர்ந்து, நாளை அந்திபடுமுன்னே அர்ச்சுனனைத் தீயிடைக் குதிப்பிப்பேன், அவ்வளவிற் போரு மொழியும். என் அச்சமும் நீங்கிவிடுமென் றெழுந்து ஆநந்தக் கூத்தாடினான். அவன் இம்மனோரதம் பண்ணி மகிழ, ஜயத்திரதன் அத்தூதுரையைக் கேட்டமாத்திரத்தே உள்ளந் தளர்ந்து உடலும் வியர்வியர்த்து நிலத்திடை வீழ்ந்தான். அவனைத் துரியோதனன் தேற்றத் தேறி, நான் என் தேசஞ் சென்றடைவேன் என்னை விடுகவென் றெழுந்தான். அவனைத் துரோணாதியர் எத்தனையோ பல வுறுதிமொழி கூறித் தடுத்திருத்தினார்கள்.

அங்கே அர்ச்சுனன் செய்த சபதத்தைக் கிருஷ்ண னுணர்ந்து, அர்ச்சுனா, யாது செய்தனை? என்பால் ஆலோசியாது கடின சபதமொன்றைச் செய்துவிட்டனையே! எப்படி முடிக்கப்போகின்றாயென்றான். அதுகேட்ட அர்ச்சுனன், நின் றுணையுளதாங்காறும் கூறிய



சபதமுடியாது விடேனென்றுகூறி நித்திரைபோயினான். கிருஷ்ணன் அவன் சபதத்தை நிறைவேற்றுங் கடப்பாடுடையனாதலின், உடனே தானே புறப்பட்டு நித்திரைசெய்கின்ற அர்ச்சுனனை எழுப்பாமல் அவன் சரீரத்தினின்றும் அவனைக் கவர்ந்துகொண்டு கைலாசகிரியை யடைந்தான். அங்கே கருணாநிதியாகிய கைலாசபதியை இருவரும் வணங்கி ஜயத்திரதனைக் கொல்லுதற்கேற்ற அஸ்திரமொன்று பெற்று மகிழ்கூர்ந்து மீண்டார்கள்.

சூரியனும் உதயமானான். பதினான்காநாட் போருந் தொடங்கிற்று. அர்ச்சுனன் உதிஷ்டிரனைச் சாத்தியகியினது காவலில் வைத்துவிட்டுத் தனது சத்துருவாகிய ஜயத்திரதனைத் தேடிச் சேனையுட் புகுந்தான். புகும்போது யானைப்படை வந்தெதிர்த்தது, அர்ச்சுனன் அதனை நிலைகுலைத்துவிட்டுத் துரோணர் முன்னே சென்றெதிரூன்றி அவரை வணங்கித் துதித்தபின்னர்க் காண்டீவத்திற் கணைகளைத் தொடுத்தான். சோனைமேகம் பொழிவதுபோல அவன் விடுத்த பாண வருஷங்களை யெல்லாம் துரோணர் கண்டித்து அர்ச்சுனனையுஞ் சோரவைத்தனர். அதுகண்டு அர்ச்சுனன் கிருஷ்ணனை நோக்கி உபாயம் யாதென்றான். அதற்குக் கிருஷ்ணன் துரோணரோடு நில்லாது வேறுவழி பார்த்து வியூகத்தைப் பிளக்கக்கடவை யென்றான்.

அவ்வாறே அர்ச்சுனன் துரோணர்மீது ஒருகாற் பாணந் தொடுப்பதும், தொடுத்துவிட்டு, அவ்வத்திசைகளிலு நின்று வியூகத்தைக் காப்பவராகிய சேனைத்தலைவர்மீதும் பாணந் தொடுப்பதுமாய்ச் சுற்றிச் சுற்றி வரும்போது துரியோதனன் எதிர்த்தான். அவனோடு அர்ச்சுனன் கொடிய யுத்தஞ்செய்யுங் காலத்திலே துரோணர் உதிஷ்டிரனை யெதிர்த்துப் போர்புரிந்து அவன் தேரையுஞ் சாரதியையு மழித்தனர். அப்போது சாத்தியகி தனது வில்லாண்மையைக் காட்டுமாறு உயிரைத் துரும்பாக மதித்துச் சமராடித் துரோணருடைய சாரதியைக் கொன்றான். சாரதி வீழ்தலும் குதிரைகள் திசைதெரியா தோடத்தலைப்பட்டன. அதுகண்டு வீமன் துரோணருடைய தேரைக் கதையாற் பொடிசெய்தான். வீமன் கதை நிமிர்ந்து தேரின்மீது வீழுமுன்னே துரோணர் அதினின்றுங் குதித்தோடினர்.

அப்போது வீமனைக் கர்ணன் எதிர்த்து மற்போராடத் தலைப்பட்டான். அதில் இருவரும் ஒருவரையொருவர் வெல்லவியலாது சிறிதுநேரம் மலையும் மலையும் மலைந்தாற்போலப் போராடினர். அப்போரில் வீமன் கர்ணனுக்குத் தோற்றானாயினும் கர்ணன் குந்திக் களித்த சத்தியத்தை நினைந்து அவனைக் கொல்லாதொழிந்தான். இப்படி இருதிறச் சேனையும் அஸ்தமயனத்திற்கு ஒருநாழிகையுண் டென்னுமளவும் வெல்லலுந் தோற்றலுமின்றிப் போர் செய்தன. அர்ச்சுனன் தன் சபதம் நிறைவேறுமாறு யாதெனச் சிந்தித்தவனாய்ப் பாணங்களைத் தொடுத்துவந்தான். கிருஷ்ணன் அவன் நிலையைக்கண்டு தனது யோகசக்தியினாலே சூரியனைச் சிறிதுபோது மறையச்செய்தான். பாம்புக்கஞ்சிப் பள்ளத்திலே மறைந்திருந்த தேரைபோல வியூகத்திலே மறைந்துநின்ற ஜயத்திரதன் சூரியன் மறைந்தானென் றெண்ணிக் கழிபேருவகை பூத்துக் களித்து வெளிப்பட்டு அட்டகாசஞ் செய்தான்.

அவன் வெளிப்பட அர்ச்சுனன் யானைக்குப் பதிவிருந்த சிங்கம் போலப் பாய்ந் தெழுந்து ஒருக்கிர திவ்வியாஸ்திரத்தை அபிமந்திரித்துவிடுத்து அவன் சிரசைக் கொய்து மற்றோ ரஸ்திரத்தால் அது நிலத்திடை வீழாமற் சென்று அவன் தந்தை மடிமீது வீழுமாறு செய்தான். ஜயத்திரதன் தலையை நிலத்திடை வீழ்த்துபவன் யாவனோ அவன் தலையுமுடனே பிளந் தழிகவென்று அவன் தந்தையிட்ட சாபம் தன்பாற் பலியாமலே அர்ச்சுனன் மறுகணையால் அவன் தலையைத் தந்தை மடியிற் சென்று வீழ்வித்தான். வீழ்தலும் தந்தை எழுந்து அத்தலையை நிலத்திடை வீழ்த்தித் தன் சாபத்திற்குத் தானே யிரையாயினான்.

ஜயத்திரதனும் அவன் தந்தையும் இறத்தலும் சூரியன் மீண்டும் வெளிப்பட் டந்திவாயை யடைந்தான். அர்ச்சுனன் தன் சபத முடிந்ததென் றவ்வளவில் அமையாது கிருபனையும் அசுவத்தாமாவை யுமெதிர்த்துப் போராடி இருவரையும் முதுகு கண்டான். சூரியன் அஸ்தமயனமாயின பின்னரும் அன்று போரொழியாது நடப்பதாயிற்று. காரிருள் வந்து மூடிய பின்னரும் இருதிறச் சேனையும் சோர்வின்றிப் பொருதலின்மீது பேரவா வுடையனவாயின. கடோற்கசனுக்கும் கர்ணனுக்கும் மூண்ட வுக்கிர யுத்தத்திலே கடோற்கச



னாண்மைக்கும் மாயங்களுக்கும் எதிர்நிற்க வியலாது, கர்ணன், இனிப் பிழைத்தற்கு வேறுவழி யில்லையென் றெண்ணி இந்திரன் கொடுத்த வச்சிராஸ்திரத்தை யெடுத்து விடுத்தான். அவ்வஸ்திரத்தால் கடோற்கசன் மாண்டான். அதுகண்டு கர்ணன் உயிர் பிழைத்தேனென்று உவகைபூத்துக் களத்தைவிட் டகன்றான்.

பாண்டவர்கள் கடோற்கசன் மாண்டமை யுணர்ந்து புலம்பியழத் தலைப்பட்டார்கள். கிருஷ்ணன் கடோற்கசனாண்மையையும் மாயாசாதுரியங்களையு மெடுத்துப் புகழ்ந்து மகிழ்ந்து அர்ச்சுனனை மார்புறத் தழுவினான். யாமெல்லாம் புலம்ப நீர்மாத்திரம் மகிழ்வதென்னையென்று அர்ச்சுனன் வினவ, கிருஷ்ணன், கர்ணனுக் கிருந்த மகத்தாகிய பலம் ஒன்றே. அதுவும் இன்றே அழிந்தது. அவன் வச்சிரபாணத்தை உன்மேல் விடுவானாயின் யாது செய்வதென்றெண்ணி யேங்கியிருந்தேன். அஃது ஒருவனையே தப்பாமற் கொல்வதாதலின், அது முடிந்தமையால் இனி அதற்கு வலியில்லை. யானுமினி அஞ்சேனென்றான். அவ்வளவில் நள்ளிரவாகப் பதினான்காநாட்போரு மொழிந்தது.

வைகறையில் இருதிறத் தலைவருமெழுந்து நித்தியகடன்களை முடித்து அர்க்கிய மேந்தச் சூரியனு மதனை யேற்குமாறு கீழ்த்திசையில் எழுந்தான். இரு சேனைகளும் ஆண்மை மிக்கனவாய்க் களம் புகுந்தன. அர்ச்சுனனுந் துரோணரும் எதிர்ப்பட் டாண்மைகூறிச் சிங்கமுஞ் சிங்கமுமெனப் பெரும்போர் செய்தனர். அப்போரிலே ஒருவரை யொருவர் மேற்கொள்ள வியலாது சிறிது நேரத்தில் இருவரும் நீங்கித் தாம் மேற்கொள்ளத்தக்க சத்துருக்களை நாடிப் போயினர். வீமன் முதலிய மற்றைய வீரரும் தமக்கிணையான வீரரைத் தேடிக் கொடும்போர் புரிந்தனர். இருதிறச் சேனையிலும் பல்லாயிரம் வீரரும் யானைகளும் குதிரைகளும் அழிதலைக் கண்ட கிருஷ்ணன், அர்ச்சுனனை நோக்கி, துரோணாசாரியரை வெல்ல விரும்பினால் அசுவத்தாமா இறந்தானென அவர்க்குச் சொல்லுதல் வேண்டும் என்றான். அர்ச்சுனன் அதுசெய்து அரசு கொள்வதிலும் அரசிழப்பது நன்றென்றான். அதுகேட்ட வீமன், அசுவத்தாமா வென்னும் ஒரு யானையைக் கொன் றொழித்துவிட்டு, "அந்தோ! அசுவத்தாமாவென்னும் மதயானையும் இறந்தது" என்று இரு

பொருள்பட முழங்கிக் கூறினான். அதனைக்கேட்ட துரோணர், நெஞ்சழிந் துடல்தளர்ந்து கையிற் பிடித்த வில்லை வீசிவிட்டுக் கல்லுருப்போலசைவற்று நின்றார். சிறிதுநேரத்தில் துரோணர் ஒருவாறு தெளிந்து இவ்வுரை பொய்யென்றெண்ணி ஒரு தூதனை அழைத்து, மூன்றுலகங்களையும் ஒருங்கே பெறினும் ஓரணுத்துணையும் பொய் புரைக்கத் துணியா வுயர்நெறி வுடையனாகிய உதிஷ்டிரன்பாற் சென்று இவ்வுண்மையை அறிந்து வருவாயாக வென்று விடுத்தார். இங்கே கிருஷ்ணன் உதிஷ்டிரனை நோக்கி, அசுவத்தாமா இறந்தானென்றொரு பொய்யுரைக்க வென்றான். உதிஷ்டிரன் அவ்வுரை கேட்டலும் இதனை என் செவியில் வீழ்த்தலும் பாவமாம் என்று தன்னிரு கரங்களாலுஞ் செவியைப் புதைத்துக்கொண்டு,

“அண்ணிய கிளையும் இல்லும் அரும்பெறும் மகவும் அன்பும்
திண்ணிய சீரும் மிக்க செல்வமும் திறலும் தேசும்
எண்ணிய பொருள்கள் யாவும் இயற்றிய தவமும் ஏனைப்
புண்ணியம் அனைத்தும்சேரப் பொய்மையாற் பொன்று மன்றே”

ஆதலால் இப்பூமியை யான் பெறே னாயினும் பொய்யுரை வழங்கேன். பொய்யினால் இப்பூமியை ஆள்வது பேரிழிவாமன்றோ என்றான். இதற்கிடையில் இருஷிகள் சென்று துரோணரை நோக்கி, இனியாயினும் இவ்வுலகத்தைத் துறந் துய்யக்கடவீர் என்றார்கள்.

அதுநிற்க: கிருஷ்ணன் உதிஷ்டிரனை நோக்கித் தரும நூல்களிலே கூறப்பட்ட வறங்களெல்லாம் நின்னிடத்தே குடிகொண்டிருத்தலின் இவ்வற்ப பொய்யினால் நீ சிறியனாகமாட்டாய். பெரு நெருப்புக் கீரமில்லையன்றோ. இப்பொய்யினால் வரும் அற்ப பாபத்தை மற்றைய அறங்களெல்லாந் தகித்துவிடும். அஞ்சாது கூறுகவென்றான். இங்ஙனங் கூறிக் கிருஷ்ணன் உதிஷ்டிரனுடைய சத்திய விரதத்தைப் பரீக்ஷித்தபோது, அவன் நீதியும் சாந்தமும் பொறுமையும் அற்ப குற்றந்தானு மில்லாத வுயர்ந்த வொழுக்கமும் பொருந்தி விளங்குபவனாகியும் தானாகவொன்றன்கட் டுணியாமையும் தனக்கு அன்புடைய பெரியோர் கூறுவதெதனையும் நம்பியொழுகுஞ் சபல புத்தியும் சுவாதீனமின்மையுமாகிய ஒரு துர்ப்பல மாத்திரம் அவனகத்தே யியல்பாகக் குடிகொண்டு கிடத்தலால் அவன் மனவுறுதி தளர்ந்து அப்பரீக்ஷைக்கு நிர்வகிக்கவியலாது வலி தளர்ந்தான். அப்



பொழுது துரோணர் விடுத்த தூதன் வந்து வினவ, உதிஷ்டிரன் துரோணர் இருக்குந் திசையை நோக்கி. “அசுவத்தாமா இறந்தது மெய்யே, யானை” யென்றான். “அசுவத்தாமா விறந்தது மெய்யே” என்பதை உரத்த குரலாலும் யானை யென்பதைத் தாழ்த்த குரலாலும் கூறினான். உதிஷ்டிரன் கூறியது சொல்லளவில் உண்மையேயாயினும் பயனளவில் வெளிப்படத் துணிந் துரைக்கும் பொய்யினும் பெரிதும் கொடிதுமாயிற்று.

அதுகேட்டலும் துரோணர் உயிர் நீங்கிய வெற்றுடல்போல் அவசமாயினர். அதுகண்டு திருஷ்டத்துயுமனன் கையில் வாட்படையொன்று தாங்கிப் புலியெனப் பாய்ந்து துரோணர் தேரிற்றாவினான். தாவுமுன் துரோணர் தமது தலைகுனிந் துயிர்விடுத்துச் சோதிவடிவாய் விண்ணிடை யேறினர். தலைகுனிந்து தேரினின்றும் வீழ்கின்ற துரோணர் உடலைக் குடுமிபற்றிப் பிடித்த திருஷ்டத்துயுமனனை அர்ச்சுனன் நோக்கி, நங் குருமூர்த்தியைக் கொல்லாதொழிக! கொல்லாதொழிக! உயிரோடு சிறைசெய்து வருக! என்று பலகாற் றடுத்துக் கூவவும் அவன் கேளானாகிச் சிரசைக் கொய்தான்.

துரோணர் இறத்தலும் கௌரவபக்கத்துச் சேனையெல்லாம் உடைந்து களம்விட்டோடின அசுவத்தாமா தந்தையிறந்தது கேட்டுச் சோகித்துக் காலாக்கினி ருத்திரனைப்போலச் சினந்து சீறியெழுந்து நாராயணாஸ்திரத்தை யெடுத்து வில்லிலே பூட்டிக்கொண்டு, என் தந்தையை மதிப்பின்றிக் கேசத்தைப் பற்றிச் சிரங்கொய்த கீழ்மகனைக் கொன்று பாண்டவ சேனையையுந் தொலைப்பேனென்று புறப்பட்டான். ஓடுகின்ற கௌரவ சேனைகளையெல்லாம் திரட்டிக் கொண்டு வருகின்ற அசுவத்தாமாவினது நிலையை அர்ச்சுனன் கண்டும் அதனைச் சிந்தியாது குருவைக் கொடுங்கொலை புரிதற் குடன்பட்ட மகாபாவியாயினேனே யென்று இரங்கியிரங்கிக் கிருஷ்ணனை நோக்கி, “பகவானே! மானமும்போய் நரகத்திற்கு மாளாயினேன்” என்றான். அதுகேட்ட வீமனும் திருஷ்டத்துயுமனனும் சீ! யாது கூறுகின்றனை யென்று அர்ச்சுனனைக் கோபித்தார்கள். சாத்தியகி திருஷ்டத்துயுமனனை நோக்கி, மானங் கெடுத்துவிட்டு இன்னும் ஆண்மை பேசுகின்றனையா வென்றான். அதுகேட்டு அவன் சாத்தியகியை வசையுரைக்க இருவருக்கும் கோபம் பெரிதாகிக் கையிலாயுத மெடுத்தனர். இதற்கிடையில் அசுவத்தாமா தான் தொடுத்த

நாராயணாஸ்திரத்தை விடுத்தான். அது பாண்டவர் சேனையை நிர்மூலம் பண்ணுமாறு அத்தியுக்கிரத்தோடு அக்கினியைக் கான்று கொண்டு சென்றது.

அப்பொழுது சாத்தியகியும் திருஷ்டத்துயுமனனும் கோபந் தணிந்து பகைவர் சேனைமேற் றிரும்பினர். நாராயணாஸ்திரத்தைக் கிருஷ்ணன் கண்டு பாண்டவர் சேனையை நோக்கி, ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு நிராயுதபாணிகளாய் நில்லுமின் நில்லுமினென்று ஆஞ்ஞாபித்தான். வீரரெல்லாம் அது செய்ய வீமன் மாத்திரம் அதுசெய்யாது போருக்காயத்தமாய் நின்றான். அர்ச்சுனனும் கிருஷ்ணனும் அவனை அதட்டி அவ்வக்கினியி லகப்படா திழுத்துக் காத்தனர். நாராயணாஸ்திரம் சத்துருக்களில்லாமையால் உக்கிரந் தணிந்து மறைந்து போயிற்று. துரியோதனன் அசுவத்தாமாவைக் கூவியழைத்து இன்னுமொருகால் அவ்வஸ்திரத்தைப் பிரயோகிப்பாயாக வென்றான். அசுவத்தாமா, அவ்வஸ்திரம் இனி வரத்தக்கதன்று. அஃதிருகால் விடத்தக்கதுமன்றும் என்றான்.

மீளவும் யுத்தந் தொடங்கியது. வீமன் ரதசாரதி கொல்லப்பட்டான். குதிரைகள் சாரதியின்மையால் களத்தைவிட்டு வீமனைத் தேரோடுங் கொண் டோட் டெடுத்தன. அதுகண்டு அர்ச்சுனன் அசுவத்தாமாவையும் அவன் பெருஞ் சேனையையு மெதிர்த்துக் கொடிய யுத்தஞ் செய்தான். அர்ச்சுனன் விடுத்த பாணவருஷங்களால் ஓரிருள் வந்து மூட ஓரக்ஷௌகிணிசேனை முழுதும் மடிந்தொழிந்தது. அதற்கு அசுவத்தாமா அரிதிற் பிழைத்து முதுகிட்டோடினான். ஓடும்போது அவன் வியாசரைக் கண்டு தனது பாணம் வலியிழந்த காரணமென்னை யென்று வினவினான். அவர் நரநாராயணர்களே கிருஷ்ணனும் அர்ச்சுனனுமாதலின் அவரை வெல்வது யார்க்கு மரிதென்றார். அவ்வளவில் போருமொழிந்தது. போரொழிந்தபின்னர் அர்ச்சுனன் வேதவியாசரைக் கண்டு இன்று யான் செய்த போரிலே ஒரு திவ்விய வடிவம் என்முன்னே தோன்றி நின்று என் பகைவரை யெல்லாம் யான் கொல்லுமுன் கொன்றெனக்கு வெற்றி தந்தது. அஃது யாதென்றான். வியாசர் அது மகாதேவரது திவ்விய வடிவமாம் என்று அம்மூர்த்தியின் பெருமைகளையு மெடுத்துச் சொன்னார்.



பதினாறுநாள் வைகறைப்போதிலெழுந்து தங்கடன் முடித்த இருதிறச் சேனாவீரருங் கைதொழுது சூரியனை உதிப்பித்தார்கள். துரியோதனன் துரோணர் இறந்தமைக்குப் பரிதபித்திரங்கி இனியென் சேனைக்கு அதிபதியாவார் யாவர் என்று தன் துணைவர்பால் வினவ, யாவருங் கர்ணனே தக்கானென்றார்கள். அவ்வுரை துரியோதனன் மனத்திலே சிறிதுநேரம் சீர்தூக்கி ஆராயப்படுவதாயிற்று. முதலிலே பத்துநாட் போரும் வீஷ்மர் சேனாதிபதியாயிருந்து நடத்தப்பட்டது. அவர்க்குப் பின்னே துரோணர் சேனாதிபதியாயினர். அவர் அர்ச்சுனன்மீது பேரன்புடையராதலின் தமது வில்லாண்மையை முழுதுங் காட்டாது பக்ஷபாதம்பண்ணி எனக்குத் துரோகஞ் செய்தார். இனிக் கர்ணனோ முன்னரும் பலமுறைகளிலே தோற்றோடியவன். ஆயினும் முற்கூறிய சேனாதிபதிக் கடங்கியிருந்து நடக்கவேண்டியவனாயினமையின் சுவாதீனமில்லாது செய்த போரில் அவன் ஆண்மையை நாம் நிதானித்தல் கூடாது. ஆண்மைதான் குறையினும் அவனிடத்துள்ள சர்ப்பக்கணையோ எவனையும் விஞ்சவொட்டா வலியுடையது. அதனாலாயினும் அவன் அர்ச்சுனனைக் கொல்லாது விடான். அர்ச்சுனன் அங்ஙனம் கொல்லப்படுமிடத்து நமக்கு வெற்றி நிச்சந்தேகமாம். அவனிறக்கின் ஏனைய பாண்டவரும் இறப்பர் என்றிவ்வாறு சிந்தித்துத் துரியோதனன் தன் சேனைக்குக் கர்ணனையே அதிபதியாக்கினான்.

அவ்வாறே கௌரவசேனை, முன்னர் எந்நாளிலுமில்லாத புத்தாண்மையும், போரார்ப்பரிப்பும், மிக்க பேரிமுழக்கமு முடையதாய்க் களம்புகுந்தது. கர்ணன் நகுலனை எதிர்த்துக் கொடிய யுத்தஞ் செய்து அவன் சாரதியையும் அவன் தேரையும் அவன் குதிரைகளையும் ஈற்றில் அவன் ஆயுதங்களையும் அழித்து நிராயுதனாக்கிக் குந்திக் குரைத்த வாக்கைக் காக்குமாறு அவனுயிரை வாங்காது வில்நாணை அவன் கழுத்திற் சுற்றும்படியாகப் பாணத்தாலறுத்து, நாணித் தலைகுனிந்து முதுகிட்டோடச் செய்தான். கர்ணனிது செய்ய, உதிஷ்டிரன் துரியோதனனை மடக்கி வலிய போர் செய்து பாணங்களால் அவன் சரீரத்தைத் துளைத்து அதனால் அவன் அறிவழிந்து செயலிழந்து விழச்செய்தும், அவனை வீமன் கொல்லச் சபதம் செய்தமையால் அது காக்குமாறு தான் கொல்லாது விடுத்

துப் புறங்கொடுத்தோடச் செய்தான். நகுலனைப் புறங்கண்ட கர்ணன் பெருமிதமுற்றவனாய் அர்ச்சுனனைத் தேடிச் சென்றான். அர்ச்சுனன் அவன் கருத்தையுணர்ந்து எதிர்த்து அவன் சேனைகளையெல்லாம் சூரியாஸ்தமயனம் வரையும் தன்வில்லுக் கிரையாக்கி விஜயபேரி முழக்கினான்.

சூரியன் தன்மைந்தன் சோர்ந்தானென்றவனுக்கிரங்கி அவனைப் போரொழிவிக்கக் கருதினான்போல் மேற்றிசைக்கடலில் மூழ்கினான். அவ்வளவில் இருதிறச் சேனையும் போர்தணிந்து பாசறை புகுந்தன. துரியோதனன் அன்றிரவு வீரரெல்லாரையுமழைத்து, நாம் செய்கின்ற முயற்சியெல்லாம் பாண்டவர்க்கு அநுகூலமாகின்றதேயன்றி நமக்குச் சிறிதாயினும் பயன்படுவதாயில்லை. இன்று நடந்த போரிலும் விஜயம் விஜயனுக்கேயாயிற்று. விஜயன் என்னும் பெயர் இழுக்குப்படாதுபோலும். பாண்டவர் சேனையால் நமது சேனை மெலிந்துவிட்டது. இனி நமதெண்ணம் முடிப்பது அரிதாய் விட்டது. உங்களையெல்லாம் வீணே நம்பி இப்போரைத் தொடங்கி விட்டேன் என்றான்.

அப்பொழுது கர்ணன் துரியோதனனை நோக்கி, நான் உயிரோடிருக்குங்காறும் பாண்டவரை வெல்லவொட்டேன். நாளைப்போரிலே அர்ச்சுனனை வெல்லுவேன். வெல்லேனாயின் அவனால் உயிர்விடுவது சத்தியம். நீ எனக்குச் சல்லியனைச் சாரதியாகத் தருவையாயின் அர்ச்சுனனை நாளைப்பொழுது போமுன்னே வீழ்த்துவேன் என்றான். அதுகேட்ட துரியோதனன் உள்ளந்தேறி அது செய்வேனெனக் கூறிச் சல்லியன்பாற் சென்றான். சல்லியன் அவனை நோக்கி, நீ வந்த கருமம் யாதென்று வினவ, அவன் சல்லியனைத் தொழுது, பகைவரைக் கருவறுத்துச் சேர்ந்தவர் பிழையெல்லாம் பொறுத்து உலகமுழுதும் ஆளுகின்ற பெரியோனே, நின்பால் ஒரு வரம் பெறுமாறு வந்தடைந்தேன். அதனை மறுத்திடாமல் நீ தருதல் வேண்டும். மறுத்திடின் என்வாழ்வு இன்றோடழியு மென்றான். அது கேட்ட மாத்திரத்தே தேசாதிபதியாகிய சல்லியன், நீ கேட்பது யாது? நீயோ எமக்கெல்லாம் ராஜராஜனாய், விளங்குகின்றாய்; நீ என்பால் இரப்பது யாது? நீ ஏவுவது எதனையுஞ் செய்யு முரிமையுடையேனாகிய யான் உனக்குச் செய்யத்தக்க உதவி யாது என்



றான். துரியோதனன் கிருஷ்ணனைப்போல் நீயும் எங்களைக் காத்திடுதல் வேண்டுமென்றான். சல்லியன், கிருஷ்ணனோ நம்மாலும் உலகத்தாராலும் அளவிடப்படாத திவ்விய குணங்களும் பேராற்றலுமுடையோன். அவனைப்போல யான் காக்குமாறெங்ஙனமா மென்றான்.

அதற்குத் துரியோதனன் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குத் தேர்ச்சாரதியாயிருந்து அவனைக் காப்பது போல நீயும் கர்ணனுக்குத் தேர்ச்சாரதியாகி என்னைக் காத்தருள வேண்டுமென்றிரந்தான். அது சல்லியன் செவியிற் படுதலும் அவன் சினந்து கொடிய விடநாகம்போற் சீறியெழுந்து அவனை நோக்கி, என்னை மதியாமல் இப் புன்சொல்லைக் கூறப்புகுந்தனை; தணித்தற்கரிய கொடும்பசிதான் வந்து வாட்டுகினும் புலி புல்லுத் தின்னாதன்றோ. புலி புல்லுண்ணுமாயின் சல்லியனும் கர்ணனுக்குத் தேர்ப்பாகனாவான். துரியோதனன் இது சொன்னமையாற் பொறுத்தேன். இன்னொருவராயின் அவர் நாவை அக்கணத்திற்றானே கொய்து அவருயிரையும் வாங்கி விடுவேன். நால்வகைத் தேர்வீரருக்குந் தேர்செலுத்துஞ் சாரதி மகனாகிய கர்ணனுக்கு என்போலும் க்ஷத்திரியனா தேர் செலுத்துவதென்று அதிர்த்துரைத்தான்.

தன்கரும முடித்தற்கு யாரையும் வணங்கித் தாழுமியல்புடையனாகிய துரியோதனன் அவனை நோக்கித் திரிபுரமெரிக்கப் புகுந்த விரிசடைக் கடவுட்குத் திசைமுகக்கடவுள் ரதசாரதியாயினான். விஷ்ணுவினது அம்சமென்று யாவராலும் புகழப்படுகின்ற கேசவன் அர்ச்சுனனுக்குத் தேர்ப்பாகனானான். அர்ச்சுனனும் விராடன் புத்திரனுக்குச் சூதனானான். இதனையறிந்திருந்தும் நீ வசையென்று கூறுவது எனக்குப் பேரதிசயத்தை விளைக்கின்றது. எக்கலையும் வல்ல வேந்தர்க்கன்றிப் போர்க்களத்திலே சாரத்தியஞ் செய்ய வாராதன்றோ. ஆதலால் நீயே சாரதியாயிருந்து எனக்கு வாகை சூட்டவேண்டு மென்று மேன்மேலும் இரப்பச் சல்லியனு முடன்பட்டான். அவன் உடன்படுதலும் துரியோதனன் "பாண்டவரை வென்று வாகை சூடினேன்" என்றுள்ளம்பூரித்து ஆனந்தக்கூத்தாடினான்.

இரவும் நீங்கியது. பதினேழாநாட் போருக்கு ஆயத்தராய் இருதிறச் சேனைவீரருங் களங்கொண்டனர். சல்லியனும் கர்ணனும் தேர்மிசை வருகின்ற கம்பீரத்தைத் துரியோதனன் பார்த்துச் சேனாவீரர் கண்டு, இன்று பாண்டவசேனைகள் அடியோடுபடுதல் நிச்சயம் என்றானந்தக்கூத்தாடி ஆர்ப்பரித்த வொலி விண்ணுலகை அதிர்வித்தது. தேவர்களும் அன்று நிகழும் போரைக் காண அந்தரத்திலார்ந்தனர். கர்ணனும் சல்லியனைச் சாரதியாகப் பெற்றேனுக்கு இன்று அர்ச்சுனனை வெல்வது எளிதாமென்று தோள்கள் பூரித்தான். சல்லியன் அர்ச்சுனன் பெருமைகளை யெடுத்துப் பாராட்டிக் கர்ணன் பெருமிதத்தை ஆழ்வித்தான்.

அப்பால் யுத்தாரம்பக் குறியாகச் சங்கங்களும் தாரைகளும் பேரிகைகளும் முழங்கி யார்த்தன. கர்ணன் உதிஷ்டிரனைத் தேடி எதிர்த்து உக்கிர யுத்தஞ் செய்தான். அப்போரிலே உதிஷ்டிரன் தேர்ச்சாரதியையும் தேரையும் இழந்து முதுகிட்டோடினான். அது கண்டு வீமன் உருத்தெழுந்து இடிபோலார்த் தறைகூவிக் கர்ணனை யெதிர்த்து, நிருவகித்தற்கரிய கொடிய யுத்தஞ் செய்து அவனை மூர்ச்சையற்று வீழ்வித்துச் சல்லியனையுந் தேரைக்கொண்டு களத்தை விட்டோடச் செய்தான். கர்ணன் சிறிதுபொழுதில் மூர்ச்சை தெளிந்து, மீண்டு களம்புகுந்து, உதிஷ்டிரன் நகுலன்சகாதேவன் மூவருஞ் சென்றெதிர்க்க வெதிர்த்து ஒரு கணத்தில் அம்மூவரையும் புறங்கொடுத்தோடச் செய்ததுமன்றி, அப்பக்கத்து வீரர் அநேகரையும் விண்புகுவித்தான். அப்பொழுது வீமன் துரியோதனனை மடக்கி அவனை மூச்செடுக்கவொட்டாமற் றடுத்துக் கொடும்போர் செய்தான். அதுகண்டு கர்ணன் துரியோதனனுக்குத் துணைசெய்யுமாறு அவன் பக்கஞ் சென்றான். அர்ச்சுனனும் அசுவத்தாமாவை யெதிர்த்து அவனைப் புறங்கண்டுவிட்டு உதிஷ்டிரன் நிலையை யுணருமாறு விரைந்து சென்றான்.

விரைந்து வருகின்றானை உதிஷ்டிரன் கண்டு வாழ்த்திக் கர்ணன் இறந்தான்போலு மென்றான். அர்ச்சுனன் அவன் இன்னும் இறந்திலனென்ன, உதிஷ்டிரன் தான் கர்ணனால் அடைந்த தோல்விக்கு மனங் கொதித்திருந்தமையால் நிறைதவறி அவனை நோக்கிச் சீறி, உன் வில்லாண்மை நன்று நன்று! பேடிகையிற் காண்டீவம் யாது செய்யும்! அதனை வில்லாண்மையில் வல்லானொருவன் கையிற்



கொடுத்திடுவாயாக வென்றான். அச்சொல் அர்ச்சுனன் செவிக்குத் தீக்கோல்போலாக அவன் சினந்து தன்னையும் மறந்து கையிலே வாளையுருவித் தமையனைக் கொல்ல வெழுந்தான். அதுகண்டு கிருஷ்ணன் அர்ச்சுனனை நோக்கி, இஃதென்னை விபரீதம்! யாது செய்யத் துணிந்தனை யென்றான். அர்ச்சுனன் என் காண்டீவத்தைப் பிறர் கையிற் கொடுக்குமாறு சொல்பவனைக் கொல்வது விரதமென்றான். கிருஷ்ணன் அற்றாயின் உன் தமையனை அவமதித்துச் சிலமொழி கூறியமைக. பெரியோரை அவமதித்தல் அவரைக் கொலைசெய்தலோடொக்குமாதலின் அதுசெய்து நின்விரதத்தை முடிப்பாயாகவென்றான்.

அவ்வாறே அர்ச்சுனன் உதிஷ்டிரனைப் பார்த்துச் சில கடுஞ்சொற் கூறி, ஆறி, யான் செய்த பிழையைப் பொறுத்தருளுகவென்றுள்ளம் கசிந்து மனம் பதைத்தழுது அவன் பாதங்களில் வீழ்ந்து கிடந்தான். உதிஷ்டிரனுந் தான் கோபவேகத்தால் ஆராயாது கூறிய கடுஞ் சொற்களுக்காகப் பரிதபித்து நிறைதவறிக் கூறலாகாது. கூறியவெனக்கு அரசுந் தகாதெனக் கூறித் தன் கிரீடத்தையும் வீசப் புகுந்தான். கிருஷ்ணன் அவனையுஞ் சாந்திசெய்து அர்ச்சுனனையும் தன் தமையனைக் கொல்லவெடுத்த வாளால் கர்ணனைக் கொல்லுவேன் என்று சூழுரைக்குமாறு செய்தான். வீழ்ந்து கிடந்த தம்பியைத் தமையனுந் தூக்கி மார்புறத்தழுவி உச்சிமோந்தான். அவ்வளவில் அப்பிரசண்டமாருதம் நீங்க, அர்ச்சுனனுங் கிருஷ்ணனும் மீண்டு போர்க்களம் புகுந்தார்கள்.

அதுகாறும் வீமனே கர்ணன் சேனையை யெதிர்த்துக் கொடும்போர் செய்து நின்றான். அர்ச்சுனன் வரவுகண்ட வீமன் தன் மெய்சோர்வு நீங்கி இருமடங்கு தழைத்துக் கர்ணனை அவனுக்காக்கித் துச்சாசனனை தனக் காக்கினான். வீமனுக்குந் துச்சாசனனுக்குமிடையே மூண்ட கொடிய மல்யுத்தத்திலே துச்சாசனனைக் கதையினாலே மோதிக் கொன்று திரௌபதியை அவன் மானபங்கஞ் செய்தபோது தான் செய்த வஞ்சின வுரைப்படி அவன் உரத்தை வாளாற் பிளந்து ஒரு துளி யிரத்தத்தை யெடுத்து நானுனியில் வைத்து "என் சபத முடித்தேன்" என்று சிங்கநாதஞ் செய்தான். அவ்வொலி துரியோதனன் செவியிற் பட்டபோது அவனுயிர் அவ

னுடலைவிட் டொருகணம் பிரிந்து மீண்டு வந்து குடிபுகுந்தது. அது கண்ட அவன்பக்கத்து வீரரும் உள்ளமு முடலு மொருங்கே நடுங்கி அவசமாயினர்.

அர்ச்சுனன் கர்ணனை எதிர்க்குமுன்னே நகுலன் எதிர்த்துக் கர்ணனுக்கு இளைத்தோடினான். அப்போது அர்ச்சுனன் சென்று கர்ணனை எதிர்த்தான். தேவர்கள் அந்தரத்திலே நின்று அர்ச்சுனன் வெல்வான் என்றார்கள். அசுரர்களும் அந்தரத்திலிருந்து கர்ணன் வெல்லுவா னென்றார்கள். கர்ணன் கண்ணெதிரில் அவன் மகனை அர்ச்சுனன் ஒருபாணத்தாற் கொன்றான். அது கர்ணன் கோபாக்கினிக்கு நறிய நெய்யேயாக அவன் தனது வில்லிலே திவ்விய சரங்களைக் கோத்து அர்ச்சுனனோடு போர்தொடுத்தான். இருவருஞ் செய்த ஒப்பில்லாத விற்போரிலே, ஒருவரையொருவர் வெல்லச் சிறிதுநேர முயன்றனர். அர்ச்சுனன் கர்ணனை மேற்கொள்ளவியலாமையால் பிரமாஸ்திரத்தை விடுத்தான். அதனைக் கர்ணன் வலியிலதாக்கி எதிர்க்கணை பல தொடுத்தான். அவற்றையெல்லாம் அர்ச்சுனன் கண்டித்துவிடக், கர்ணன் கோபமிக்கவனாய் நாகாஸ்திரத்தை யெடுத்து விடுத்தான். அஃது அர்ச்சுனனைக் கொல்லுமாறு பன்னாளாகக் கர்ணன் கையிலிருந்து வளர்ந்த கொடிய நாகக்கணையாதலின், தொடுக்கப்பட்ட மாத்திரத்தே அர்ச்சுனன் சிரசையே குறித்து மின்னெனப் பாய்ந்தது. இவ்யுத்தந் தொடங்கு முன்னரே குந்தியைக் கர்ணன்பாற் போக்கி, நாகாஸ்திரத்தை இருமுறை தொடாதொழிதல் வேண்டு மென்னும் வரம் பெற்றது அதற்குத் தப்புதல் கூடாதெனக் கருதியேயாம்.

அவ்வஸ்திரம் வில்லி னின்றும் புறப்பட்ட வுடனே,கிருஷ்ணன் ரதத்தை ஒருமுழம் தாழும்படி அழுத்தினான். அழுத்துதலும் ரதந் தாழ்ந்ததுமன்றிக் குதிரைகளும் பூமியிற் காலைப் பரப்பிப் படுத்தன. பாய்ந்த நகாஸ்திரம் அர்க்சுனன் சிரசிலக்கியந்தப்பி, அவன் கிரீடத்தைத் தகர்த்து அந்தரஞ் சென்றது. இவ்வுபாயத்தால் அர்ச்சுனனைக் கிருஷ்ணன் அவ்வாபத்தினின்றுங் காத்தருளினான். குறி தப்பியதென்று நாகாஸ்திரம் மீண்டு போய்க் கர்ணன் அம்புக்கூட்டிற் புகுந்து இன்னு மொருதரம் தன்னை ஏவுகவென் றிரந்தது. அதற்குக் கர்ணன் ஒருகாற் றொடுத்த கணையை நான் மறுகாற் றொடுப்பதில்லையென்று கூறி மறுத்தான். அந்நாக மதுகேட்டுத் தானே அர்ச்



சுனனைக் கொல்வேனென்று கூறிப் பாய, அதனை அர்ச்சுனன் இருகூறுசெய்து யமபுரம் போக்கினான்.

அப்பால் அர்ச்சுனன் மிகச் சூரத்துவமுடையனாகிச் சரங்களைச் சோனாமேகம்போலப் பொழிந்தான். கர்ணனும் அவ்வாறே குன்றா ஆண்மையோடும் பொருது, பாண்டவசேனையில் எண்ணில் வீரரையும் யானை தேர் குதிரை பதாதிகளையுங் கொன்று, பூமியை ரத்தசமுத்திரங்கொண்டு மூடியதென்னும்படி செய்தான். அது செய்தானாயினும் அர்ச்சுனன் கர்ணனைச் சிறிதுபோதாயினும் மூச்செடுக்கவிடாது கணைகளால் நெருக்கினான். அர்ச்சுனன் செய்த சாகசத்தால் கர்ணன் மெய் சோர்ந்து தன் கையிலிருந்த ஆயுதங்களையும் நழுவவிட்டான். அதுகண்டர்ச்சுனன் நிராயுதன்மேற் பாணந் தொடுக்க லாகாதென் றெண்ணித் தானும் பாணந்தொடாது சிறிதுநேர மிருந்தான். கிருஷ்ணன் அர்ச்சுனனை நோக்கிச் சோராதேயென்றூக்க, கர்ணன் பேருக்கத்தோ டெழுந்து சரேலெனப் பாணந்தொடுக்கத் தலைப்பட்டான். அப்பொழுது ஓரசரீரி அந்தரத்திலேயெழுந்து, "கர்ணா, உன் ரதத்தைப் பூமி உட்கொள்ளுகின்றது" என்றொலித்தது. முன்னொருநாள், கர்ணன் தன் தேர்க்காலின்கீழ் தற்செயலா யகப்பட்ட ஓரான்கன்றை அரைத்துச் சென்றபோது அக்கன்றுக் குரியவனாகிய அந்தணன் சினந்து, "உன் மரணகாலஞ் சமீபிக்கும்போது உன் தேர்க்காலைப் பூமி கவர்வதாக" வென்று சபித்துச் சென்றான்.

அச்சாபப்படி கர்ணன் தேர்க்காலொன்று பூமியிற் புதைந்து சிக்கியது. அதுநோக்கிக் கர்ணன் சற்றே சித்தந் திகைத்தும் ஆண்மைவிடாது பாணங்களை ஆராய்ந்து தொடுத்தலில் சிறிதுந் தளர்ந்தா னில்லை. அப்பாணங்களையெல்லாம் அவ்வக்கணத்திலே அர்ச்சுனன் கண்டித்து அவன் மறுகணை ஆயுமுன் நூறு கணை தொடுத்து விடுத்தான். அப்போது அவன் அர்ச்சுனனை நோக்கி, வில்லாண்மைக்கும் பெருந் தகைமைக்கும் உறைவிடமாயுள்ளவனே! புதைந்த இத்தேர்க்காலை யான் தூக்கிச் சமப்படுத்தி மீண்டு தேர்மிசைக் கொள்ளும்வரையும் பொறுத்திடுகவென்று கூறிக் கீழே குதித்துத் தேர்க்காலைத் தூக்கினான். கிருஷ்ணன் கர்ணனை நோக்கி, கர்ணா! அர்ச்சுனன் பெருந் தகைமையினை முடிவுநாளிலேயே கருதப் புகுந்தனைபோலும். பாண்டவர்க்கு நஞ்சூட்டப் புகுந்தபோதும்,

அரக்குமாளிகைக்கு நெருப்பிட்டபோதும், திரௌபதியை மான பங்கஞ் செய்தபோதும், அர்ச்சுனன் வில்லாண்மையையும் பெருந் தகைமையும் நினைந்தாயில்லையே. அந்நாள் மறந்தனைபோலும்! இப்போது நீ பாராட்டுகின்ற இத்தருமநெறியை அந்நாள் நினைந்தனையாயின் நின் பாராட்டு வீணாகாது. அது செய்யாது இப்போது நாவுலரச்செய்யும் நின் பாராட்டு வீண் நாவாட்டமாம் என்றான்.

அது கேட்டுக் கர்ணன் மறுமாற்றமின்றிச் சக்கரத்தைப் புதைந்தபடியே விடுத்துப் பாணங்களைத் தெரிந் தெடுத்துப் பிரயோகித்தான். அப்பாணங்களால் அர்ச்சுனன் கையும் மெய்யுஞ் சோர்ந்து அவசமானான். அதனை வாய்ப்பாகக்கொண்டு கர்ணன் தேரினின்றுங் குதித்துத் தேர்ச்சில்லை யெழுத்து நிமிர்த்த முயன்றான். அதற்கிடையில் அர்ச்சுனன் தெளிந்து நிமிர்ந்து மிக்க கோபம் பொங்கப்பெற்றவனாய், ஒரு திவ்வியாஸ்திரத்தை யெடுத்து விடுத்து அவன் கொடியைச் சிதைத்துவிட்டு, மற்றொரு கணையை வாங்கித் தருமதேவதையை வழிபட்டு, இது பொய்யாதொழிக வென்று பிரயோகித்தான். அஃது உரத்தைப் பிளந்துசெல்லக் கர்ணனுந் தேர்த்தளத்திடை வீழ்ந்தான். வீழ்ந்த பின்னரும், அவன் தேகத்திலே அம்பு தைத்த வாய்களினின்றும் இரத்தத்தாரைகள் சூரியன் மெய்யினின்றும் எழுகின்ற கிரணக் கற்றைகள்போற் காலவும், மாலைகளும் மகுடமும் உருக்குலைந்தொருபுறங் கிடப்பவும், அவன் கையோ, விற்குனிப்பும் கணைகள் தொடுக்கும் கணக்கும் மறந்ததில்லை யென்றாற் கர்ணன் வீரத்திறத்தை யெடுத்துரைக்கவும் வேண்டுமோ!

இந்நிலையிற் கர்ணன் கிடப்பச் சூரியனும் அஸ்தகிரியை யணுகினான். அப்போது கிருஷ்ணன் அர்ச்சுனனைப் போரொழிக்கவென்று தடுத்துத் தேரிலேயிருத்தித், தானோர் அருந்தவமுனிபோல் வேடந் தாங்கிக் கர்ணனையடைந்து, தளர்ந்து வந்தடைப்பவர்க் கெல்லாம் பெருநிதி வழங்குகின்றாயெனக் கேட்டு நெடுந்தூரத்திருந்து நெடுநாளைக்குமுன்னே புறப்பட்டு நடந்து வந்து என் தவக்குறைவாற் போலும் இந்நிலைக்கண்ணே யுன்னை யடைந்தேன். என் வறுமை நோயைக் களைத்திடுவாயாக வென்றான். கர்ணன், இந்நிலைக்கண்ணே உம்போற் பெரியோரைத் தரிசித்தற்கு யான் செய்ததவமே தவமாம்.



"ஆவியோநிலையிற்கலங்கிய தியாக்கையகத்ததே புறத்ததோவறியேன்
பாவியேன் வேண்டும்பொருளெலாநயக்கும் பக்குவந்தன்னில்வந்திலையால்
ஓவிலாதியான் செய்புண்ணியமனைத்து முதவினேன்கொள்க நீயுனக்குப்
பூவில்வாழயனு நிகரிலனென்றாற் புண்ணியமிதனினும் பெரிதோ."

என்றுகூறித் தன் மார்பிலே அம்பு தைத்த வாயினின்றும் காலுகின்ற செந்நீரோடு தன் புண்ணியத்தைக் கொடுக்க முனிவனும் வாங்கினான்.

வாங்கியபின் முனிவன் கர்ணனை நோக்கி, உன்போலு மீகையாளனை நாமிவ்வுலகிற் கண்டிலம். உனக்கு வேண்டும் வரமுளதேற் கேட்குகவென்றான். கர்ணன் அவனைநோக்கி, முனிசிரேஷ்டரே, எனக்கு இன்னமும் பிறப்புளதாயின் எவ்வெழு பிறப்பிலும் இரப்பவர்க் கில்லை யென் றுரையா மனமும் வண்மையும் தந்தருள வேண்டு மென்றான். முனிவன் தீயிடைப்பட்ட வெண்ணெய்போலுருகிக் கசிந்து கண்ணீர் சொரிந்து அவனை மார்புறத் தழுவி, வள்ளல்களுட் டலைவனே, எப்பிறப்பினும் ஈகையுஞ் செல்வமும் பொருந்தி விளங்கி முடிவில் முத்தியும் பெறுகவென்று வாழ்த்தித் தன் பழைய வடிவமுங் காட்டிப் போயினான். அவ்வாதி மூர்த்தியின் வடிவத்தைக் கண்ணுற் பற்றிக்கொண்டு தன் தேகத்தை விட்டுப் பிரிந்து கர்ணன் உயிர் சோதிமயமா யெழுந்து சூரியனைக் கலந்தது. சூரியனும் இரத்தத்தால் நனைந்த வுயிர் சென்று கலந்தமையாற் சிவந்தான்போற் சிவந்து மேல்கடல்வாய்ப்பட்டான். "கர்ணன் உயிர் பிரிந்து சூரியனைக் கலந்தது" என்றோர் அசரீரி முழங்கிற்று. அவ்வுரை குந்திதேவி செவியிற் படுதலும் அவள் நைந்துருகிப், பின்னே கூந்தல்மேகமும் முன்னே கண்ணீர் சோனை மேகமும் தேகத்தை மறைப்ப இருகையாலும் தலையின்மே லறைந்து சென்று போர்க்களத்திற் கிடக்கு மகன்மேல் வீழ்ந்தழுதாள். என் கண்மணியே! யான் கன்னிமாடத்திருக்குநாளில் சூரியனருளால் உன்னைப் பெற்றுக் குடிப்பழிக்கஞ்சிப் பேழையிலிட்டு இரக்கஞ் சிறிதுமில்லாதேன் கங்கையி லிட்டேன். பின்னர் நீ துரியோதனனுக்கு உயிர்த்துணைவ னானமை கேட்டும் உன் வீரங் கேட்டும் என் தவப்பயன் பலித்ததென் றெண்ணி மகிழ்ந்திருந்தேன்.

இப்போது இவ்வுலகாண்டபோதும், இனி விண்ணுலகம் ஆள்வேனென் றெண்ணியோ உன் தம்பியையுந் துணைவரையும் பிரிந்து விண்ணேறினாய் அந்தோ! அந்தோ! வென்று அவனைத் தன் மடி மீதும் கரங்களின்மீதும் தூக்கி வைத்து அழுது கண்ணீரால் மஞ்சனமாட்டினாள். அதுகண்ட வேந்தரெல்லாம் அதிசயித்து இதுகாறும் கர்ணனை இன்னானென் றறியாது போனேமே யென்றார்கள். அப்பொழுது துரியோதனன் இடியேறுகேட்ட நாகம்போல் உள்ளங் குன்றி உடல் குன்றிக் கண்ணீர் தாரை தாரையாக முகத்தின் வழியோடிக் காலை நனைப்ப வோடிக் கர்ணன்மீது வீழ்ந்து,

"அணையார்தம்படைக்கடலினருநிலைக்குக்கரையேறலானகோலப்
புணையாயெத்திறங்களினும்பகிராமலுற்றதெலாம்புகலத்தக்க [கில்
துணையாயென் னுயிர்க்குயிராங்தோழனுமாகியவுனைத்தோற்றேனு
இணையாருமில்லாவரசேயாரைக்கொண்டரசாளவிருக்கின்றேனே"

என்று பல கூறி யாற்றிப் புலம்பினான்.

அப்பாற் பாண்டவர்களும் தம்மைப்பெற்ற தாய் சென்று கர்ணனை மடிமீது வைத்தழுகின்ற செயல்கண்டு கிருஷ்ணனைநோக்கி, இதன் காரணமென்னை? என்று வினவ, அவனும் கர்ணன் வரலாறு ஆதியோடந்தஞ் சொன்னான். அதுகேட்ட பாண்டவர்கள், ஆற்றொணாப் பேரிரக்கமுங் கோபமுமுடையராய்க் குந்தியை நோக்கி, நீர் எம்மையெல்லாம் ஈன்றது எம் தமையனாகிய கர்ணனைக் கொல்வதற்கேபோலும்! இதுகாறும் இம்மந்திரத்தை யெமக்குரைத்தீரில்லையென்று கடிந்துவிட்டுக் கிருஷ்ணனை நோக்கி, நீயாயினும் எமக்கிது கூறினாயில்லை. பேய் தந்த முலைப்பாலையுண்டு அவளுயிரையு முடனுண்டபித்தனாதலின் எம்மைக்கொண் டெம்மண்ணனைக் கொல்வித்தாய். நன்று நன்று! உன் சூழ்ச்சியென்று கூறித் துயரக் கடலிற் படிந்து புலம்பினார்கள். அப்பால், சகுனி முதலியோர் துரியோதனனைக்கொண்டு தம் பாடிவீடு புகுந்தார்கள். பாண்டவர்களுஞ் சிந்தாகுலந்தெளிந்து மீண்டு தம் பாசறை சேர்ந்தார்கள்.

அன்றிரவெல்லாந் தூங்காது நெட்டுயிர்ப்போடிருந்த துரியோதனன், சகுனியோடு சூழ்ச்சிசெய்து வைகறையிற் சல்லியனை நோக்கி, துணையிழந்தேன், சுற்றமெல்லா மிழந்தேன், சேனையெல்லா மிழந்தேன், எஞ்சியுள்ளதுஞ் சிறிதே. ஆதலால்,



நீயே யெனக்குயிரு நீயே யெனக்குளமு நீயே யெனக்குநிதியு
நீயே துணைப்புயமு நீயே விழித்துணையு நீயே யனைத்துநிலையு
நீயே முனைச்செருவி லதிரதரி னிகரற்ற கோவு மதனால் [புகழா.
நீயே முடித்தியென தெண்ணத்தை யென்றுவகை நிகழாமகிழ்ந்து

அவனைத் தனது சேனைக்கு நாயகமாக்கினான். அதுகண்டு அவன் பக்கத்து வீரரும் அரசரும், "இன்று நம் பகை வெல்வோம்" என் றுணர்ந்தக் கூத்தாடிப் புஜங்களும் பூரித்துப் போர்க்கறைகூவி, அவியுந்தீப மோங்கி யெரிவதுபோலக் குதித்தனர்.

உறைகழித்தெழும் வாள்போல இருள்கழித்துச் சூரியனுமுதயமானான். பதினெட்டாநாட்போர் முரசும் சங்கும் தாரையும் விண்ணுலகங் குலுங்க ஓங்கி யொலித்தது. பாண்டவரு மவ்வொலிகேட்டுத் தம்துயரமாறி வீரமேறி யெழுந்தனர். அப்பொழுது அசுவத்தாமாவும் கிருபனும் துரியோதனனை நோக்கி, "நம்பக்கத்து வீரரெல்லாம் மாண்டொழிந்தனர். யானை தேர் குதிரை காலாட்சேனைகளும் அருகின. உன் தம்பியருஞ் சுருங்கினர். வீஷ்மர் பத்துநாட் கொடும் போர் புரிந்தும் பாண்டவரை வெல்ல வியலாது வீழ்ந்தனர். அப்பால் துரோணர் ஐந்துநாட் செய்த போரே நினைக்கினும் மனங் கலங்கத்தக்கது. அதிலும் பாண்டவரே வெல்வாராயினர். அதன்மேல் தனக்கொப்புயர்வில்லாத கர்ணன் இரண்டுநாட் செய்த போர் தேவர்க்கும் திகில் விளைக்கத்தக்கது. அதிலும் பாண்டவரே வெற்றிமாலை சூடினர். ஆதலால் அவரோடு போர் தொடுப்பதை நிறுத்திச் சமாதானம் புகுவதே தக்கதாம்" என்றனர்.

அவ்வுரைகளைக் கேட்ட துரியோதனன், அவர்களை நோக்கி, "நீர் கூறியதெல்லா மொக்கும். ஆயினும் அவ்வுபாயம் யாருக்குச் சொல்லத்தக்கது. பூவுலகாள விரும்பியிருக்கும் மன்னவர்க்கே சொல்லத்தக்கது. யானோ பூவுலகாண்டு துய்ப்பன துய்த்து மனம் வெறுத்து மேலுலகாள மனங்கொண்டேன். எனக்கிவ்வுரை சாலாது" என்று கூறி, "எழுந்திடும் போருக்கு" என்றான். மலை கலங்கினும் தன் மனநிலை கலங்காத ஆண்மையும் வன்மையுமுடையனாகிய துரியோதனன், நும் இரு வீரரோடும் சல்லியனும் கிருதவர்மாவு மிருக்கையில் யான் போருக்கஞ்சேன் எழுந்திடு மென்றவரை யழைத்துக்கொண்டு போர் முகம் புகுந்தான். பாண்டவ சேனையும் வந்தெதிர்த்

த்து. அப்போது உதிஷ்டிரன் துரியோதனனை யெதிர்த்துத், தனது பேராண்மையும் வில்லாண்மையுங் காட்டி உருத்திராங்காரத்தோடு போர் செய்தான். துரியோதனன் சோர்வடைந்தமை கண்டு சல்லியன் அவனுக்குத் துணைசெய்யப் புகுந்து கொடிய யுத்தந் தொடுத்தான்.

சிறிதுபோதில் உதிஷ்டிரன் அவன் வலிமையையு மடக்கித் திவ்வியாஸ்திரம் ஒன்றைப் பிரயோகித்து அவன் சிரசையுங் கொய்து வீழ்த்தினான். சல்லியன் வீழ்தலும்; சகுனியும் சகாதேவன் கைக் கணைக்கிரையாகி மாண்டான். சேனாபதி வீழ்ந்தவளவில் ஓடத் தொடங்கிய சேனையைத் துரியோதனன் மடக்கித் திரட்டிப் புத் தாண்மை கொண்டு மீண்டான். அதுகண்டு வீமனும் அர்ச்சுனனும், துரியோதனன் மேலும் சேனைமேலும் முறையே போர் தொடுத் தனர். சிறிதுபோதில் சேனையெல்லாம் மாண்டும் முதுகிட்டு மொழி யத், துரியோதனன் நிராயுதனாகித் தனித்தான். கிருபனும் கிருத வன்மாவும் அசுவத்தாமாவும் முதுகிட்டனர். அவர் உயிர்துறந்தனர் என்றெண்ணித் துரியோதனன் தானுமுதுகிட்டோடி ஒரு தடா கத்தினுள்ளே புகுந்தொளித்தான். இரவும் வந்து அவன் கரவுக்குத் துணையாயிற்று. முதுகிட்ட கிருபாதியர் மூவரும் துரியோதனன் புகுந்திருக்குமிடத்தை யடைந்து அவனுடன் ஆலோசித்தனர். அப் பொழுது அவ்வழியே சென்ற வேடர் சிலர் அவர்கள் பேசுகின்ற இரகசியத்தை யுணர்ந்து போய்ப் பாண்டவர்க் குரைத்தனர். போர்க் களத்திலே தம்மை யெதிர்ப்பாரின்றிப் பாசறை நோக்கி மீண்ட பாண்டவர், அதுகேட்டலும், அக்காரிருளிற் சென்று தீவர்த்திகள் கொண்டு தேடுவித்தனர். அவன் வெளிப்படாதிருப்பது கண்டு உதிஷ்டிரன் ஏ! துரியோதனா! உன் வீரம் இதுவா? அரசராய்ப் பிறந் தோர் போர்க்கஞ்சி ஒளித்திடாரன்றோ? இராஜ குலத்திற்கும், உன்னை அருந்தவங்கிடந்தீன்ற மாதாவுக்கும் அழியா வசையை ஏன் உண்டாக்குகின்றாய்? நீ பேசின வீரமெல்லாம் எங்கே குடிபோயின? குலமன்னவர் போரிலுடல் விடுத்து விண்ணுலக வின்பத்தை யடை யப் புகுவதன்றிக் குளத்திற் புகுந்தொளித் துயிர் வாழாரன்றோ! என்றான்.

அவ்வுரை கேட்டலும் துரியோதனன் உதிஷ்டிரனை நோக்கி, என் துணைவரை யெல்லாம் இழந்தேனாதலின், இனிக் காடுபுகுந்து



வாழ்வேன்; நீ சென்று அரசாள்கவென்றான். உதிஷ்டிரன் அவனை நோக்கி, கோலிழந்திருக்கு முனது கையில் ராச்சியதானம் பெறு வதும் நீ கொடுப்பதும் எவ்வாறுமென்று பரிகசித்துரைக்கத், துரி யோதனன், அற்றாயின் போருக்கு வருகவென்று கூறி வெளிப் பட்டான். வெளிப்பட்ட துரியோதனன் தமியனாய்த் துணையிலி யாய்த் தேரின்றிக் குதிரையின்றிக் கைக்கோராயுதமுமின்றி நிற் கும் யான், பெருஞ் சேனையோடு ஆயுதபாணிகளாய் நிற்கும் உம்மோடு செய்யத்தக்க போர் தாம் யாதாய்? ஆயினும் உம்மை யெல்லாம் ஒவ்வொருவராகப் பொருது உம்மாண்மையைப் போக்கு வேன் என்றான். உதிஷ்டிரன் அதுகேட்டு, "நம்முன் ஒருவரை யாவது நீ கொல்ல வல்லையேல் அரசு நின்னதேயாம்" என்றான். அது செவிப்படுதலுந் துரியோதனன் நன்றெனக் கூறி, நம்முள் யாவராயினும் வருகவென்ன வீமனே எதிர்த்தான். துரியோதன னுக்கு மொருகதாயுதம் உதிஷ்டிரனாற் கொடுக்கப்பட்டது இரு வரும் கதாயுதந் தரித்தவராய்ச் சிங்கமுஞ் சிங்கமுமாமெனக் கறுவிச் சினந்து கொடும்போர் புரிந்தனர்.

அவ்வமயத்தில், கிருஷ்ணன் தமையனாகிய பலராமனும் தீர்த்தயாத்திரை செய்து மீள்வான் அங்கு வந்தடைந்தான். அவன் இருவர் போரையுங் கண்டு நீவிர் இங்கிருந்து போர் செய்தலாகாது. குருக்ஷேத்திரத்தை அடைகவென்ன, அவ்வாறே எல்லோரும் அவ் விடத்தை அடைந்தபின்னர் இருவரும் அங்கே போர் செய்தார்கள். இருவரும் ஒருவரை ஒருவர் தாக்குவர். கதாயுதம் தம்மேற் படா வகை அதனாற் றடுப்பர். எழுந்து அந்தரத்தி னிற்பர். வீழ்வர். சீறி அடிப்பர். காலால் எற்றுவர். இப்படி இருவரும் வெற்றியின்றிச் சிறிதுபோது போர்செய்கையில் கிருஷ்ணன் அர்ச்சுனனை நோக்கி, வீமன் தான் செய்த சபதத்தை மறந்தனன்போலு மென்றான். அர்ச்சுனன் அதனை வீமனுக்குணர்த்துமாறு தனது தொடையிலே யறைந்தான். அக்குறிப்பினை வீமனுணர்ந்து, துரியோதனன் தன் னைச் சாடியந்தரத்திற் குதித்தெழும்போது அவன் இடத் தொடை யைக் கதாயுதத்தாலடித்துத் தகர்த்தான். அதனால் துரியோதனன் உயிர் கலங்கி ஐராவத யானைபோலப் பூமியின்மேல் வீழ்ந்தான்.

தேவர்கள் மலர்மாரி தூவினார்கள். அந்தரதுந்துபி யார்த்தது. அப்பால் வீமன் வீழ்ந்துகிடக்கும் துரியோதனன் முகத்தைக் கண்டு

அவன் திரௌபதிக்கும் தமக்குஞ் செய்த பிழைகள் மனத்திலெழக் கொடுஞ் சினப்பித்தேறி, அவன் தலையிற் கிடந்த கிரீடத்தைக் காலாலுதைத்துக், "கீழ்மகனுக்கு முடியேதுக்கு" என்று அதனைச் சிதைத்து விட்டு அவன் தலையையுங் காலாலுதைத்தான். அச்செயல் உதிஷ்டிரன் மனத்தை வருத்த அவன் வீமனை நோக்கித், "துரியோதனன் உன் உறவினன். அதிலும் அரசன். அவனைக் காலாலுதைப்பது அறமுறையன்று" எனக்கூறிக் கடிந்தான். இதற்கிடையில் பலராமன் கிருஷ்ணனை நோக்கி, வீமன் துரியோதனனைத் தொடையில் அடித்துக் கொன்றது யுத்தமுறையன்று. ஆதலால் யான் அம்முறைகேடு செய்த வஞ்சகனைக் கொல்வேனெனக் கூறிச் சினந்து தன் கையில் வாட்படையை யெடுத்தான்.

கிருஷ்ணன் அவனை நோக்கி, வீமன் செய்தது தகும். துரியோதனன் திரௌபதியை மானபங்கஞ் செய்து அவளைத் தன் தொடையிலிருத்த முயன்றது அறிவையன்றோ? அப்பொழுது வீமன் துரியோதனனைத் தொடையைத் தகர்த்துக் கொல்வதாக விட்ட சபதங்காரணமாகவே அது செய்யப்பட்டது என்றான். பலராமனுடன் தீர்த்தமாடி மீண்ட விதுரனும், அதுவே வீமன் அங்ஙனஞ் செய்தமைக்குக் காரணமாமென்றான். அவ்வளவில் பலராமன் சினந்தணிந்து மீண்டான்.

அப்பால், கிருஷ்ணன் அர்ச்சுனனையும் ஏனைய பாண்டவர்களையும் அழைத்துக்கொண்டு களத்தைவிட்டுக் கங்கைக்குச் சென்றான். பகையும் அச்சமுமொழிந்தமையால் பாசறையிலே வீரர்களும் பாண்டவர்கள் புத்திரரும் சிந்தையிற் கலக்கம் சிறிதுமின்றி ஆழ்ந்து நித்திரை போயினர். அப்பொழுது அசுவத்தாமா துரியோதனன்பாற் சென்று அவன் கிடக்கும் பரிதாபநிலையைக் கண்டு உனக்கு நான் செயற்பால துளதோ வென்று வினவ, அவன் என் உயிர் பிரியப் போகின்றது. இனி உன்னை இவ்வுலகிற் காணமாட்டேன். பாண்டவர் என்னை வென்று அரசு கைக்கொண்டாரென்னுஞ் சொல் உண்டாகாவண்ணம் காப்பையேல் அதுவே எனக்கு நீ செய்யுமுறுதியா மென்றான்.

அதுகேட்ட அசுவத்தாமா அது செய்வேனெனக் கூறி மீண்டு போய் அவ்விராவிற்றானே பாண்டவர்களுடைய பாசறையிற் புகுந்து அச்சமின்றி நித்திரை போகின்ற சிறுவர்கள் ஐவரையும் மற்றை



வீரரையும் சிரங்கொய்து படுகொலை புரிந்து போனான். கங்கைக்கரைக்குப் போய் மீண்ட பாண்டவர்களும் கிருஷ்ணனும் திரௌபதியைத துயிலுணர்த்தித் தம் புத்திரரையுந் துயிலுணர்த்த அவர் துயில்செய்த பாசறைக்கண்ணே சென்றனர். அங்கே அவருடல் கிடக்கின்ற நிலையைக் கண்டு கலங்கித் திரௌபதியோ டழுதுபுலம்பினர். இவ்விழி தொழில் செய்தான் அசுவத்தாமா வென்பது பாண்டவர் உணர்ந்து அவனைத் தேடித் தக்கவாறு ஒறுத்து அவன் சிரசிலிருந்த ரத்தினத்தையும் கவர்ந்து மானபங்கஞ்செய்து தாழ்வித்தனர்.

இவ்வளவில் யுத்தம் ஒழிந்தது. அப்பால் திருதராஷ்டிரன் தன் மைந்தரெல்லோரும் மாண்டமை கேட்டுப் புலம்பி அறிவழிந்து வீழ்ந்தான். சிறிது நேரத்திலே தேறிக் காந்தாரியையும் ஏனைய ராஜஸ்திரிகளையும் அழைத்து, அவரெல்லாம் விரித்த கூந்தலோடு வீதிவழியே தன்னைத் தொடர்ந்து சிரமேற் கைவைத்துக் கண்ணீரால் வழிநனைத்துச் செல்லப் போர்க்களத்தை நோக்கி நடந்தான்.

திருதராஷ்டிரன் அங்ஙனம் செல்லுதலையுணர்ந்த பாண்டவர்களும் கிருஷ்ணனும் அவனைக் காணுமாறு எதிர் சென்றார்கள். திருதராஷ்டிரன் உதிஷ்டிரனை அன்போடு தழுவி யழுதபின்னர் வீமனைத் தேடினான். வீமனைத் தேடுங் கருததினை யுணர்ந்த கிருஷ்ணன், ஓரிருப்புப் பிரதிமையைக் காட்டத், திருதராஷ்டிரன் அதனை வீமனெனக்கொண்டு தழுவிக் கொல்லுங் கருத்தினனாயிரு கையாலும் இறுகத் தழுவித் தன்னுடல் புண்ணாயினான். தன் மார்பு இரத்தங் காலத் திருதராஷ்டிரன் வீமன்மேற் கொண்ட கோபமுந் தணிந்தான். அதுகண்டு கிருஷ்ணன் வீமனைக்காட்ட அவன் அவனைத் தழுவித் தான் புத்திரசோகத்தாற் செய்த பிழையையும் கூறி ஏனைய பாண்டவர்களைத் தழுவி ஆசீர்வதித்தான். அப்பால் யாவரும் கங்கைக் கரையை யடைந்து அங்குச் செயற்பால தீக்கடன்களை யெல்லாம் முடித்தனர்.

அப்பால் உதிஷ்டிரன், திருதராஷ்டிரனை முதியோன் என்னுமுரிமைபற்றி முன்னே ரதத்திலிவர்ந்து செல்ல விடுததுத், தான் ஓரதத்திலே பின்னும், தன்பின்னே மற்றைய பாண்டவருங் கிருஷ்ணனும் அரசர்களும் செல்லச், சென்று அஸ்தினாபுரியை யடைந்து ராஜமாளிகையிற் பிரவேசித்தான். அவன் வரவை ஆவலோடு எதிர்

நோக்கி அங்கிருந்த இருஷிகளும் நாரதரும் ஆசிகூறி வாழ்த்தினார்கள். உதிஷ்டிரன் அஸ்தினாபுரியை யடைந்தபின்னர், இவ்விராச்சியத்தை யடைதற்கு எத்தனைகோடி ஜீவர்களைப் பலிகொடுத்தேன்? எனக்கு உறவினராய் நட்பினராய்ப் பழகினவராய் என்னை வளர்த்தவராய் எனக்குக் கல்விபயிற்றினவராய் என் ஏவலாயிருந்தார் ஒருவரையுங் காண்கிலேன். மந்திரிகளில் விதுரனொருவனே யுளன். இத்துணைப் பெரியோரை யெல்லா மிழந்தபின் இனி யான் செய்யத்தக்க அரசு யாது? அரசியல் எனக்கு வெறுப்பா யிருக்கின்றது. யான் அரசியல் நடாத்துவதினும் துறவியலையே பெரிதும் விரும்புகின்றேனென்று கூறித் தளர்ந்தான். அதனைக் கேட்ட வியாசரும் ஏனைய முனிவர்களும், நீ கூறுவது தகாது. அரசர் தமக்குரிய அரசியலை நடாத்திய பின்னரே துறவறத்தை மேற்கொள்ளுதல் வேண்டும் என்று உதிஷ்டிரனைக் கண்டித்தனர்.

அதனால் அவன் முடிசூடுதற் கிசைந்தான். அதுகேட்டு மன்னருங் குடிகளும் குதூகலித்தார்கள். முடிசூட்டுதற்கு வேண்டும் முயற்சிகளெல்லாஞ் செய்யப்பட்டன. உரிய முகூர்த்தத்திலே முனிவரும் மன்னரும் மண்டலீகரும் மற்றுள்ளோரும் கொண்டாட மிக்க சம்பிரமமாகவும் வேதமுறையாகவும் உதிஷ்டிரன் முடிசூட்டப்பட்டான். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். ஆனக துந்துமி முழங்கின. உதிஷ்டிரன் முடிசூடியவுடன் திருதராஷ்டிரனை நமஸ்கரித்து, உன் குற்றேவல் செய்யுமாறே இம்முடி சூடினேன் என்றான். அவ்வுரை கேட்ட திருதராஷ்டிரன் உள்ளங்களித்து அவனைத் தழுவி ஆசிபல கூறி, மற்றைய பாண்டவர்களையும் தழுவி, ஐவீரும் அறமுறைகாத்து அரசு புரிவீராகவென்று வாழ்த்தினான். அவ்வாறே உதிஷ்டிரன் உலகங் களிகூர வரசியற்றி மறங்கடிந்து அறங்களை வளர்ப்பானாயினான்.

பாரதச்சுருக்க முற்றிற்று.

---

2586